CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விகடன்
பிரசுரம்

ஐயம் போக்கும் ஆன்மிகம்

பாகம் 2

ப்ரம்மஸ்ரீ
சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஐயம் போக்கும் ஆன்மிகம் (பாகம் 2)

IYAM POKKUM ANMEEGAM

VOL - 2

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஐயம் போக்கும் ஆன்மிகம்

பாகம் 2

ப்ரம்மஸ்ரீ சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

விகடன்
பிரசுரம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Title :
IYAM POKKUM ANMIGAM (Volume 2)
© SESHATRINATHA SASTRIGAL
ISBN : 978-81-8476-053-8

விகடன் பிரசுரம்: 296

நூல் தலைப்பு:
ஐயம் போக்கும் ஆன்மிகம் (பாகம் 2)

நூலாசிரியர்:
© ப்ரம்மஸ்ரீ சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

முதற்பதிப்பு : பிப்ரவரி, 2008
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர், 2009
விலை : ரூ. 75

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: publications@vikatan.com

பதிப்பாளர்:	பா.சீனிவாசன்
ஆசிரியர்:	வீயெஸ்வி
பொறுப்பாசிரியர்கள்:	பொன்ஸீ, செங்கோட்டை ஸ்ரீராம்
உதவி ஆசிரியர்கள்:	சா.இலாகுபாரதி, எம்.நாகமணி, கே.பாசுமணி, எஸ்.கோபால், சிவராஜ்
தலைமை வடிவமைப்பு:	மு.ராம்குமார்
வடிவமைப்பு:	அ.அன்பழகன், கா.மங்களேஸ்வரன், கோ.செந்தில்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னனு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மனம் தெளிவு பெற...

சந்தேகங்கள் ஏற்படுவது மனித இயல்பு. அப்படி ஏற்படுகிற சந்தேகங்களுக்கு விடை கிடைக்கும்போதுதான் மனித மனம் தெளிவு பெறுகிறது. நிம்மதி அடைகிறது.

கேள்வி கேட்கும் வாய்ப்பும் சந்தர்ப்பமும் மனிதனுக்கு மட்டுமே உண்டு. பிராணிகள் கேள்வி கேட்பதில்லை. தாவரங்களுக்கு ஐயங்கள் ஏற்படுவதில்லை!

தன்னைச் சுற்றி நடக்கும் சம்பவங்கள் பற்றியெல்லாம் மனிதனுக்கு கேள்வி எழுகிறது என்றாலும், ஆன்மிகம் என்று வரும்போது அந்தக் கேள்விகளின் எண்ணிக்கை அதிகமாகிறது. உதாரணமாக, உபன்யாசங்களுக்கு சென்று வீடு திரும்பும்போது மனதில் எழும் சந்தேகங்கள் நிறைய. ஆன்மிகம் மற்றும் வேதாந்தம் தொடர்பான நூல்களைப் படித்துக்கொண்டிருக்கும்போது 'ஏன்? எப்படி?' என்ற கேள்விகள் நம்மைத் துளைத்தெடுக்கின்றன. அவ்வளவு ஏன்? வீட்டில் விசேஷ நாட்களில் பூஜை நடக்கும்போது பின்பற்றப்படும் சம்பிரதாயங்கள் குறித்துதான் நமக்கு எத்தனை கேள்விகள் தோன்றுகின்றன.

இப்படிப்பட்ட கேள்விகளுக்கு 'சக்தி விகடன்' இதழில் தொடர்ந்து பதிலளித்து வருகிறார் ப்ரம்மஸ்ரீ சேஷாத்ரிநாத சாஸ்திரிகள். ஐயம் போக்கும் விதத்தில் அவர் அளித்துவரும் ஆன்மிக பதில்கள் வாசகர்களை பெரிதும் கவர்ந்து வருகின்றன.

இந்த பதில்களின் தொகுப்பு ஏற்கெனவே 'ஐயம் போக்கும் ஆன்மிகம்' என்ற தலைப்பில் விகடன் பிரசுரமாக வெளியாகி பரவலான பாராட்டுதல்களைப் பெற்றது. இப்போது உங்கள் கைகளில் தவழ்வது அதன் இரண்டாம் பாகம்.

இந்த நூலிலும் ஆன்மிகம் தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கு தெளிவான பதில்கள் அளிக்கிறார் நூலாசிரியர்.

படித்து பயன்பெறுங்கள்!

–ஆசிரியர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வாழ்வின் ஆதாரம்

அறம் வாழ்க்கையின் ஆதாரம். ஆன்மிகம் அதன் கரு. ஆண்டவன் வழிபாடும், ஆலய நிர்மாணமும், பக்தியும்தான் ஆன்மிகத்தின் பாதுகாப்பு அரண். மனம் திசை திரும்பாமல் நேர் வழியில் பயணம் தொடர முன்னோர்களது நடைமுறைகள் பயன்படும்.

காலம் காலமாக பயன்பெற்றுவரும் பழைய நடைமுறைகள் காலத்தின் மாசு படர்ந்து மறைந்துகொண்டிருக்கின்றன. அந்த மறைவு சந்தேகத்தைத் தோற்றி வைக்கிறது. சந்தேகத்தை விளக்கும் தொண்டுதான் இந்த ஆன்மிக 'கேள்வி - பதில்' பகுதி.

நெல்லை விதைக்கிறான் விவசாயி. முளை தோன்றிய பிறகு அதிலிருக்கும் உமி அகன்று விடுகிறது. அரிசி பயிராக வளர்கிறது. அரிசிதான் பயிராக மாறுவதை எண்ணி அரிசியை விதைத்தால் முளைக்காது. முளைக்கும் திறனை உமி பாதுகாத்து பயன்பட வைக்கிறது.

சம்பிரதாயங்களும், நல்ல நடைமுறைகளும் ஆன்மிகத்தின் முழுப் பயனைப் பெற்று மகிழ உமிபோல் ஒத்துழைக்கும். அதை கெட்டியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். ஆன்மிக அறிவு தோன்றியவுடன் சம்பிரதாயச் சடங்குகள் தானாகவே விலகிவிடும்.

'எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும். யாரையும் துயரம் தொடக்கூடாது' என்பது சனாதன மதத்தின் குரல். அந்தக் குரலுக்கு செவிமடுப்பது நமது கடமை.

சமையல் செய்தவன் ஒருவன். நாங்கள் பரிமாறும் சேவகர்கள். இந்த ஆன்மிக 'கேள்வி - பதில்' பகுதி மக்களுக்குப் பயன்பட்டால் சேவகர்கள் மனம் மகிழ்ந்துவிடும்.

–சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேதம்,

புராணம்,

தர்ம சாஸ்திரம்,

மனநலம்,

உடல்நலம்,

அன்றாட நடைமுறை,

வழிபாட்டு முறைகள்,

ஆகம விதிகள்,

ஜதீகம்,

சடங்கு,

சம்பிரதாயம்,

கலாசாரம்...

ஆகியவை பற்றி

உங்கள் கேள்விகளுக்கு

விடைகள் உள்ளே...

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கருவறைக் கடவுள்களைத் தொட்டுக் கும்பிடலாமா?

பெருமாள் கோயில்களில் தாயார் கிழக்குப் பார்த்திருக்கிறாள். சிவன் கோயில்களில் அம்பாள் தெற்கு நோக்கியிருக்கிறாள். இதன் ஐதீகம் என்ன?

– ஆர்.சௌந்தரராஜன், சென்னை-61.

சிவன் கோயிலில் சிவ பிரதிஷ்டை, உருவமில்லாமல் லிங்கப் பிரதிஷ்டைதான் இருக்கும். 'சிவனே' என்று தனித்திருப்பவர் அவர். அதனால் அம்பாளுக்கு தனி சந்நிதிதான் இருக்கும். அவர் கிழக்கே பார்த்திருந்தால், அவருடைய இடப்பக்கம் அம்பாள் தெற்கே பார்த்த மாதிரி இருப்பாள். இரு சந்நிதிகளில் நிற்கும்போதும் இருவரையும் பார்ப்பதுபோல் அமையும். அவர்கள் இருவரும் நேருக்கு நேர் பார்த்துக் கொள்வதுபோல் பிரதிஷ்டை செய்வதில்லை. ஆகம விதிப்படிதான் இப்படி இருக்கிறது. ஐதீகம் இல்லை இது. இப்படி இருந்திருக்கலாம் என்று சிலபேர் சொன்னார்கள் என்பதுதான் ஐதீகம். இது ஐதீகமில்லை.

விஷ்ணு க்ஷேத்திரத்தில் பகவான் கிழக்கே பார்த்திருப்பார். அவளும் பக்கத்திலேயே கிழக்குப் பார்த்து இருப்பாள். விஷ்ணு க்ஷேத்திரத்தில் லட்சுமியை மடியில் வைத்து அணைத்துக் கொண்டுகூட விஷ்ணு காட்சி கொடுப்பார். 'நீ தியாகம் பண்ணினால் மோட்சம் கிடைக்கும்!' என்று சொல்வதற்காக சிவன் வந்திருக்கிறார். போகம் பண்ணி அனுபவிப்பதை விளக்க விஷ்ணு வந்திருக்கிறார். அவர் தியாக ஸ்வரூபி, இவர் போக ஸ்வரூபி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அவர், தியாக ஸ்வரூபி என்றாலும் உடலிலேயே பார்வதியை வைத்திருக்கிறார். ஆனால், அர்த்தநாரியை பூஜிக்காமல் லிங்கத்தையே பூஜிக்கிறோம்.

நம் ஊர்க் கோயில்களில் கருவறையில் இருக்கும் சாமியைத் தொட்டுக் கும்பிட முடிவதில்லை. ஆனால், வட மாநிலத்திலுள்ள

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சில கோயில்களில் சாமியைத் தொட்டுக் கும்பிடலாம் என்று கேள்விப்பட்டேன். உண்மையா? ஏன் இந்த வேறுபாடு?

– வி.கோபிநாதன், குடவாசல்.

வேறுபாடு சாமியிடம் இல்லை. நம்மிடம்தான் இருக்கிறது. எல்லாரும் எல்லா சாமியையும் தொட்டுக் கும்பிட முடியாது. அதற்கென்று சில சட்டத் திட்டங்கள் இருக்கின்றன.

நம் வீட்டுக் குழந்தையை யார் வேண்டுமானாலும் தூக்க அனுமதிப்போமா? நமக்குத் தெரிந்த, குறிப்பிட்ட ஆட்கள் மட்டுமே தூக்க முடியும். இப்படி நியமம் வைத்துக் கொண்டிருக்கிறோம். சில இடங்களில் சில காரணங்களுக்காக, இந்த நியமம் வேண்டியதில்லை என்று வைத்திருக்கிறார்கள். அங்கு தொடலாம், இங்கு தொடக்கூடாதா என்பதெல்லாம் நம் மனதில் இருக்கும் வேறுபாடே தவிர, சாமியிடம் இருக்கும் வேறுபாடு அல்ல.

கருவறையில் இருக்கும் பகவானுக்கு நித்தியமும் சுத்தமாக ஒருவர் பூஜை செய்வதுதான் முறை என்று வைத்துக் கொண்டிருக்கிறோம். அது சடங்குகளின் தரத்தைக் காப்பாற்றுவதற்காக.

இங்கேயே அரச மரத்தடியில் இருக்கும் பிள்ளையாரைத் தொட்டுக் கும்பிடலாமே... காவிரி நதி தீரத்திலேயே பிள்ளையார் இருக்கிறார். அவருக்கு நீங்களே காவிரியை எடுத்து அபிஷேகம் செய்யலாமே... ஏன் கருவறைக்குள் போவேன் என்கிறீர்கள்? எல்லாரும் வரக்கூடாது என்பதற்காகத்தான் கருவறையே வைத்திருக்கிறார்கள்.

வட மாநிலங்களில்கூட கருவறை இல்லாமல் வெளியே இருக்கும் கடவுளைத்தான் எல்லாரும் தொடலாம். கருவறைக்குள் போக முடியாது! பூஜை செய்பவர் பரம்பரை பரம்பரையாகப் பொறுப்பு எடுத்து அதைச் செய்து வருகிறார். எல்லாரும் அதைச் செய்துவிட முடியாது.

நம் வீட்டு சமையலறைக்குள்ளும் பணம் வைத்திருக்கும் அறைக்குள்ளும் எல்லாரையும் அனுமதிப்பதில்லை. கடவுளுக்கு இது பொருந்தாதா? பொது உரிமைப் பேச... இது பொதுஜன சமாசாரம் இல்லை, கடவுள் சமாசாரம். பாகுபாட்டுக்காக வந்ததல்ல, பாதுகாப்புக்காக வந்தது இது.

கிரிவலம் என்பது மலையைச் சுற்றி வருவதுதானே... தற்போது எல்லா இடங்களிலும் கிரிவலம் ஆரம்பிக்கிறார்களே, இது சரிதானா?

– எஸ்.புவனேஸ்வரி, லால்குடி.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கிரி என்றால் மலை. வலம் வருதல் என்றால் சுற்றுவது. எந்த மலையையும் நாம் கடவுளாக நினைத்தால் சுற்றி வரலாம் தவறில்லை. மரத்தையே தெய்வமாக நினைத்துச் சுற்றுகிறோம். அரச மரத்தைச் சுற்றுகிறோம். பகவான் வில்வ மரத்துக்குள் நுழைந்தார். வில்வத்தைச் சுற்றுகிறோம். துளசியைச் சுற்றுகிறோம். மலை வடிவிலேயே பகவான் இருக்கிறான் என்று நாம் சங்கல்பம் செய்துவிட்டால் சுற்ற வேண்டியதுதானே... இதில் தயக்கம் என்ன? திருமலையே ஆதிசேஷன் போல ஒரு கடவுள். மலைமேல் கடவுள் என்பதில்லை. பழநி மலையே கடவுள். திருத்தணி மலையே கடவுள்.

கிரிவலம் அதிகமாகிறதென்றால் ஆகட்டுமே... அப்படியாவது ஆன்மிகம் வளரட்டுமே!



நெரூர் பிரம்மேந்திரர் ஆராதனையில் பக்தர்கள் சாப்பிட்ட இலைமீது அங்கப்பிரதட்சணம் செய்ததை என் நண்பன் கேலி செய்கிறான். அதைப் பற்றித் தங்கள் கருத்து?

– வி.பாலு, குடந்தை.

மகான்களுக்கு ஆராதனம் பண்ணுகிறோம். அங்கே சாப்பிட்ட இலையில் அங்கப்பிரதட்சணம் செய்ததாகச் சொல்கிறீர்கள். இது சாஸ்திரம் சம்பந்தப்பட்ட விஷயம் இல்லை. வெறும் சம்பிரதாயம். பரம்பரை பரம்பரையாகக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கடைப்பிடிக்கப்பட்டு வருவது. 'சாப்பிட்ட இலைகளின் மீது அங்கப்பிரதட்சணம் செய்வதால், அவர் மீது உள்ள பக்தியை வெளிப்படுத்தலாம்!' என்ற நம்பிக்கையின் அடிப்படையில் வந்தது இது. பக்தியைக் காட்ட ஆயிரம் வழிகள் இருக்கும்போது, இலையில் புரண்டால்தான் பக்தி என்று வைக்கக் கூடாது. கோயிலில்கூட நடந்துதான் பிரதட்சணம் செய்ய வேண்டும். அங்கேயும் உருண்டு பிரதட்சணம் செய்வது சாஸ்திரமல்ல. நம் மனசுதான் விசேஷம் – விசேஷமில்லை என்று முடிவெடுக்கிறது. இலையில் உருள்வது விசேஷம் என்று நினைப்பவர்கள் அப்படிச் செய்கிறார்கள். 'உன்னுடைய அனைத்துமே எனக்கு இஷ்டமானதுதான். உன் எச்சில்கூட எனக்கு அல்பமல்ல!' என்று காட்டுகிற அதீத பக்திதான் இது. கௌரவமாகவே பக்தியைக் காட்டலாம். அந்தக் காலத்தில் கணவன் சாப்பிட்ட எச்சில் இலையில் மனைவி சாப்பிட்டால் தப்பில்லை என்று சொல்லியிருக்கிறது. 'சாப்பிடு' என்று சொல்லவில்லை. நிர்ப்பந்தம் எதுவும் இல்லை. மற்றபடி இதையெல்லாம் தெரிந்துகொண்டு உங்கள் நண்பர் கேலி செய்யவில்லை. அவர் எதைப் பார்த்தாலும் இப்படி கேலிதான் செய்வார்.

சாஸ்திரத்தில் ஒன்பது விதங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. ச்ரவணம் – காதால் கேட்பது, கீர்த்தனம் விஷ்ணோ – வாயால் உச்சரிப்பது, ஸ்மரணம் – மனதால் நினைப்பது, பாத சேவனம் – பாத சேவை செய்வது, அர்ச்சனம் – பூக்களை இறைவன் காலில் போட்டு வணங்குவது, வந்தனம் – நமஸ்கரித்தல், தாஸ்யம் – சிசுருஷை செய்வது, சக்யம் – நண்பனாகக் கொண்டாடுவது, ஆத்ம நிவேதனம் - 'நீயே சரண்' என்று முழுதுமாகச் சமர்ப்பித்து விடுவது. இவை ஒன்பதும் நாகரிக பக்தி. இவற்றைக் கடைப்பிடித்தே பக்தி செலுத்தலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இறந்தவர் உடலைத் தகனம் செய்யும்போது நாம் பெண்களை அழைத்துச் செல்வதில்லை. கொள்ளி இடுவதற்கும் அனுமதிப்பதில்லையே ஏன்?

– எம்.ஜி.கருணாகரன், சென்னை-1.

சாஸ்திரத்தில் 'சிலர் சில காரியங்களைச் செய்யலாம்; சிலர் சில காரியங்களைச் செய்யக் கூடாது!' என்று இருக்கும். குலத்தைக் காப்பாற்றுபவன் மகன்தான். மகளை நீங்கள் வேறு இடத்தில் கொடுத்து விடுகிறீர்கள். அவர் குலத்தை செழிப்பாக்க இவள் போகிறாளே தவிர, பெண்ணுக்குக் குலம் என்று இல்லை. சூரிய வம்சம், சந்திர வம்சம், பாண்டவ வம்சம், கௌரவ வம்சம், இக்ஷ்வாகு வம்சம் என்றுதானே இருக்கிறது? காந்தாரி வம்சம், சீதை வம்சம் என்று இருக்கிறதா? வம்ச பரம்பரை தழைக்க விதையாக இருப்பது மகன்தான். தந்தையின் அவயவங்கள் அதே மாதிரி மகனிடம் தென்படுகிறது. பெண்ணிடமிருந்து வந்தாலும் அப்பா மாதிரிதான் மகன் ஆகிறான். எனவே, வேறு வீட்டுக்குப் போகிற பெண்ணை எதற்கு கொள்ளி வைக்கச் சொல்கிறீர்கள்? அங்கே போனாலும் அங்கே உள்ளவன்தான் தன் தகப்பனுக்குக் கொள்ளி வைக்கிறான். எனவே, வம்சத்தைத் தழைக்கச் செய்யும் ஆண்மகன் கொள்ளி வைக்கட்டும். பெண் அங்கே வரவேண்டாம் என்கிறது தர்ம சாஸ்திரம்.

என் மகன் தஞ்சை வீரமாகாளி அம்மன் கோயிலுக்குச் சென்றுவிட்டு வரும்போது சாலை விபத்தில் இறந்து விட்டான். 'உங்கள் மகனுக்கு ஆயுளில் கண்டம் இருந்திருக்கிறது' என்றும் 'ஜாதகத்தில் ஆயுள் குறைவு என்றும் கூறுகிறார்கள். எங்கள் உறவினர் ஒருவர் அந்தக் கோயிலிலேயே செய்வினை செய்ததால்தான் இறந்தான் என்றும் கூறுகிறார்கள். அப்படியானால் நம்பிய தெய்வம் கைவிடுமா? என் பிரார்த்தனைக்கு ஒரு பலனும் இல்லையா? தயவு செய்து விளக்குங்கள்.

– ஆர்.ராஜேஸ்வரி, தஞ்சாவூர்.

நாம் எவ்வளவு பாதுகாப்பாக, கெட்டிக்காரத்தனமாக இருந்தாலும் எதிர்பாராத விதமாக நடந்து விடுவதற்குத்தான் விபத்து என்று பெயர். ஒருவர் உங்கள் பிள்ளைக்கு ஆயுள் இல்லை என்று சொன்னார். இன்னொருவர் கண்டம் இருக்கிறது என்றார். வேறொருவரோ செய்வினை என்கிறார். எல்லாவற்றையும் போட்டுக் குழப்பிக் கொள்கிறீர்கள். நான் ஒன்று சொல்கிறேன், உங்களுக்குக் குழந்தையை இழந்து புத்திர சோகம் ஏற்பட வேண்டும் என்று உங்கள் ஜாதகத்தில் இருக்கலாமே... அதுவே உங்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிள்ளையை பலிகொண்டு இருக்கலாமே? இல்லை என்று சொல்ல முடியாதே...

செய்வினை என்பது என்ன என்று உங்களுக்குத் தெரியவில்லை. செய்வினை மூலம் இப்படி எல்லாம் செய்ய முடியும் என்றால், உலகத்தில் எல்லாக் காரியங்களையும் செய்வினை மூலமாகவே நிறைவேற்றிக் கொண்டுவிட முடியுமே... நமக்கு வேண்டாதவர்களை எல்லாம் செய்வினை மூலம் ஒழித்து விடலாமே... அப்படி நம்மால் செய்ய முடியாது.

எனவே, என்ன காரணத்தால் இப்படி நடந்தது என்று தெரியாமல் பகவானைத் திட்டாதீர்கள். நாம் பிரார்த்திப்பது அனைத்தையும் கொடுப்பதற்காக பகவான் அங்கே இல்லை. நமக்கு என்ன கொடுப்பினை இருக்கிறதோ, அதைக் கொடுப்பதற்காகவே பகவான் இருக்கிறார். உண்மையான மனதோடு பிரார்த்திக்க வேண்டும். அதைப் பெறுவதற்கான தகுதி நம்மிடம் இருக்க வேண்டும். அப்போது அது நமக்குக் கிடைக்கும். கேட்பதெல்லாம் கிடைத்துவிடாது. இப்போது பிரார்த்தனை செய்ததாகச் சொல்கிறீர்கள். இதற்கு முன்பு நீங்கள் ஏதேனும் பாவம் செய்திருக்கலாம். அது உங்கள் பிள்ளையின் மரணம் என்கிற வடிவில் உங்களுக்குத் திரும்பியிருக்கலாம்.

இப்போது ஒரு விபத்தில் உங்கள் மகன் இறந்து விட்டான். அதற்கு முன்னதாக உங்கள் உறவினர் யாரும் எதுவும் முன்னெச்சரிக்கை செய்யவில்லை. இறந்த பிறகு அதையும் இதையும் சொல்கிறார்கள்.

பகவான் யாருக்கும் கெடுதல் செய்பவன் இல்லை. பகவானிடம் வெறுமனே 'அதைக் கொடு... இதைக் கொடு' என்று கேட்பதில் பயனில்லை. வேண்டியதை அடைவதற்காக முயற்சி செய்து கொண்டே கேட்க வேண்டும். 'நான் சும்மா உட்கார்ந்திருப்பேன், எனக்குப் பணத்தைக் கொடு!' என்று கேட்டால் கிடைக்காது.

ஒரு துக்கம் நடந்த பிறகு இதுபோல ஆராய்ச்சி செய்வதில் என்ன பலன்? இறந்தவன் இறந்து விட்டான். அவனுக்கு துக்கம் ஏதும் இல்லை. துக்கப்படுவதெல்லாம் நீங்கள்தான். அதனால், இது போல நான் துக்கப்படும் நிலையை எனக்குக் கொடுக்காதே என்று மனம் ஒன்றிப் பிரார்த்தனை செய்யுங்கள். இனிமேல் துக்கம் வராமல் இருக்கும். நடந்து போனதை மறந்து விடுவதே நல்லது.

யானையோ, குரங்கோ இறந்தால், அவற்றை அடக்கம் செய்வதில் காட்டும் அக்கறையும் ஆன்மிக உணர்வும் மற்ற விலங்குகளுக்குக் காட்டப்படுவதில்லையே, ஏன்?

– ஐ.எஸ்.சீனிவாசன், சென்னை–82.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஒரு கண்ணில் சுண்ணாம்பு, ஒரு கண்ணில் வெண்ணெய் என்கிற போக்கில் தர்ம சாஸ்திரம் செயல்படுவதில்லை. யானையும் குரங்கும் உசத்தி. அவற்றுக்கு மரியாதை கொடு, மற்ற விலங்குகளை அலட்சியப்படுத்து என்று எங்கேயும் சொல்லப்படவில்லை. ஒரு யானையையோ குரங்கையோ இவன் வளர்க்கிறான். அதனால் அதன் மீது இவனுக்கு ஒரு பற்று, பிரியம் வந்துவிடுகிறது. அது இறக்கும்போது அடக்கம் செய்கிறான். வளர்க்கிற யானை இல்லாமல் ஏதோ யானையை எல்லாம் இவன் அடக்கம் செய்யவில்லையே... எந்தக் காட்டில் எந்தக் குரங்கு எங்கே செத்துப் போச்சு என்று பார்த்து அத்தனையையுமா இவன் அடக்கம் செய்கிறான்? இல்லையே!

'பாம்பை ஏதோ ஒரு விஷ ஜந்து என்று பார்க்காதே, அது தெய்வம், அதை அடித்துக் கொல்ல வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டால், அப்படியே போட்டுவிட்டுப் போகாமல், நெருப்பில் போட்டு எரித்துவிடு' என்கிறது தர்ம சாஸ்திரம். யானையையோ குரங்கையோ அடக்கம் செய் என்று சொல்லவில்லை. வளர்ப்பதால் யானைக்கும் குரங்குக்கும் செய்கிறோம், வளர்க்காமலே பாம்புக்கு செய்கிறோம். எனவே நீங்கள் குழப்பமடையத் தேவையே இல்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அமானுஷ்ய சக்திகள் இருப்பது உண்மையா?

சரஸ்வதிதேவியை பூஜிக்கும் நமது நாட்டில் படித்தவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பது ஏன்?

- மு.மதிவாணன், அரூர்.

இன்று நீங்கள் வைத்திருக்கிற விஞ்ஞான முன்னேற்றமோ, பி.டெக். எம்.டெக்கோ, டாக்டரோ இன்ஜினீயரோதான் அறிவாளி என்று சொல்ல முடியாது. இவர்களிடம் இல்லாத அறிவு, இதை எல்லாம் படிக்காதவர்களிடம் இருக்க வாய்ப்பு உண்டு. படிப்பில் இல்லை அறிவு. அந்த வகையில் இந்தியர்களிடம் அறிவுக் குறைவு என்று சொல்ல முடியாது. பொருளாதார முன்னேற்றமோ, விஞ்ஞான முன்னேற்றமோ அவற்றுக்கும் சரஸ்வதிக்கும் தொடர்பு இல்லை. ஒருவர் எந்த வேலை செய்கிறாரோ, அதைச் சுத்தமாகச் செய்வது அறிவு. சரஸ்வதியை பூஜிப்பதால்தான் வெளிநாட்டுக்காரன் கூப்பிடுகிறான். நாம்தான் நம்மூர்க்காரரை அறிவாளி என்று ஒப்புக் கொள்வதில்லை!

மனைவியை இழந்த ஒருவரும் கணவனை இழந்த ஒரு பெண்ணும் திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றனர். இவர்களின் திருமணம் இந்து தர்மத்தின் வழியில் எவ்வாறு நடைபெற வேண்டும்? இந்தத் திருமணம் ஏற்புடையதா?

– சிவ.கோபால கிருஷ்ணன், ஹைதராபாத்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஹிந்து தர்மப்படி ஒரு முறைதான் திருமணம். இரண்டாம் திருமணம் கிடையாது. தர்மத்தை மீற வேண்டும் என்று விரும்பி மீறி இருக்கிறோம். சட்டத்தின் துணையோடு இரண்டாம் கல்யாணம் செய்துகொள்கிறோம். தர்மப்படி ஒரு பெண்ணுக்கு இரண்டாம் கல்யாணம் இல்லை.

ஆனாலும் மறுமணம் தேவை என்று நினைக்கும்போது அதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. 'லிவிங் டு கெதர்' என்று ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். பதிவுத் திருமணம் இருக்கிறது. அதை எல்லாம் கடைப்பிடிக்கலாமே... மந்திரம் எல்லாம் சொல்லித்தான் செய்யவேண்டும் என்று ஏன் நினைக்கிறீர்கள்? கல்யாணத்துக்கு என்று சொல்லியிருக்கிற தகுதி இல்லாத இடத்தில் மந்திரம் சொன்னாலும் பயன் இல்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மறுமணம் என்பதைச் சொல்லும்போதே அது சிற்றின்பத்துக்காகத்தான் என்று தோன்றும். அப்படி இல்லை என்றால் வேறு துணையை வைத்துக்கொள்ளலாமே? ஹிந்து தர்மம் சிற்றின்பத்துக்காகக் கல்யாணம் என்று சொல்லவில்லை. அங்கே எப்படி இரண்டாம் கல்யாணம் வரும்?

சந்திராஷ்டமம் என்றால் என்ன? அது, ஒருவர் ராசிக்கு இருக்கும்போது என்னவெல்லாம் செய்யக் கூடாது?

-சித்ரா, கோவை.

பிறந்த நட்சத்திரத்துக்கு என்று ஒரு ராசி உண்டு. அந்த ராசியை ஒன்று என்று எண்ணிக்கொண்டு எட்டு என்று முடியும் ராசி இருக்கிறதல்லவா, அந்த ராசியில் சந்திரன் இருந்தால் நீங்கள் பிறந்த ராசியில் இருந்து எட்டாவது ராசியில் சந்திரன் வந்திருக்கிறான் என்று பொருள்.

ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் மாறுபடும். ஒருவர் அஸ்வினி நட்சத்திரத்தில் பிறந்திருக்கிறார், அவருக்கு எட்டாவது ராசி என்ன வரும்? விசாகத்தில் கடைசி பாதம், அனுஷம், கேட்டை இந்த மூன்று நட்சத்திரங்களை தாண்டும் வேளையில், சந்திரன் விருச்சிகத்தில் இருப்பதால், அஸ்வினிக்கு எட்டாமவன்.

கோயிலில் வழங்கப்படும் குங்குமப் பிரசாதத்தை விதவைப் பெண்கள் பெற்றுக்கொள்ளலாமா? பெற்றுக்கொண்டால் அந்தப் பிரசாதத்தை வீட்டிலுள்ள மற்ற நபர்களிடம் இட்டுக்கொள்வதற்காகக் கொடுக்கலாமா?

- எம்.சாவித்திரி, சென்னை-94.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிரசாதம் என்று எதைக் கொடுத்தாலும் வாங்கிக்கொள்ளலாம். வாங்கிக்கொள்வதற்கு என்ன தகுதி இருக்கிறது என்று பார்த்துக்கொண்டு இருப்பது குருக்களின் வேலை அல்ல. எல்லாரும் நன்றாக இருக்கவேண்டும் என்று எண்ணித்தான் பிரசாதம் கொடுக்கிறார். சம்பந்தப்பட்ட பெண்ணின் கர்ம வினையால் அவர் கணவனை இழந்தார். குங்குமப் பிரசாதம் வாங்கிக்கொள்ளக் கூடாது என்பதற்காக அல்ல. கைம்பெண் குங்குமம் இட்டுக்கொள்வதில்லை என்கிற சம்பிரதாயத்தைப் பலகாலமாகக் கடைப்பிடித்து வருகிறோம். அதனால், பெற்றுக்கொண்ட பிரசாதத்தைப் பிறருக்குக் கொடுக்கலாம். கணவன் பார்த்து ரசிக்க வேண்டிய அழகை கணவன் அல்லாத ஒருவர் பார்க்க வேண்டாம் என்கிற உயர்ந்த எண்ணத்தின் வெளிப்பாடாக அந்தப் பெண், குங்குமம் வைத்து அலங்காரம் செய்துகொள்ளக் கூடாது என்று எண்ணுகிறார். குங்குமம் இட்டுக்கொள்வதை அவர் தவிர்க்கிறார் என்று எடுத்துக்கொள்கிறோம்.

ஒரு நாளில் முறையே அமிர்தயோகம், சித்தயோகம் மற்றும் மரணயோகம் ஆகியவை எவ்வளவு மணி நேரம் அல்லது நாழிகை என்பதை விளக்கவும்.

- ச. பாலன், கோவை-27.

வாரம், நட்சத்திரம், திதி- இந்த மூன்றும் சேர்வது, மூன்றில் இரண்டு சேர்வது, இப்படி வந்தால் யோகம் மாறும். திதியும் வாரமும் சேரும். வாரமும் நட்சத்திரமும் சேரும். திதியும் நட்சத்திரமும் சேரும். திதி, வாரம், நட்சத்திரம் மூன்றும் சேரும். இப்படி நான்கு பிரிவுகள் வரும். இந்தப் பிரிவுகளுக்கெல்லாம் யோகம் மாறி மாறி வரும். வாரத்தோடு சம்பந்தப்பட வேண்டும் என்றால் உதயத்திலேயே வாரத்தோடு நட்சத்திரமும் சேர்ந்திருக்க வேண்டும். உதயத்திலேயே அந்த திதியும் சேர்ந்திருக்க வேண்டும். சூரிய உதயத்துக்கு வெகு நேரத்துக்குப் பிறகு திதி வருகிறது என்றால் அந்தத் திதிக்கும் வாரத்துக்கும் சம்பந்தம் இல்லை. முதலில் ஒரு திதிக்கும் வாரத்துக்கும் சம்பந்தம் இருக்கும்.

எனவே, ஒரு நாளைக்கு இரண்டு யோகம் வரலாம். மூன்று யோகமும் வரலாம். வாரம் இருபத்து நான்கு மணி நேரத்துக்கும் இருக்கிறது. ஆனால், நட்சத்திரமோ திதியோ மாறி மாறி வந்து கொண்டே இருக்கும். அது பத்து மணி வரை ஒரு நட்சத்திரம், அதற்கு மேல் ஒரு நட்சத்திரம், காலை இரண்டு மணிக்கு ஒரு நட்சத்திரம் என வரும். திதியும் பாதி வரை வரும்; பிறகு மாறும். இந்த மாறுதல்களில் சில சமயம் வாரத்தின் தொடர்பு இல்லாமல் போவதும் உண்டு. இப்படி மூன்றும் சம்பந்தப்பட்டால் ஒரு யோகம், இரண்டு சம்பந்தப்பட்டால் ஒரு யோகம். இப்படி இருப்பதால்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஒரு நாளைக்குப் பல யோகங்கள் வரலாம். நட்சத்திரம், திதி, வாரத்தைக் கொண்டுதான் யோகத்தைக் கணக்கிட வேண்டும். பஞ்சாங்கம் தெரிந்தவரின் உதவியோடு நேரில் பஞ்சாங்கத்தைப் பார்த்துதான் தெரிந்து கொள்ள வேண்டும். இதை ஒரு கேள்வி பதிலில் அவ்வளவு விளக்கமாகத் தெரிந்து கொள்ள முடியாது.

நானும் என் சகோதரர்களும் சேர்ந்து ஓர் இடம் வாங்கி, அதில் அடுக்குமாடிக் குடியிருப்பாக ஆறு வீடுகள் கட்டுகிறோம். சென்ற வருடம் என் கைக்குழந்தை இறந்து விட்டது. இந்த நிலையில் வீடு கட்டிக் கொண்டு இருக்கும்போது கர்ப்பம் தரிக்கக் கூடாது என்று ஜோதிடர் ஒருவர் கூறுகிறார். இது உண்மையா?

– ம.அ.துரை, சென்னை-116.

வீடு என்பது வாழ்க்கைக்குத் தேவையான ஒன்று. இருக்க இடம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேண்டும் வாழ்வதற்காக. நமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போது கட்டலாம். ஜாதகத்தில் வீடு கட்ட வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்து, வீடு கட்டப் போகக் கூடாது. ஜாதகத்தில் வீடு இல்லை என்றாலும் உங்களுக்கு வீடு அவசியம். எப்போது பணம் கிடைக்கிறதோ, அப்போது வீட்டைக் கட்டிவிட வேண்டும். 'சாப்பிடுகிற வாய்ப்பு எனது ஜாதகத்தில் இருக்கிறதா?' என்று ஜோதிடரிடம் கேட்பீர்களா? பசி வந்தபோது சாப்பாடுதான். இப்போ ராகு காலம். நாலு மணிக்கு நல்ல நேரம் என்று பார்த்துச் சாப்பிடுவீர்களா? எனவே, படிப்பைப் போல, வேலையைப் போல வீடு கட்டுவது என்பதற்கும் ஜோதிடத்துக்கும் தொடர்பு இல்லை.

தம்பதி சேர்ந்திருக்க ஒரே முறை நல்ல நாள், நேரம் பார்ப்பார்கள். ஒவ்வொரு நாளும் பார்க்க வேண்டுமா? பசி, தாகம் போன்ற இயற்கையான உணர்வு அது. அவனும் அவளும் விரும்பும்போது அது இயல்பாக நடந்தேற வேண்டிய விஷயம். அப்போது கர்ப்பமாவது இயற்கை. அது உங்கள் கையில் இல்லை. வீடு கட்டும்போது கர்ப்பம் தரிக்கலாகாது என்பது பொய். வீடு கட்ட நாலு வருஷம் ஆகலாம். அத்தனை காலம் இவர்கள் பிரிந்திருக்க வேண்டும் என்று சொல்வது பாவம். சாஸ்திரப்படியே தப்பு!

மனிதன் தற்கொலை செய்து கொள்வதுகூட விதியினால்தானே?

- எஸ். மலர்விழி, ஊத்தங்கரை.

நமது முயற்சி செயல்படாமல் போவதோ, முயற்சி செய்வதற்கே சந்தர்ப்பம் இல்லாமல் போவதோ, முயற்சி செய்தாலும் அதையும் மீறி எங்கே கெடுதி நம்மை வந்து தாக்குகிறதோ, அந்தத் தாக்குதலை நாம் அனுபவிக்கும்படி வந்தால்தான் விதி என்று பெயர். 'நாம் என்ன தடுத்தாலும் வருவது வந்தே தீரும்!' என்பதே விதியின் கோட்பாடு. முயற்சி செய்து தீங்கை மாற்றிக் கொள்ள முடியுமானால் அது விதியே அல்ல!

இரண்டு முறை தேர்வு எழுதி ஃபெயிலானான் ஒருவன். 'உனது தலை எழுத்து அவ்வளவுதான்!' என்றார்கள். மூன்றாவது முறை அதே தேர்வில் அவன் பாஸ் ஆகிவிட்டான். அதுதான் அவன் தலையெழுத்து. நேற்றுவரை தோற்றான். இன்று விதி மாறிவிட்டது என்பதல்ல. இனி தேர்வு எழுதவே முடியாது என்று வரும்போதுதான் அதை விதி என்று சொல்ல வேண்டும். எல்லோருக்கும் இலவச வேட்டி தந்தார்கள். நான் அப்புறமாகப் போய் வாங்கிக் கொள்ளலாம் என்று இருந்து விட்டேன். நான் போகும்போது வேட்டி தீர்ந்துவிட்டது என்பது விதி அல்ல. அங்கே முயற்சியே இல்லை.

தற்கொலை என்று கேட்கிறீர்கள். ஒரு விநாடி நேரம் அவனது சிந்தனை அதீத துக்கத்துக்கு ஆட்பட்டு உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்று முடிவு எடுக்கிறான். அப்படி முடிவெடுத்த அந்த நேரத்திலேயே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



செயல்பட்டால்தான் தற்கொலை நடக்கும். அந்த விநாடியில் யாராவது அவனைத் தடுத்து நிறுத்தி விட்டால், அதன் பிறகு அவன் தற்கொலை செய்துகொள்ள மாட்டான். அந்த எண்ணத்திலிருந்து விடுபட்டு விடுவான்.

எல்லாத் தற்கொலைகளும் விதிக்கு உட்பட்டதல்ல. நான் தண்ணீரில் விழுந்து சாகப் போகிறேன் என்று முயற்சி எடுத்துச் செயல் படுகிறான். எனவே, அது விதி ஆகாது!

கோயில் நடை சாத்திய பின் அங்கே அமானுஷ்ய சக்திகள் உலவும் என்கிறார்களே, அது நிஜமா?

– ரேவதி சங்கர், சென்னை-13.

கோயில் நடை சாத்துவதற்கு முன்னாலேயே கோயிலில் அமானுஷ்ய சக்தி இருக்கிறது. மனுஷ்ய சக்திக்கு அப்பாற்பட்டதுதானே கடவுள் சக்தி? அது அங்கே இருப்பதால்தானே அங்கே போகிறோம்? அங்கே எப்போதும் அமானுஷ்ய சக்தி இருப்பதால் கோயில் கதவைத் திறந்துபோடக் கூடாது என்பதால்தான் அதை மூடி வைக்கிறோம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

திசைகளைப் படைத்தவன் யார்?

கோயில் திருவிழாக்களில் பகவான் தேரில் பவனி வருவதன் தாத்பரியம் என்ன?

-ஜி.ஜெயராமன், கூந்தலூர்.

குழந்தையைக் கொண்டாடுவதற்கே எத்தனை வழிகள் வைத்திருக்கிறோம்! அதுபோல பகவானைக் கொண்டாடுவதற்கும் ஏகப்பட்ட வழிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட கொண்டாட்டங்கள் நமக்குத் தேவை. யார் யாருடைய பிறந்த நாளையோ கொண்டாடுகிறோம். கடவுளின் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டாமா? கடவுளின் பிறந்த நாள் நமக்குத் தெரியாததால், நாமாகத் தீர்மானித்துக் கொண்ட ஒரு பத்து நாட்களைத் திருவிழாவாகக் கொண்டாடுகிறோம். இந்தக் கொண்டாட்டத்தைச் சிறு வயதிலேயே பார்த்தால்தானே அவன் வளரும்போது அவனும் கொண்டாடுவான். பிரம்மோற்சவம் என்று பத்து நாள், பன்னிரண்டு நாள் கொண்டாடுவார்கள். இதைப் போல ரதோற்சவம் என்றும் ஒன்று உண்டு. அது உபசாரங்களில் ஒன்று. அன்றாடம் நாம் வீட்டில் பகவானைக் கும்பிடும்போதுகூட 'ரதானாரோகயாமி' என்று ரதத்தையும் சேர்த்துச் சொல்வதே வழக்கம். அதாவது, மனதினாலேயே பகவானை ரதத்தில் ஏற்றி வைக்கிறோம். நாம் இறைவனுக்குச் செய்யும் உபசாரத்தைப் பத்துப் பேர் பார்க்க வேண்டாமா? அதற்கு உதவுவது தேர் பவனி.

இறைவனை தேரில் அமர வைக்க வேண்டும். நாம்தான் தேரின் வடம் பிடித்து இழுக்க வேண்டும். யானையையோ, குதிரையையோ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



வைத்து இழுக்கக் கூடாது. நம் கைகளால் தேரை இழுத்து உபசாரம் செய்கிறோம். வருடா வருடம் இப்படிக் கொண்டாடினால்தான் நமக்கு அவன் ஞாபகம் இருக்கும். ஒருவர் திடகாத்திரமானவர். நல்ல சுறுசுறுப்பு. காலையில் எழுந்து குளித்துவிட்டுக் கோயிலுக்கு வருகிறார். அப்படி வர முடியாதவர்கள் இருப்பார்களல்லவா... அவர்களுக்கும் அருள வேண்டாமா? அதனால் அவர்கள் இருக்கும் இடத்துக்கே சென்று தரிசனம் தர தேர் பவனிதானே உதவும்! பக்தர்கள் தன்னைப் பார்க்கட்டும் என்று அவனே வருகிறான். 'நான் தொலைவில் இருக்கிறேன். உன்னை தினமும் வந்து பார்க்க முடியாது. அதனால் இன்று உன்னை தரிசித்து விட்டேன். எனவே, வருடம் முழுதும் உன்னைப் பார்த்த பலனை எனக்குக் கொடு!' என்று கேட்பதாக சுப்ரபாதத்தில் ஒரு வாசகம் வரும். அப்படிப் பட்டவர்களுக்கும் அருளவே, அவர்கள் இருக்கும் இடத்துக்குச் செல்கிறார் பகவான். ரதோற்சவம் என்கிற வைபவம் இல்லை என்றாலும்கூட கடவுளின் விக்கிரகத்தைத் தூக்கிக் கொண்டு பக்தர்களிடம் செல்லும் வழக்கமும் இருந்ததுண்டு.

நான் சிங்கப்பூரில் பொறியியல் பயில்கிறேன். எனக்கு அம்பாள் மீது பக்தி அதிகம். சென்னை மாங்காடு காமாட்சி அம்மன் கோயிலில் அம்பாளுக்கு தாமரை மாலை சூட்டுவதாக வேண்டிக் கொண்டேன். அதன்படி, மாலை கட்டி எடுத்துச் சென்றேன். ஆனால், அந்தக் கோயில் சிவாச்சார்யார், 'நாரால் கட்டிய மாலையை மட்டுமே அம்பாளுக்குச் சாத்த முடியும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நூலால் கட்டிய மாலையை சாத்த முடியாது!' என்று சொல்லி விட்டார். எவ்வளவோ கெஞ்சியும் அவர்கள் என் வேண்டுதலுக்குச் செவி சாய்க்கவில்லை. 'கனி, பூ, இலை அல்லது ஒரு துளிக் கண்ணீர் ஆகியவற்றில் எதையும் ஏற்றுக் கொள்வேன் என்று பகவான் கூறியிருக்கிறாரே... சிறுத்தொண்ட நாயனார், தன் பிள்ளைக் கறியை அன்போடு படைத்தபோது அதையும் சிவபெருமான் ஏற்றுக் கொண்டாரே... புராணங்களில் இப்படி இருக்க, எனது காணிக்கையை நிராகரிப்பது எந்த விதத்தில் நியாயம்?

– கோ. இரகுநந்தன், சென்னை-14.

உங்கள் சொற்பொழிவு கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. பழைய கதைகளை எல்லாம் சொல்கிறீர்கள். அவை எல்லாம் தினமும் வருபவை அல்ல. எப்போதோ நடந்த நிகழ்ச்சிகள்! கண்ணப்ப நாயனார் மாமிசம் கொடுத்து, தன் பக்தியை வெளிப்படுத்தியவர். பிள்ளைக் கறி கொடுத்தவர் சிறுத்தொண்ட நாயனார். இவற்றை உதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது!

நாருக்கு இருக்கும் தூய்மை செயற்கையாகத் தயாரிக்கப்படும் நூலுக்கு இருக்காது. எதைக் கொடுத்தாலும் வாங்குவார்தான். அதற்காக நீங்கள் கொடுப்பது எல்லாவற்றையும் வாங்கிக் கொள்ள வேண்டும் என்றால், நீங்களாக ஒரு பகவானைப் படைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

பக்தனாக இருக்கும் நீங்கள், அர்ச்சகர் சொன்னவுடன், 'ஓஹோ, நாரில் தொடுத்த மாலைதான் வேண்டுமா? இதோ வாங்கி வருகிறேன்' என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும்... அதல்லவா பக்தி!

அகங்காரம் இருக்கும் இடத்தில் பக்தி இருக்காது. உண்மையான பக்தி இருக்கும் இடத்தில் அகங்காரமோ எதிர்ப்போ கோபமோ காமமோ வரக் கூடாது! இவற்றை வர விடாமல் பண்ணிக்கொள்ள வேண்டும். நீங்கள், பூவே போடவில்லை என்றாலும் அம்பாள் உங்களுக்கு அனுக்கிரகம் செய்வாள்.

விநாயகருக்கும் முருகனுக்கும் ஏன் புத்திரர்கள் இல்லை?

-பெயர் குறிப்பிடாத பெங்களூர் வாசகர்.

தெய்வங்களுக்கு எல்லாம் புத்திரர்கள் இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை! அவர்களெல்லாம் மனிதர்களாகவோ, வேறு உருவத்திலோ வந்தார்கள் என்றால், வேறு காரியத்துக்காக வந்திருக்கிறார்கள். நம்மைப் போல் குடும்பம் நடத்த வேண்டும் என்கிற தேவை அவர்களுக்கு இல்லை. நீங்கள் குறிப்பிட்ட விநாயகர், முருகன் என்கிற இருவர் மட்டும்தான் என்றில்லை... எத்தனையோ கடவுள்களுக்குப் பிள்ளைகள் இல்லை. விஷ்ணுவுக்கு எத்தனைப் பிள்ளைகள் இருக்கிறார்கள்?

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



'கடவுள்களுக்குக் குழந்தை இல்லையே!' என்று கவலைப் படாதீர்கள். பரம்பரையைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. பாவம் செய்தால், இழிவான பிள்ளை பிறக்கும். புண்ணியம் செய்தால், உயர்ந்த பிள்ளை பிறக்கும். கடவுளுக்கு ஏது பாவ- புண்ணியம்? கடவுள் என்பவர், உலகங்களுக்கு எல்லாம் பிள்ளையாகவும் தாயாகவும் இருப்பவனாயிற்றே! அவனுக்கு எதற்குப் பிள்ளைகள்? அந்த முருகன் சின்னவனாக இருக்கும்போது நமக்குப் பிள்ளையாக இருக்கிறான். வளர்ந்து தாரகாசுரனை அழிக்கும்போது நமக்கெல்லாம் அப்பாவாக இருக்கிறான். சிறு பிள்ளைகளுக்குப் புரிய வைப்பதற்காக அப்பா-அம்மா-பிள்ளை என்று கதைகள் சொல்கிறோம். மற்றபடி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கடவுளுக்கு அண்ணி- நாத்தனார்- மச்சினர்- சகலபாடி- சித்தப்பா பிள்ளை இதெல்லாம் தேவை இல்லை!

ஹோமம் எந்த நேரத்தில் செய்யலாம்?

– எல். அலமேலு, துவரங்குறிச்சி.

ஹோமம் செய்வதற்கு என்று நேரம் தனியாக இல்லை. சூரியோதயத்துக்குப் பின், நண்பகல் பன்னிரண்டு மணிக்கு முன்னால் ஹோமத்தை ஆரம்பித்துவிட வேண்டும். அஸ்தமனத்துக்குள் முடிக்க வேண்டும். ஹோமம் பெரியதாக இருந்தால் இரவு பதினோரு மணி வரை இழுத்துக் கொண்டு போனாலும் தப்பில்லை.

கும்பாபிஷேகம் நடக்கும்போதும் சபரிமலை மகர விளக்கின்போதும் கருடன் உயரப் பறக்கிறது என்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கூறுகிறார்களே, (கழுத்தில் வெண்மையான பாகம் உடையதுதானே கருடன்?) அந்தப் பறவையைப் பார்த்தால் கழுகு போல் தெரிகிறதே?

– பி.சீனிவாசன், குணசீலம்.

வெள்ளையாக இருந்தால் கருடன் என்று சொன்னால், வெள்ளை இல்லை என்றால் கருடன் இல்லை என்றுதானே அர்த்தம்! வெள்ளையாக இல்லாததை நீங்கள் பார்த்தீர்களா? அத்தனைப் பேரும் பார்த்துவிட்டு கருடன் என்று சொல்லும்போது நீங்கள் மட்டும் அது கருடன் இல்லை என்று எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? இப்படிப் பல கேள்விகள் எழும். ஒன்று வைத்துக் கொள்ளுங்கள்... நம் ஊரில் நல்ல காரியம் என்றால் கருடன்தான் பறக்கும். கழுகு பறக்காது. கழுகு பறப்பதற்கும் கருடன் பறப்பதற்கும் தெளிவான வேறுபாடு உண்டு. கருடன் ஓரிரு முறை சிறகை அசைத்துவிட்டு நெடுநேரம் சிறகசைக்காமல் வானத்தில் மிதக்கும். கழுத்தைப் பார்க்காமலேயே கருடன் என்று தெரிந்து கொள்ளலாம். கருட பட்சியைப் பார்த்துவிட்டுப் போனால் நல்ல சகுனம் என்பது நம்பிக்கை. கிராமப்புறங்களில் கருடன் தட்டுப்படும். நகரத்தில் அந்த அளவுக்கு கருடன் இருக்காது. வயதான கருடன்கூட இளமைத் துடிப்போடு இருக்கும். எனவே, பல கருடன்களுக்கு இடையில் ஒரு கழுகை நீங்கள் பார்த்திருக்கலாம் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

யுக முடிவில் பிரளயம் வந்து எல்லாம் அழிந்த பின், இதுதான் குருக்ஷேத்ரம், இங்கேதான் ராமர் லிங்கப் பிரதிஷ்டை செய்தார் என்றெல்லாம் எப்படிக் கண்டுபிடிக்க முடிகிறது?

– வசந்தி ராஜீவ், சென்னை-20.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிரளயம் வருவதற்கு- எல்லாம் அழியும் சூழல் வருவதற்கு ஒரு கணக்கு உண்டு. *சதுர் யுக சஹஸ்ராணி பிரம்மணோ தினமுச்யதே:* நாலு யுகங்களின் ஆயிரம் சுற்று வந்தால்தான் ஒரு பிரளயம் வரும். அப்படி வரும்போது, மறுபடி சிருஷ்டிப்பதற்காக அனைத்துப் பொருட்கள் மற்றும் ஜீவன்களின் சாரத்தை பகவான் எடுத்துக் கொள்கிறார். மனிதன் அழிந்தால் அவனை மீண்டும் சிருஷ்டிக்க மனிதனின் விதையை அவர் எடுத்துக் கொள்வார். இதுதான் சம்ஹாரம். அவர் பெயரே சம்ஹார மூர்த்திதானே! அறுவடை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்யும்போது நாம் விதைக்கு என்று கொஞ்சத்தை எடுத்து வைத்துக் கொள்கிறோமே.

பிரளயத்துக்கு முன் இருந்த அனைத்தையும் மறுபடி சிருஷ்டிக்கிறார். ரிஷிகள் என்பவர்கள் நம்மைவிட புத்திசாலிகளான ஒரு குழு. நம் குழந்தைக்கு அறிவு இருக்கிறது. நமக்கு அதைவிட அதிகம் இருக்கிறதே... அதைப் போல நம்மால் உணர முடியாததை உணரும் திறன் அந்த ரிஷிகளுக்கு உண்டு. கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலத்தை உணர்ந்தவர்கள் அவர்கள். நம் காலத்திலேயே 'இதைச் சாப்பிட்டாயா... உனக்கு நிச்சயம் இந்த வியாதி வரும்' என்று ஒருவர் சொல்கிறாரே... உங்களுக்குத் தெரியாதது டாக்டருக்குத் தெரிகிறதே. இந்தக் கட்டடத்தை இப்படிக் கட்டினால் இடிந்து விழும் என்று இன்ஜினீயர் சொல்கிறாரே... நமக்குத் தெரியாதது அவருக்குத் தெரிகிறதே. இவர்களுக்கெல்லாம் தனி புத்தி இருக்கிறதல்லவா! இதைப் போல ரிஷிகளின் மனம் எல்லா காலத்தையும் உணர்ந்தது. அவர்கள் புராணத்தின் மூலம் இது இங்கே இருக்கிறது என்று சுட்டிக் காட்டுகிறார்கள்.

பகவானே நான்கு திசைகளையும் படைத்திருக்கிறார். அவ்வாறிருக்க தெற்கு திசை மட்டும் தவறாகப் பேசப்படுவதேன்?

- புஷ்பா நரசிம்மன், சென்னை-41

தெற்குத் திசையை நோக்கி தட்சிணாமூர்த்தி பகவானே நிற்கிறார். தெற்கு திசை தப்பே இல்லை. பகவானுக்கு, திசை என்பது இல்லை. திசை எல்லாம் நமக்குத்தான். சம்பிரதாயத்தில் நல்ல காரியம் செய்யும்போது தெற்கு வேண்டாம் என்று வைத்திருக்கிறோம். தெற்கு எமனின் திசை. அதனால் மற்ற மூன்று திசையும் வேண்டும் என்று வைத்திருக்கிறோம்.

கங்கையில் மூழ்கி கடவுளை வழிபடுபவர்கள், நான்கு திசைகளையும் சொல்லித்தான் வழிபடுவார்கள். தெற்கையும் சொல்வதுண்டே! தெற்கை வணங்காதவர்கள் இல்லை. இன்னும் நீங்கள் தெற்கை வணங்கும் அளவு வளரவில்லை. சாதாரண மனிதர்களாக நாம் இருக்கும் வரையில் தெற்கை விட்டுவிடலாம். ஆன்மிகத்தில் நாம் வளர்ந்த நிலையை அடையும்போது நமக்கு தெற்கெல்லாம் கிடையாது. தற்சமயம் நீங்கள் தெற்குப் பார்த்து வணங்க வேண்டியதில்லை.

சின்னக் குழந்தைகளுக்கு எழுத்து கற்கிற காலத்தில் ஸ்லேட்டும் குச்சியும் வேண்டும். வளர்ந்த பிறகு அவை வேண்டியதில்லை. அதைப் போல ஆரம்ப காலத்தில் சில விஷயங்களை வைத்துக் கொள்ளுங்கள். வளர்ந்த பிறகு அவற்றை விட்டுவிடலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விரதம் இருப்பவர்கள் பகலில் தூங்கலாமா?

மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராக அவதாரம், நரசிம்மாவதாரம், வாமனாவதாரம், பரசுராமாவதாரம், ராமாவதாரம், பலராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், கல்கி அவதாரம் என்று வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு காரண காரியத்துக்காக அவதாரம் எடுத்த பெருமாள், பலராமனாகவும் கிருஷ்ணனாகவும் ஒரே காலத்தில் அவதாரம் எடுத்தது ஏன்?

- ம.சுப்பிரமணியம், வடிவீஸ்வரம்.

ஒருவராகத்தான் அவதாரம் எடுக்க வேண்டும், இந்தக் காலத்தில்தான் அவதாரம் எடுக்க வேண்டும் என்றெல்லாம் பகவானுக்கு சட்ட திட்டங்கள் நாம் சொல்லிக் கொடுக்க வேண்டுமா?

பரசுராமராகவும் ஸ்ரீராமனாகவும் அவதாரம் எடுத்தார் விஷ்ணு. தனித்தனியாக எடுத்தாலும் இருவரும் சந்திக்கிறார்களே... அவர் போன பிறகுதான் நான் வருவேன் என்று சொல்லவில்லையே? பகவான் கிருஷ்ணன், ஒரே நேரத்தில் இரண்டு கோபிகைகளோடு இருப்பான். பன்னிரண்டு வீடுகளில் ஒரே நேரத்தில் இருப்பான். 'எனது வீட்டில் வெண்ணெய் எடுத்துத் தின்கிறான்!' என்று ஒரு கோபிகை, யசோதையிடம் சொல்லப் போனால், அங்கேயும் கிருஷ்ணன் இருப்பான். ஓர் இடத்தில் விளையாடிக் கொண்டு இருப்பான். மற்றோர் இடத்தில் குழலூதிக் கொண்டு இருப்பான். இன்னோர் இடத்தில் மாடு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மேய்த்துக் கொண்டு இருப்பான். பகவானுக்கு அவதாரம் என்பதெல்லாம் விளையாட்டு. ஒரே நேரத்தில் இரண்டு உருவங்களைக் காட்டுவதில் அவனுக்கு ஒரு சிரமமும் கிடையாது. பகவானின் லீலைகள் நம் சிந்தனைக்குள் சிக்காது.

அடுத்து ராமாவதாரத்தில் தம்பியாக இருந்த லட்சுமணன் அல்லவா கிருஷ்ணாவதாரத்தில் அண்ணன் பலராமனாக வருகிறான்..? அடுத்த அவதாரத்தில் நான் தங்களின் அண்ணனாக வர வேண்டும் என்று ராமனிடம் லட்சுமணன் கேட்டுக் கொண்டதாகவும் ஒரு கதை இருக்கிறது. இதில் கிருஷ்ணன்தான் முழு அவதாரம். பலராமன், அம்சாவதாரம். ஆதிசேஷன்தான் லட்சுமணனாக வந்தது. லட்சுமணன்தான் பலராமனாக வந்தார்.

மேலும் இந்த மாதிரி வாக்குவாதங்களே தேவை இல்லை. அவர் இப்படியும் வரலாம்; அப்படியும் வரலாம்; எப்படி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேண்டுமானாலும் வரலாம். வாமனாவதாரம் எடுத்தார். தானம் கேட்கும்போது குள்ளமாக இருந்தவர் அடுத்த விநாடியே திரிவிக்கிரம அவதாரம் எடுத்து உலகை அளக்கவில்லையா? 'ஒரு விநாடிக்குள் எப்படி இரண்டு அவதாரம்?' என்று கேட்க முடியுமா?!

கல்யாணம் ஆகி வந்ததில் இருந்தே என் மருமகளுக்கு மனநிலை சரியில்லை. அவளது ஜாதகம் பார்த்த ஜோதிடர் பித்ரு சாபம் இருப்பதால் ராமேஸ்வரம் போய் திலஹோமம் முதலிய பரிகாரங்கள் செய்ய வேண்டும் என்றார். இதைப் பெண்ணின் தகப்பனாரிடம் சொன்னேன். ஆனால், அவரோ தன் பெண்ணைக் கூட்டிக் கொண்டு போய் பரிகாரங்கள் செய்ய மறுக்கிறார். இந்த நிலையில் என் பையனே, தன் மனைவியை அழைத்துப் போய் பரிகாரம் செய்யலாமா?

– டி.வைத்தியநாதன், சென்னை-94

மருமகளுக்கு மனநிலை சரியில்லை என்கிறீர்கள். ஜோதிடரிடம் போவதற்கு முன் டாக்டரிடம் காட்டியிருக்க வேண்டும். ஜோதிடம் பொய் என்று சொல்ல வரவில்லை. நீங்கள் பார்த்த ஜோதிடர், சரியாகக் கணித்து, கிரக நிலைகளை எல்லாம் துல்லியமாகப் பார்த்துத்தான் இப்படிச் சொன்னாரா என்று இப்போது என்னால் சொல்ல முடியவில்லை.

அடுத்து, மருமகளின் பெற்றோர் செய்யவில்லை என்று சொல்ல முடியாது. அவள் உங்கள் வீட்டுச் சொத்து. அவளுக்கு ஒன்று வந்தால், அதற்கு வேண்டியதைச் செய்யும் பொறுப்பு உங்களைச் சேர்ந்ததே தவிர, அவள் அப்பாவுக்கு ஒரு சம்பந்தமும் கிடையாது. கன்யா தானம் செய்து கொடுத்ததோடு அவர் பொறுப்பு தீர்ந்தது. நாளைக்கு உங்கள் மருமகளுக்கு ஒரு குழந்தை பிறக்கும். அந்தக் குழந்தைக்கு ஏதாவது விசேஷம் என்றால் உங்கள் மருமகளின் அப்பாவைவிட உங்களுக்குத்தான் பொறுப்பு அதிகம்.

ஒரு பொருளை ஓர் ஆசாமியிடம் இருந்து தானமாக பெற்றிருக்கிறோம். அந்தப் பொருளுக்கு ஒரு கேடு வந்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே, தானம் கொடுத்த ஆசாமியிடம் போய்க் கேட்க முடியுமா? முடியாதே! அதே மாதிரி இந்த விஷயத்தில் நீங்களே ராமேஸ்வரத்துக்கு அழைத்துப் போய் என்னென்ன பரிகாரங்கள் செய்ய வேண்டுமோ, அனைத்தையும் முறைப்படி செய்து வையுங்கள். அதே நேரம், பித்ருக்களால்தான் உங்கள் மருமகளுக்கு இப்படி வந்தது என்பதை ஆராய ஜாதகத்தில் ஏகப்பட்ட விஷயங்களைப் பார்க்க வேண்டும். நீங்கள் கலந்தாலோசித்த ஜோதிடர் அவ்வளவையும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பார்த்துத்தான் சொன்னாரா என்பது தெரியவில்லை. எனவே, அதை மட்டும் நம்பாமல் நல்ல ஒரு மனநோய் நிபுணரிடமும் அழைத்துச் செல்லுங்கள்.

விரதம் இருப்பவர்கள் பகலில் தூங்கக் கூடாதா?

- டி.முருகேசன், திருவாரூர்

விரதம் என்றாலே ஏதோ ஒரு லட்சியத்தை மனதில் வைத்து, ஏதோ ஒரு தெய்வத்தை ஆராதிக்கிறோம் என்றுதானே பொருள். அப்படி இருக்கும்போது எப்படித் தூக்கம் வரும்?! இரவு செகண்ட்ஷோ சினிமாவுக்குப் போகணும் என்றால், தூங்க மாட்டோமே... நாளைக்கு ரயிலைப் பிடிக்க வேண்டும் என்றாலோ, ஓர் அலுவலகத்துக்கு ஒரு காரியமாகப் போக வேண்டும் என்றாலோ நமக்குத் தூக்கம் வராது. இப்படி சாதாரணப் பொழுதுகளிலேயே தூக்கம் வருவதில்லையே! விரதம் இருக்கும்போது தூங்குவேன் என்றால் என்ன விரதம் அது? தர்ம சாஸ்திரம் தூங்கக் கூடாது என்கிறதே என்பதைவிட நீங்களே தூங்காமல் அல்லவா இருக்க வேண்டும்? விரதத்தின்போது தூங்கினீர்கள் என்றால் விரதத்தில் உங்களுக்கு ஆர்வம் இல்லை என்று அர்த்தம். விரதத்தின்போது உற்சாகமாக இருக்க வேண்டாமா? தூங்குமூஞ்சியாகவா விரதம் இருப்பது? தெய்வத்திடம் ஒன்றை எதிர்பார்க்கும்போது ஈடுபாடு, சுறுசுறுப்பு வேண்டாமா? மனதில் சுறுசுறுப்பு இருக்கும்போது தூக்கம் எப்படி வரும்? அர்த்தம் இருப்பவன் தூங்க மாட்டான். அனர்த்தம் இருப்பவனும் தூங்க மாட்டான். அனர்த்தம் – அதாவது ஏதோ தொந்தரவு இருப்பதால்தான் நீங்கள் இந்த விரதத்துக்கே வந்திருக்கிறீர்கள். இப்படிப்பட்ட நேரத்தில் உங்களுக்குத் தூக்கமே வரக் கூடாதே... எப்படித் தூங்குகிறீர்கள்? முக்கியமான காரியங்கள் இருக்கும்போது தூக்கம் வந்தால், உங்கள் உடலில் ஏதோ குறைபாடு இருக்கிறது என்று பொருள்.

இந்தக் கால ஆகாய விமானம், ராக்கெட் போன்ற விஞ்ஞானத் தொழில் நுட்பங்கள் அந்தக் காலத்திலேயே நமது புராணங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் விஞ்ஞான வளர்ச்சியில் நமது நாடு பின்தங்கி இருப்பதற்கு என்ன காரணம்?

– மு.மதிவாணன், அரூர்.

நமக்கு வேண்டிய செளகரியங்களைச் சுலபமாக ஏற்படுத்திக் கொள்வதற்கு, என்னென்ன விஷயங்களை எல்லாம் கண்டுபிடிக்கிறார்களோ அதைத்தான் விஞ்ஞானம் என்று நீங்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குறிப்பிடுவதாக உங்கள் கேள்வியில் இருந்து எனக்குப் புலப்படுகிறது.

அதாவது, ஐம்புலன்களால் நாம் அனுபவிக்க வேண்டியதை சிரமம் இல்லாமல் அனுபவிக்க உதவும் உபகரணங்களைக் கண்டுபிடிப்பதை விஞ்ஞான முன்னேற்றம் என்கிறீர்கள். ஆனால், விஞ்ஞானத்தின் அர்த்தமே வேறு.

நீங்கள் குறிப்பிடும் விஞ்ஞானத்தால் ஏற்கெனவே இருப்பதைத்தான் கண்டுபிடிக்க முடியும். நம்மை சோம்பேறித்தனமாக வைப்பதற்கு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் உதவவில்லையே என்று கவலைப்படுகிறீர்கள். எல்லாரையும் சுறுசுறுப்பாக்க அல்லவோ விஞ்ஞானம் உதவ வேண்டும்? சாப்பிட அவசரம், ஆபீஸுக்கு அவசரம், கல்யாணத்துக்கு அவசரம், பிள்ளை பெற்றுக் கொள்ள அவசரம், சாவதற்கு அவசரம்... இப்படி எல்லாவற்றையும் அவசர அவசரமாகச் செய்வதற்குத்தான் விஞ்ஞானம் உதவுகிறதே தவிர, எல்லாவற்றையும் சரியாகச் செய்து சந்தோஷமாக வாழ உங்கள் விஞ்ஞானம் உதவவில்லையே...

ஆகாய விமானம் கண்டுபிடித்தீர்கள்... எத்தனை இடத்தில் அது விழுந்து, எத்தனைப் பேர் பரிதாபமாக இறந்து போயிருக்கிறார்கள்? ஆபத்து இல்லாத விமானத்தைக் கண்டுபிடிக்க முடிந்ததா உங்களால்? நீங்கள் குறிப்பிடும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் லாபத்தைவிட இழப்புகள்தான் அதிகம். இயற்கை அல்லாதது எல்லாம் அழிவுக்குத்தான் இட்டுச் செல்லும். அழிவு இல்லாத ஒன்றை உங்களால் கண்டுபிடிக்க முடியாது.

நடந்து போகிறவனுக்கும் மாட்டு வண்டியில் போகிறவனுக்கும் குதிரை வண்டியில் போகிறவனுக்கும் விபத்து ஏற்படுவதில்லை. பழைய காலத்தில் ஆற அமர நாம் உபயோகித்துக் கொண்டு இருந்த பொருட்களால் நமக்கு ஆபத்து வருவதில்லை. புலன்களுக்கு சௌகரியத்தைக் கொடுக்கும் கண்டுபிடிப்புகளை விஞ்ஞானம் என்று எண்ணாதீர்கள். சாட்சாத் பரப்பிரம்மத்தைத் தெரிந்து கொள்வதுதான் விஞ்ஞானம்.

எனக்கு அரைக்கத் தெரியாது என்றால் மாவாகக் கொடுப்பீர்கள். ஊற்றத் தெரியாதென்றால் தோசையாகக் கொடுப்பீர்கள். சாப்பிடத் தெரியாதென்றால் க்ளூக்கோஸ் ஏற்றுவீர்கள். வியாதி வராமல் செய்ய முடியுமா உங்கள் விஞ்ஞானத்தால்? இறப்பில்லாமல் செய்ய முடியுமா? இயற்கையை மீற முடியுமா? இயற்கைக்குக் கட்டுப்பட்டதல்லவா உங்கள் விஞ்ஞானம்? ஆத்ம திருப்தியைக் கொடுக்க நீங்கள் குறிப்பிடும் விஞ்ஞானத்தால் முடியாது!

ராமர் புஷ்பக விமானத்தில் போனார். எந்த இடத்துக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



விமானத்தில் மட்டுமே போக முடியுமோ, அங்கே விமானத்தில் போனார். நடந்தே போகக் கூடிய இடத்துக்குக்கூட ஆட்டோவில் போவதைப் போல அல்ல அது. எனவே, நமக்கு அழிவைத் தரக் கூடிய விஞ்ஞானத்தின் பக்கம் நம் ரிஷிகளின் சிந்தனை செல்லவில்லை. நம் முன்னோர்கள் விஞ்ஞானம் தெரியாதவர்கள் அல்லர். 'நீண்ட ஆயுளோடு இருக்க வேண்டுமா? பிராணாயாமம் செய். தியானம் செய். ஆயுள் நீளும்!' என்றார்கள். உங்கள் விஞ்ஞானத்தால் ஆயுள் நீளுமா? ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உதவாது என்பதுபோல் இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கைக்கு உதவாத விஞ்ஞானத்துக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவ்வளவுதான்.

அருகில் உள்ள கோயிலில் துர்க்கை அம்மனுக்கு வெள்ளிக் கவசம் அணிவிப்பதாக வேண்டிக் கொண்டேன். என் பிரார்த்தனை நிறைவேறியது. நான் நேர்த்திக்கடனைச் செய்து முடிப்பதற்குள் வேறொரு பக்தர் வெள்ளிக் கவசம் செய்து துர்க்கை அம்மனுக்கு அணிவித்து விட்டார். இப்போது நான் என்ன செய்வது?

– சி.உமாராணி, சென்னை-49

ஆயிரம் பேர் வெள்ளிக் கவசம் அணிவித்தாலும் உங்கள் பிரார்த்தனையை நீங்கள்தான் நிறைவேற்ற வேண்டும். 'என் பிரார்த்தனை நிறைவேறினால் வெள்ளிக் கவசம் அணிவிக்கிறேன்' என்று பலரும்தான் வேண்டிக் கொள்வார்கள். 'ஒருவர் வேண்டிக் கொண்டு விட்டார். அதனால் நீ வேண்டிக் கொள்ளாதே' என்று துர்க்கை அம்மனே தோன்றி உங்களிடம் சொல்ல முடியுமா?

இரண்டாவது: வெள்ளிக் கவசம் என்பது பகவானுக்கு ஒன்றும் குறையாக மாறி விடாது. 365 கவசங்களை தினத்துக்கு ஒன்றாக மாற்றி மாற்றி அணிவிக்கலாம். அதைவிட அதிகமாக கவசம் சேர்ந்து விட்டால் ஒரு நாளைக்கு ரெண்டு போடலாமே... பகவானுக்கு அணிவிப்பது அதிகம் என்று சொல்ல முடியாது. அவர் போட்டார், இவர் போட்டார் என்று பார்க்காதீர்கள். உங்கள் பிரார்த்தனையை நீங்கள் நிறைவேற்றுங்கள்.

எட்டுக் கைகள் கொண்ட துர்க்கையை வீட்டில் வைத்து வழிபடலாமா?

– தீபா, மின்னஞ்சல்

மார்க்கண்டேய புராணம், எட்டுக் கைகள் கொண்ட துர்க்கையை வழிபடச் சொல்கிறது. இதற்கு இந்தப் படத்தை வீட்டில் வைத்துக் கொள்ள அனுமதி கொடுத்ததாகத்தான் அர்த்தம். இல்லையெனில் ஆராதனை செய் என்றே சொல்லியிருக்காது. எட்டு புஜம் என்ன, ஆயிரம் புஜம் கொண்ட கடவுள் படத்தையும் வீட்டில் வைக்கலாம்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நவ பக்திகளில் சிறந்தது எது?

நவ பக்திகளில் எது சிறந்தது, எது சுலபமானது?

- எஸ்.வி.ரமணன், திரைப்பட இயக்குநர், சென்னை.

பக்திகள் ஒன்பது விதம் என்றால், சுலபமானது - கடினமானது என்கிற விதத்திலோ, சிறந்தது - சிறப்பில்லாதது என்கிற அடிப்படையிலோ பாகுபடுத்தப் படவில்லை.

இனிப்பில் எத்தனை வகை இருக்கிறது? பாலில் ஓர் இனிப்பு, சர்க்கரையில் ஓர் இனிப்பு, தேனில் ஓர் இனிப்பு, பழத்தில் ஓர் இனிப்பு... ஏன் தண்ணீரில்கூட ஓர் இனிப்பு இருக்கிறதே. இவற்றில் எது சிறந்த இனிப்பு, எது சிறப்பில்லாத இனிப்பு என்று கூற முடியுமா? எனவே பக்தியை இப்படிப் பாகுபடுத்த முடியாது.

நவ (ஒன்பது) பக்தி என்பது எப்படி வந்தது? 'பல பேர், பல இடங்களில் பக்தியை எப்படியெல்லாம் காட்டியிருக்கிறார்கள், பார்த்தீர்களா? இதுபோல் நீங்களும் உங்கள் பக்தியைக் காட்ட வேண்டாமா?' என்று பிறருக்குச் சுட்டிக்காட்டவே வந்தது. அதில் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். சிறந்ததை எடுங்கள், சிறப்பில்லாததை விடுங்கள் என்று ஒன்றுமில்லை. *ஶ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாத சேவனம் அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் சக்யம் ஆத்ம நிவேதனம்:-* இந்த ஸ்லோகமே எப்படி வந்தது தெரியுமோ? புராணத்திலும் இதிகாசத்திலும் இப்படி எல்லாம் பக்தி செலுத்தியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லத்தான் வந்தது. ஒரு வகை என்ன, எல்லா வகையிலும் நாம் பக்தி செலுத்தலாமே!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பஜ்யதே சேவ்யதே அநேன இதி பக்தி: புலன்களின் வாயிலாகச் செய்யப்படும் பக்தியில் மனம் ஈடுபடவில்லை என்றால் எந்தப் பயனுமில்லை. எல்லாம் பக்திதான். உயர்ந்தது, தாழ்ந்தது என்று ஒன்றும் கிடையாது. இதற்கு முன் ஒன்பது விதமாக பக்தி செலுத்தினார்கள் என்பது தென்படுகிறது. நாளைக்கு பத்தாவது விதமான பக்தியை ஒருவர் காட்டலாம். அதுவும் பக்திதான்.

மனம் ஒன்றிச் செய்யபடுவது பக்தி. பாத சேவனம் என்றால் பகவானின் காலைத் தடவுவது அல்ல. இது பகவானின் கால். இது என் கை. இதனால் பக்தியோடு அவன் பாதத்தைப் பற்றுகிறேன் என்று முழு மனமும் அதில் ஈடுபட வேண்டும். மன ஒன்றுதல் இல்லாத எதுவும் பக்தியாகாது.

அநேக ஆலயங்களில் ஸ்வாமி, அம்மன் போன்ற தெய்வ மூர்த்திகளுக்கு அபிஷேகம் நடக்கும்போது வஸ்திரம் அணிவிக்காமல் செய்கிறார்களே, இது சரியா?

– வி.ரெங்கராவ், சென்னை-88.

கடவுள் வடிவத்தை சிலையாகச் செய்து, அதைக் கோயிலில் பிரதிஷ்டை செய்கிறோம். சிலை வடிக்கப்படும்போது என்ன நிலையில் இருக்கிறதோ, அதை அப்படியேதான் வணங்க வேண்டும். அலங்காரத்துக்குத்தான் வஸ்திரம் வருகிறதே தவிர,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பகவானுக்கு வஸ்திரம் இல்லை என்றால் தவறாகாது.

நாமெல்லாம் குளித்த பிறகுதான் வேட்டி கட்டிக் கொள்கிறோம். வேட்டி கட்டிக் கொண்டே குளிப்பதில்லையே... பகவான் நம்மைப் போல அல்ல. வெட்கம், ஆடை ஆகியவற்றை எல்லாம் கடந்தவர் அவர். உங்களுக்காகத்தான் சிலையாக வந்திருக்கிறார். உங்களின் சாதாரணமான எண்ணம் பகவானின் சிலையில் வரவே கூடாது!

இரண்டு வயதுக் குழந்தை அம்மணமாக வருகிறது. நமக்கு ஏதாவது விகல்பமாகத் தெரிகிறதா? 'என்ன இந்தக் குழந்தை இப்படி நாணமே இல்லாமல் இருக்கிறதே!' என்று நினைக்கிறோமா? அது குழந்தை என்று உங்களுக்குத் தெரிவதால், வஸ்திரத்தைப் பற்றி நீங்கள் யோசிக்கவில்லை.

மான் தோல் மீது உட்கார்ந்து முனிவர்கள் தவம் செய்வதற்கு விசேஷம் ஏதாவது உண்டா? தற்காலத்தில் மான் தோல் மீது உட்கார்ந்து தியானம் செய்ய முடியாத சூழல் இருக்கிறதே?

- இல. வெங்கட்ராமன், குடந்தை.

தர்மசாஸ்திரத்தின் சட்ட திட்டங்களில் ஓர் அம்சம் உண்டு. ஒன்று கிடைக்கவில்லை என்றால் அதற்கு மாற்றாக மற்றொன்றைச் சொல்லும் அது. ஒன்றை மட்டுமே வைத்துக் கொண்டு இருந்தால் சமயங்களில் அதைச் செய்ய முடியாமல் போய்விடும். ஒன்று கிடைக்கவில்லை என்றால், இன்னொன்றை எடுத்துக்கொள். அதுவும் கிடைக்கவில்லை என்றால், மற்றொன்றை எடுத்துக்கொள். அதுவும் இல்லையா... வேறொன்றை எடுத்துக்கொள் என்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



வரிசையாகச் சொல்லி தாராளமாகக் கிடைக்கும் ஒன்றில் கொண்டுவந்து நிறுத்தும். பசுவின் நெய் கிடைக்கவில்லையானால் எருமை நெய். அது இல்லையா, ஆட்டின் நெய். நெய்யே கிடைக்கவில்லையா, ஜலத்தை எடுத்துக் கொள் என்று சொல்லும். தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொல்ல முடியாதே... நம் புத்திக்கு எந்த அளவு எட்டுகிறதோ அதைவிட அதிகமாக தர்மசாஸ்திரம் வேலை செய்யும்.

முனிவர்கள் மான் தோலில் மட்டும் அமர்ந்து தவம் செய்வதில்லை. புலித்தோலிலும் உட்காருவார்கள். பகவானே புலித்தோலை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஆடையாகக் கட்டியிருப்பார். காட்டில் வாழ்ந்த முனிவர்கள் அங்கே என்ன கிடைக்குமோ அதை மரவுரியாகக் கட்டுவது வழக்கம். நீங்கள் பார்த்த முனிவர், மான் தோலில் உட்கார்ந்தார். மான் தோல் இல்லை என்றால் பலகையில் உட்கார், பலகை கிடைக்காத பட்சத்தில் தர்ப்பையில் உட்கார் என்று தர்மசாஸ்திரம் சொல்லும். தர்ப்பை கிடைக்கவில்லை என்று சொல்ல முடியாதே... எனவே, தியானம் செய்ய மான் தோலுக்காகக் காத்திருக்காதீர்கள். சப்பணம் இட்டு உட்கார்ந்தால் கை, காலுக்கு வேலை கிடையாது. கண்ணை மூடிக் கொண்டால் கண்ணுக்கு வேலை கிடையாது. எல்லாவற்றையும் நிறுத்தும்போது மனம் ஒருமுகப்பட்டு எளிதில் தியானத்தில் ஈடுபட முடியும். தியானம் செய்யும்போது அசையாமல் உட்கார ஒரு ஸ்திரமான ஆசனம் இருக்க வேண்டும். அந்த ஆசனம் புவியீர்ப்பு சக்தியால் உடலின் சக்தி வீணாகாமல் இருக்க உதவுமாறு இருக்க வேண்டும். தர்ப்பையின் மீது உட்கார்ந்து தியானம் செய்தாலும் அது, மான் தோலின் கௌரவத்தைக் கொடுத்துவிடும்.

இல்லற வாழ்வில் ஈடுபடுபவர்கள் ருத்ராட்ச மாலை அணியலாமா?

- ஆர்.ராமசுப்ரமணி, திருவாரூர்-2.

இல்லறத்துக்கும் ருத்ராட்சத்துக்கும் சம்பந்தமில்லை. சிவபூஜை செய்யும் அனைவருமே ருத்ராட்ச மாலை அணியலாம். இல்லறத்துக்கு ஒரு மாலை, துறவறத்துக்கு ஒரு மாலை என்பதெல்லாம் கிடையாது. துறவிகள் இதைத் தவிர வேறு மாலை போட்டுக் கொள்ள மாட்டார்கள். அதைப் பார்த்ததால் இப்படிக் கேட்கிறீர்கள் போலிருக்கிறது. இல்லறத்தில் இருந்து கொண்டே ருத்ராட்ச மாலை போட்டுக் கொள்ளலாம். தவறில்லை. அதே சமயம் தர்ம – நியாயங்களுக்கு மதிப்பு கொடுத்து நடக்க வேண்டும்.

வைணவக் கோயில்களில் நவக்கிரகங்கள் இல்லையே ஏன்?

- ஐ.எஸ்.ஸ்ரீனிவாசன், சென்னை-82.

வேதம் என்று வந்ததோ, அன்றே நவக்கிரக ஆராதனை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வந்துவிட்டது. வேதம் கற்றவர்கள் நாளுக்கு மூன்று முறை நவக்கிரக நமஸ்காரம் பண்ணுவார்கள். அதனால், நவக்கிரகங்களுக்கு என்று தனியாகக் கோயில் என்பது இல்லை. புராணத்தில் சொல்லப்பட்டிருக்கும் தெய்வங்களுக்கு மட்டும்தான் பிரதிஷ்டை இருக்கும்.

நவக்கிரக பிரதிஷ்டை, இடைக்காலத்தில் வந்தது. ஏன் பிரதிஷ்டை இல்லை? அதுதான் தினப்படி நமஸ்காரம் பண்ணிக் கொண்டிருக்கிறோமே... ஏதாவது விசேஷம் என்றால் நவக்கிரகப் ப்ரீதி செய்கிறோம். இப்படி ஒவ்வொரு மூச்சிலும் நவக்கிரகங்களை வழிபட்டதால், தனியொரு நவக்கிரக ஆலயம் தேவைப்படாதிருந்தது. இதெல்லாம் பண்ணாமல் விட்டுப்போன பிறகு, தனியாக ஒரு கோயில் வைக்கலாமே என்ற எண்ணம் வந்தது. இது எப்போதும் அப்படித்தான். அப்பாவின் சிராத்தத்தன்று அவர் படத்தை வைக்கிறார்கள். இது சாஸ்திரத்துக்கு விரோதம். நெஞ்சில் இருக்க வேண்டிய அப்பாவை படத்தில் வைக்கலாமா? வைக்கக் கூடாது! இந்த மாதிரி ஒதுக்கி வைத்ததுதான் நவக்கிரக சந்நிதி. 'எந்த ஒரு கோயிலிலும் நவக்கிரக சந்நிதி வேண்டாம். மனதில் வையுங்கள்' என்று சொல்லும்போது 'அந்தக் கோயிலில் இல்லையே?' என்கிற உங்களின் கேள்வி எங்கிருந்து வந்தது?

சிவன், விஷ்ணு இவர்களிடம் இதில் பேதம் இல்லை. நவக்கிரகம் அனைவருக்கும் பொதுவானது. காலத்தைக் குறிப்பதல்லவா அது? அதனால் சிவன் கோயிலில் உண்டு, விஷ்ணு கோயிலில் இல்லை என்பது கிடையாது. சிவன், விஷ்ணு ஆகிய தெய்வங்களோடு நவக்கிரக தேவதைகளை ஒப்பிடக் கூடாது. அது வேறு, இது வேறு. நவக்கிரகங்கள் சைவமா, வைணவமா என்ற பாகுபாடு எல்லாம் நம் மனதில் இருக்கும் கறைதான்!

மந்திரங்கள், ஸ்லோகங்கள் ஆகியவற்றைத் தவறாக உச்சரித்தாலோ வார்த்தைகள் மாறுபட்டாலோ விபரீத பலன் ஏற்படும் என்கிறார்களே உண்மைதானா?

- ஜி.ஜெயராமன், கூந்தலூர்.

எந்தக் காரியத்தை நாம் செய்தாலும் அதைச் செம்மையாகச் செய்ய வேண்டும். தவறாக ஏன் உச்சரிக்க வேண்டும்? தவறை ஏற்படுத்திக் கொண்டு, பரவாயில்லையா என்று கேட்பானேன்? உச்சரிப்பு மாறினால் அர்த்தம் மாறும். சம்ஸ்கிருதத்தில் 'சக்ரு' என்று ஒரு சொல் உண்டு. ஒரு தடவை என்று பொருள். 'ஷக்ரு' என்றால் சாணி என்று பொருள். ஓர் எழுத்தில் அர்த்தம் மாறி விட்டதே...

ஒரு கதை. அநேகமாக நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். கும்பகர்ணன் தவம் செய்தான். பிரம்மன் வந்தான். '*நிர்த்தேவத்வம்*

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதாவது தேவர்களே இல்லாமல் போகவேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக நித்ராவத்வம் என்று கேட்டுவிட்டான். அன்றிலிருந்து தூங்கிக் கொண்டே இருந்தான். வார்த்தை மாறினால் பொருள் மாறுபடுகிறதே...

எந்த பாஷையானாலும் உச்சரிப்பு சரியாக இருக்க வேண்டும். பச்சைக் கொடி காட்டினால் ரயில் போகும். அதுவே சிவப்புக் கொடியாக இருந்தால் நின்றுவிடும். எந்தக் காரியமாக இருந்தாலும் அததற்கு உண்டான நியதிகளோடு செய்வதுதான் சரியாக இருக்கும்.

கோயிலுக்குச் சென்றுவிட்டு வெளியே வரும்போது பிச்சைக்காரர்களுக்குக் காசு போட்டால் புண்ணியம் போய்விடும் என்கிறார்களே, உண்மையா?

- தி.கருணாநிதி, தனிச்சம்பாளயம்.

எந்த இடத்தில் தானம் செய்தாலும் புண்ணியம் கிடைக்குமே தவிர குறையாது. வீடு வீடாக வந்து பிச்சை எடுப்பதும் உண்டு. கோயிலுக்குப் போய்விட்டு வரும்போது பகவானின் நினைவால் நம் கருணை கொஞ்சம் அதிகமாக இருக்கும் என்பதால் அங்கே வந்து கேட்கிறார்கள்.

கசாப்புக் கடையில் சாமி படத்தை வைத்துக் கும்பிடுகிறார்களே... இது சரியா? சில அசைவ ஓட்டல்களிலும் சாமி படம் வைத்திருக்கிறார்களே?!

- எஸ். மாதேஸ்வரன், அகரம் கிராமம்.

கசாப்புக் கடை என்பது அவருடைய வாழ்க்கை. அவருடைய தொழில். அவருடைய வேலை. கடவுளை பூஜிப்பதற்கும் கசாப்புக் கடைக்கும் சம்பந்தமே இல்லை. ஒருவர் பிறவியிலேயே அசைவம் சாப்பிட்டே பழகி விட்டார். இதைச் சாப்பிட்டால்தான் வாழ முடியும் என்ற சூழ்நிலையில் வாழ்கிறார். அதைச் சாப்பிடுவதாலேயே அவர் கடவுளைக் கும்பிடக் கூடாது என்றெல்லாம் இல்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



உண்மையில் நம் உயிரைக் காப்பாற்ற அசைவம் சாப்பிடவேண்டும் என்பதில்லை. சைவத்திலேயே நமக்குத் தேவையான எல்லாம் இருக்கிறது.

ஒருவர் ஒரு தீவில் வாழ்கிறார். அங்கே மீன் மட்டும்தான் கிடைக்கும். வேறு எதுவும் கிடைக்காது. என்ன செய்வது? உயிர் வாழ வேண்டுமே... மீனைச் சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும். அவரைக் குற்றம் சொல்ல முடியாது. கடவுள், சைவம் சாப்பிடுபவர்களுக்கு மட்டும் என்று விசேஷமாக எதுவும் செய்ய மாட்டார். அவர் அனைத்து ஜீவராசிகளுக்கும் பொதுவானவர். அவரவர் தலைவிதியைத் தீர்த்துக் கொள்ள அவரவர் வாழ்கிறார்கள். இதில் சாமி செய்வதற்கு ஒன்றும் இல்லை. கம்சனும் துரியோதனனும் நன்றாகத்தான் வாழ்ந்தார்கள். போக வேண்டும் என்று வந்தபோது போனார்கள்.

கசாப்புக் கடையில் சாமி படம் வைக்கலாமா? என்று கேட்கிறீர்கள். கண்ணப்பன் கதையைக் கேள்விப்பட்டிருப்பீர்களே... மாமிசத்தையே நைவேத்தியமாக கண்ணப்பன் படைத்ததை பகவான் ஏற்றுக் கொள்ளவில்லையா? பக்தியால் ஏற்றுக் கொண்டார். மாமிசத்தைப் பார்க்கவில்லை. ‘ஒரு வேடன் கொடுத்த எச்சில் மாமிசத்தைத் தின்கிறாயே, உனக்கு மாமிசம்தான் வேண்டுமா? அப்படியே வேண்டும் என்றாலும் உன்னிடம் மழு இருக்கிறது. நெற்றியில் நெருப்பு இருக்கிறது. கையில் ஒரு பாத்திரம் இருக்கிறது. ஒரு மானையும் கூடவே வைத்திருக்கிறாய். உடலோடு ஒட்டியே மனைவி இருக்கிறாள். மழுவால் மானை வெட்டி பாத்திரத்தில் போட்டு வேகவைத்துத் தின்னலாமே...’ என்று ஒரு பக்தன் கேட்டான். அதற்கு ஆண்டவன், ‘அதெல்லாம் இருக்கிறது. ஆனால் பக்தி இல்லையே...’ என்றாராம்.

எனவே, கசாப்புக் கடைக்காரரும் சாமி படம் வைக்கலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இயற்கைச் சீற்றங்களுக்கு பரிகாரம் உண்டா?

பிரத்தியங்கராதேவிக்கு பச்சை மிளகாய் அர்ச்சனை செய்வதில் என்ன சிறப்பு?

-ரேவதிப்ரியன், ஈரோடு.

தெய்வத்தை ஆராதிக்க இரண்டு முறைகள் உண்டு. சமயாசாரம், கௌலாசாரம். வேதம் மற்றும் சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட மானசீக ஆராதனை சமயாசாரம். அது சாத்வீகமானது, சாந்தமானது. அதுதான் நமக்குப் பொருத்தமானது. ஆதிசங்கரர் ஸ்தாபித்த முறை இது.

பழைய காலத்திலேயே கிராமத்தில் இருக்கும் காவல் தெய்வங்களுக்கு ஆடு வெட்டுவது, கோழி வெட்டுவது என்று உக்கிரமாக வழிபடுவோம். பரம்பரையாக இப்படியே பழகி விட்டது. இப்படிச் செய்தால்தான் பலன் தரும் என்கிற நம்பிக்கையில் தொடரும் இது கௌலாசாரம். இந்த நம்பிக்கை பலிக்கலாம்... எப்போதேனும் பலிக்காமலும் போகலாம். இப்படித்தான் வழிபாடு என்கிற நிர்ப்பந்தம் ஏதுமில்லை.

சாட்சாத் அம்பாளைத்தான் பிரத்தியங்கராதேவி வடிவத்தில் பார்க்கிறீர்கள். அதற்காக உக்கிரமாக இருக்கும் அவளுக்கு மிளகாய்தான் சார்த்த வேண்டும் என்பதில்லை. பரவலாக, மனிதர்களுக்கு ஒரு சுபாவம் உண்டு. வழக்கத்துக்கு மாறாக ஏதாவது ஒன்று நடந்தால் அதன்பால் ஈர்க்கப்படுவார்கள். எல்லாரும் முழு பேண்ட் போடும்போது, ஒருவர் அரை டிராயர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



போட்டு வந்தால் மறுநாள் எல்லாரும் அதே போல் போட்டுக் கொண்டு வந்து 'பெர்முடா' என்பார்கள்.

நல்ல முறையில் பூஜை செய்வதையே பார்த்துக் கொண்டு இருந்தவர்களுக்கு மிளகாயும் இஞ்சியும் போட்டு வித்தியாசமாக யாரோ ஒருவர் பூஜை செய்வதைப் பார்த்ததும் அதில் அதிக ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. அதையே பின்பற்ற ஆரம்பித்து விட்டார்கள். சாஸ்திரத்தை ஸ்தாபித்த ஆதிசங்கரர் இப்படியெல்லாம் பேசவே இல்லை.

47-க்கு முன்னால் இருந்த சினிமா - டிராமாவில் எல்லாம் வில்லன் என்றால் பெரிய கிருதா வைத்திருப்பார். அதுதான் வில்லனுக்கு அடையாளம். அதே போல சத்ருக்களை அழிக்கும் அளவு க்ரௌர்யம் அம்பாளுக்கு இருக்கிறது என்று காட்டுவதற்காக இந்த உக்கிரமான வேடம். நீ இதைக் கொடுத்தால் நான் அதைக் கொடுப்பேன் என்கிற வியாபார நோக்கமெல்லாம் நம் ஊர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy





தெய்வங்களிடம் கிடையாது. எனவே, எந்த தெய்வத்தின் தலையிலும் மிளகாய் அரைக்கத் தேவை இல்லை.

சிவன் கோயிலும் பெருமாள் கோயிலும் இருக்கும் ஊரில் முதலில் எந்தக் கோயிலுக்குச் செல்வது?

- ஆர்.ரங்கநாத ஐயர், சிங்காரப்பேட்டை.

சைவமும் வைணவமும் தழைத்த காலத்தில், இந்தக் கோயில் இருந்த ஊரில் எல்லாம் அந்தக் கோயிலும் வந்துவிட்டது. போட்டிக்காக இப்படி நடந்தால் கூட, பக்தியைப் பரப்ப இவை பயன்பட்டன. இரண்டு தெய்வத்தையும் வணங்குகிறவர்கள் பெருகி, பக்தி அதிகரித்தால் நல்லதுதானே? அதனால் இது முன்னால், அடுத்து இந்த பகவான் என்கிற சட்டம் எங்கேயும் இல்லை. உங்கள் இஷ்டப்படி கும்பிடுங்கள்.

பூஜை அறையில் தட்சிணாமூர்த்தி, ஆஞ்சநேயர் படங்களை எந்த திசையை நோக்கி வைப்பது?

- எஸ். வைஜெயந்தி, மதுரை.

அவர் பெயரே தட்சிணாமூர்த்தி. தட்சிணம் என்றாலே தெற்கு என்றுதானே அர்த்தம்? தெற்குப் பார்த்தே வையுங்கள். சுவாமி தெற்குப் பார்த்தாலும் நீங்கள் வடக்கு நோக்கித்தானே வணங்குகிறீர்கள்? பகவானை எந்த திசை பார்த்து வைப்பது என்பதில் எல்லாம் குழப்பிக் கொள்ளாதீர்கள். அவனுக்கு எல்லா திசைகளிலும் முகம் இருக்கிறது. அக்னி ஏற்றுகிறோம். அது எந்தப் பக்கம் பார்க்கிறது என்று சொல்ல முடியுமா? பகவானுக்கு திசை இல்லை.

நாம் வணங்குவதற்கு என்று சில சட்ட திட்டங்கள் இருக்கின்றன. தெற்கே பார்த்து வணங்கக் கூடாது என்பது நியதி. அதைக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கடைப்பிடியுங்கள். இதில், அந்த சுவாமியை எந்தப் பக்கம் வைப்பது, இந்த சுவாமியை எப்படி வைப்பது என்றெல்லாம் யோசிக்கவே வேண்டியதில்லை.

எமலோகம் உண்மையில் உண்டா?

- த.சத்தியநாராயணன், அயன்புரம்.

சில விஷயங்களை ஒன்றும் தெரியாத பாமரனுக்குப் புரிய வைக்க புராணங்களில் நிறையக் கதைகள் இருக்கும். இலக்கு என்ன? அவன் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து, செய்ய வேண்டாததை விலக்கி, நல்ல முறையில் வாழ இந்தக் கதைகளின் மூலம் நீதி புகட்டப்படுகிறது. வேறு எந்த வழிகளில் நல்லது சொன்னாலும் வாங்கிக் கொள்ளத் தகுதி இல்லாதவன், பயத்தின் மூலம் நல்லபடியாக நடந்து கொள்வான். எமன் என்பவன் கடவுள்தான். என்றாலும் அவனை வில்லன் போலச் சித்திரிக்கும்போது கொஞ்சம் பயம் வருகிறது. கட்டுப்பாடு வருகிறது. நீ இதைப் பண்ணினால் எமன் பிடித்துக் கொண்டு போவான், எமலோகத்தில் எண்ணெய்க் கொப்பரையில் போடுவார்கள் என்றெல்லாம் சொல்ல வேண்டியிருக்கிறது. நன்றாகப் புரிந்து கொண்டு நல்ல முறையில் வாழும் பக்குவம் வரும்போது, அது தேவையில்லாமல் போகிறது.

எல்லாவற்றுக்கும் பரிகாரம் என்ற குறுக்கு வழி இருந்தால், பாவம் எப்படி தீர்வது?

- ராதா ராமஸ்வாமி, நெல்லை-11.

பரிகாரம் என்பது குறுக்கு வழி இல்லை. கஷ்டமான வழி. சாதாரணமாக 15 ரூபாய் செலவில் செய்ய வேண்டிய காரியத்தை 15,000 ரூபாயில் முடித்தால் அது குறுக்கு வழியா? இந்தக் காரியத்தை நம்மால் செய்ய முடியாமல் போய்விட்டதே என்று மனம் வேதனைப்படும்போதுதான் பரிகாரம் பலிக்கும். பரிகாரம் என்ற சொல்லுக்கு 'இப்படி தப்பு செய்து விட்டோமே, அதைத் திருத்த இவ்வளவு கஷ்டப்படும்படி ஆகிவிட்டதே!' என்று பச்சாதாபப் படுவதுதான் அர்த்தம். 200 ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்கி, ஓர் இடத்தில் போய் உட்காருவது பரிகாரம் இல்லை. '5,000 ரூபாய் கொடுத்தேன், கிடைக்கவில்லை; 10,000 ரூபாய் கொடுத்தேன் கிடைச்சுடுச்சு!' என்று கூறுவது பரிகாரம் இல்லை. எல்லா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பரிகாரங்களுக்கும் பலன் உண்டு என்றும் சொல்ல முடியாது. எதற்கு பலன், எது வீண் என்கிற பாகுபாடு உண்டு.

'இதை இவர் அனுபவித்து வர வேண்டியது இல்லை; அதிலிருந்து தப்பித்து வரலாம்' என்று இருந்தால்தான் பரிகாரம் உதவும். அனுபவித்தே தீர வேண்டும் என்னும் இடத்தில் பரிகாரம் வேலை செய்யாது. 'தெரியாத்தனமாக மாட்டிக் கொண்டு விட்டார்' என்று சொல்லும் இடத்தில் பரிகாரம் உண்டு. மற்ற இடங்களில் சும்மா மனதிடத்துக்காக பரிகாரம் சொல்வார்களே தவிர, அது உண்மையாகாது. ஒருவேளை விடுபட்டால் விடு படட்டும் என்கிற கோணத்தில் சொல்லப்படுவது அது.

ஒருவன் பள்ளியில் படிக்கிறான். அவன்மேல் குற்றம் சுமத்தி பள்ளியில் இருந்து வெளியேற்றி விடுகிறார்கள். அவனை வேறு பள்ளியில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். பரிகாரமே கிடையாது. தெரிந்தே தவறு செய்பவனுக்கு பரிகாரம் இல்லை.

ரயில்வே ஸ்டேஷனுக்குள் ஒருவர் நுழையும்போதே வண்டி புறப்பட்டு விட்டது. இதை விட்டால் ஊருக்குப் போக முடியாது. ஓடிப் போய் ஏறிவிடுகிறார். டி.டி.ஆர் வரும்போது நிலைமையைச் சொல்லி டிக்கெட் வாங்கிக் கொள்ளலாம் என்று எண்ணுகிறார். அபராதம் என்கிற பரிகாரம் உண்டு. வேண்டுமென்றே டிக்கெட் வாங்காமல் ஒளிந்து கொள்பவனைப் பிடித்து கோர்ட்டில் நிறுத்தி தண்டனை கொடுப்பார்கள். இங்கே குறுக்கு வழி இருக்கிறதா?

எதை நாம் அடைய வேண்டுமோ, அதை அடைய முடியாத பட்சத்தில், அதற்குச் சமமான வேறொன்றை அடைவதைப் பரிகாரம் எனலாம். நம்மிடம் லட்ச ரூபாய் இருக்கிறது. டாலர் வேண்டும் என்றால் அதற்கு இணையான இந்தியப் பணத்தைக் கொடுத்தால்தான் ஆச்சு. ஒருவருக்கு அட் டெண்டன்ஸ் குறைபாடு இருந்தால் பரீட்சை எழுத முடியாது. ஆனால், அதற்கொரு அபராதம் கட்டினால் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார். அதே சமயம் பள்ளிக்கூடத்துக்கே போகாத ஒருவன் நானும் அபராதம் கட்டுகிறேன், என்னையும் பரீட்சை எழுத விடுங்கள் என்று சொல்ல முடியாது.

தகுதி இருந்து, அதை ஏதோ ஒரு விதத்தில் இழந்தவன் பரிகாரத்தின் மூலம் அதை அடைய முடியும். இடையூறை விலக்குவது, இழந்த தகுதியை மீட்டுக் கொடுப்பது-இவைதான் பரிகாரம். இல்லாததை, பரிகாரம் வருவித்துக் கொடுக்காது. எல்லாவற்றுக்கும் பரிகாரம் என்பது அசட்டுத்தனம். எனவே பரிகாரத்தைக் குறுக்கு வழி என்று எண்ணுவதை மாற்றிக் கொள்ளுங்கள்.

கொலுவில் பொம்மைகளுக்கு பதிலாக பல்வேறு அலங்காரங்களில் குழந்தைகளையோ மனிதர்களையோ

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அமர்த்துவது சரியா? அதற்கு சாஸ்திர சம்மதம் உண்டா?

-ஆர்.ரங்கராஜன், பரவை.

கொலு என்று சொன்னாலே கொலுவிருத்தல். கடவுள் உருவம்தான் இருக்க வேண்டும். மனிதனே கடவுள் போல் உட்கார முடியாது. பழைய காலத்தில் சந்தன மரத்தில் செதுக்கிய மரப்பாச்சி வைப்பார்கள். கடவுள்தான் பத்து நாட்கள் அங்கே கொலுவிருந்து நம்மைக் காக்கிறார். அங்கே எப்படி மனிதன் வர முடியும்? கொலுவில் முக்கியமாக தெய்வத்தை எப்படி வைத்திருக்கிறோம் என்றால், பெண் வடிவம் கொடுத்து. மூன்று மூன்று நாட்கள் துர்கா, லட்சுமி, சரஸ்வதி என்று பெண் வடிவில் கொண்டாடுகிறோம். சிவன், விஷ்ணு, பிரம்மன் ஆகியோரின் மனைவிகள் என்பதல்ல, அவர்களின் சக்திகளே இவர்கள்தான். இவர்கள் கொலுவிருக்கும் இடத்தில் சாதாரண மனிதர்கள் உட்காரக் கூடாது. இது நம் கலாசாரத்துக்குச் சரிப்பட்டு வராது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இயற்கைச் சீற்றங்கள் (புயல், மழை, காற்று, நெருப்பு) ஆக்ரோஷமாகக் கிளம்பி, ஏக அழிவுகளை நிகழ்த்துகிறதே... இதற்கு வேதங்களில் ஏதாவது பரிகாரம் உண்டா?

-பி.சிவசங்கரன், மதுரை.

இயற்கைச் சீற்றம் எப்போது ஏற்படுகிறது? அதற்கு ஒரு காரணம் வேண்டுமே. ஆயுர்வேதத்தில் சரஹசம்ஹிதை என்று ஒரு புத்தகம். அது நம் சுகாதாரத்தைப் பற்றிச் சொல்கிறது. மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று விளக்குகிறது. நமக்கு என்னென்ன கேடுகள் வர வாய்ப்பு இருக்கிறது, அதை எப்படி வராமல் தடுக்கலாம் என்றெல்லாம் பேசுகிறது. வந்த பிறகு பரிகாரம் செய்வதை விட, வருமுன் தடுப்பது எப்படி என்று யோசித்தார்கள். வந்த பிறகு பரிகாரம் செய்தால் தேறுவோம் என்பதற்கு என்ன உத்தரவாதம்? வேதமும் அப்படித்தான் சொல்லும். காலையில் எழுந்து குளி. நல்லதை நினை. நல்லதைச் செய் என்று நமக்குக் கெடுதல் வராத விஷயங்களை எல்லாம் உபதேசிக்கும்.

ஆயுர்வேதத்தில் *'ஜனபதோத்வம்சனீயம்'* என்றொரு அத்தியாயம். அதில் ஒரு பெரிய நகரமே அழிவது விளக்கப்படுகிறது. (வாயு, ருதகம், தேச, கால:) வாயு, ஜலம், தேசம், காலம் எல்லாம் கெட்டுப் போச்சு. இதனால்தான் ஜனபதங்கள் எல்லாம் அழிகின்றன. ஓர் ஊரே அழியக் காரணம் அது. ஏர் பொல்யூஷன், வாட்டர் பொல்யூஷன், ஸாயில் பொல்யூஷன்... மழை பெய்ய வேண்டிய நேரத்தில் பெய்வதில்லை. கூடாத நேரத்தில் பெய்கிறது. குளிர் நேரத்தில் வெயிலும் வெயில் நேரத்தில் குளிருமாகக் குழம்பும். தேசம் கெட்டதால் விளைச்சல் இல்லை. பூச்சி மருந்து போட்டு விளையவைத்த தானியத்தில் சுரத்து இல்லாததால் மனிதர்களின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

உடல் கெட்டது. அதனால் மனம் கெட்டது. தப்பு செய்கிறான். திருடுகிறான். கொள்ளை அடிக்கிறான்.

இப்படி எல்லாரும் கெட்டுப் போவார்கள். இதெல்லாம் கெட்டுப் போக என்ன காரணம்? *தஸ்ய மூலம் அதர்ம:* அதர்மம்தான் காரணம். ராஜா அதர்மம் செய்தால், ஜனங்களும் செய்கிறார்கள். ஏற்கெனவே கன்னாபின்னாவென்று ஆகாரத்தைச் சாப்பிட்டு உடல் கெடுகிறது. அதர்மம் என்றால் தானம் செய்யாதது என்று எடுத்துக் கொள்ளாதீர்கள். அவனவனது கடமையில் இருந்து தவறாமல் வாழ்வதே தர்மம். பணம் கொடுத்தால்தான் காரியம் ஆகும், அதுதான் இங்கே வழக்கம்-என்று எப்போதிருந்து சொல்ல ஆரம்பித்தோம்? இப்படி அதர்மம் தலை தூக்கும்போது இயற்கை சீறும். பிருகத் சம்ஹிதையில் எப்போது பூகம்பம் வரும், எப்போது அக்னி பர்வதம் வெடிக்கும், எப்போது பசி பஞ்சம் வரும், எப்போது அதிக மழை வரும் என்றால், 'ராஜா சரியில்லாத போது' என்கிறார் வராஹமிஹிரர். நாம் கெட்டதால் இயற்கை சீறுகிறது. இதற்கு ஏது பரிகாரம்?

இருக்கிறது ஒரு பரிகாரம் - நாம் எல்லாம் அதர்மத்தின் பாதையில் இருந்து விலகி, தர்ம வழியில் செல்வது ஒன்று மட்டுமே இயற் கையின் சீற்றத்தில் இருந்து நம்மைக் காக்கும் பரிகாரம்.

ஒருவர் ராசியில் சந்திராஷ்டமம் இருக்கும்போது என்னவெல்லாம் செய்யக் கூடாது?

- சித்ரா, கோவை.

புதிதாக ஒரு காரியத்தில் இறங்காதீர்கள். தொடர்ந்து செய்யும் காரியங்களுக்கு சந்திராஷ்டமம் பார்க்க வேண்டியதில்லை. நீங்கள் அலுவலகத்தில் பணி புரிபவராக இருக்கலாம். அஷ்டமத்தில் சந்திரன் வந்தால் அது உங்களை ஒன்றும் செய்யாது. சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். அஷ்டமத்தில் சந்திரன் வந்தால் பாதிக்காது. சாப்பிடுவதைப் பாதியில் நிறுத்த வேண்டாம். தினப்படி செய்ய வேண்டிய காரியத்துக்கும் சந்திராஷ்டமத்துக்கும் தொடர்பு இல்லை. நீங்களே முன்னின்று பொறுப்பேற்றுச் செய்ய வேண்டிய கடமைகளையும் அது பாதிக்காது.

ஒரு வியாபாரம் ஆரம்பிக்கிறீர்கள். அப்போது சந்திரன் அஷ்டமத்தில் இருக்கிறானா என்று பாருங்கள். ஒரு கல்யாணம் செய்யப் போகிறீர்களா, அப்போது பாருங்கள். திடீரென்று உங்களுக்கு ஒரு ஆர்டர் வருகிறது, இன்று வந்து வேலைக்குச் சேருங்கள் என்று. அப்போது பார்க்கவே பார்க்காதீர்கள். அஷ்டமத்தில் சந்திரன் இருப்பதால்தான் இந்த வாய்ப்பே உங்களுக்குக் கிடைத்தது என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஏற்றிய விளக்கில் தீபம் ஏற்றலாமா?

நவீன தொழில்நுட்பம் நிறைந்த இந்த உலகில், ஒரு சில கோயில்களின் மூலஸ்தானத்தில் உள்ள தெய்வுங்களைப் புகைப்படம் எடுக்கக் கூடாது என்கிறார்களே, இது சரியா?

- எம்.ஆர்.பெரியாண்டவர், தேவிபட்டணம்.

தொழில்நுட்ப முன்னேற்றம் என்பது, நமது வசதிகளைக் கூட்டிக்கொள்வதற்கான கருவிகள். இதில் பகவான் சம்பந்தப்படவே இல்லை. ஒவ்வொரு விஷயத்தையும் ஐம்புலன்களுக்கும் சிரமம் ஏற்படாமல் சுலபமாக முடித்துக் கொள்வதற்கான உபகரணங்களைத்தான் நீங்கள் தொழில்நுட்ப முன்னேற்றம் என்கிறீர்கள். திடீரென்று ஒருவருடன் பேச வேண்டும் என்றால், சீக்கிரமாகப் பேச தொலைபேசி. ஓர் இடத்துக்குச் சீக்கிரம் போக விமானம். இதெல்லாம் நமது அன்றாட வாழ்க்கை. பகவான் என்பது ஆன்மிகம். உடல் உறுப்புகளோடு சம்பந்தப்பட்ட விஷயமல்ல கடவுள். அது என்றுமே இருப்பது. உங்கள் விஞ்ஞானங்களுக்குள் அடங்காது. நீங்கள் நல்ல முறையில் வாழ்வதற்கான வழியைச் சொல்வது அது. அதில் கொண்டுவந்து விஞ்ஞானத்தை நுழைக்காதீர்கள்!

கர்ப்பக்கிரகம் என்கிறார்களே, அங்கே கடவுள் மட்டும்தான் இருப்பார். வேறு ஒரு பொருளும் இருக்காது. சாதாரண விளக்குதான் ஏற்றுகிறோம். அந்த மூலஸ்தானத்தைப் படம் எடுத்து வீட்டில் வைத்துக்கொண்டு பார்ப்பது பக்தி ஆகாது. அங்கே போய்த்தான் பார்க்க வேண்டும். அங்கேதான் தெய்வ சக்தி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருக்கிறது. வெறும் படத்தில் கிடையாது. கிடையாது என்று சொல்லும்போதும் 'நான் படம் எடுப்பேன்!' என்று அடம்பிடிப்பது வியாபார நோக்கமல்லவா? கேமரா வந்து ரொம்ப காலமாகவில்லை. கோயில் வந்து ரொம்ப காலம் ஆகிவிட்டது. அனுபவிப்பதற்கென்று புதுசு புதுசாகப் பல விஷயங்கள் நமக்குத் தேவை. அவற்றை எல்லாம் கொண்டுபோய் பகவானுக்கு மாட்ட வேண்டும் என்று அவசியம் இல்லை. பகவான், தன் எண்ணம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு நம்மோடு சேர வேண்டும் என்று நினைக்கக் கூடாது. நாம், நம் எண்ணங்களை விட்டுவிட்டு பகவானோடு சேர முயற்சிக்க வேண்டும்.

நான் சுவாமிக்குத் தினந்தோறும் மகா நைவேத்தியமாக வேக வைத்த பருப்பை மட்டும் வைக்கிறேன். எனக்குத் தெரிந்தவர்கள் அன்னம், பருப்பு, கறிகாய், குழம்பு, ரசம் என்று எல்லா வகைகளையும் வைத்து நைவேத்தியம் செய்கிறார்கள். ஏன், குடிக்கும் தண்ணீர்கூட வைக்கிறார்கள். எது சரி? நான் செய்வதா, அவர்கள் செய்வதா?

- ஜி.லெட்சுமி கணபதி, சென்னை-83.

பகவானுக்கு நைவேத்தியம் என்பதற்குச் சட்ட திட்டமே கிடையாது. உன்னிடம் என்ன இருக்கிறது என்பதுதான் முக்கியம். மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை.

பணக்காரராக இருப்பவர் நிறைய நைவேத்தியம் செய்கிறார். உங்களிடம் ஒன்றுமே இல்லை என்றால் வெறும் தண்ணீரை வைத்து நைவேத்தியம் செய்தாலே போதும். பணக்காரருக்குக் கிடைத்த அத்தனை பலனும் உங்களுக்கும் கிடைக்கும். ஆனால், உண்மையிலேயே நீங்கள் இல்லாதவராக இருக்க வேண்டும். வைத்துக் கொண்டே வேஷம் போடுபவராக இருக்கக் கூடாது.

பல கோயில்களில் விதவிதமாக நைவேத்தியம் வைக்கிறார்களே என்றால், அது பல பேருக்குப் பயன்படுகிறது அல்லவா, அதற்காகத்தான்! நம்மிடம் என்ன இருக்கிறதோ அதை வைத்தாலே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அவர் திருப்தி அடைந்து விடுவார். 'பகவானுக்கு நைவேத்தியம் பண்ணாத ஆகாரத்தை நீ சாப்பிடாதே!' என்கிறார்கள். அதனால் எதைச் சாப்பிட்டால் ஆரோக்கியம் கிடைக்குமோ, எதைச் சாப்பிட்டால் சாத்விகக் குணம் கிடைக்குமோ... அதை வைக்க வேண்டும். நான் பீட்ஸா சாப்பிடுவேன்; அதை வைக்கிறேன். நான் கோகோகோலா குடிக்கிறேன்; அதை வைக்கிறேன் என்று வாதம் பண்ணக் கூடாது. பருப்பு இல்லை என்றாலும் வெறும் அன்னத்தை வைத்தாலும் போதும். பக்தியோடு நைவேத்தியம் செய்ய வேண்டும். பக்தி கொஞ்சமும் இல்லாமல் எத்தகைய உயர்ந்த உணவை நைவேத்தியமாக வைத்தும் பயன் இல்லை. பக்தியோடு ஓர் இலையைப் போட்டாலும் இறைவன் வாங்கிக் கொள்வான்.

ஆதிசங்கரர் பிட்சைக்குப் போனார். ஓர் அம்மாள் பார்த்தார். 'ஐயோ, இந்தக் குழந்தைக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமே' என்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வீடெல்லாம் தேடினாள். எதுவுமே இல்லை. ஒரே ஒரு நெல்லிக்காய் மட்டும் கிடைத்தது. 'கடவுளே... இந்தக் குழந்தைக்கு இதைத்தான் என்னால் தர முடிகிறது' என்று மனம் குமைந்து கொண்டே கொடுத்தாள். அதை வாங்கிக் கொண்ட அவர் கனகதாரா ஸ்தோத்திரம் பாடி தங்க மழை பொழிய வைத்தார்.

எனவே யார், என்ன கொடுக்கிறார்கள் என்றெல்லாம் பார்க்காதீர்கள்.

கோயில்களில் மண் அகல் விளக்கு ஏற்றும் போது ஏற்கெனவே வேறு ஒருவர் ஏற்றிய விளக்கில் இருந்து நாம் தீபம் ஏற்றலாமா? அப்படி ஏற்றும்போது அவர்களின் பாவம் நமக்கும் வரும் என்கிறார்களே... அதேபோல் சுவாமி முன் வேறு ஒருவர் ஏற்றிய

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சூடத்துடன் நாம் கொண்டு சென்ற சூடத்தையும் சேர்த்து வைக்கலாமா?

- கே. சுப்புலெக்ஷ்மி கந்தசுவாமி, கங்கைகொண்டான்.

ஏற்கெனவே விளக்கு எரிகிறது. கொஞ்ச நேரம் போனால் எண்ணெய் விடத்தான் வேண்டும். அப்போதுதான் விளக்கு எரியும். விளக்கையே மாற்றுகிற பழக்கம் நமக்கு இல்லை. எண்ணெய்தான் எரிகிறது, திரியும் விளக்கும் எரிவதில்லை. அதனால் மேலும் எண்ணெய்தான் விட வேண்டும். வேறு யாராவது வைத்த விளக்கில் நீங்கள் எண்ணெய் விட்டாலும் அது பகவானுக்குத் தெரியும். அவர்கள் விளக்கு ஏற்றினாலும் அவர்களின் பாவம் ஒன்றும் விளக்கில் ஒட்டிக் கொண்டு இருக்காது. அக்னியில் எந்தப் பாவமும் வராது. பகவானுக்கு என்று நாம் சமர்ப்பணம் செய்வதில், அன்றாட உலக வாழ்க்கை நடைமுறை வியாபாரங்களை எல்லாம் பொருத்திப் பார்க்கக் கூடாது. நீங்கள் எதைப் போட்டாலும் அது பகவானைச் சேர்ந்துவிடும். வேறு யாராவது தடுத்தாலும் நிற்காது. விளக்கு என்றும் ஒரே இடத்தில் நிற்கும். அதற்கு எண்ணெய் மட்டும்தான் மேலும் மேலும் ஊற்றுவார்கள்.

அதேபோல் எரிந்து கொண்டு இருக்கும் சூடத்துடன் உங்கள் சூடத்தைப் போடலாம். தப்பே இல்லை. பகவானுக்கு என்று கேட்டு வந்தவரிடம் நீங்கள் ஆயிரம் ரூபாய் கொடுத்த மாத்திரத்திலேயே அதற்கான புண்ணியம் உங்களுக்குக் கிடைத்துவிடும். 'அந்த ஆயிரம் ரூபாயை அவர் என்ன செய்தார் என்றே எனக்குத் தெரியவில்லையே!' என்கிற கவலை உங்களுக்குத் தேவை இல்லை. பகவான் உண்டியலில் பணம் போடுகிறீர்கள். என்ன நடக்கிறது என்று உங்களுக்குத் தெரியாது. அதை எல்லாம் தெரிந்து கொண்டு உண்டியலைத் தேட முடியுமா? சபரிமலையின் வருமானம் பூராவும் அரசாங்கத்துக்குப் போகிறது. அதை யாராவது தவறாகப் பயன்படுத்தினாலும் அது அவரைத்தான் பாதிக்கும். உங்களுக்குப் பலன் கிடைத்துவிடும்.

எங்கள் ஊருக்கு அருகில் ஒரு சித்தரின் அதிஷ்டானம் உள்ளது. அதில் லிங்கம் ஒன்று நிறுவி பூஜை நடைபெறுகிறது. தற்போது இரண்டு மூன்று மாதங்களாக பிரதோஷ வழிபாடு நடத்துகிறார்கள். தெற்குப் பகுதியில் தட்சிணாமூர்த்தி இல்லை. கோமுகம் மட்டும் வடபுறம் உள்ளது. குகை சமாதியில் பிரதோஷ பூஜை நடத்தலாமா?

- ஆர்.என்.பாலதண்டபாணி, ரெட்டியாரூர்.

அதிஷ்டானத்தில் பிருந்தாவனத்தை வைப்பது வழக்கம். ஆனால், காலப்போக்கில் லிங்கம் வைக்கிற வழக்கம் ஏற்பட்டு விட்டது. இது சட்ட திட்டத்தோடு வந்ததல்ல. சம்பிரதாயத்தில் வந்தது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பரமேஸ்வரர் ஆவாகனம் ஆகிவிட்டதால், மற்ற பரிவாரங்களும் ஒவ்வொன்றாக வந்துவிட்டன. இது சரியாகாது. சமாதி இருக்கிற இடத்தில் ஒரு செடியோ கொடியோ வைத்து பிருந்தாவனம் அமைக்கலாம். அங்கே பிரதிஷ்டை பண்ணக் கூடாது.

எங்கே கோயில் கட்டலாம், எங்கே பிரதிஷ்டை பண்ணலாம் என்றெல்லாம் சட்ட திட்டங்களை விளக்கும் ஒரு புத்தகமே இருக்கிறது. சிவனுக்குத் தனியாக, விஷ்ணுவுக்குத் தனியாக என்று இருபது இருபத்தைந்து ஆகமங்கள் இருக்கின்றன. எங்குமே சமாதியில் கோயில் கட்டச் சொல்லவில்லை. நாம் மதிக்கும் ஒருவருக்கு நாம் காட்டும் மரியாதைதான் சட்டத்தையும் மீறி சமாதியில் கோயில் கட்ட வைக்கிறது. அது, நம் எண்ணத்தின் பிரதிபலிப்பு. மற்றபடி சமாதியில் கோயில் கட்டி வழிபடுவது நியாயமே இல்லை. சம்பிரதாயத்தில் பல காலமாகப் பண்ணிக் கொண்டு இருக்கிறோமே என்றால், எத்தனையோ தப்புகளை காலம் காலமாக நடத்தி வருகிறோம்... அதெல்லாம் சரியாகி விடுமா?

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிவன் சுடலையில் - மயானத்தில் நடனம் ஆடுபவர் என்று கதை இருப்பதால் அவரை சமாதியில் வைக்கிறோம் என்கிற சமாதானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. அவர் அலங்காரமும் அழகும் மிகுந்த சுந்தரர் ஆயிற்றே... அவரை சுடுகாட்டுக்குக் கொண்டு வரலாமா? எத்தனையோ சிவன் கோயில்கள் உண்டு. ஏதாவது ஒன்று சுடுகாட்டில் ஏற்படுத்தப்பட்டு உள்ளதா?

என் மகன் அகால மரணம் அடைந்து விட்டான். அவனுக்கு மூன்று வருடமாக திதி செய்து வருகிறேன். அவன் நற்கதி அடைய என்ன செய்ய வேண்டும்? எனக்கும் என் மனைவிக்கும் திதி கொடுக்க யாரும் இல்லை. எங்கள் கதி என்ன?

- கே.ஆர். ராமச்சந்தர், சென்னை-90.

'யாரும் இல்லை!' என்ற முடிவை இப்போதே எப்படி எடுத்தீர்கள்? உங்கள் வயது என்ன? வயது கடந்திருந்தாலும் தத்து எடுத்துக் கொள்ள முடியுமே. அதை தர்மசாஸ்திரம் ஒப்புக் கொள்கிறதே! திதி கொடுப்பதற்குத்தான் தத்து என்பதே வந்தது. இருக்கும் வரை சம்பாதிக்கப் போகிறீர்கள். அந்தச் சொத்தை ஒருவனுக்குக் கொடுத்தால் அவன் உங்களுக்குத் திதி கொடுக்கலாமே.

அகால மரணம் என்பது நம் கையில் இல்லை. எல்லா ஜீவராசிகளுக்கும் எப்போதோ ஒரு சந்தர்ப்பத்தில் மரணம் உறுதி. நமக்கு துக்கம் கொடுக்க அது வந்ததே தவிர, உங்களால் அது நடக்கவில்லை. எனவே, அதை மறந்து விடுங்கள். தகுதி இருந்தால் இன்னொரு குழந்தை பெற்றுக் கொள்ளலாம்.

சில பிரிவினர் இறந்தவர்களின் நெற்றியில் நாணயம் வைத்துக் கொண்டு செல்வது ஏன்?

- ஏ.வி.கிருஷ்ணன், புளியங்குடி.

பழைய காலத்தில் இருந்தே 'இறந்து போனார்' என்று குறிப்பிடுவது இல்லை. 'வைகுண்டப் பிராப்தி அடைந்தார்', 'கயிலாசப் பதவி அடைந்தார்' என்றுதான் குறிப்பிடுவார்கள். இறந்தவர், பகவான் இருக்கும் இடத்துக்கே போய்ச் சேர்ந்தார் என்பது நம்பிக்கை. அப்படி கடைசியாகப் போகும்போது தங்கமோ வெள்ளியோ நெற்றியில் வைக்க வேண்டும். அப்போதெல்லாம் வெள்ளியிலேயே நாணயங்கள் இருந்தன. அப்புறம் நிக்கல் என்னும் உலோகத்தில் நாணயங்களைச் செய்தார்கள். வெள்ளி போச்சு; ரூபாய் நிலைத்து விட்டது. கடைசி முறையாகப் போகும்போது அலங்காரத்தோடு போக வேண்டும் என்ற உறவினர்களின் ஆசை அது. சம்பிரதாயமாக வரும் பழக்கம் அது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

முருகனுக்கும் விநாயகருக்கும் ஏன் புத்திரர்கள் இல்லை?

'விநாயகருக்கும் முருகனுக்கும் ஏன் புத்திரர்கள் இல்லை?' என்கிற ஒரு கேள்விக்கு 1-11-05 சக்தி விகடன் இதழில் தாங்கள் பதில் சொல்லி இருந்தீர்கள். படித்தேன். அதில், விநாயகருக்குக் குழந்தை கிடையாது என்கிற தங்களது பதிலை ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஏனெனில், வட தேசத்தில் விநாயகரின் புதல்வியாக தேவிஸ்ரீ சந்தோஷி மாதாவை வழிபடுகின்றனர். சென்னை, விருகம்பாக்கத்தில்கூட சந்தோஷிமாதா ஆலயம் உள்ளதாம். அடியேனும் சந்தோஷி மாதா அருள் பெற்ற பக்தன். ஆதலால், தெளிவுபடுத்துமாறு வேண்டுகிறேன்.

- எஸ். செல்வகுமார், செய்துங்கநல்லூர்.

மகன், மகள் என்பதெல்லாம் நம்பிக்கையில் நாமாக உருவாக்கிக் கொண்டவை. அவை புராண வரலாறுகள் இல்லை. காலப்போக்கில் நாம் அவற்றை புராணமாக மாற்றிக்கொண்டு விட்டோம். பரமேஸ்வரனுக்கு நேரடியாகப் பிறந்த பிள்ளை அல்ல கணபதி. முருகனும் நெற்றிக்கண்ணில் இருந்து வந்த அம்சம்தான். நம்மைப் போல் கல்யாணம் செய்துகொண்டு குடும்பம் நடத்தி, பிள்ளை பெறுபவர் அல்ல பகவான்.

நித்திய பிரம்மச்சாரிதான் விநாயகர். அவருக்குப் பிறந்தவர்தான் சந்தோஷி மாதா என்று நீங்கள் நம்புவீர்களானால், அது உங்கள் இஷ்டம். அந்தந்த ஊர்களில் ஏற்பட்ட நம்பிக்கைதான் இப்படிப்பட்ட கதைகளை உருவாக்குகிறது. நூறு வருடங்களுக்கு முன்னால் சந்தோஷி மாதாவே கிடையாது. தற்போதுதான் சந்தோஷி மாதா வழிபாடெல்லாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சபரிகிரீஸ்வரரை வணங்குகிறோம். அவர் பரமேஸ்வரனுக்கும் விஷ்ணுவுக்கும் பிறந்தவர் என்று ஒரு கதை உண்டு. அதுவும் புராணத்தில் இல்லை. கதையாகச் சொல்லப்பட்டு, பிற்பாடு புத்தகத்தில் ஏறியவற்றையெல்லாம் நாம் ஆதாரமாகக் கொள்ள முடியாது!

ராமாயணம் இருக்கிறது; உலகம் பூராவும் ஒன்று. மகாபாரதம் இருக்கிறது; எல்லா இடங்களிலும் ஒன்று. நீங்கள் சொல்லும் சந்தோஷி மாதா உலகம் பூராவும் இல்லை. ஒரு சாராருக்குத்தான் சந்தோஷி. இதனால் சந்தோஷி மாதாவைக் கும்பிடக் கூடாது என்பதில்லை. ஏதோ குறிப்பிட்ட ஒரு தெய்வத்தை நம்பிக்கையோடு வழிபட வேண்டும். அது சந்தோஷி மாதாவாகவும் இருக்கலாம். அதை பிள்ளையாரின் மகள் என்று நீங்கள் நம்புவதிலும் தப்பில்லை. ஆனால், அதுதான் சரி என்று பிடிவாதம் பிடிக்க உங்களுக்கு உரிமை இல்லை. ஒரு சாராரின் நம்பிக்கையைப் பொதுமைப்படுத்தக் கூடாது.

சூரியனின் பிள்ளை சனி என்பார்கள். சூரியனுக்கு எப்படி பிள்ளை பிறக்க முடியும்? சூரியனின் சாரம் சனி என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். இதெல்லாம் உருவகப்படுத்திய விஷயங்கள்.

இன்னொரு முக்கியமான விஷயம்: *ந புத்தி பேதாம் ஜனயேத் அஞ்ஞானாம் கர்ம சங்கினாம்:* அதாவது, ஆராயாமலே ஒன்றின் மேல் நம்பிக்கை வைப்பவனை, அவனுக்கு அதில் திருப்தியும் இருக்கும்போது இது சாஸ்திரப்படி தவறு என்று விளக்கிச் சொல்லி அவனை திசை திருப்பாதே. அவன் நம்பிக்கையே அவனுக்கு பலன் கொடுக்கும். உங்கள் நம்பிக்கை சந்தோஷி மாதாவாக இருந்துவிட்டுப் போகட்டும். விநாயகர் பிரம்மச்சாரி என்று நம்புபவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்களே! அவர்களிடம் போய் அவர் கல்யாணமானவர் என்று விளக்க வேண்டுமா?

ஸித்தி, புத்தி என்று இரண்டு மனைவிகள் அவருக்கு இருப்பதாகச் சொல்வார்கள். ஸித்தி என்பது வெற்றி; புத்தி என்பது ஞானம். ஒருவன் இந்த இரண்டும் எனக்கு வேண்டாம் என்று சொல்ல முடியுமா? அதேபோல பிரம்மச்சாரியான ஐயப்பனுக்கும் பூரணை, புஷ்கலை என்று இரண்டு மனைவிகள் இருப்பதாகக் கதை உண்டு. அவற்றுக்கு முழுமை என்று பெயர். அவர் குடும்பம் நடத்துவதாகச் சொல்லலாமோ!

கோயிலுக்குச் சென்று வந்தவுடன் கால் கழுவக் கூடாது என்கிறார்களே, ஏன்?

- துரை. குருவாயூர் கண்ணன், சிவகங்கை.

கோயில் என்பது கடவுள் இருக்கும் இடம். நமது பக்தியைச்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செலுத்தக் கோயிலுக்குச் செல்கிறோம். இந்த உலகத்தில் பரிசுத்தமான ஓர் இடம் என்றால் அது அன்றும் இன்றும் கோயில்தான்! அந்த இடத்துக்குப் போய் அவரை தரிசனம் செய்து திரும்பும்போது கால் கழுவக் கூடாது. நாம் முழுக்கவே சுத்தம் ஆன பிறகு, காலை மட்டும் தனியே சுத்தம் செய்வானேன்? எங்கேயெல்லாம் கால் கழுவ வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அங்கேயெல்லாம் அதற்கு ஒரு காரணம் இருக்கும். புது வேஷ்டி கட்டியிருந்தால், வெளியில் நடந்துவிட்டு வந்தால் கால் கழுவ வேண்டும்.

கல்யாணத்தில் பரதேசிக் கோலத்தில் கோயிலுக்குப் போகிறான் மணமகன். பகவானைக் கும்பிடுகிறான். திரும்பி வந்தவுடன் அப்படியே ஊஞ்சலில் உட்கார்கிறான். கால் கழுவுவதில்லை. அதன் பிறகு காலில் நலுங்கு அது இது எல்லாம் வைத்த பிறகு, கழுவ வேண்டுமே என்று கழுவுகிறான்.

பகவானின் தரிசனம் முடித்து வரும்போது நம் உடலில் எந்த அசுத்தமும் இருப்பதில்லை என்பதால், எந்தக் காரியம் செய்வதாக இருந்தாலும் சுத்தப்படுத்திக்கொள்ளத் தேவை இல்லை. தேர் இழுக்கிறோம். அங்கே ஒரு வித்தியாசமும் இல்லை. அங்கே ஒருவருக்கு ஏதோ தீட்டு இருக்கிறது என்றால் கவலையே இல்லை... தேர் வடத்தைத் தொட்ட உடனேயே எல்லாத் தீட்டும் போய் விடுகிறது. கோயிலில் இருந்து திரும்பும்போது மழை வந்துவிட்டது. சேற்றில் கால் வைத்துவிட்டீர்கள் என்றால் அப்போது கால் கழுவலாம்.

கேரளாவில் மட்டும் ஏன் ஏவல், பில்லி-சூன்யம் போன்றவை அதிகமாகக் காணப்படுகின்றன?

– ஆர்.ராதா, நெல்லை-11.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஏவல், பில்லி என்பதெல்லாம் கேரளாவில் மட்டும் இல்லை. எல்லா இடங்களிலும் உண்டு. அதை நம்பி, கேரளாவுக்குப் போகிறவர்கள் அதிகம் என்பதுதான் உண்மை. எல்லா இடங்களிலும் நம்புபவர்களும் இருக்கிறார்கள்; நம்பாதவர்களும் உண்டு. 'ஏவல், பில்லி என்பது வாஸ்தவம்தானா?' என்று கேட்டால் அதன் பதில் வேறு. இதெல்லாம் வெறும் நம்பிக்கை சம்பந்தப்பட்ட விஷயங்கள். நீங்களாக கேரளாவின் மேல் பில்லி சூன்ய முத்திரை குத்தி அவர்களை ஏற்றி விடாதீர்கள்.

நல்ல திறமையோடு, கடமை உணர்வோடு வாழ்க்கை நடத்துபவருக்கு எந்த பில்லியும் ஏவலும் கிடையாது. மனத் தடுமாற்றத்தோடு தெளிவில்லாத நிலையினால் ஏற்படும் சங்கடம், என்ன காரணம் என்று தெரியாமல் நமக்கு ஒரு பிரச்னை வரும்போது ஏவல், பில்லி என்கிறோம். வேறொரு காரணம் தெரிந்து விட்டால், ஏவலை விட்டுவிடுவோம். ஏவல், பில்லி வளர்வதற்கு நாம்தான் காரணம். மனதின் பலவீனம், சிந்தனையின் சுணக்கம், காரணம் கண்டுபிடிக்கத் தெரியாமை - இவைதான் பில்லி சூன்யத்தைச் சொல்லும். மற்றபடி ஏவல், கூவல் எல்லாம் பேத்தல். பலவீனமானவர்களை ஏமாற்றும் வியாபாரிகளின் வேலை அது.

***நா**ம் ஸ்வாமி படங்களுக்கு சார்த்தும் புஷ்பங்கள் மாலை நேரத்தில் வாடி விடுகின்றன. வாடிய புஷ்பங்களை உடனே அகற்றி விடலாமா அல்லது மறுநாள் காலையில் புஷ்பம் சார்த்தும்போதுதான் அகற்ற வேண்டுமா?*

– உத்தரா, சென்னை-93.

காலை, மாலை இரு வேளைகளிலும் புஷ்பம் சார்த்தி வணங்குவது உண்டே! நீங்கள் காலையில் மட்டும் மாலை போடுகிறீர்கள் போலிருக்கிறது. அது சாயந்தர நேரத்தில் வாடத்தான் செய்யும். அது அதன் சுபாவம். மாலையில் பூஜை வேண்டாம் என்று நீங்கள் வைத்திருப்பதால் காலையில் போட்ட மாலை அப்படியே இருக்கலாம். மறுநாள் பூஜையின்போதுதான் மாற்ற வேண்டும்.

பூஜையைப் பற்றி ஒரு விளக்கம் உண்டு. இந்த உடல் இருக்கிறதே, அது கோயில். உள்ளே உட்கார்ந்திருக்கிற உயிர் இருக்கிறதே, அது கடவுள். அஞ்ஞானம் என்பதான நிர்மால்யத்தை வெளியிலே தள்ளி பூஜையை ஆரம்பி என்பார்கள். அஞ்ஞானம் என்பது நிர்மால்யம். நேற்றுப் போட்டது நிர்மால்யம். அதை அகற்றிவிட்டு பூஜையை ஆரம்பிக்க வேண்டும். 'நான் ஏற்கெனவே நாலு நாளைக்கு முன்னால் அகற்றி விட்டேன்' என்று சொல்லக் கூடாது. *தேஹோ தேவாலய ப்ரோக்த: ஜீவோ தேவ ஸநாதன: த்யஜேயத் அஞ்ஞான*

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



நிர்மால்யம் ஸோஹம் பாவேன பூஜயேத்: என்பது ஸ்லோகம்.

கோயிலில் பூஜைக்கு முன் கதவைத் திறப்பதற்கே ஒரு மந்திரம் உண்டு. அதைச் சொல்லிக் கதவைத் திறந்து, முந்தைய நாளின் நிர்மால்யத்தை அகற்ற வேண்டும். அதன் பிறகுதான் ஜலமே விடவேண்டும் என்று விதி உண்டு என்கிறபோது, முதல் நாள் எப்படி அகற்ற முடியும்?

கேரளாவில் நிர்மால்ய தரிசனம் என்பது பிரசித்தம். முதல் நாள் அணிவித்த பூக்களோடு ஸ்வாமியை தரிசிப்பதுதான் அது. ஒரு ராத்திரி தாண்டினால்தான் அது நிர்மால்யம். எனவே, மறுநாள் பூஜையின்போது பூக்களை அகற்றுங்கள். முடியுமானால், மாலை வேளையிலும் பூஜை செய்ய முயலுங்கள். அப்போது வாடிய பூக்களை மாலையிலேயே அகற்றலாம்.

அடியேன் வீட்டில் சிறிது நீர் நிரப்பிய பாத்திரத்தில் சாளக்கிராமம் வைத்து, அன்றாடம் நீரை மாற்றி சிறிது துளசி இலைகளை இட்டு வழிபடுகிறேன். மாற்றிய தீர்த்தத்தை உட்கொள்கிறேன். இதனால் சாளக்கிராமத்தில் இருக்கும் லட்சுமி நரசிம்மர் மகிழ்ந்து அருள்வார் என்று சிலர் கூறியதால் இப்படிச் செய்கிறேன். நீரில் மூழ்க வைக்காமல் சாதாரண நிலையிலேயே வழிபடவும் என்று சிலர் கூறுகின்றனர். என்ன செய்வது?

– பா.சீனிவாசன், குணசீலம்.

வழிபடுவதற்கு என்று விதிமுறைகள் உண்டு. நாம் நினைக்கிற மாதிரி வணங்கலாம் என்றால், யாரையும் எதுவும் கேட்கத் தேவையில்லை. முறைப்படி என்று வந்துவிட்டால், முதலில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஏவல், பில்லி என்பதெல்லாம் கேரளாவில் மட்டும் இல்லை. எல்லா இடங்களிலும் உண்டு. அதை நம்பி, கேரளாவுக்குப் போகிறவர்கள் அதிகம் என்பதுதான் உண்மை. எல்லா இடங்களிலும் நம்புபவர்களும் இருக்கிறார்கள்; நம்பாதவர்களும் உண்டு. 'ஏவல், பில்லி என்பது வாஸ்தவம்தானா?' என்று கேட்டால் அதன் பதில் வேறு. இதெல்லாம் வெறும் நம்பிக்கை சம்பந்தப்பட்ட விஷயங்கள். நீங்களாக கேரளாவின் மேல் பில்லி சூன்ய முத்திரை குத்தி அவர்களை ஏற்றி விடாதீர்கள்.

நல்ல திறமையோடு, கடமை உணர்வோடு வாழ்க்கை நடத்துபவருக்கு எந்த பில்லியும் ஏவலும் கிடையாது. மனத் தடுமாற்றத்தோடு தெளிவில்லாத நிலையினால் ஏற்படும் சங்கடம், என்ன காரணம் என்று தெரியாமல் நமக்கு ஒரு பிரச்னை வரும்போது ஏவல், பில்லி என்கிறோம். வேறொரு காரணம் தெரிந்து விட்டால், ஏவலை விட்டுவிடுவோம். ஏவல், பில்லி வளர்வதற்கு நாம்தான் காரணம். மனதின் பலவீனம், சிந்தனையின் சுணக்கம், காரணம் கண்டுபிடிக்கத் தெரியாமை - இவைதான் பில்லி சூன்யத்தைச் சொல்லும். மற்றபடி ஏவல், கூவல் எல்லாம் பேத்தல். பலவீனமானவர்களை ஏமாற்றும் வியாபாரிகளின் வேலை அது.

நாம் ஸ்வாமி படங்களுக்கு சார்த்தும் புஷ்பங்கள் மாலை நேரத்தில் வாடி விடுகின்றன. வாடிய புஷ்பங்களை உடனே அகற்றி விடலாமா அல்லது மறுநாள் காலையில் புஷ்பம் சார்த்தும்போதுதான் அகற்ற வேண்டுமா?

– உத்தரா, சென்னை-93.

காலை, மாலை இரு வேளைகளிலும் புஷ்பம் சார்த்தி வணங்குவது உண்டே! நீங்கள் காலையில் மட்டும் மாலை போடுகிறீர்கள் போலிருக்கிறது. அது சாயந்தர நேரத்தில் வாடத்தான் செய்யும். அது அதன் சுபாவம். மாலையில் பூஜை வேண்டாம் என்று நீங்கள் வைத்திருப்பதால் காலையில் போட்ட மாலை அப்படியே இருக்கலாம். மறுநாள் பூஜையின்போதுதான் மாற்ற வேண்டும்.

பூஜையைப் பற்றி ஒரு விளக்கம் உண்டு. இந்த உடல் இருக்கிறதே, அது கோயில். உள்ளே உட்கார்ந்திருக்கிற உயிர் இருக்கிறதே, அது கடவுள். அஞ்ஞானம் என்பதான நிர்மால்யத்தை வெளியிலே தள்ளி பூஜையை ஆரம்பி என்பார்கள். அஞ்ஞானம் என்பது நிர்மால்யம். நேற்றுப் போட்டது நிர்மால்யம். அதை அகற்றிவிட்டு பூஜையை ஆரம்பிக்க வேண்டும். 'நான் ஏற்கெனவே நாலு நாளைக்கு முன்னால் அகற்றி விட்டேன்' என்று சொல்லக் கூடாது. *தேகோ தேவாலய ப்ரோக்த: ஜீவோ தேவ ஸநாதன: தெஜேயத் அஞ்ஞான*

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நிர்மால்யம் ஸோஹம் பாவேன பூஜயேத்: என்பது ஸ்லோகம்.

கோயிலில் பூஜைக்கு முன் கதவைத் திறப்பதற்கே ஒரு மந்திரம் உண்டு. அதைச் சொல்லிக் கதவைத் திறந்து, முந்தைய நாளின் நிர்மால்யத்தை அகற்ற வேண்டும். அதன் பிறகுதான் ஜலமே விடவேண்டும் என்று விதி உண்டு என்கிறபோது, முதல் நாள் எப்படி அகற்ற முடியும்?

கேரளாவில் நிர்மால்ய தரிசனம் என்பது பிரசித்தம். முதல் நாள் அணிவித்த பூக்களோடு ஸ்வாமியை தரிசிப்பதுதான் அது. ஒரு ராத்திரி தாண்டினால்தான் அது நிர்மால்யம். எனவே, மறுநாள் பூஜையின்போது பூக்களை அகற்றுங்கள். முடியுமானால், மாலை வேளையிலும் பூஜை செய்ய முயலுங்கள். அப்போது வாடிய பூக்களை மாலையிலேயே அகற்றலாம்.

அடியேன் வீட்டில் சிறிது நீர் நிரப்பிய பாத்திரத்தில் சாளக்கிராமம் வைத்து, அன்றாடம் நீரை மாற்றி சிறிது துளசி இலைகளை இட்டு வழிபடுகிறேன். மாற்றிய தீர்த்தத்தை உட்கொள்கிறேன். இதனால் சாளக்கிராமத்தில் இருக்கும் லட்சுமி நரசிம்மர் மகிழ்ந்து அருள்வார் என்று சிலர் கூறியதால் இப்படிச் செய்கிறேன். நீரில் மூழ்க வைக்காமல் சாதாரண நிலையிலேயே வழிபடவும் என்று சிலர் கூறுகின்றனர். என்ன செய்வது?

_ பா.சீனிவாசன், குணசீலம்.

வழிபடுவதற்கு என்று விதிமுறைகள் உண்டு. நாம் நினைக்கிற மாதிரி வணங்கலாம் என்றால், யாரையும் எதுவும் கேட்கத் தேவையில்லை. முறைப்படி என்று வந்துவிட்டால், முதலில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நாம் வணங்கும் ஸ்வாமியை மனதில் இருத்த வேண்டும். பிறகு 'சாளக்கிராமத்தில் இரு' என்று சொல்ல வேண்டும். அதன் பிறகு ஸ்நானம் பண்ணி வைக்க வேண்டும். துடைக்க வேண்டும். சிறிது பத்ரம் சார்த்த வேண்டும். சந்தனம் பூச வேண்டும். நைவேத்தியம், தீபாராதனை, பிரதட்சணம், நமஸ்காரம் இப்படி நடைமுறைகள் இருக்கின்றன.

இதில், சாளக்கிராமத்தை நீரில் மூழ்க வைப்பது என்பது எங்கிருந்து வந்தது? குளித்து, உடுத்தி, சிறிது ஜலத்தை உட்கொண்ட பிறகு அந்த ஜலத்தைக் கொட்டுவது எந்த வகையான உபசாரத்திலும் சேராது. மூழ்கிய பகவான் நல்லது செய்வார் என்று தீர்க்கமாக நம்பினால், அப்படியே நடக்கக் கூடும். ஆனால், இப்போதோ உங்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. எனவே, சட்டதிட்டப்படி நீரில் மூழ்க வைக்காமலே வணங்குங்கள்.

கணவரின் ஜாதகத்தை எங்கே எடுத்துச் சென்றாலும் அவருக்கு பித்ரு சாபம், பிரம்மச்சாரி தோஷம் - சாபம் என்று சொல்கிறார்கள். அதற்குப் பரிகாரமும் சொல்கிறார்கள். ஹோமம் செய்ய வேண்டும் என்றும் கயாவுக்குச் சென்று சிராத்தம் செய்ய வேண்டும் என்றும் சொல்கிறார்கள். நாங்கள் வசதி இல்லாதவர்கள். என்ன செய்வது?

- சித்ரா, சென்னை-4.

பித்ரு சாபம், பிரம்மச்சாரி சாபம் இருப்பதாக ஜோதிடர்கள் சொல்வதாகச் சொல்கிறீர்கள். பித்ரு சாபத்துக்கு என்ன காரணம்? கிரந்தம் பித்ரு சாபத்தைச் சொல்கிறது. அது சரிதானா? ஜோதிடத்தை ஆழமாகக் கற்று அதைப் பார்க்க வேண்டிய முறையில் பார்த்துத்தான் சொல்லியிருப்பார்களா... எனக்கு அதில் நம்பிக்கை இல்லை.

அப்படி ஒரு சாபம் இருந்தால், அதை விலக்கப் பொருளாதாரம் எங்குமே இடையூறாக இருக்காது. தர்மசாஸ்திரம், பொருளாதாரத்தின் அடிப்படையில் பரிகாரம் வைக்கவில்லை. காசே இல்லாதவருக்கும் பரிகாரம் வைத்திருக்கிறது. அதனால் கயாவுக்குச் சென்று பரிகாரம் செய்தால்தான் துன்பம் விலகும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. 'என் வீடுதான் கயை. சாப்பிடுபவர்தான் கதாதரன்' என்று சங்கல்பம் சொல்லி இங்கேயே சிராத்தம் செய்கிறோமே, அதனாலும் பலன் உண்டு. 'அங்கே போக வசதி இல்லை என்றால், இங்கே போ... முடியவில்லையா, இதைச் செய்!' என்று அந்த ஜோதிடர் உங்களுக்குச் சொல்லியிருக்க வேண்டும். உங்களால் போக முடியாத இடத்துக்குப் போனால்தான் பரிகாரம் என்று சொன்னால் அது ஜோதிடமே அல்ல!

'ஒரு பசு மாட்டை தானமாகக் கொடு' என்று ஓர் இடத்தில் தர்ம

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாஸ்திரம் சொல்லும். 'என்னால் முடியவில்லையே...' என்றால் 'பசுவின் விலையைக் கொடு' என்று சொல்லும். 'அவ்வளவு பணம் என்னிடம் இல்லை...' 'பாதி விலை கொடு.' 'அதுவும் என்னால் ஆகாதே...' 'அப்படியானால் கால் பங்கு விலையைக் கொடு. இது மிகவும் குறைச்சல். இதைக் கொடுத்தாலும் மாட்டையே தானம் செய்த பலன் உண்டு' என்று தர்மசாஸ்திரம் சொல்லும்.

இப்போதெல்லாம் நிறைய ஜோதிடர்கள் இருக்கிறார்கள். நிறைய ஜோதிடம் சொல்கிறார்கள். கற்றுக் கொண்டுதான் சொல்கிறார்களா... தெரியாது! சரியாகப் பார்த்து உண்மையைத்தான் சொல்கிறார்களா... தெரியாது! உங்களுக்கோ பேதலிக்கக்கூடிய மனசு போலிருக்கிறது. பயத்திலேயே, வேறு ஏதாவது கெடுதி நடக்கும்போது இவர் சொல்வது சரி போலத் தோன்றுகிறது, அவ்வளவுதான்!

நவக்கிரகத்தை வாரத்தின் எல்லா நாட்களிலும் சுற்றலாமா? செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் சுற்றக் கூடாது என்று விதி ஏதும் இருக்கிறதா?

- புருஷோத்தமன், மின்னஞ்சல்.

சாமி கும்பிட கிழமை கிடையாது. நமக்கு சௌகரியப்படும்போதெல்லாம் வழிபடலாம். வேறு வேலை இல்லை. காலையில் இருந்து மாலை வரை கோயிலிலேயே இருக்க முடியுமா... நாள் முழுக்க நமஸ்காரம் பண்ணுங்கள். காலை வேளைகளில் பிரதட்சணம் பண்ணுங்கள். பகவானுக்கு சண்டே அண்ட் கவர்ன்மென்ட் ஹாலிடேஸ் எல்லாம் கிடையாது. அதனால் நாள், கிழமை எதுவும் பார்க்காதீர்கள். எப்போது வேண்டுமானாலும் ஆராதனம் செய்யலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தர்ப்பாசனத்தின் விளக்கங்கள் என்ன?

விநாயகர் ஊர்வலத்தின்போது 5,000 போலீஸ்காரர்கள் காவலுக்கு வரும் நிலை பற்றி?

– வி.பாலு, குடந்தை-1.

நமக்கெல்லாம் பாதுகாப்பு கடவுள். இப்போது கடவுளுக்குப் பாதுகாப்பு தேவைப்படுகிறது. இதற்குக் காரணம், இதயங்களுக்கு இடையில் பரிமாற்றம் இல்லாததுதான். வேஷத்தையும் விஞ்ஞானத்தையும் பரிமாறிக் கொள்கிறோம். மனசு மட்டும் மாறாமல் இருக்கிறது.

கடவுள் என்பது எல்லாருக்கும் பொதுவான ஒன்று. கடவுளைப் பொறுத்தவரை காம, குரோத, மாச்சரியங்கள் கூடாது. கடவுளுக்கு எதிரில் அக்கிரமம் பண்ணக் கூடாது. கடவுளுக்கு முன் நாம் அனைவரும் சமம்தான். தன்னை எதிர்ப்பவருக்கும் நன்மை செய்பவர் கடவுள். ஒரு பெரிய சிந்தனையில் நமது ஊரில் சடங்குகள் உருவாகியிருக்கின்றன. அது பலருக்கு நன்மை விளைவிப்பது. மனங்கள் கலக்காததால், அங்கே இடையூறு விளைவிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. இப்போது காவலுக்கு ஆள் வைக்க வேண்டியிருக்கிறது.

எங்கே நாம் மாற வேண்டும்? இந்த உலகத்தில் பலரும் வாழ்கிறார்கள். ஆஸ்திகர் உண்டு. நாஸ்திகரும் உண்டு. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு நம்பிக்கை. அதை நாம் எதிர்க்கக் கூடாது. ஒருவரின் சுதந்திரத்தை மீறாமல் நம் சுதந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



எல்லாருக்கும் வர வேண்டும். நமது நம்பிக்கையை ஒருவர் எதிர்த்தால் நமக்கு வரும் அதே வருத்தம், பிறரது நம்பிக்கையை நாம் எதிர்க்கும்போது அவருக்கும் வரும் என்கிற புரிதல் நமக்கு வேண்டும்.

ரொம்ப காலம் ராஜாக்கள் ஆண்டு கொண்டு இருந்தார்கள். அப்போது கோயில்களுக்கு போலீஸ்காரர்களே தேவையில்லை. எத்தனையோ நகைகளை சுவாமி அணிந்திருந்தாலும் கெட்ட எண்ணத்தோடு யாரும் கிட்டே வர மாட்டார்கள். அப்போது நம்பிக்கை இருந்தது. இன்றைக்குப் பண்டிதருக்கும் படித்தவருக்கும்கூட அந்த எண்ணம் இல்லை!

நமது நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த பின் முதல் தேர்தல் நடந்தபோது போலீஸுக்கு வேலையே இல்லை. அதே சமயம் இன்றைய நிலைமை – அனைவருக்கும் தெரியும்.

பூஜிக்கப்பட்ட தகடுகளை பூஜையறையில் வைக்கலாமா?

– வி.எழில்ராணி வேல்முருகன், திட்டக்குடி.

முதலில் தகடு என்பது என்ன என்று நீங்கள் சொல்லவில்லையே. யாரோ பூஜை செய்தார்கள், அதை யாரோ கொண்டு வந்து கொடுத்தார்கள் என்றால் அதைக் கொண்டு போய் பூஜை அறையில் வைக்க வேண்டிய அவசியமென்ன? எந்தப் பொருளையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைக்க வேண்டுமானால், அதற்கு நிரந்தரமாக நாம் ஏதாவது பண்ண வேண்டுமே! அலங்காரப் பொருளாக பூஜை அறையில் ஒரு பொருளைக் கொண்டு வைப்பதாக இருக்கக் கூடாது. ஏதாவது ஒரு தெய்வத்திடம் நிரந்தர ஈடுபாடு வைத்து, ஒருமுகமான சிந்தையோடு அதை வழிபடுவதே நியாயமாக இருக்கும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தவிர, யார் யார் என்னென்ன சொல்கிறார்களோ, அந்த தெய்வத்துக்கு என்னவெல்லாம் இருக்கிறதோ அதை நாமும் கொஞ்ச காலத்துக்கு அனுசரிக்கலாம் என்று நினைப்பது சரியல்ல. பல பேர் சொல்கிறார்கள் என்பதால் வரும் நம்பிக்கை நிலைக்காது. உங்களுக்கு நம்பிக்கை வேண்டுமானால், ஒரே கடவுளை எடுத்துக் கொள்ளுங்கள். அதைத் தவிர வேறு நம்பிக்கை இருக்கக் கூடாது. ஆயிரம் தெய்வத்தை ஆராதனம் செய்வதால் பயனில்லை. எல்லாம் ஒரு தெய்வம்தான் என்கிற தெளிவு உங்கள் சிந்தையில் உண்டானால், ஆயிரம் தெய்வத்தைக் கும்பிடலாம். அப்போதுதான் தெய்வங்களுக்கு இடையே பாகுபாடு பார்க்க மாட்டீர்கள்.

ஒரு ஸ்தோத்திரத்துக்காக, 'விக்னேஸ்வரரை ஆராதித்தால் விக்னம் விலகும்' என்று சொல்கிறோம். பரமேஸ்வரனால் விக்னம் போகாதா? எல்லா தெய்வமும் எல்லாவற்றையும் கொடுக்கும். அதைக் கொடுக்க வைப்பது உங்களிடம்தான் இருக்கிறது. 'நான் உன் பொறுப்பு. எனக்கு எது தகுதியோ அதைச் செய்து கொடு' என்று சரணடைந்து விட்டால் ஏது கவலை? ஒரு கடவுளைப் பற்றிச் சொல்லும்போது கேட்பவருக்கு அவர் மீது ஐயமில்லாத நம்பிக்கை வர வேண்டும் என்பதற்காக அவரை மட்டும் உயர்த்திச் சொல்வார்கள். விஷ்ணு கதையில் விஷ்ணுவைத் தவிர யாரும் பெரியவர் இல்லை என்பார்கள். சிவனைச் சொன்னால், இவர்தான் சுப்ரீம் என்பார்கள். கந்தனைச் சொல்லும்போது விஷ்ணு, பிரம்மாவைவிட கந்தன் உசத்தி என்பார்கள். ஆயிரம் வடிவங்கள் இருந்தாலும் பரம்பொருள் ஒன்றுதான் என்கிற எண்ணம் உங்கள் மனதில் வர வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நடைமுறையில் ஒன்று வைத்திருக்கிறோம். எத்தனையோ தெய்வங்களைக் கும்பிட்டாலும் வருஷத்துக்கு ஒரு தடவையாவது 'குலதெய்வத்தைப் பார்க்கப் போகிறேன்' என்று கிளம்புகிறோம். ஏனென்றால், நமக்கு என்ன வேண்டும் என்று நம் குலதெய்வத்துக்குத் தெரியும். அதனால் யாரோ பூஜை செய்த தகடு உங்களுக்கு உதவாது. நீங்களாக நம்பிக்கை வைத்து வழிபட்டால், கல்லிலோ உலோகத்திலோ படத்திலோ தகட்டிலோ சாமி வருவார். ஒன்றுமே இல்லை என்றால்கூட உங்கள் மனதில் வருவார்.

என் தாயார் 60 வயதில் சுமங்கலியாக மறைந்தார். அவரது திருமாங்கல்யத்தை அப்படியே வைத்து பூஜை செய்து (மகன் திருமணத்தில் வரும்) மருமகளுக்குப் போடுவார்களா அல்லது திருமாங்கல்யத்தை அழித்து புதிதாகச் செய்து போடுவார்களா?

– ஆர். கல்யாண பசுபதி, கரூர்-1.

திருமாங்கல்யத்தை, கல்யாணம் ஆகும் பெண்ணின் தகப்பனார் போட வேண்டுமா, பையனின் வீட்டில் போட வேண்டுமா? இப்படி ஒரு கேள்வி உண்டு. மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளைதான் தன் செலவில் மாங்கல்யம் வாங்கித் தர வேண்டும். சம்பிரதாயத்தில் 'நம் பெண்ணுக்குத்தானே செய்கிறோம்' என்கிற எண்ணத்தில் பெண் வீட்டாரே மாங்கல்யம் போடுவது வழக்கமாகிவிட்டது. சட்டப்படி பார்த்தால் மாங்கல்யம், கூறைப் புடவை வாங்க



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேண்டியது மாப்பிள்ளைதான். 'எப்போது கன்னிகா தானமாக பெண்ணை வாங்கிக் கொண்டாயோ, அப்போதே பெண்ணுக்கு மாங்கல்யத்தையும் புத்தாடையையும் கொடுத்து சுத்தப்படுத்தி உன்னுடையவளாக ஏற்றுக்கொள்!' என்றுதான் சாஸ்திரம் சொல்கிறது. மருமகளுக்கு என்று புதிதாகத்தான் பண்ணிப் போட வேண்டும். மாமியாரின் மாங்கல்யத்தைப் போட வேண்டியதில்லை. அப்படியே புதுத் தங்கம் வாங்கவில்லை என்றால், மாமியாரின் மாங்கல்யத்தை உருக்கிப் புதிதாகச் செய்து போடலாம்.

நம் மனது எப்போதும் எதிரிடையான எண்ணங்களையே சிந்திக்கும். வேறு சஞ்சலங்களும் தோன்றக் கூடும். அவற்றுக்கெல்லாம் இடங்கொடுப்பானேன்? 'எனக்கு அப்படி எல்லாம் தோன்றாது' என்று எவராலும் உறுதியாகச் சொல்ல முடியாது. 'பண்ணலாமா?' என்று கேட்கும்போதே உங்களுக்கு ஏதோ நெருடுகிறது என்பதுதானே பொருள்? நெருடுவதைத் தவிர்த்து விடுங்கள்!

சக்தி விகடனில் ஒரு கட்டுரையில் ராஜராஜேஸ்வரியின் மூல மந்திரம் 'மஹா ஷோடசாக்ஷரி' என்று கூறப்பட்டுள்ளது. அது என்ன மந்திரம்?

– வி.கோதண்டராமன், ஓலக்கூர்.

வேதம், மந்திரம் இவற்றையெல்லாம் சிரேஷ்டமான குருவிடமிருந்து ஒரு சீடனாக முறைப்படி கற்றுக் கொள்ள வேண்டும். வெறும் லெட்டர் மூலம் அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், அதன் கௌரவம் குறைகிறது இல்லையா? 'ஸ்ரீவித்யார்ணவ தந்த்ரம்' என்றொரு புத்தகம் இருக்கிறது. ஆன்மிக புத்தகங்கள் விற்கப்படும் பிரபலமான கடைகளில் இந்தப் புத்தகம் கிடைக்கும். அதில் ஷோடசாக்ஷரி என்கிற விளக்கம் இருக்கிறது. அதில் நீங்கள் கேட்ட பதினாறு அட்சரமும் இருக்கின்றன. அதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். அதன் பிறகு ஒரு குருவிடம் செல்லுங்கள். பணிவோடு கற்றுக் கொள்ளுங்கள்.

பதினாறு என்பது ஒரு முழுமை. பதினாறு வயதாகி விட்டால், மகனை நண்பனாக நினை என்பார்கள். பழைய காலத்தில் பதினாறு அணா இருந்தது. அது முழுசு. ஒரு ரூபாய். ஓர் ஆண்மகன் பதினாறு கலையோடு இருக்கிறான். அம்பாளின் முழுமை பதினாறு. இதைத்தான் ஷோடசாக்ஷரி என்கிறார்கள். அதில் பதினைந்தைத் தெரிந்து கொள்ளலாம். முழுமையாக்கும் பதினாறாவது என்ன? அது ரகசியம். நான் குறிப்பிட்ட புத்தகத்திலும் அது மறைமுகமாகத்தான் சொல்லப்பட்டிருக்கும். அது மறைமுகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்லவும் ஒருவர் வேண்டுமே... அவர்தான் குரு. 'நீ நாளை உன் சிஷ்யனுக்கு மட்டும் சொல்லிக் கொடு. அப்பட்டமாக்காதே' என்று சொல்லி, கற்பிப்பார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அமாவாசை, பௌர்ணமி இரண்டு இருக்கிறதே, அதில் அமாவாசை அன்று சந்திரனும் சூரியனும் சேர்ந்து இருக்கும். சந்திரனுக்குப் பதினாறு கலை உண்டு. பதினைந்து கலைதான் வெளியில் தெரிகிறது. பிரதமை அன்று ஒரு கலை. த்விதியை, திருதியை, சதுர்த்தி என்று பதினைந்துதான் தெரிபவை. பதினாறாவது கலை கண்ணுக்குத் தெரியாது. அது அமாவாசையோடு ஒட்டிக் கொண்டு இருக்கிறது. அதுபோல் அம்பாளின் கலையும் அப்படித்தான். மந்திர சாஸ்திரத்தின் ரகசியத்தை அறிய விரும்பினால், குருவை நாடுங்கள்.

எனக்கு வயது 70 ஆகிறது. (தர்ப்பைப் புல்லால் வேயப்பட்ட) தர்ப்பாசனம் தயாரித்து பக்தர்களுக்குக் கொடுத்து வருகிறேன். ஆனால், தர்ப்பாசனத்தின் விளக்கங்கள் எனக்குத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தெளிவாகவில்லை. தர்ப்பாசனம் யார் யார் பயன்படுத்த வேண்டும், அதனால் ஏற்படும் நன்மை என்ன, என்ன விதமான கட்டுப்பாடுகள் அவசியம்?

– எம்.தனபாலன், தூத்துக்குடி-2.

தர்ப்பாசனம் பயன்படுத்த நல்ல காரியம், கெட்ட காரியம் என்கிற பாகுபாடு கிடையாது. கல்யாணமும் நடத்துகிறோம். உயிர்நீத்த ஒருவருக்கான காரியமும் செய்கிறோம். எதுவாக இருந்தாலும் தர்ப்பை இல்லாமல் செய்வதில்லை. *பவித்ரம் வை தர்பா:* அதாவது தர்ப்பை தூய்மையானது. இதை வெறுமனே மனதால் நினைத்தால் போதாது. வாயால் சொன்னால் போதாது. தர்ப்பையை கையில் போட்டுக் கொண்டு ரெண்டு தர்ப்பையைப் போட்டு உட்கார்ந்து கொண்டு சொல்ல வேண்டும். எத்தனையோ பேர் ஆடி அமாவாசைக்கும் தை அமாவாசைக்கும் முன்னோர்களை ஆராதிப்பதற்காக தீர்த்தங்களுக்குச் செல்வதுண்டு. அவர்கள் அத்தனை பேரும் தர்ப்பைப் போட்டுக் கொண்டுதான் செய்வார்கள். தர்ப்பையைக் கையிலும் வைத்திருப்பார்கள்.

செய்யும் காரியம் சுத்தமாக இருப்பதற்கு, உள்ளம் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது. உடலும் சுத்தமாக இருக்க

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேண்டும். அங்கங்கள் சுத்தமாக, தர்ப்பை கையில் இருந்தால் போதும். உடலின் மற்ற பகுதிகள் சுத்தமாக உட்காரும் இடத்திலும் தர்ப்பை வேண்டும். போட்டு அமர்வதுதான் தர்ப்பாசனம். எந்தக் காரியமும் தர்ப்பை இல்லாமல் நிறைவடையாது. ஒருவர் இறந்து விட்டார் என்றால் அவருக்கு அக்கினியை எப்படி உண்டு பண்ண வேண்டும் தெரியுமா? ஒரு தர்ப்பையை முறித்தெடுத்து அதை முதலில் கொளுத்த வேண்டும். அதிலிருந்து இன்னொரு தர்ப்பையைக் கொளுத்தி அதிலிருந்து வேறொரு தர்ப்பையைக் கொளுத்தி, அதிலிருந்து மற்றொரு தர்ப்பையைக் கொளுத்தினால் சுத்தமான அக்னி கிடைக்கும். அதைப் பயன்படுத்த வேண்டும். அக்னியைக்கூட சுத்தப்படுத்தும் தன்மை தர்ப்பைக்கு உண்டு என்று தர்ம சாஸ்திரம் கூறுகிறது.

இறந்தவர் உடலைச் சுத்தம் செய்ய தர்ப்பை போடுவார்கள். பிண்டம் வைக்க தர்ப்பை போட வேண்டும். யாகத்துக்கு நெய் வருகிறது; அதில் ரெண்டு தர்ப்பை. கிரகணம் வருகிறது. பால் போன்ற பொருட்கள் இருக்கின்றன. தீட்டு பட்டுவிடக் கூடாது என்றால் தர்ப்பையைத்தான் போடுகிறோம். கும்பாபிஷேகம் செய்யும் கும்பத்தில் தர்ப்பை. கொடி மரத்தில் தர்ப்பை. இப்படி எங்கும் இருப்பது அது.

ஒப்புக்கு இரண்டு தர்ப்பையைப் போடுவதைவிட அழகாக தர்ப்பாசனத்தில் உட்கார்ந்து செய்வது கூடுதல் சிறப்பு. அதில் கௌரவம் அதிகம்.

எதில் தர்ப்பை கூடாது என்கிற கேள்விக்கே இடமில்லை. எந்தக் காரியம் செய்யச் சுத்தம் தேவை இல்லை? எந்தக் காரியமானாலும் சுத்தம் அவசியம். சுத்தத்துக்கு தர்ப்பை முக்கியம். தர்ப்பை இல்லாமல் சுத்தம் இல்லை.

தர்ப்பை எடுப்பதற்கே குறிப்பிட்ட ஒரு நாள் உண்டு. ஆவணி மாதம் அமாவாசை அன்றுதான் தர்ப்பையைக் கொண்டு வரலாம். நுனி இருக்கிற தர்ப்பையாகப் பார்த்து எடுத்து வர வேண்டும். இப்படி எடுத்து வரும் ஆளுக்கு குசலன் (நிபுணன்) என்று பெயர். பஞ்சாங்கத்தைப் பார்த்தால் இன்று தர்ப்ப சங்க்ரஹம் என்று போட்டிருக்கும். இன்ன நாளில் இன்ன இடத்தில் இருந்து இன்னாரால் கொண்டு வரப்பட வேண்டும் என்கிற அளவுக்கு தர்ப்பைக்கு கௌரவம் உண்டு. அதன் சரித்திரம் ரொம்பப் பெரிசு. முழுவதையும் சொல்ல 'சக்தி விகடனி'ல் பாதி அளவுக்குப் பக்கங்கள் தேவை.

எனவே, வைதிக காரியங்கள் அனைத்துக்கும் பயன்படும் தர்ப்பையை வைத்து நீங்கள் செய்து வருவது நல்ல காரியம்தான். தொடர்ந்து செய்யுங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மருந்துகள் அசைவமாகுமா?

ஆலயங்களில் கோபுரக் கலசங்கள் எண்ணிக்கையில் மாறுபடுகின்றன. எதன் அடிப்படையில் இவை அமைக்கப்படுகின்றன?

-ஐ.எஸ்.சீனிவாசன், சென்னை-82.

கோபுரக் கலசம் மட்டும் அல்ல; ஆலயங்களின் அமைப்புகளே எல்லா இடங்களிலும் மாறுபடும். கஜ பிருஷ்டம் என்று ஓர் உருவ அமைப்பு உண்டு. கோபுரம் என்று உண்டு. கோபுர வாசல் என்று இருக்கும். ஒன்றில் துவஜஸ்தம்பம் இருக்கும். ஒன்றில் தீபஸ்தம்பம் என்று இருக்கும். பிராகாரம் இல்லாத கோயில் உண்டு. இவற்றை எல்லாம் ஆகம சாஸ்திரம் விரிவாகச் சொல்லும்.

கோபுரக் கலசத்தின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பது, உள்ளே இருக்கும் ஸ்வாமியின் பிம்பம்தான். எத்தனை அங்குல மூர்த்திக்கு எத்தனை கலசம் என்று திட்டவட்டமான சட்ட திட்டம் உண்டு. அதை அறிய ஆகம சாஸ்திரம் கற்றுக்கொள்ள வேண்டும்.

முன் ஜென்ம வினைத் தாக்குதல்களில் இருந்து மனிதன் விடுபட ஏதேனும் வழி உள்ளதா?

– பிரபா லிங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர்.

ஒருவர் தனது வீட்டில் நிறைய பசு மாடுகளை வளர்த்து வந்தாராம். பால் கிடைக்குமா என்று எங்கேயோ ராஜஸ்தானில் ஒட்டகத்தைத் தேடிக் கொண்டு போனாராம். அது மாதிரி அல்லவா இருக்கிறது நீங்கள் கேட்பது!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



நமது சாஸ்திரங்களின் வேலையே முன் ஜென்ம வினைகளிலிருந்து விடுபடுவதற்கான வழியைச் சொல்வதுதான். ஏதேனும் வழி உண்டா என்று கேட்டால், என்ன சொல்வது?

நம் ஊரில் பிறந்தவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான சிந்தனை இருக்கிறது. அவரவர் சிந்தனைக்குத் தகுந்த விதமாகவே முன் ஜென்ம வினையைத் தீர்த்துக் கொள்ள வழிகள் இருக்கின்றன நமது சாஸ்திரங்களில்.

வேதம் சொல்கிற வழிக்கு 'மீமாம்ஸா' என்று பெயர். அதன்படி வினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமானால், யாகம் செய்ய வேண்டும்.

வேதாங்கம் என்று ஒரு முறை இருக்கிறது. அதன்படி சந்நியாசம் வாங்கிக் கொண்டு போகலாம். யோகாப்பியாசம் செய்தும் வினையைத் தீர்த்துக் கொண்டு மோட்சத்தை அடையலாம். இப்படி முன் ஜென்ம வினையைத் தீர்த்துக் கொண்டு மோட்சம் அடைந்து நிரந்தர சந்தோஷத்தை அடைய வழி சொல்பவைதான் அனைத்து சாஸ்திரங்களும்.

இனிப்பு ஒன்றுதான். ஆனால், எத்தனை தினுசான பண்டங்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருக்கின்றன. அது நமது ரசனை, ஈடுபாடு. அதே போல அவரவருக்குப் பிடித்த மாதிரி பல வழிகளைச் சொல்கிறது சாஸ்திரம். வழி வேறானாலும் இலக்கு ஒன்றுதான்.

வீடுகளில் அன்னதானம் நடத்தும் போது, மற்றவர்கள் கொடுக்கும் பொருட்களை வாங்கிப் பயன்படுத்தலாமா?

– கே.நீலா, சென்னை-90.

அவரவர் சம்பாதித்து, என்ன முடியுமோ, அதை வைத்து அன்னதானம் செய்வது உயர்வானது. 'நான் பெரிதாகத்தான் செய்யப் போகிறேன். பலரிடம் வாங்கிச் செய்வேன்!' என்று சொல்வது அவ்வளவு உசிதம் அல்ல.

'எனக்கு ஏகப்பட்ட பணிகள் இருக்கின்றன. சொத்தும் தேவைக்கு மேலே இருக்கிறது. அதனால் தானம் நடத்துபவரிடம் பணத்தைக் கொடுத்து முடித்து விடலாம்!' என்பது சரியல்ல. இத்தகைய அன்னதானத்தில் பிடிப்பு இருக்காது. 'செக்'கைக் கொடுத்து விடுவோம். அங்கு என்ன நடந்தது என்பதே தெரியாமல் இருப்போம்.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பழைய காலத்தில் எல்லாம், விருந்தோம்பல் என்று அவரவர் வீட்டிலேயேதான் அன்னதானம் செய்தார்கள். அப்போதுதான், 'என் பொருளைத் தருகிறேன்!' என்கிற திருப்தி, 'நான் போட்டேன்!' என்கிற நிறைவு, 'என்னால் இவர் சந்தோஷப்பட்டார்!' என்கிற அனுக்கிரகம்... இத்தனையும் நேரடியாகக் கிடைக்கும்.

'ஓர் உயிரைக் கொன்று சாப்பிடக் கூடாது!' என்று எண்ணும் தீவிர சைவர்கள்கூட, வியாதி-வெக்கை என்று வந்து விட்டால் டாக்டர்கள் எழுதித் தரும் எந்த மருந்தையும் சாப்பிடுகிறார்கள். உதாரணமாக சாதாரண கேப்ஸ்யூல், ரத்த அபிவிருத்தி மருந்துகள், பற்பசை, சாதாரணச் சர்க்கரையில்கூட வெண்மைக்காக அசைவ வஸ்துக்கள் சேர்க்கப் படுகின்றன என்று சொல்லப்படுகிறது. இவற்றை எல்லாம் சாப்பிடுபவர்கள் 'தீவிர சைவர்' என்று தங்களைச் சொல்லிக் கொள்ளலாமா?

– ஜி.நீலகண்டன், பெங்களூர்-3.

சாதாரண சைவம், சுமாரான சைவம், தீவிர சைவம் என்றெல்லாம் வகைகள் கிடையாது! ஏதோ ஒரு குறிக்கோளோடு, ஏதோ ஒரு குறிப்பிட்ட கடவுளை நம்பிக்கொண்டு, குறிப்பிட்ட சித்தாந்தத்தின் மீது ஈடுபாட்டோடு நாம் இருக்கிறோம். எந்தச் சித்தாந்தமானாலும், நம்மையே அழிக்கிற மாதிரி ஓர் இடையூறு வந்தால் நாம் அந்த சித்தாந்தத்தைப் பின்பற்றத் தேவையில்லை!

என் உடல் திடமாக இருக்க வேண்டும். செயல்பாடு தெளிவாக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருக்க வேண்டும். புலன்களெல்லாம் சரியாக இருக்க வேண்டும். அப்போதுதான் நான் சைவத்தை நடைமுறைப்படுத்த முடியும். அது வீர சைவமாக இருக்கட்டும், வீரமில்லாத சைவமாக இருக்கட்டும். எனக்கு அடிப்படைத் தேவை உடல்.

சரீரம் ஆத்யம் கலு தர்ம சாதனம்: எதை அடைய முயற்சிக்கிறோமோ, அதை அடைவதற்கு உடல் முக்கியம். ஏதோ ஒன்றை அடைகிறோம் என்று நினைத்துக் கொண்டு உடலையே அழிப்பது தவறு. ஆரோக்கியத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு எந்த மாதிரியான சூழ்நிலையாக இருந்தாலும் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆசையாக விரும்பிச் சாப்பிடக் கூடாதே தவிர, மருந்தாகச் சாப்பிடுவதில் தவறே இல்லை! அதைச் சாப்பிட்டால்தான் அவரால் வீர சைவத்தைக் கடைப்பிடிக்க முடியும். அல்லாமல் செத்துப் போய்விட்டால், எப்படி வீர சைவத்தைக் காப்பாற்ற முடியும்?

தர்மசாஸ்திரம் எதற்கு வந்திருக்கிறது? பகவானுக்காக சட்ட திட்டம் இல்லை; நமக்காக! தர்மசாஸ்திரத்துக்காக நாம் வாழவில்லை; நம்மை நல்ல முறையில் வாழ்விப்பதற்காகவே தர்மசாஸ்திரமும் கடவுளும்! கிரகணத்தின்போது சாப்பிடக் கூடாது என்று சொல்கிற சாஸ்திரம் - சின்னக் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், நோயாளி, வயதானவர்கள் சாப்பிடலாம் என்றும் சேர்த்தே சொல்கிறது. அவர்களை வைத்துத்தானே அனுஷ்டானங்களை நிறைவேற்ற வேண்டும்? அவர்களே இல்லாமல் போய்விட்டால் எப்படி அனுஷ்டானம் செய்வது? அவர்கள் இல்லாமல் போவதை தர்மசாஸ்திரம் ஒப்புக் கொள்ளாது.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதை சிகிச்சையாக எடுத்துக் கொள்ளும் ஒருவர், அமாவாசையாக இருந்தாலும் எண்ணெய் தேய்த்துக் கொள்ளலாம். சரீரத்தைக் காப்பாற்றிக் கொள்ள எந்த மிருகத்திலிருந்து மருந்து வந்திருந்தாலும், குணமாகும் வரை அதைச் சாப்பிடுங்கள். அது சைவம்தான்!

நான் இருக்கும் மும்பையில் பூக்களின்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விலை அதிகம்; கிடைப்பதும் அரிது. அதனால் மூன்று, நான்கு நாட்களுக்கு உரியதை மொத்தமாக முன்கூட்டியே வாங்கி ஃப்ரிஜ்ஜில் பாதுகாத்து வைத்துப் பிறகு ஸ்வாமிக்கு சார்த்துகிறேன். சூழ்நிலையின் காரணமாக இப்படி மொத்தமாக வாங்கி வைத்துக் கொள்வது தவறா?

_ லலிதா ராமன், கிழக்கு டோம்பிவிலி,
தானே மாவட்டம்.

சாஸ்திரக் கண்ணோட்டத்தில் பார்த்தால், புஷ்பங்களில் ஆராதனைக்கு உரியது, அல்லாதது என்று வித்தியாசம் சொல்லப்பட்டிருக்கிறது. சில புஷ்பங்கள் கீழே விழுந்தாலும் எடுத்துக் கொள்ளலாம். சிலவற்றை மரத்திலிருந்து பறிக்க வேண்டும். பாரிஜாத புஷ்பத்தை உலுக்கி எடுக்க வேண்டும். செம்பருத்தி, தாமரை ஆகியவற்றைப் பறிக்க வேண்டும். கீழே விழுந்தால் எடுக்கக் கூடாது. 'அன்று பூத்த புஷ்பங்களை அன்றே சார்த்த வேண்டும்; அடுத்த நாள் சார்த்தக் கூடாது!' என்று சட்டமே உண்டு. இந்தச் சட்ட திட்டங்களைப் பார்க்கும்போது அந்தக் காலத்தில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விஸ்தாரமான இடங்களில் வசித்து, நிறைய பூச்செடிகளை வளர்த்துக் கொண்டு தினப்படி பூஜை செய்திருக்கிறார்கள் என்று புரிகிறது.

இப்போது நாம் புஷ்பத்தைப் பார்க்கும் நிலையில் இல்லை. தரையையே பார்க்க முடியாத இடத்துக்கு நமது வீட்டைப் பெயர்த்துக் கொண்டு வந்திருக்கிறோம். உலகம் அப்படி ஆகவில்லை; நாமாக அப்படிச் செய்து கொண்டோம். ஆகாயத்தில் வீடு கட்டிக் கொண்டால், செடி வளர்க்க முடியாது. உண்மைதான்! இந்த இடத்துக்கு வந்தது உங்கள் விருப்பம். புஷ்பம் இல்லாத இடத்துக்கு வந்து... புஷ்பம் கிடைக்காத சூழலை உருவாக்கி... எங்கிருந்தோ அதைக் கொண்டு வரச் சொல்லி... நான்கு நாட்களுக்கு வைத்திருந்து... இவை எல்லாமே நாமாகச் செய்து கொண்டவை.

இப்படி வரும் என்பதை முன்கூட்டியே உணர்ந்த தர்மசாஸ்திரம் சில விஷயங்களைச் சொல்கிறது. துளசியையும் வில்வத்தையும் 4 நாட்கள் வைக்கலாம். ஃப்ரிஜ் இல்லாமல் காய்ந்து பொடிப்பொடி ஆனாலும் அவற்றைப் போடலாம் என்கிறது. தாமரைப் பூவை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

2 நாள் வைத்திருக்கலாம். நவீன காரணங்களைச் சொல்லி சாஸ்திரத்துக்குப் புறம்பாகப் போகாமல், அது சொல்லியிருக்கும் மாற்று ஏற்பாடுகளைப் பின்பற்றலாமே!

மழைக்காக வருண ஜபம் செய்கிறோம். கொட்டோ கொட்டென்று கொட்டும் மழையை நிறுத்த என்ன ஜபம் செய்ய வேண்டும்?

– லீலா, கும்பகோணம்-1.

எந்த ஒன்று அதிகமானாலும் அதைக் குறைப்பதற்கும், ஏதாவது ஒன்று குறைந்து விட்டால் அதை நிவர்த்தி செய்வதற்கும் வழி உண்டு.

எப்போது 'மழை வேண்டாம்!' என்று நினைக்கிறோம்? தேவைக்கு அதிகமாகப் பெய்து நம்மை அழிக்கத் தயாராகும்போது. அழிவுக்குக் காரணமான அளவுக்கு மழை பெய்தால், அதை நிறுத்தவும் வழி சொல்ல வேண்டுமே... அப்போதுதானே அது முழுமையடையும்? ஆயுர்வேதத்தில் ஒன்று உண்டு. பேதி ஆவதற்கு கடுக்காய் கொடுப்பார்கள். போகத் தொடங்கிய பேதி போய்க் கொண்டே இருக்கிறது. அவன் உடல் நிலை பாதிக்கிற அளவு போகிறது. 'கொஞ்சம் மோரைக் குடி. நின்றுவிடும்' என்று மாற்று ஏற்பாட்டையும் ஆயுர்வேதம் சொல்கிறது.

எத்தனை விதமான மழை இருக்கிறது? ஆலங்கட்டி மழை, இடி இடித்து மழை, இடி இல்லாத மழை, அடித்து ஊற்றுகிற மழை, விட்டு விட்டுப் பெய்யும் மழை, புயல் காற்றோடு சேர்ந்த மழை... இப்படி எத்தனை தினுசு இருக்கிறதோ அத்தனையையும் சொல்லி இதில் ஏதாவது ஒரு மழையாவது எனக்கு வேண்டும் என்று யாகம் செய்யச் சொல்கிறது வேதம். 'அந்த யாகம் செய்தும் மழை வரவில்லை என்றால் அடுத்த நாள் மறுபடி அந்த யாகத்தை செய்!' என்கிறது.

'மழை வரும் வரை செய்' என்கிறது. ஏன் அப்படி? வியாதி வந்தால் ஒரு முறை மருந்து சாப்பிட்டுவிட்டு நிறுத்தி விடுகிறோமா? வியாதி தீர்கிற வரை அல்லவா சாப்பிடுகிறோம்? மழையை வரவழைக்கவும், நிறுத்தவும் யாகம் செய்யும்போது பலன் கிடைக்கும் வரை தொடர்ந்து செய்யத்தான் வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ராமபிரான் மாமிசம் சாப்பிட்டாரா?

நாக வழிபாட்டுக்குக் காரணம் பயமா? பக்தியா? அல்லது இரண்டையும் தாண்டிய வேறு ஏதாவது காரணமா?

– ஆர்.ஜி.பாலன், திசையன்விளை.

பயத்தில் வழிபடுவது என்கிற கொள்கையே பாரதத்தில் பிறந்தவர்களுக்கு இல்லை. பக்தியில் வழிபடுவது மட்டுமே நம் நாட்டினருக்குத் தெரியும். பயம் இருந்தால், அதைப் போக்க வழிபடுவோமே தவிர, 'பயம் இருக்கிறது; அதனால் கும்பிடுகிறேன்' என்பது இங்கே இல்லை. பயத்தில் வழிபாடு வருகிற பட்சத்தில், பயம் போனால் வழிபாடும் போய்விடும். பக்தியில் வழிபாடு வந்தால்தான் நிலைக்கும். நடுவில் போகக் கூடிய வழிபாட்டை வேதமும் சொல்லாது; சாஸ்திரமும் சொல்லாது; சம்பிரதாயமும் சொல்லாது.

பலர் பயத்தினால் நமஸ்காரம் செய்கிறார்களே என்றால், அங்கே நம் அசட்டுத்தனம்தான் வெளிப்படுகிறது. அதைக் கொண்டுபோய் பூஜையில் வைக்காதீர்கள்.

சாதாரணப் பாமரனுக்காக நாகம் என்று வைத்து அதை வழிபடுவதாக நீங்கள் நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். இந்தக் கல்லில் இருக்கும் நாகத்தை மட்டும் பார்க்காதீர்கள். வேதத்திலேயே சர்ப்பத்தைப் பற்றிச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆயில்யம் நட்சத்திரத்தின் தேவதையே சர்ப்பம்தான். சர்ப்பத்தைச் சொல்லும் வேத மந்திரம் என்னென்ன சர்ப்பங்களை எல்லாம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சொல்கிறது தெரியுமா? பூமியில் இருக்கும் சர்ப்பம்; அந்தரட்சத்தில் (இடைவெளியில்) இருக்கும் சர்ப்பம்; வாயுமண்டலத்தையும் தாண்டி விண்வெளியில் கிரகங்களுக்கு இடையில் நழுவிப் போகக் கூடியதான சர்ப்பம்... இப்படி நிறைய சர்ப்பங்களைச் சொல்லி அதை எல்லாம் நாகமாக வழிபடுகிறோம். நமது வீட்டின் கொல்லைப்புறத்துக்கு வரும் சாதாரண விஷப் பாம்பில்லை அது.

ஒரு கோயிலுக்குப் போகிறோம் என்றால், சுவாமியைப் பார்த்து பயப்படவா செய்கிறோம்? 'அந்தக் கோயிலுக்குப் போனேன். அங்கே நரசிம்மர், ஹிரண்யகசிபுவைக் கிழித்துக் கொண்டிருக்கிறார். பயந்துபோய் ஓடி வந்துவிட்டேன்' என்று சொல்லிக் கேட்டிருக்கிறீர்களா? அசுரனை வதம் செய்யும் கோலத்தோடு கோபமும் குரோதமும் ததும்பும் அம்பாளின் முகத்தைப் பார்த்தால் பயமா வருகிறது? பக்திதானே வருகிறது... பயப்படுத்தும் உருவமாக இருந்தாலும் பயப்படுவதில்லையே நாம்? தெருமுனையில் வித்தைக்காரன் முன்னால் 'ஆடு பாம்பே... ஆடு பாம்பே' என்று நிற்கும் பாம்பைப் பார்த்து வேண்டுமானால் 'எங்கே நம் மீது விழுந்துவிடுமோ!' என்று பயப்படலாம். இது சர்ப்ப தேவதை. வேதம் சொன்ன நாகம் அது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒன்று கவனித்துப் பாருங்கள்... அம்மன் தலையில் சர்ப்பம் இருக்கும். பரமேஸ்வரன் கழுத்தில் சர்ப்பம் இருக்கும். விக்னேஸ்வரர் இடுப்பில் சர்ப்பத்தைச் சுற்றிக் கட்டியிருப்பார். முருகனை விட்டுப் பிரியாமல் எப்போதும் கூடவே இருக்கும் ஒரு சர்ப்பம். பரம்பொருளான விஷ்ணு, ஆதிசேஷன் மேல் படுத்துக்கொண்டு இருக்கிறார்.

எனவே, பக்தியால் மட்டுமே வழிபடுகிறோம் என்பதில் உங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம்.

ராமபிரான் மாமிசம் சாப்பிட்டதாக ஸ்ரீமத் ராமாயணத்தில் வருகிறது. அதே போல அகஸ்திய முனிவர் சிராத்தத்தில் மாமிசம் பயன்படுத்தியதாக வாதாபி, வில்வலன் கதையில் வருகிறது. பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் மீன் சாப்பிட்டதாக அவர் வரலாற்றில் காண்கிறோம். இது போன்ற தகவல்கள் ஆன்மிக நாட்டத்துக்கு முரண்பாடாகத் தெரிகிறதே?

– தேதியூர் பாலு, சென்னை-11.

யார் யார் எங்கெங்கே மாமிசம் சாப்பிட்டார்கள் என்கிற உங்கள் ஆராய்ச்சி உசத்தியாகத்தான் இருக்கிறது. யார் யாரிடம் என்னென்ன குறை இருக்கிறது? அதைக் களைவது எப்படி என்கிற உங்கள் கவலை எனக்குப் புரிகிறது. ஆனால், அப்படி அல்ல விஷயம். ஆன்மிகத்துக்கும் அசைவத்துக்கும் சம்பந்தமே இல்லை. தன் ஆன்மாவை அறிந்து கொள்ள மனதுக்கு ஒரு பக்குவம் வேண்டும். அந்தப் பக்குவம், மாமிசம் சாப்பிடுவதால் கெட்டுப் போகாது. தினப்படி' மாமிசம் சாப்பிட்டுப் பழகியவர் இருப்பாரே, உயிர் வாழ வேறு வழி இல்லாததால், மாமிசம் சாப்பிடுகிறாரே... அவர்களுக்கெல்லாம் ஆன்மிக நாட்டமே வரக் கூடாதா? நியாயமாகப் பார்க்கப் போனால் மனிதப் படைப்பில் தாவரங்களை மட்டுமே சாப்பிடுவதற்கான உடல் அமைப்புதான் இருக்கிறது. அது வேறு விஷயம்.

ஆனால், ராமர் சாப்பிட்டார், பரமஹம்ஸர் சாப்பிட்டார். அதனால் நாமும் சாப்பிடலாம் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது.

ஆதிசங்கரரைப் பற்றி ஒன்று சொல்வார்கள். ஒரு முறை ஆதிசங்கரர் தன் வழியில் போய்க் கொண்டிருந்தார். இவரிடம் ஏதாவது குறை கண்டு இவரை சந்தியில் நிறுத்த வேண்டும் என்கிற எண்ணத்தோடு அவரை ஒருவன் பின்தொடர்ந்தான். ஆதிசங்கரருக்கு தாகமாக இருந்தது. அங்கே இருந்த ஒரு தாழ்த்தப்பட்டவர் குடிசைக்குள் புகுந்து தண்ணீர் எடுத்துக் குடித்தார். 'இதை வைத்தே சங்கராச்சார்யாரைக் கிழித்து விடலாம்' என்று சந்தோஷப் பட்டான் அவன். மறுபடியும் ஆதிசங்கரருக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தாகம். பக்கத்தில் இருந்த கொல்லன் பட்டறையில் இரும்பைக் காய்ச்சி வைத்திருந்தார்கள். அதை எடுத்துக் குடித்து விட்டார்.

அவர் இதையும் குடிப்பார்; அதையும் குடிப்பார் என்று அப்போதுதான் புரிந்தது அவனுக்கு. மகானுக்கு இது இரண்டும் ஒன்று!

அது மாதிரி, ராமர் இல்லை நாம். அவர் சாப்பிடாமலும் இருப்பார். உயிரைக் காப்பாற்றிக் கொள்ள மாமிசமும் சாப்பிடுவார். பதினாலு வருஷம் காட்டுக்குள் இரு என்று சொன்ன பிறகு அவருக்கு யார் அரிசி சப்ளை செய்வது? அவர் தரத்தையும் நம் தரத்தையும் ஒப்பிட்டுப் பேசலாமா?

வில்வலன், வாதாபி என்று இரண்டு அசுரர்கள். ரிஷிகளைக் கொன்று சாப்பிடுவது அவர்களின் வேலை. அவர்களை எப்படி அழிப்பது? அவர்கள் வழியிலேயே சென்றார் அகஸ்தியர். வழக்கமாக அந்த அசுரர்கள் ரிஷிகளை அழைப்பார்கள். வாதாபி ஆடாக உருமாறுவான். அவனை வெட்டிக் கறி சமைத்து ரிஷிக்குப் படைப்பான் வில்வலன். ரிஷி சாப்பிட்ட பிறகு, 'வாதாபி... வெளியே வா!' என்று வில்வலன் கூப்பிடுவான். ரிஷியின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளிவருவான் வாதாபி. இப்படி அவர்கள் கொன்ற ரிஷிகள் அநேகம் பேர். இதனால் வாதாபியின் மாமிசத்தைச் சாப்பிட்ட அகஸ்தியர், அவன் வெளியே வராதபடி ஜீரணம் செய்துவிட்டார். வில்வலனையும் கொன்றார். ரெண்டு துஷ்டர்களைத் தீர்த்துக் கட்டுவதற்காக அகஸ்தியர் மாமிசம் சாப்பிட்டார். வயிற்றை நிரப்புவதற்காகச் சாதாரணர்கள் மாமிசம் சாப்பிடுவதோடு அதை ஒப்பிடக் கூடாது!

'வில்வம் மகாலட்சுமிக்கு உகந்தது' என்று சௌபாக்ய சஞ்சீவினியும், 'வில்வ மரத்தைத் தனது உறைவிடமாக ஸ்ரீதேவி கொள்கிறாள். அதுவே அவள் வடிவம். வில்வம் லட்சுமி தேவியின் கரங்களில் இருந்தே தோன்றியது' என்று வாமன புராணமும் கூறுகின்றன. 'வில்வமே அவள் வடிவம்' என்று காளிகா புராணம் கூறுகிறது. இப்படிப்பட்ட வில்வ மரத்தை வீட்டுக்கு அருகில் வளர்க்கலாமா?

-ஆர்.வடமலைராஜ், மதுரை-14.

பத்ரம், புஷ்பம், பலம், தோயம் என்று பகவானுக்கு உகந்த விஷயங்களில் வித்தியாசமே இல்லை. சில காரணங்களுக்காக சில இடங்களில் சில விஷயங்களுக்கு விசேஷம் ஏறும். துளசி, விஷ்ணுவுக்குப் பிரீதி. ஏனென்றால், அதற்கு ஒரு கதை இருக்கிறது. இப்படிக் கதைகளை வைத்துக் கொண்டு இன்னாருக்கு இன்னது உகந்தது என்பது பிற்பாடு வழக்கத்துக்கு வந்தது. வில்வத்தில் மூணு கண்போல் தெரிவதால் அது சிவனுக்குப் பிடிக்கும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

என்று நம்புகிறோம். உத்தான ஏகாதசி முடிந்து கொஞ்ச நாள் பகவான் துளசி இலை மேலேயே உட்கார்ந்திருக்கிறார். பிருந்தாவன துவாதசி என்று சொல்லி துளசி பூஜை செய்வார்கள். எனவே, இந்தப் பொருட்கள் தவிர மற்றவை எல்லாம் விசேஷமில்லை என்பது சரியல்ல.

ஒருவன் புலிக்கு பயந்து வில்வ மரத்தின்மீது ஏறி விட்டான். புலி போகவில்லை. தூங்காமல் இருப்பதற்காக ஒரு கொம்பைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அதிலிருந்து ஒரு வில்வ இலை தவறிக் கீழே இருந்த லிங்கத்தின்மேல் விழுந்தது. அவனுக்கு மோட்சம் கிடைத்தது. வில்வத்தின் பெருமைக்கு இந்தக் கதை ஓர் உதாரணம்.

லட்சுமி இல்லாத இடமே கிடையாது. சுறுசுறுப்பே ஒரு லட்சுமிதான். எங்கே களை இருக்கிறதோ, அங்கே லட்சுமி இருக்கிறாள். எனவே, உங்கள் வீட்டில் வில்வத்தைத் தாராளமாக வளர்க்கலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கோயில் கோபுரம் ஐந்து நிலை, ஏழு நிலைகள் கொண்டது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அப்படி என்றால் என்ன? நிலைகளில் சுதைச் சிற்பங்கள் வைப்பது ஏன்? எத்தனையோ கோயில்கள், கோபுரம்கூட இல்லாமல் இருக்கின்றனவே... அப்படி இருக்கலாமா?

– எஸ். நடராஜன், சென்னை-34.

நிலை என்பது அடுக்கு. இன்னின்ன சிற்பங்களை அங்கே வைக்க வேண்டும் என்று சாஸ்திரம் சொல்லும். வெவ்வேறு வகையான கோயில் உண்டு. சுவரே இல்லாத கோயிலும் உண்டு. கூரை இல்லாத கோயில் உண்டு. நமக்காகத்தான் கோயில். கோயிலுக்காக நாம் இல்லை. நமக்கு எவ்வளவு வசதி இருக்கிறதோ அதற்குத் தகுந்தபடி கோயில் கட்டி வழிபடலாம் என்று நமக்காக இறங்கி வந்திருக்கிறது ஆகம சாஸ்திரம்.

கோயில் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. மரத்தடியில் ஒரு பிள்ளையாரை வைத்தால் அது கோயில்தானே. எல்லாமே ஆகம சாஸ்திரப்படிதான் அமைந்திருக்கின்றன.

தேவாரப் பாடல்களை தெய்வத்தின் முன்னால்தான் சொல்ல வேண்டுமா, சும்மா இருந்தாலும் சொல்லலாமா?

-தி. கௌசலா தேவி, சுவிட்சர்லாந்து.

தெய்வத்தின் முன்னால் சொல்வது, தெய்வம் இல்லாதபோது சொல்வது என்கிற வேறுபாடு ஏன் வந்தது தெரியுமா? தெய்வத்தை நம் மனதில் இருத்தி மனதிலேயே வழிபடும் பக்குவம் நமக்கு இன்னும் வராததால்தான்!

பரீட்சைக்குப் படிக்கிறான். புத்தகத்தில் இருந்ததெல்லாம் மனதுக்குள் வந்துவிட்டது. புத்தகத்தைத் தூக்கி எறிந்து விடுகிறான். அதற்காகப் புத்தகமே வேண்டாம் என்று சொல்ல முடியுமா?

உருவமில்லாத இறைவனை மனதிலேயே வழிபடும் தன்மை உங்களுக்கு வந்துவிட்டதா என்று சோதித்துப் பார்த்துக்கொள்ளுங்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அப்படி வந்துவிட்டது உறுதியானால், கடவுள் படம் இல்லாமல் சொல்லலாம். அதற்கு முந்தைய படியில் இருப்பவரானால், படத்தின் முன்னாலேயே சொல்லுங்கள்!

எனது ஓட்டலில் பல ஸ்வாமி படங்களும், ஏழு அங்குல விநாயகர் சிலையும் வைத்து தினமும் பூஜை செய்கிறேன். அதன் பின், திரை போட்டு வைக்காவிட்டால் செல்வம் தங்காது என்கிறார்களே? அப்படியா?!

– ஆர். ரங்கநாதய்யர், சிங்காரப்பேட்டை.

திரை போடுவது எதற்கு? சுவாமிக்கு நிவேதனம் செய்யும்போதும் சில அலங்காரங்கள் செய்யும்போதும் பார்க்கக் கூடாது, அதற்குத்தான் திரை. பிம்பத்தின் சாந்நித்யத்துக்கும் திரைக்கும் சம்பந்தம் இல்லை. நல்லது கெட்டது என்பதை திரையை வைத்து எடை போடக் கூடாது. பக்தர்களுக்காக வந்ததுதான் திரை. சில கோயில்களில் திரை இல்லை என்பதால், கதவைச் சாத்திவிடுவார்கள். இதெல்லாமே தரிசனம் செய்ய வருபவர்களுக்குச் சரியான தரிசனம் கொடுப்பதற்கான ஏற்பாடுதான்.

மற்றபடி, எல்லா இடத்திலும் வியாபித்திருக்கும் கடவுளை திரை போட்டு மறைத்துவிட முடியாது. அதனால், திரை போடுவதால் நன்மை தீமை என்று எதுவும் கிடையாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சரஸ்வதி, பிரம்மாவின் மகளா?

'பிரம்மாவின் பெண் சரஸ்வதி' என்று குரோர்பதி நிகழ்ச்சியில் பதில் கூறப்பட்டது. பிரம்மா ஒரு பெண்ணை சிருஷ்டித்து அவளுடன் தம்பதி சமேதராக யாகம் செய்தார் என சமீபத்தில் படித்தேன். அது சரஸ்வதியா?

– வி.ஷ்யாம், குடந்தை-1.

எல்லா உயிர்களுக்கும் தாத்தா - பிரம்மா! பிதாமஹன்: எல்லா உயிரினங்களையும் படைப்பவர் அவர். அதனால் தந்தை. அதிக வயதானவராக இருப்பதால் தாத்தா. எல்லா உயிர்களின் படைப்பும் பிரம்மா என்னும்போது சரஸ்வதியின் படைப்பும் பிரம்மாதானே. அவனால் படைக்கப்பட்டது என்பதால் அவருக்கு பிதா என்கிற ஸ்தானம் கிடைத்தது.

சமையல்காரனால் படைக்கப்பட்ட லட்டை அவனே சாப்பிடுகிறான். இப்படி நமது உலக வழக்கத்தைப் பொருத்திப் பார்க்கக் கூடாது. பிரம்மா, சரஸ்வதியைப் படைத்தார் என்றால், அது நம்மைப் போல் சுக்ர-சுரோணித சம்பந்தத்தோடு கூடிய படைப்பு அல்ல. அவர் சக்தியினால் உண்டு பண்ணுகிறார். இயற்கைதான் பிரம்மா.

அவர் யாகம் பண்ணுவதற்கு யாராவது ஒருவர் தேவைப்படுகிறார். அது சரஸ்வதியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. சரஸ்வதி என்கிற சத்தத்துக்கே வேதம் என்று அர்த்தம். சரஸ்வதி என்றால், வாக்கு என்று பொருள். வாக்கு எங்கே இருக்கும்,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நாக்கில்தானே இருக்கும். எல்லார் நாக்கிலும் சரஸ்வதி இருக்கும். சில உருவகங்களை நாம் நேரடியான அர்த்தத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

விநாயகருக்கு சூறைத்தேங்காய் உடைப்பது ஏன்? ஒரு தேங்காயை நைவேத்தியம் செய்து உடைப்பதற்கும் சூறைத் தேங்காய் உடைப்பதற்கும் என்ன வித்தியாசம்?

- மாலதி முரளி, ஸ்ரீரங்கம்.

நிவேதனம் என்ற சொல்லுக்கே 'ஆண்டவன் முன்னால் அதை பக்தியோடு அவருக்காகக் கொடுப்பது' என்று அர்த்தம். கடவுளுக்குப் பார்வையிலேயே திருப்தி வரும். *த்ருஷ்ட்வா த்ருப்தி:* சாப்பிட்டால்தான் திருப்தி என்பதில்லை. அதனால் அவர் முன்பாக வைத்தால் போதும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிதறுகாய் என்று நாம் எறிவது நிவேதனம் என்கிற நோக்கில் இல்லை. அதாவது, 'உன் முன்னிலையில் பல பேருக்காக இந்தப் பொருளை அளிக்கிறேன்' என்று அர்த்தம். 'நீ பார்த்துக் கொண்டிருக்கிறாய். உன் பார்வை பட்ட பொருளை பலருக்கு அளிக்கிறேன்' என்பதுதான் தாத்பர்யம்.

'சிதறு தேங்காய் உடைவதைப் போல என் அகங்காரம் எல்லாம் சிதறுகிறது' என்பதெல்லாம் நாமாக உருவாக்கிக் கொண்ட விளக்கங்கள்தான்.

தேங்காயை உடைத்தால் ரெண்டே ரெண்டு பேருக்குத்தான் கிடைக்கும். அதே நேரம் சிதறுகாயை எல்லோரும் எடுத்துக் கொள்ளலாம். உடைத்த தேங்காயைக்கூட நாமாக அடுத்தவருக்குக் கொடுத்தால்தான் உண்டு. சிதறுகாய் உடைக்கும்போது, 'இது எனக்கு' என்று எடுத்துக் கொள்பவர் உரிமையோடு எடுப்பார். கேட்காமலேயே எல்லாருக்கும் பகவான் பிரசாதத்தைக் கொடுப்பதற்கான தனி வழி சிதறுகாய். இது உசத்தியானது.

என் பெயர் கோடீஸ்வரன். நான் அதற்கு நேர்மாறாக இருக்கிறேன். அதனால் என் பெயரை மாற்றிக் கொள்ளலாமா? வேறு என்ன பெயர் வைக்கலாம்?

_ கி. கோடீஸ்வரன், மும்பை-78.

'பேரு பொன்னம்மா, கழுத்துலே கருகமணி' – இப்படி ஒன்று சொல்வதுண்டு. அவரவர் தகுதிக்காக அல்ல பெயர். அப்பா- அம்மா வைத்த பெயரை அப்படியே வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, 'என் தகுதி மாறி விட்டது. அதனால் பேரை மாற்றிக் கொள்கிறேன்!' என்றெல்லாம் சொல்லக் கூடாது. அரசாங்கத்தில்கூட கெஜட்டில் போட்டால்தான் பேர் மாறும். நமது கலாசாரத்தில் பெயர் மாற்றம் இல்லை. சாகிற வரைக்கும் ஏன், செத்த பிறகும் அதே பேர்தான். முன்னோர்களுக்கு இருந்த பெயரைச் சொல்லித்தான் வழிபடுகிறோம். அவ்வளவு கௌரவம் இந்தப் பேருக்கு உண்டு. நடைமுறைக் காரணங்களுக்காகப் பேரை மாற்றிக் கொள்வேன் என்ற எண்ணம் வந்ததே தப்பு. நீங்கள் இப்போது கோடீஸ்வரனாக இல்லாமல் இருக்கலாம். நாளைக்கு கோடீஸ்வரன் ஆகமாட்டீர்கள் என்று என்ன நிச்சயம்! அப்படி ஆகிவிட்டால் மறுபடி பெயரை மாற்றிக் கொள்வீர்களா?

'அதர்வண வேதத்தில் கூறப்பட்டுள்ள 108 வில்வ ஸ்லோகங்களை சிவ சந்நிதியில் பாராயணம் செய்தால் பலன் உண்டு' என்று சொல்கிறார்கள். அந்த ஸ்லோகங்களை எனது வீட்டில் இருந்தபடி நாள்தோறும் பாராயணம் செய்தால் நலம் பயக்குமா?

_ டி.சுப்ரமணியன், மயிலாடுதுறை-3.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எந்த வேதம், எந்த சாஸ்திரம் என்பது ஒரு பக்கம். வேதத்தில் சொல்லி இருந்தால் மட்டும்தான் உசத்தி என்பதில்லை. வில்வம் என்பதை நாம் பகவானுக்கு அர்ச்சனமாகக் கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கும் மற்ற பொருட்களுக்கு இருக்கும் தகுதி இதற்கும் உண்டு. விஷ்ணு ஆராதனைக்கு துளசியை வைத்தால் இதே பெருமை துளசிக்கு உண்டு. பகவானுக்கு அர்ப்பணம் பண்ணுகிற பொருட்கள் எல்லாமே பெருமை உள்ளவைதான். எனவே, உங்களுக்கு அதர்வண வேதத்தின் ஸ்லோகங்கள் கிடைத்திருக்கின்றன, வில்வத்தின் மேல் பிரியம் இருக்கிறது என்றால் தாராளமாகச் சொல்லலாம்.

என்ன ஒன்று... நாளைக்கு இன்னொருத்தர், இன்னொரு புராணத்தில், இன்னொரு வேதத்தில் துளசியைப் பற்றி இருநூறு ஸ்லோகம் சொல்லியிருக்கு. அதை நான் சொன்னால் பலன் கிடைக்குமா என்று கேட்கக் கூடாது. இன்னொரு புராணத்தில் ஒருவர் 1008 தாமரைப் பூ கொடுத்தார். கடைசியில் தன்னையே கொடுத்தார். கடவுள் அனுக்கிரகம் கிடைத்தது. நான் அதைப் பண்ணட்டுமா என்று கட்சி மாறக் கூடாது. இதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். 'இது ஒன்றுதான் எனக்கு. இதுதான் எக்ஸ்ட்ரீம்' என்கிற உறுதியான நம்பிக்கை உங்களுக்கு வர வேண்டும். முழுப் பிடிப்பு இருக்க வேண்டும். மனதை அலைபாய விடாமல் உங்கள் வாழ்க்கையில் இதை மட்டுமே பிடித்துக் கொண்டு பின்பற்றினால் உங்களுக்கு எல்லாமே கிடைக்கும்.

கோயிலின் அருகே குளம் வெட்டி வைத்திருப்பதன் நோக்கம் என்ன?

– ஆ. கீதா, அகரம், வேலூர் மாவட்டம்.

கோயிலுக்கென்றே ஒரு தீர்த்தம் வேண்டும். தீர்த்தம் என்பது சுத்தமான நீர். பழைய கோயில்கள் எல்லாவற்றுக்குமே ஒரு மரம், ஒரு தீர்த்தம் இருக்கும். மயிலாப்பூரில் கபாலீஸ்வரருக்கு ஸ்தல விருட்சம் என்றால் புன்னை மரம். அந்தத் தீர்த்தத்துக்கு ஒரு பெயர்.

எங்கேயும் நாம் ஆராதனம் செய்யும்போது குளத்தில் நீராடி பகவானை வணங்க வேண்டும். கெட்ட எண்ணங்களை அகற்றி விட்டாலே மனம் சுத்தம் ஆகிவிடும். ஆனால், உடல் அப்படி அல்லவே... ஒரு முறை தூங்கி எழுந்தாலே உடல் அசுத்தமாகி விடுமே... ஓர் இரவு உடல் படுத்து விட்டால், மறு நாள் காலையில் அது அசுத்தம்தான். குளித்தால்தான் சுத்தமாகும். இல்லாவிட்டால் வழிபடும் தகுதி வராது. அப்படிக் குளிப்பதற்குத்தான் குளம். நதிக் கரையில் மட்டுமே கோயில் கட்ட முடியாது. குளித்து தரிசனம் செய்ய பக்தர்களுக்கு உதவுவதற்கு குளம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அந்த க்ஷேத்திரத்துக்கே ஸ்தல விருட்சம் போல ஒரு புஷ்கரணி வேண்டும். கோயிலில் பல வரிசையில் உற்சவங்கள் நடக்கும். தைப்பூசம், திருவாதிரை, பங்குனி உத்திரம் இப்படி ஒவ்வொரு குறிப்பிட்ட விசேஷத்துக்காக ஓர் உற்சவம் என்று பல உற்சவங்கள் வரும். பிரம்மோற்சவம் என்று தனியாக ஒன்று உண்டு. 'ஆறாட்டு' என்று ஒன்று இருக்கிறது. ஆற்றில் ஆடுவது. அப்போது ஸ்வாமியே நீரில் மூழ்குவார். அதற்கு அவருக்கென்றே, அவர் அருகிலேயே ஒரு நீர்நிலை வேண்டும். இன்றும் கேரளாவில், ஆறாட்டு இல்லாமல் எந்த உற்சவமும் நிறைவடைவது இல்லை. உற்சவம் நடத்தும் தகுதியுள்ள கோயில்களுக்குக் குளம் கட்டாயம் தேவை!

இதைத் தவிர, தெப்போற்சவம் என்றே ஒன்று உண்டு. தெப்பத்தை நீரில் மிதக்க விடுவார்கள். குளத்தின் நடுவில் ஒரு மண்டபம் இருக்கும். ஆக, குளம் என்பது கோயிலின் ஓர் அங்கம். ஒரு பகுதி. 'அது இருந்தாக வேண்டுமே, ஏன் இங்கே இல்லை?' என்றுதான் கேள்வி கேட்க வேண்டும். ஏன் இருக்கிறது என்கிற கேள்விக்கே இடமில்லை.

ஓர் ஊரில் உள்ள மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் குளம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



இல்லாத சின்னக் கோயில்கள்கூட இருக்கலாம். ஸ்தல விருட்சமும் இருக்காது. இது இரண்டும் இல்லை என்றால் கோயில் இல்லை என்று நினைக்கக் கூடாது. அடித்தளத்தில் இருப்பவர்கூட வந்து வழிபட வேண்டுமானால், சின்னதாக நாலு சுவர் எழுப்பி ஒரு கூரையைப் போட்டால்கூட அதற்குக் கோயிலாகும் தகுதி உண்டு. வளர்ந்து செளகரியங்கள் வரும்போது ஆகம விதிப்படி அவற்றை உண்டாக்கிக் கொள்ளலாம்.

முன்பெல்லாம் கோயில்களில் சாப்பாடு போடுவார்கள். அன்னதானம். அதற்கென்றே பெரிய கட்டடம் உண்டு. அன்னதானத்துக்கு முன்பு குளிப்பதற்கும் சாப்பிட்டுவிட்டு சுத்தம் செய்துகொள்ளவும் குளம் பயன்படும்.

கேரளாவில் பிரசித்தமான ஒரு வழக்கம் உண்டு. வந்தவர்கள் குளத்தில் குளித்துவிட்டு வேறு எங்கும் போகாமல் நேராக ஸ்வாமி சந்நிதிக்குச் சென்று வணங்குவதற்கென்றே ஒரு வழி இருக்கும். அங்கே ஊட்டுபுரை என்கிற அன்னதானம் புகழ்பெற்றது. அதனால், குளம் இல்லாத கோயிலே கிடையாது. சில இடங்களில் குளத்தில் மீன்கள் வளரும். ஆமை இருக்கும். அவற்றுக்கும் சுவாமிக்கும் ஒரு சம்பந்தத்தையும் கதையாகச் சொல்லி வைத்திருப்பர். அவற்றுக்கு பக்தர்கள் உணவிடுவார்கள். இப்படி ஜீவகாருண்யத்தை வளர்க்கவும் குளம் பயன்படும். எனவே, குளத்தின் முக்கியத்துவத்தைப் பல கோணங்களில் சொல்லலாம்.

தெருவில் செல்லும்போது ஒரு காகம் தலையில் தட்டிவிட்டுச் சென்றது. உடனே வீட்டுக்கு வந்து தலைக்குக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

குளித்தேன். இதனால் யாராவது உறவினர் இறந்த செய்தி வரும் என்கிறார்களே, இது உண்மையா?

– பி. சரோஜா, சென்னை.

பொதுவாகவே காக்கா உடம்பில் பட்டால் குளிப்பது என்று வைத்திருக்கிறோம். இதற்கு அடிப்படை, சுகாதாரம். காக்கா எங்கெங்கோ சென்று உட்கார்கிறது. எதையோ தின்கிறது. நமக்கு அசுத்தம் வேண்டாம். அதனால் குளிக்கிறோம்.

'காக்கா நம் மேல் பட்டு, குளிக்கவில்லை' என்கிற சஞ்சலத்தால், செய்யும் காரியங்களில் இடையூறு ஏற்பட்டு அதனால் துக்கம் வரலாமே தவிர, காக்காயால் உறவினர் சாவது என்பது கிடையாது. இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

ஒரு மண்டலம் என்பது எத்தனை நாட்கள்?

- டி.முருகன், கொசவபட்டி, திண்டுக்கல்.

உலக விவகாரங்கள் இல்லாத ஆதி மண்டலம் என்பது 41 நாட்கள்தான்! ஆனால், 44 நாளைக்கு ஒரு மண்டலம் என்றும் சிலர் சொல்கிறார்கள். 41 நாள் என்பதுதான் நியாயமாக வந்தது. 41 நாட்களில் முடிக்க வேண்டிய வேலையை ஒருவர் 44 நாட்கள் எடுத்துக் கொண்டு செய்ய வேண்டி வந்ததால் அதுவும் ஒரு மண்டலமாகிவிட்டது. இதையே 48 நாளுக்கு இழுத்துக் கொண்டு போன ஓர் ஆ[illegible]ி, அதை ஒரு மண்டலமாக ஆக்கிவிட்டார்.

கார்த்திகை மாதம் முதல் தேதியானால், வேதம் சொல்ல ஆரம்பிப்பார்கள். கொஞ்சம் கொஞ்சமாக வேதத்தைச் சொல்லி முடிக்க 44 நாட்கள் ஆகும். இதுதான் மண்டலம். சபரிமலைக்குப் போகும்போது விரதம் ஒரு மண்டலம் என்றார்கள். அந்த மண்டலம் 41 நாட்கள். ரெண்டு மாதங்களுக்கு முன்பே மாலை போட்டவர்கள், ரெண்டு மாதத்தையும் மண்டல காலம் என்று சொல்லி விட்டார்கள். இதற்கெல்லாம் அடிப்படை என்ன என்றால், ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்து முடிக்க எத்தனை நாளாகிறதோ, அதை மண்டலம் என்று குறிப்பிட்டதுதான். ஆரம்பத்திலே சொன்ன மாதிரி ஆதிமண்டலம் என்பது 41 நாட்களே!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கல்வியில் சிறக்க யாரை வணங்க வேண்டும்?

விஷ்ணு சகஸ்ரநாமத்தில் வரும் 'சாந்தாகாரம் புஜக சயனம் பத்மநாபம் சுரேசம் விஸ்வாகாரம் ககன சத்ருசம் மேக வர்ணம் சுபாங்கம் லக்ஷ்மீ காந்தம் கமல நயனம் யோகிஹ்ருத்யான கம்யம் வந்தே விஷ்ணும் பவபயஹரம் சர்வ லோகைக நாதம்' என்ற வரிகளின் பொருள் என்ன?

– டி.சுப்ரமணியன், மயிலாடுதுறை-3.

பகவான் விஷ்ணுவினது சாந்தமான உருவம். அவர் புஜகம் அதாவது பாம்பின் மேல் சயனம் செய்வதால், புஜக சயனம். தொப்புளில் இருந்து தாமரை வந்திருக்கிறது, பத்மநாபம். தேவர்களுக்கெல்லாம் தலைவர் என்பதால் சுரேசம். அவர் வடிவமே இந்த பூமிதான் என்பதால் விஸ்வாகாரம். அவர் ஆகாயமாக இருப்பதால், வடிவம் இல்லாத ககன சத்ருசம். அவர் உருவம், மேகத்தின் வர்ணமான சாம்பல் நிறத்தில் இருக்கும். சுபத்தைக் கொடுக்கும் உடல் உறுப்புகளைக் கொண்டதால், சுபாங்கம். மகாலட்சுமிக்கு, காந்தன். தாமரைக் கண்கள் கொண்டவர் என்பதால் கமல நயனம். அவரை அடைவது எப்படி? யோகிகளின் இதயம் இருக்கிறதே, அதுபோல யோகாப்பியாசம் செய்ய வேண்டும். அவர்களின் தியானத்தில்தான் அவர் இருப்பார் என்பதால் யோகிஹ்ருத்யான கம்யம். இந்த உலகத்தில் நமக்கு இருக்கும் எத்தனையோ விதமான பயங்களை அழிப்பதால் பவபய ஹரம்... அது யார் அவ்வளவு பெரிய ஆசாமி? அவர்தான் சர்வ லோகங்களுக்கும் நாதனான பகவான். அவரை வணங்கு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தட்சிணாமூர்த்தியை 'குரு' என்கிறோம். நவக்கிரகங்களிலும் குரு பகவான் கல்விக்காகப் போற்றப்படுகிறார். இந்த இருவரில் சிறந்த கல்வி பெறுவதற்கு யாரை பூஜிக்க வேண்டும்?

_ மீனாட்சி விசுவநாதன், உதகை.

என்ன, இரண்டு குருவை மட்டும் சொல்லி நிறுத்தி விட்டீர்கள்? தட்சிணாமூர்த்தி, குரு கிரகம் தவிர தேவர்களின் குருவான பிரஹஸ்பதி என்னும் ஒரு மூன்றாவது குருவையும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

கடவுள் எல்லாவற்றுக்கும் மேலே இருப்பவர். அவருக்கு மேல் எதுவுமே இல்லை. அப்படிப்பட்ட தட்சிணாமூர்த்தியைத்தான் குரு என்கிறோம். அந்த குரு என்பவர், எந்தக் கோணத்தில் இருக்கிறார்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



என்றால், நம்மிடம் என்னவெல்லாம் சந்தேகம் இருக்கிறதோ அவற்றை எல்லாம் தன் உபதேசத்தால் போக்கி விடுவார். அதில் ஒரு விசேஷம் என்ன என்றால், தட்சிணாமூர்த்தி சிறு வயதுக்காரர். அவரிடம் கல்வி கற்க வரும் ஜனகாதி முனிவர்கள் எல்லாம் வயதில் மூத்தவர்கள். அவர் வாயே திறக்க மாட்டார். மாணவர்களுக்குச் சந்தேகம் விலகிவிடும். *வ்ருத்தா சிஷ்யா குருர் யுவா குரோஸ்து மௌனம் வ்யாக்யானம்...* அப்படியொரு கௌரவம் தட்சிணாமூர்த்தி என்னும் குருவுக்கு உண்டு. பரம்பொருளான சாட்சாத் பரமேஸ்வரன்தான் ஆல விருட்சத்தின் கீழே தெற்குப்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பார்த்து தட்சிணாமூர்த்தியாக உட்கார்ந்திருக்கிறார். மௌனத்தில் உறைந்திருக்கிறார். அவர்தான் ஒரு சந்தர்ப்பத்தில் ஜனங்களுக்கு உபதேசிப்பதற்காக சங்கராச்சார்யார் வடிவில் வந்தார் என்று ஒரு செய்தி உண்டு. நமக்கு இருக்கும் சந்தேகங்களை, நாம் சொல்லாமலேயே போக்கவல்ல, எல்லாவற்றுக்கும் முதலான குரு - தட்சிணாமூர்த்தி வடிவில் இருக்கக் கூடிய சாட்சாத் பகவான். கையில் சின்முத்திரை வைத்திருப்பார். அந்த முத்திரையால் ஜீவப்பிரமையைப் போக்குவார். இந்த குருதான் எல்லாக் கலைக்கும் எல்லாச் செயலுக்கும் மூலம்.

இந்த குருவைச் சொல்லும்போது நவக்கிரகத்தில் உள்ள குருவைச் சொல்லாதீர்கள். நவக்கிரகங்களில் குரு என்று ஒருத்தர் இருக்கிறார். விண்வெளியில், நமது காற்று மண்டலத்தைத் தாண்டி எத்தனையோ காத தூரத்தில் பிரவஹம் என்கிற காற்றினால் ஒன்பது கிரகங்கள் சுழன்றுகொண்டே இருக்கின்றன. அவற்றில் ஒன்றுக்கு குரு என்று பெயர் வைத்திருக்கிறோம். இந்தப் பெயர் இருப்பதாலேயே இவர், அவராகிவிட முடியுமா? ரொம்ப காலத்துக்கு முன்னால் காளிதாஸன் என்று ஒருவன் இருந்தான். மகாகவி. இப்போது ஒரு புதுப் படத்தில் காளிதாசன் என்று ஒருவர் எழுதியிருக்கிறார். இருவரும் ஒரே ஆளா? மதுரைக்குப் போனால் ஏகப்பட்ட பாண்டியர்கள். எல்லாரும் மன்னர்களா?

தேவர்களின் ஆசிரியனான பிரஹஸ்பதி என்கிற குரு உங்கள் கணக்கில் மூன்றாவது குரு... அவர் தனி! அவரை தட்சிணாமூர்த்தியோடு சொல்லக் கூடாது. பிரதான குருவான தட்சிணாமூர்த்தியிடம் இருந்து எல்லாவித அஞ்ஞான நிவர்த்தியும் கிடைக்கும். மற்ற குருக்களிடம் அந்தத் தகுதி இல்லை. தட்சிணாமூர்த்திதான் ஒரிஜினல் குரு. தேவகுருவும் கிரக குருவும் டூப்ளிகேட். இவர்கள் செய்வதை எல்லாம் செய்யும் தகுதி தட்சிணாமூர்த்திக்கும் உண்டு. அதற்கு மேலும் தகுதி உண்டு. நினைத்தாலே அகற்றும் தகுதி தட்சிணாமூர்த்திக்கு மட்டுமே உண்டு. அவர் காலில் போய் விழுங்கள். மற்ற இரண்டு குருவும் தட்சிணாமூர்த்திக்குள் அடக்கம்.

ஆலயங்களில் கர்ப்பக்கிரகத்துக்குள் அனைவரையும் அனுமதிக்க மறுக்கிறார்களே... சாமி முன் அனைவரும் சமம்தானே?

– நாராயணன், மயிலாடுதுறை-2.

அனைவருக்கும் அந்த ஸ்வாமி பயன்படும்படி காப்பாற்றும் பொறுப்பு சிலருக்கு உண்டு. எல்லாரையும் உள்ளே அனுமதிக்க வேண்டும் என்று சொல்ல முடியாது. நமது வீட்டுச் சமையல்கட்டுக்குள்ளே எல்லாரையும் நாம் அனுமதிப்பதில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சிலரைத்தான் அனுமதிப்போம். விருந்தினருக்காகத் தனி கழிப்பறை வைத்திருக்கிறீர்கள். பப்ளிக், பிரைவேட் என்று நீங்களே வைத்திருக்கிறீர்கள். இங்கே அப்படியல்ல. பகவான் எல்லாருக்கும் பயனளிக்கும்படியாக, யார் யார் பகவானின் சாந்நித்தியம் கெட்டுப்போய் விடாமல் பாதுகாக்கும் தகுதியை ஏற்கெனவே அடைந்திருக்கிறார்களோ, அவர்கள் மட்டும் அங்கே போகும்படி வைத்திருக்கிறார்கள். அதற்கென்று தனி படிப்பு, தனி தீட்சை, சட்ட திட்டங்கள் எல்லாம் உண்டு. எனவே, கர்ப்பகிரகத்துக்குள் எல்லாரும் வரவேண்டும் என்பதில்லை.

மந்திரி வந்தால் போலீஸ் மட்டும்தான் அங்கே இருக்கிறார். எல்லாரையும் அனுமதிப்பதில்லை. மந்திரி எல்லாருக்கும் பொதுதானே... நாம்தானே ஓட்டுப் போட்டோம்? ஜனநாயகம் இல்லையா? எல்லாம் சரிதான். ஆனால், மந்திரியின் பக்கத்தில் உங்களை அனுமதிக்க மாட்டார்கள்.

கபால மோட்சம் என்றால் என்ன?

- கே.ஆர். ராமசுப்ரமணி, திருவாரூர்.

நம் உடம்பில் ஒன்பது ஓட்டைகள் இருக்கின்றன. சாதாரண மனிதனுக்கு மரணம் வரும்போது, இந்த ஒன்பது ஓட்டைகளின் வழியாக உயிர் போகும். நாபிக்குக் கீழே இரு ஓட்டைகள்; மேலே ஏழு ஓட்டைகள்.

கண்ணைத் திறந்து கொண்டு இறந்திருந்தால் கண் வழியாக உயிர் போயிருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம். சிலர், வாயைத் திறந்து கொண்டு இறந்திருப்பார்கள்; அவருக்கு வாய் வழியாக உயிர் போயிருக்கிறது. சிலர் சாகும் தறுவாயில் சிறுநீர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கழித்திருப்பார்கள். அவருக்கு அந்த வழியாக உயிர் போயிருக்கிறது... இந்த வழியாகவெல்லாம் உயிர் போனால் மோட்சம் இல்லை. மறுபிறவி உண்டு என்று ஓர் அடையாளம்.

எப்படி இருந்தால் மோட்சம் கிடைத்ததாகத் தெரிந்து கொள்ளலாம்? கண்ணுக்குப் புலப்படாமல் நம் தலையில் ஓர் ஓட்டை உண்டு. சின்னக் குழந்தைகளின் தலையைத் தொட்டுப் பார்த்தால், ஓர் இடத்தில் மண்டை ஓட்டு எலும்பு இல்லாமல் மென்மையாகத் தெரியும். அந்த ஓட்டையைத் தலையின் மேல்தோல் மூடியிருக்கும். உள்ளே மூளை துடிப்பது புலப்படும். யோகாப்பியாசம் செய்து புலன்களை அடக்கக் கற்றவன், மற்ற ஓட்டைகளின் வழியாகப் பிராணன் போகாமல் அடக்கி வைக்கும்போது, உயிரானது அதிக ஆவேசத்தோடு தலையில் இருக்கும் துவாரத்தைப் பிளந்து கொண்டு போகும். அப்படி கபாலத்தைப் பிளந்து கொண்டு போகும்போது அதற்கு கபால மோட்சம் என்று பெயர். பெரிய பெரிய துறவிகளுக்கு எல்லாம் இப்படித்தான் உயிர் போகும் என்பார்கள்.



இடுப்பு எலும்பு முறிந்துவிட்டதால், என்னால் தரையில் உட்கார்ந்து எதுவும் செய்ய முடியாது. என் தந்தையின் சிராத்தத்தை நான் எப்படிச் செய்வது? தானம் கொடுத்து விடலாமா? சாதாரணமாக இருவரிடம் சாப்பிடச் சொல்லி தட்சணை கொடுத்து விடலாமா?

– ஒரு வாசகர், சென்னை-103.

ஒன்றை இப்படி மாற்றிக் கொள்ளலாம் என்பது சாஸ்திரத்தில் இல்லை. சாஸ்திரமே அதற்கு மாற்று ஏற்பாடுகளையும் கூறியிருக்கிறது. உங்களால் உட்கார்ந்து ஹோமம் பண்ண முடியவில்லை என்றால், ஹோமம் இல்லாமலேயே செய்யலாம். அதே சிராத்தம் அப்படியே இருக்க வேண்டும். ஹோமம் மட்டும் இல்லை. ஒருவரைக் கூப்பிட்டு மந்திரம் சொல்லிச் செய்ய வேண்டும். இல்லையா, ஒரு ஆளை வைத்து நீங்கள் மந்திரம் சொல்லச் சொல்ல அவர் செய்யட்டும். வளைய வர முடியவில்லை என்றால் கவலை வேண்டாம். உங்கள் மகனை உதவிக்கு வைத்துக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொள்ளுங்கள். வாயாலே மந்திரம் சொல்ல முடியவில்லையா? எல்லாவற்றையும் வைத்து நமஸ்காரம் பண்ணுங்கள். ஒன்றுமே இல்லையா? இரண்டு பேரை உட்கார வைத்துச் சாதம் போடுங்கள். அதுவும் மந்திரம் சொல்லித்தான்.

அம்மன் கோயில்களில் சூலத்திலும் முருகன் கோயிலில் வேல் முனையிலும் எலுமிச்சம்பழம் குத்தி வைப்பது ஏன்?

– சி. ரகுபதி, போளூர்.

அம்மன் உக்கிரமான கடவுள். எலுமிச்சம் பழம் குளிர்ச்சியானது. உஷ்ணத்தைத் தணிப்பது. உக்கிரத்தைக் குறைக்க சூலத்தில் எலுமிச்சம் பழம் குத்தி வைப்பது சம்பிரதாயம். அது சாஸ்திரத்தில் வந்ததல்ல. குத்தாவிட்டாலும் தப்பில்லை. எலுமிச்சம்பழ மாலை போடுவதும் சம்பிரதாயம்தான்.

புது வண்டி கிளம்பும்போது, சக்கரத்தின் அடியில் எலுமிச்சம்பழம் வைத்து நசுக்குவார்கள். விரலில் நகச்சுத்தி வந்தால் எலுமிச்சம்பழம்





Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செருகுகிறோம். முன்பெல்லாம் பெரியவர்களைப் பார்க்கப் போகும்போது எலுமிச்சம்பழம் கொண்டு போவார்கள். காய்ந்தாலும் அதனுள் சாறு இருக்கும் என்பது எலுமிச்சம்பழத்தின் குணம். இப்படி பல இடங்களில் இருக்கும் எலுமிச்சம்பழம், சூலத்துக்கும் வந்துவிட்டது.

என் உறவினருக்கு வைகுண்ட ஏகாதசியன்று சிராத்த திதி வருகிறது. 'வைகுண்ட ஏகாதசி அன்று சிராத்த திதி வருமானால், மறுநாள் துவாதசி அன்றுதான் திதி செய்ய வேண்டும்' என்று ஒரு பத்திரிகையில் படித்தேன். அது சரியா?

– என். கணபதி, சென்னை-116.

ஒருவர் தன் உடலை இழக்கும்போது, அவர் உயிர் உடலை விட்டுப் பிரியும். அந்த நேரத்தில் சூரியனின் கிரணங்கள், சந்திரனில் எந்த அளவு விழுந்திருக்கிறது என்பதை வைத்து அவர் இறந்த நேரத்தைக் குறிப்பார்கள். இதுதான் திதி. அழியாத, மாறாத கடிகாரம் இது. சூரியனின் கிரணம், சந்திரன் மேல் ஒரு பங்கு விழுந்திருந்தால் அது பிரதமை திதி. இரண்டு பங்கு விழுந்தால் துவிதியை, மூன்று பங்கு விழுந்தால் திருதியை. இதுதான் திதியின் அர்த்தம். அவர் எந்தத் திதியில் இறந்தாரோ அதே திதியில் செய்தால்தானே சிராத்தம் ஆகும்? இன்னொரு திதியில் பண்ணினால் அது சிராத்தம் ஆகாதே...

ஒரு சில நாட்களில் இரண்டு திதிகள் வரும். சில நாட்களில் சிராத்தமே இருக்காது. தேதியைச் சொன்னால் சரியாக வராது. நட்சத்திரத்தைச் சொன்னால் சரிப்படாது. ஏகாதசியில் வந்தால், அதைத்தான் திதியாக வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, மாற்றக் கூடாது.

ஆனால், ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். தர்மசாஸ்திரத்துக்கும் மேலான கௌரவத்தை கடவுளுக்குக் கொடுப்பார்கள். அவர்கள் ஏகாதசி அன்று பகவானை வழிபடுவதால் முன்னோருக்கு சாப்பாடு போட முடியாது. பகவான் ஆராதனை முடிந்த அடுத்த நாள் முன்னோரை உபசரிக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட மதம்தான் அப்படிச் சொல்கிறது. எல்லாரும் சொல்வதில்லை. அதை நாம் அப்படியே ஏற்றுப் பின்பற்ற வேண்டும் என்பதுமில்லை.

தர்மசாஸ்திரத்துக்குத்தான் முன்னுரிமை என்றால், ஏகாதசி அன்று பட்டினியும் இருக்கலாம். சிராத்தமும் பண்ணலாம். வந்தவருக்குச் சாதமும் போடலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ராசிக்கல் மோதிரத்தால் பலன் கிடைக்குமா?

எங்கள் கிராமத்து விநாயகர் கோயில் கர்ப்பக்கிரகத்தில் குடியிருந்து அசுத்தப்படுத்தும் மாடப் புறாக்களை அங்கு தங்க அனுமதிக்கலாமா?

– எம்.குமரசாமி, பருத்திக்கோட்டை.

கட்டடம் கட்டும்போதே, கட்டடத்தின் மேல் புறாக்கள் தங்குவதற்காக ஓர் அமைப்பைக் கட்டும் வழக்கம் உண்டு. பெரும்பாலான வீடுகளிலும் இது இருக்கும். கோயில்களிலும் இருக்கும்; கோயில் கோபுரங்களிலும் இருக்கும். இவை புறாக்கள் இருக்க வேண்டும் என்பதற்காகவே கட்டப்படுபவை. புறாக்களுக்கு இடம் கொடுப்பதுதான் முக்கியம். அவை அசுத்தம் செய்தால் சுத்தம் செய்ய அங்கு ஆள் இருக்க வேண்டும். புறாக்களை அங்கிருந்து விரட்டக் கூடாது. யாரையுமே வர விடாமல் செய்து விட்டால் சுத்தம் செய்ய வேண்டி இருக்காதே! அதனால், புறா அசுத்தம் செய்யட்டும். இதற்கென ஓர் ஆசாமியைப் போட்டு அதைச் சுத்தம் செய்யுங்கள்.

இறை உருவங்களுக்கு பால், தயிர், இளநீர் முதலிய அபிஷேகங்கள் நடப்பதை டி.வி-யில் காட்டுகிறார்கள். அதைப் பார்த்தால் பலன் கிடைக்குமா? ஸ்வாமி புறப்பாடு, ஆலய தரிசனம் போன்றவற்றையும் இப்படிப் பார்த்தால் புண்ணியம் கிடைக்குமா?

– வி.சுரேஷ், குடந்தை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சினிமா, டி.வி. இரண்டும் நிஜமல்ல, நிழல். எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் அசலுக்கு இருக்கும் பெருமை நிழலுக்குக் கிடையாது. எப்போதோ இறந்துவிட்ட ஒரு நடிகர் நடித்த திரைப்படத்தை இப்போதும் பார்க்கலாம். ஆனால், அந்த ஆசாமி அங்கே இல்லை. அவருடைய நிழல்தான் அது. அதைப் போலத்தான் நீங்கள் குறிப்பிட்ட விஷயமும். டி.வி.யில் அபிஷேகத்தைப் பார்த்தால் புண்ணியம் கிடைக்காது. நீங்கள் தேடிப் போக வேண்டிய பகவானை, யாரோ போட்டோ எடுத்து உங்கள் வீட்டு வரவேற்பறைக்கு அனுப்ப முடியாது.

பழைய காலத்தில் ஒரு பழமொழி உண்டு. ஏட்டுச் சுரைக்காய் கூட்டுக்கு உதவாது. அதுவும் அச்சுக்கலை பெருமளவு முன்னேறி இருக்கும் இந்தக் காலத்தில் காகிதத்தில் இருக்கும் சுரைக்காய் அச்சு அசலாக சுரைக்காய் போலவேதான் இருக்கிறது. ஆனாலும், அதில் பொரியல் பண்ண முடியாது. டி.வி. ஒரு கருவி. அதை எப்படியெல்லாம் பயன்படுத்த முடியுமோ அப்படி எல்லாம் பயன்படுத்துகிறார்கள். டி.வி-யில் பெண் பார்த்துக் கல்யாணம் பண்ண முடியுமா? கோயில் என்பது பிரசாரத்துக்காக வரவில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



டி.வி. பிரசாரத்துக்காக வந்தது. டி.வி-யைப் பார்த்து 'இந்தக் கோயிலுக்கு நாம் நேராகப் போக வேண்டும்' என்கிற எண்ணம் வந்தால் நல்லது. தங்கள் வியாபாரத்துக்காக டி.வி-க்காரர்கள் செய்யக் கூடிய ஒரு காரியத்தால் நமக்கு எப்படி பலன் கிடைக்கும்? நல்லது கெட்டது நமக்கே தெரிய வேண்டும். டி.வி-யில் சொல்லித் தெரிந்து கொள்ளக் கூடாது. பக்தியை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். பகவானை நேரடியாக வணங்குங்கள். பூ என்பதற்காக காகிதப் பூவைத் தலையில் வைத்துக் கொள்ளலாமா? நிழலைக் கும்பிடாதீர்கள்.

ஒரு விஷயத்தையும் இங்கு சொல்ல வேண்டும். பல கோயில்களுக்கு நேரில் செல்ல முடியாத பலரும் இப்படி ஆலயங்களை டி.வி-யில் பார்த்துதான் தங்களைத் தேற்றிக் கொள்கிறார்கள்; ஆனந்தப் படுகிறார்கள். காசியில் ஸ்ரீஅன்ன பூரணி ஆலயம் இருக்கிறது. நினைத்த மாத்திரத்தில் நம் எல்லோராலும் காசிக்குப் போய் அன்னபூரணியை தரிசிக்க முடியுமா? வசதி எல்லோருக்கும் கிடையாதே! ஒருவேளை டி.வி-யில் காட்டினால் தாராளமாக தரிசிக்கலாம்தான். ஆனால், இதன் மூலம் புண்ணியம் கிடைக்கும் என்றெல்லாம் கணக்குப் போடாதீர்கள்.

ஒருவரது ராசிப்படி மோதிரம் அணிவதால் உண்மையாகவே பலன் கிடைக்குமா? ராசி மோதிரங்களைப் பற்றி நிறைய விளம்பரங்கள் வருகின்றனவே... அவை உண்மையா?

– வி.ராணி, குடவாசல்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

விளம்பரம் சரியா, தவறா என்பது நீங்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம். நீங்களோ நானோ விளம்பரங்களை விளாச முடியாது.

அணிகலன் என்பது அலங்காரத்துக்காக வந்தது. ஒவ்வோர் உறுப்பிலும் அதற்குத் தகுந்த தங்க அணிகலன்களை அணிந்து கொள்ளுங்கள். அதற்கு மேல் இந்தக் கற்களால் ஒரு புண்ணியமும் இல்லை. அணிகலனுக்கு எதையும் கொடுக்கும் சக்தி இல்லை. ராசி என்பது நட்சத்திரத்தை வைத்து வருவது. அதற்கும் மோதிரத்துக்கும் ஒரு தொடர்பும் இல்லை.

படுக்கைக்குப் போகும் முன், அகல்யா, சீதா, தாரா, மண்டோதரி, திரௌபதி பஞ்சகம் நஸ்மரேன்னித்யம்' எனச் சொல்ல வேண்டும் என்று படித்தேன். இதில் தாரா (சுக்ரீவனின் மனைவி) மனித உருவம் கொண்டவளா, குரங்கு உருவம் கொண்டவளா? அவள் பெயர் ஏன் இந்த ஐவரில் சேர்க்கப்பட்டுள்ளது?

– மீனாட்சி விசுவநாதன், உதகை.

காலையில் எழுந்தவுடன் இவர்களை நினைத்துக் கொள்ள வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் படுக்கப் போகும்போது சொன்னாலும் காலையிலும் சொல்லுங்கள்.

சுக்ரீவன் மனைவிக்கும் இந்த ஐவரில் உள்ள தாராவுக்கும் சம்பந்தமில்லை. எனவே, குரங்கு உருவம் கிடையாது. நவக்கிரகத்தில் ஒருவரான குருவின் மனைவிக்கு 'தாரா' என்று பெயர். இவள் ஒரு முறை சந்திரனோடு இருக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. அவள் பதிவிரதை. குருவுக்கும் சந்திரனுக்கும் வாக்குவாதம் வளர்ந்து,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சண்டை ஆயிற்று. சந்திரன் பக்கம் சிலர் சேர்ந்தார்கள். குருவின் பக்கம் சிலர். யுத்தம் மிகப் பெரிய அளவில் வளர்ந்தது. அந்த யுத்தத்துக்கு 'தாரகாமய சங்ராமம்' என்று பெயர். நல்ல காரியம் செய்ய வேண்டியவர்கள் இப்படி சண்டை போட்டுக் கொண்டு இருந்தால், லோகத்துக்கு நன்மை கிடைக்காதே என்று மும்மூர்த்திகள் தலையிட்டு யுத்தத்தை நிறுத்தினார்கள். புராணத்தில் இந்தக் கதை மிகவும் பிரசித்தம். இந்த தாரகாமய சங்ராமம் கதையில் வரும் தாராவின் பேர்தான் இதில் உள்ளது.

நமது தர்மசாஸ்திரம் ஒரு விஷயத்தை எப்படிச் சொல்லும் தெரியுமா? ஆரம்பத்தில் படிக்கிறபோது ஏதோ நெருடுவது மாதிரி சொல்லும். ஆழ்ந்து படித்தால் உண்மை விளங்கும். முதலில் தவறாகத் தோன்றி, பிறகு உண்மையான தத்துவம் புரியும்போது, அது மறக்காமல் மனதில் ஆழமாகப் பதியும் என்பதால் இப்படி ஒரு வழக்கம்.

5 வயதில் இருந்து 95 வயது வரைக்கும் ஏகாதசி அன்று பட்டினி கிடக்க வேண்டும் என்கிறது சாஸ்திரம். ஒருவர் இப்படி எழுதினார். ஏகாதஸ்யாம் அஹோராத்ரம் கர்த்தவ்யம் போஜனத்ரயம். 'தினம் இரு வேளை சாப்பிடுவாய். ஏகாதசி அன்று மூன்று வேளை சாப்பிடு' என்கிற பொருள் வரும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

“என்ன இப்படி தப்பாக எழுதி இருக்கிறீர்களே?” என்று ஒருவர் கேட்டார். “செய்யுளின் வார்த்தைகளின் அமைப்பைச் சற்று மாற்றிப் போட்டுப் படித்துப் பார். அதாவது, போ ஜனம், ஏகாதஸ்யாம் த்ரயம் கர்த்தவ் யம் என்று படிக்க வேண்டும். இப்போது, ஹே ஜனங்களே... ஏகாதசி அன்று மூன்று காரியங்களைச் செய்யுங்கள். சாப்பிடாமல் இருக்க வேண்டும்; இரவில் தூங்காமல் இருக்க வேண்டும்; இறைவனை தியானித்தபடி இருக்க வேண்டும் என்ற பொருள் வரும். புரிகிறதா?” என பதம் பிரித்து விளக்கினார். இப்படி எல்லாம் அழகான ஸ்லோகங்கள் உண்டு.

சீதா, ராவணனிடம் இருந்தாள். அவளை எப்படி பதிவிரதை என்பது? ஒரு நெருடல். அகல்யா, இந்திரனோடு சம்பந்தப்பட்டாள் என்று கதை இருக்கிறதே! அது ஒரு நெருடல். தாரா, உங்களுக்கே நெருடியது சுக்ரீவன் பத்தினியை வாலி வைத்திருந்தானே என்று. மண்டோதரி வேறு ஒருவனைக் கல்யாணம் செய்து கொள்வதாக இருந்தது. ராவணன்தான் பிடித்து இழுத்து வந்து கல்யாணம் செய்து கொண்டான். திரௌபதி அஞ்சு பேருக்கு மனைவியாக இருந்தாள். நெருடல்... எல்லாவற்றிலும் நெருடல் தெரிகிறதல்லவா, நல்லது. இனி உங்களுக்குத் தெளிவு பிறந்துவிடும்.

அசோகவனத்தில் சீதையைச் சந்தித்த அனுமன், சீதையைத் தன்னோடு வந்துவிடும்படி அழைத்தான். ‘அவரே வந்து என்னைக் கூட்டிக் கொண்டு போவதுதான் தர்மம்’ என்று சொல்லி மறுத்து விட்டாள் சீதை. பிற்பாடு, அனுமன் வாலில் தீ வைத்தார்கள். அப்போது சீதை, “நான் ராமனை மாத்திரம்தான் என் மனதில் வைத்திருக்கிறேன் என்பது உண்மையானால், ஹே அக்னி! நீ குளிர்ச்சியாகி விடு!” என்றாள். அனுமன் வால் நெருப்பு, குளிர்ந்தது.

இப்போது தெரிகிறதா சீதை எவ்வளவு பெரிய பதிவிரதை என்று... விலகி விட்டதா நெருடல்... எல்லாவற்றுக்குள்ளும் தத்துவ விளக்கத்துக்காக ஆழமாக உள்ளே போய்ப் பார்க்க வேண்டும். பிறர் சொல்வதை ஏற்பதைவிட, நாமே ஆராய்ந்து உண்மையை அறிந்து கொண்டால்தான் மனதில் நிலைக்கும்.

சிவன் கோயிலில் தரிசனம் முடிந்ததும் சிறிது நேரம் உட்கார்ந்த பிறகே புறப்பட வேண்டும் என்கிறார்களே, ஏன்? பெருமாள் கோயிலுக்குப் போனால் உட்காரக் கூடாதாமே?

— ஆர். ரங்கநாத அய்யர், சிங்காரப்பேட்டை.

சிவன் கோயிலில் தரிசனம் முடிந்த பிறகு உட்கார்ந்துவிட்டுப் போக வேண்டும் என்பது விதி. விதியைக் கேள்விக்கு உள்ளாக்கக் கூடாது. போலீஸ்காரர் இந்த மாதிரி தொப்பி போடுகிறாரே, ஏன் அந்த மாதிரி போடக் கூடாது என்று கேட்கிறோமா?

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அப்படித்தான் இதுவும் ஒரு விதி. சிவன் கோயிலுக்கு ஒரு சிறப்பு உண்டு. அங்கிருந்து நாம் எதையும் எடுத்து வரக் கூடாது. இதை உறுதி செய்வதற்காகத்தான் பிரதட்சணம் முடிந்ததும் சற்று நேரம் உட்கார்ந்துவிட்டு வெறுங்கையுடன் எழுந்து வருகிறோம்.

விஷ்ணு கோயிலில்கூட தரிசனம் மற்றும் பிரதட்சணம் முடிந்து சிறிது நேரம் உட்கார்ந்து விட்டுப் போகலாம். பிரதட்சணம் முடிந்ததும் அப்படியே ஓடிப்போக வேண்டும் என்ற அவசியம் இல்லை. மற்றபடி உட்கார்ந்துதான் போக வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் எதுவும் கிடையாது.

கோயிலில் வெளியே அமர்ந்திருக்கும் வறியவர்களுக்கு நம்மால் இயன்றதை, கோயிலில் நுழையும் முன் கொடுப்பது நல்லதா, தரிசனம் முடிந்தபின் கொடுப்பது நல்லதா?

– ஏ.ஆர்.மீனாட்சி, சென்னை-92.

கோயிலுக்கு நாம் போகும்போது பகவானை நினைத்துக் கொண்டு போகிறோம். திரும்பி வரும்போதும் பகவானை நினைத்துக் கொண்டுதான் வருகிறோம். தர்மம் எப்போது வேண்டுமானாலும் பண்ணலாம். நமக்கு வசதி இருக்கும் போது பண்ணலாம். கோயில் வாசலில் இருப்பவர்களுக்குத்தான் தர்மம் பண்ண வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை. வீடு தேடி வருபவர்களுக்கும் பண்ணலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கோயிலுக்குப் போவதற்கும் அங்கே உட்கார்ந்து இருப்பவர்களுக்கு தர்மம் செய்வதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. உண்மையைச் சொல்லப் போனால், கோயில் வாசலில் ஒரு கும்பல் தர்மத்தை எதிர்பார்த்து உட்கார்ந்திருப்பதே நமது கலாசாரத்துக்குப் புறம்பான ஒரு விஷயம். அது நமது சமுதாயத்துக்கே குறை. நமது வீட்டு வாசலுக்கு வந்து கேட்பவரிடம் "போட்டாச்சு, போ!" என்று சொல்லும் தைரியம் நமக்கு உண்டு. ஆனால், கடவுளைக் கும்பிட்டு வரும்போது 'இல்லை' என்று சொல்ல நாம் தயங்குவோம்.

இந்த பலகீனத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் வியாபார யுக்திதான் கோயில் வாசலில் பிச்சைக்கு உட்காருவது. கோயிலில் கொடுப்பது மனமுவந்து கொடுக்கிற தர்மமே இல்லை. தர்மம் என்பதை வீட்டிலேயே செய்ய வேண்டும். இதில் முன்னாடி கொடுப்பதா, பின்னால் கொடுப்பதா என்கிற குழப்பத்துக்கு இடமே இல்லை!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கால பூஜை என்பது என்ன?

'பெற்றோர் செய்த பாவம் பிள்ளைகளை பாதிக்குமா?' என்ற கேள்விக்குத் தங்களது பதிலைப் படித்ததால் எனது வேதனையைத் தெரிவிக்கிறேன். 80 வயதான விதவை நான். என் 50 வயது மகன் படித்திருந்தும் தகாத உறவு காரணமாக மிகவும் வருத்தப்படும் நிலையில் உள்ளான். என்னுடன் இல்லாத அவனுடைய மோசமான நிலை நீங்கி, நல்ல நிலையை அடைய, தாங்கள் பரிகாரம் எதையேனும் தெரிவித்தால், நான் செய்ய விரும்புகிறேன்.

– ஒரு வாசகி, சென்னை-17.

மிகுந்த வயதான காலம். தன்னை முன்னேற்றிக் கொள்ளவே உடலில் வலு இல்லாத நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். பிள்ளைப் பாசத்தால், அவன் துக்கப்படுவதைப் பார்க்கும்போது உங்களுக்கும் வருத்தம். அந்தப் பிள்ளைக்கு வந்திருக்கிற இடையூறைப் போக்க நீங்கள் பரிகாரம் பண்ண முடியாது. அவர் செய்த பாவத்தால் துக்கம் அனுபவிக்கிற நிலை இருந்தால், அதற்கும் நீங்கள் பரிகாரம் பண்ண முடியாது.

அவர் உண்மையிலேயே கஷ்டப்படுகிறாரா அல்லது நீங்கள் அப்படி நினைக்கிறீர்களா என்பதையே உறுதியாகச் சொல்ல முடியாது. ஒருவேளை அந்தச் சேர்க்கையால் அவர் சந்தோஷமாகக்கூட இருக்கக் கூடும். அவர் வருந்துவதாக நீங்கள் நினைக்கலாம். அவர் கஷ்டப்படுவது உண்மையாகவே இருந்தாலும், 'என் பிள்ளை கஷ்டப்படுவதைப் பார்த்து நான் வருந்தும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



நிலை இருக்கிறதே... இதை மாற்று!' என்று பகவானிடம் நீங்கள் பிரார்த்திக்கலாம். மற்றபடி அவருக்கு ஏற்பட்ட துக்கத்தை நீங்கள் மாற்ற முடியாது.

கும்பாபிஷேகம் நடந்த திருக்கோயில்களுக்குச் சென்று வழிபடுவதுபோல், சிதிலமடைந்து- பிரதிஷ்டை மட்டுமே உள்ள கோயிலுக்கும் சென்று வணங்கலாமா?

– ஏ.ஆர். மீனாட்சி, சென்னை-92.

கோயில் இடிந்திருக்கிறது என்பதால் உள்ளே இருக்கும் தெய்வம் சிதிலமடையாது. கும்பாபிஷேகம் செய்யப்பட்டாலும் இல்லாவிட்டாலும் அந்த தெய்வத்தை வணங்கலாம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பெருமாள் கோயிலில் ஏன் சடாரி வைக்கிறார்கள்? இன்னொரு கேள்வி: பெருமாள் கோயிலில் மூன்று முறை தீர்த்தம் வாங்க வேண்டும் என்கிறார்கள். ஆனால், பட்டாச்சார்யர்கள் கொடுப்பதில்லையே. ஏன்?

– தி.க. சிந்தாமணிச்செல்வன், திட்டக்குடி.

கடவுளைக் கும்பிடுவதில் பல முறைகள் உண்டு. நமக்குப் பல விஷயங்களுக்குப் பொருள் தெரியாது. சடாரி என்பது பகவானின் பாதம். அதை நம் தலையில் வைக்கிறார்கள். அவன் காலடியை ஸ்பரிசிப்பதால், நமக்கு ஒரு மனத் திருப்தி! அப்போது அவன் நினைவு வருகிறது அல்லவா... அது நமக்கு அனுக்கிரகம் பண்ணுவதாக இருக்கும்.

ராமன், பரதனுக்கு தனது பாதுகையைக் கொடுத்தார். பாதுகையைப் பார்த்தால், பகவானின் பாதம் நினைவுக்கு வரும். பாதம் நினைவுக்கு வந்தால் பகவான் நினைவு வரும். அது அவ்வளவு உசத்தியானது! அதனால்தான் பெரியவர்கள், 'பாதுகா சகஸ்ரம்' என்றே நிறையப் பாடல்கள் எழுதியிருக்கிறார்கள். 'பாதுகா பட்டாபிஷேகம்' எனும் கொண்டாட்டமே உண்டு.

மூன்று முறை தீர்த்தம் கொடுப்பது என்பது சம்பிரதாயம். அதற்காக, ஒரு முறை கொடுத்தால் உங்களுக்கு எதுவும் குறை வந்துவிடாது. மூன்று தடவை கேட்டு வாங்க வேண்டும் என்பதும் இல்லை. பிரசாதம் எல்லாம் அங்கே இருந்து வருவது. கேட்டு வாங்கும் விஷயம் அல்ல!

'சனி நீராடு' என்று சொல்கிறார்கள். சனிக்கிழமை நீராடுவது மிகவும் சிறப்பா?

– த. சத்தியநாராயணன், அயன்புரம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

'சனி நீராடு' என்பது பாதிதான். சனி, புதன் நீராடு என்பதுதான் முழுசு. முன்பெல்லாம் சனி, புதன் நாட்களில் எண்ணெய் தேய்த்துக் குளிப்போம். இப்போது நாம் ஷாம்புக்கு வந்தாச்சு. புதிதாக வந்த வைத்தியங்களும் எண்ணெய் தேய்க்கத் தேவை இல்லை என்று சொல்லி விட்டன. அது நமக்கு இஷ்டமாக இருப்பதால், அப்படியே செய்கிறோம். நிறைய வியாதிகளும் வந்து அவஸ்தைப்படுகிறோம். தேக ஆரோக்கியத்துக்காக நீங்கள் எண்ணெய் தேய்த்துக் குளிக்க விரும்பினால், சனியோடு புதனையும் சேர்த்துக் கொள்ளுங்கள்!

எங்கள் ஊரில் சுயம்பு மாரியம்மன் கோயிலும் அம்மனும் வடக்கு முகமாக அமைந்துள்ளனர். அங்கிருந்து சுமார் இருபதடி தள்ளி ஒரு விநாயகர், அரச மரத்தடியில் கிழக்குப் பார்த்து அமர்ந்து அருள் பாலிக்கிறார். இதற்கு அருகே இருந்த வேப்பமரம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாகப் பட்டுப் போய்விட்டது. தற்போது அரசமரத்தையும் வெட்டிவிட்டு அங்கு விநாயகருக்குக் கோயில் கட்ட வேண்டும் என்றும் புதிய பிள்ளையாரை செய்து வைக்க வேண்டும் என்றும் ஊர்க்காரர்கள் கூறுகிறார்கள். அது ஐதீகத்துக்குப் புறம்பானது என்பது எனது கருத்து. இதற்கான சாஸ்திர சம்பிரதாயங்களை தாங்கள் விளக்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

– உழவன் சி.பெரியசாமி, ஈரோடு-9.

'சுயம்' என்றால் தானாகவே என்றும், 'பு' என்றால் ஏற்பட்டது என்றும் பொருள். தானாகவே ஒன்று வந்து விட்டால், அது எங்கே பார்த்து உட்கார்ந்திருக்கிறது என்கிற சட்ட திட்டங்கள்



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எல்லாம் வரவே வராது! நாமாக கோயில் கட்டும்போதுதான் சட்ட திட்டங்கள் எல்லாம். தானாகவே உருவானதை நாம் தொல்லை பண்ண முடியாது. எனவே, திசையைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.

மரம் பட்டுப் போவது என்பது நமது கையில் இல்லை. ஒன்றல்ல; இரண்டு மரங்களும்கூடப் பட்டுப் போகலாம். பட்டுப் போனால் இன்னொரு மரம் வைப்பது நமது கையில் இருக்கிறது. பட்டுப்போனால் கெடுதல் என்பதும் இல்லை.

அரச மரத்தடியில் பிள்ளையாரை வைத்திருக்கிறார்கள் என்கிறீர்கள். ஏன் வைத்தார்கள்? கோயில் கட்ட ஜனங்களுக்கு வசதி இல்லாததால் வைத்தார்கள். கோயில் கட்டும் வசதி வந்துவிட்டால், மரத்தடியிலேயே வைக்க மாட்டார்கள். வசதி இருக்கும்போதும் கோயில் கட்டக் கூடாது என்று சொல்வது தவறு. அரச மரத்தடி பிள்ளையாருக்குக் கோயில் கட்டி, அரச மரத்தையும் பின்னால் வைப்பதை எத்தனையோ ஊர்களில் பார்க்கலாம்.

அரச மரம் இருக்கும் இடத்தில்தான் கோயில் கட்ட முடியும் என்கிற நெருக்கடியான சூழ்நிலை இருந்தால், வேறு வழி இல்லை என்றால், அரச மரத்தை வெட்டலாம். கோயில் கட்டிவிட்டுப் புதிதாக ஓர் அரச மரத்தை அங்கு வைக்கலாம். ஆகமமும் ஐதீகமும் மோதினால், ஆகமத்துக்கு வழி விடுங்கள்; ஐதீகத்தை வைத்துக் கொள்ளாதீர்கள். யாருக்கும் எதுவும் தெரியாத நிலையில், ஐதீகத்தைப் பின்பற்றலாம். ஆகமம் சொல்லும் விதி தெரிந்தால் அதைத்தான் பின்பற்ற வேண்டும்.

அரச மரத்தடிப் பிள்ளையாரைவிட கோயில் பிள்ளையாரைப் பார்க்க அதிகம் பேர் வருவார்கள். விசேஷங்களும் அதிகம். ஈர்ப்பு கூடுதல். ஜனங்களிடம் ஆன்மிகத்தையும் பக்தியையும் வளர்க்க அரச மரத்தடிப் பிள்ளையார் போதாது. சிரத்தையையும் பக்தியையும் அதிகப்படுத்தத்தான் கோயில். ஐதீகத்தைக் காரணம் காட்டி, கோயில் கட்டுவதைத் தடுப்பது சரியாகாது. அரச மரத்தை வெட்டாமலேயே கோயில் கட்ட முடியுமானால், அப்படிச் செய்வதே நல்லது.

‘வீட்டு பூஜை அறையில், சுவாமி படங்களை கிழக்கு அல்லது மேற்கு நோக்கி இருக்குமாறு வைத்து வணங்க வேண்டும்’ என்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட வசதி இல்லாவிட்டால், எப்படி வைத்து வணங்க வேண்டும்?

– எஸ். ராஜாம்பாள், லால்குடி.

இது மாதிரி கேள்வியை பலரும் கேட்டு பல முறை பதில் சொல்லியாகிவிட்டது. ‘என்கிறார்கள்’ என்று சொன்னால் போதாது. யார் சொல்கிறார்கள், தெரிந்துதான் சொல்கிறார்களா என்பதை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எல்லாம் நமது புத்தியை வைத்துதான் ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டும்.

யாரோ சொன்னார்கள் என்று மற்ற விஷயங்களில் நாம் முடிவு எடுப்பதில்லை. வண்டி ஏழு மணிக்குப் போகும் என்று ஒருவர் சொன்னால், அதை அட்டவணையைப் பார்த்து கிராஸ் செக் செய்கிறோம். பக்தியில் மட்டும் யாரோ ஒருவர் சொன்னால் போதும் என்று நம்புகிறோம். பகவானை ஆராதனம் பண்ணும்போது தெற்குப் பார்த்துப் பண்ணாதீர்கள் என்றால், அதைக் கடைப்பிடியுங்கள். வாடகை வீட்டில் தெற்குப் பார்த்து மட்டுமே வணங்க முடியும் என்றால், 'என் வசதிக்கு இப்படித்தான் செய்ய முடிகிறது' என்று நினைத்து வணங்குங்கள்.

அரசு, வேம்பு கல்யாணம் ஏன்?

– ஜி. ஜெயராமன், கூந்தலூர்.

அரச மரத்துக்குக் கல்யாணம் உண்டு. நாமெல்லாம் அரச மரத்தை தெய்வமாகக் கொண்டாடுகிறோம். அதனால், அரச மரத்தைச் சுற்றி வந்து வழிபடுவதற்கு முன்பு அதற்குக் கல்யாணம் செய்து வைக்கிறோம். இதற்கு 'அஸ்வத்த விவாகம்' என்று பெயர். அரச மரம்- ஆண், வேப்ப மரம்- பெண். வேப்ப மரம் பெண்டாட்டி என்பது இல்லை. அரச மரத்துக்குள்ளேயே ஆண்- பெண் என்கிற இரண்டு அம்சங்களும் உண்டு. அரசுக்கும் வேம்புக்கும் கல்யாணம் என்பது சம்பிரதாயத்தில் வந்தது.

அரச மரமும் நல்லது, வேம்பும் நல்லது என்பதால் இரண்டையும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அருகருகே வைக்கிறார்கள். சாஸ்திரத்திலும் ஜோதிடத்திலும் கல்யாணம் தாமதமானால், இந்த அஸ்வத்த விவாகம் ஒரு பரிகாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

திருச்செந்தூருக்குப் பல முறை சென்றும் நாழிக் கிணறு, வள்ளிக் குகை ஆகியவற்றை நான் பார்த்ததில்லை. சென்ற மாதம் என் சித்தி- சித்தப்பாவுடன் சென்றேன். சுவாமி தரிசனம் முடிந்ததும் நாழிக் கிணற்றைக் காட்டினார்கள். மெய்சிலிர்த்தேன்! பின்னர் வள்ளிக் குகையைப் பார்த்ததும் என் முகம் இருண்டு உடல் வியர்த்து, இதயம் வேகமாகத் துடித்தது. எனக்கு எதுவும் புரியவில்லை. என்னை ஒருவித பயம் கவ்விக் கொண்டது. சித்தியிடம் 'நான் இந்தக் குகையை ஏற்கெனவே பார்த்திருக்கிறேன். இப்போது உள்ளே வரவில்லை' என்றேன். அவர்கள் மட்டும் உள்ளே சென்றார்கள்.

பின்பு, நானும் வள்ளிக் குகைக்குள் சென்று தரிசித்துவிட்டு விரைவாக வெளியே வந்தேன். எனது செயலுக்கு சித்தியும் சித்தப்பாவும் காரணம் கேட்டார்கள். ஆறு மாதங்களுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



முன், இரண்டு முறை கண்ட கனவு என் நினைவுக்கு வந்தது. 'இதே போன்ற குகை ஒன்றுக்குள் சிறிது தூரம் சென்று, பிறகு பயந்து போய் வெளியே வந்துவிட்டேன்!' என்பதைக் கூறினேன். எனது கனவுக்கும் நடந்த இந்த செயலுக்கும் விளக்கம் தருவீர்களா?

– கதாதரணி, லால்குடி.

அவர்கள் அழைத்தபோது, பார்க்காத குகையைப் பார்த்ததாகச் சொன்னீர்கள். கனவில் பார்த்தது நிஜம். அவர்கள் உள்ளே சென்றதும், 'நாம் கனவில் பார்த்தது இந்தக் குகை அல்லவே, அழைத்தும் நாம் செல்லவில்லையே!' என்று உங்கள் உள் மனது சொல்லியது. உடனே உள்ளே போனீர்கள். அங்கே போனதும் ஏற்கெனவே கனவில் பார்த்து பயந்தது நினைவுக்கு வர, அதே அச்சம் மீண்டும் ஏற்பட்டது. ஆகவே திரும்பி வந்துவிட்டீர்கள்.

உங்கள் மனதை பலவீனமாக வைத்துக் கொள்ளாதீர்கள். கண்ட கனவை மொத்தமாக மறந்து விடுங்கள். நேரடியாக பகவானிடம் பக்தி செலுத்த ஆரம்பித்தால் உங்களுக்கு எந்தக் குறையும் இருக்காது. கனவையும் நிஜத்தையும் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

மூன்று கால, நான்கு கால பூஜை என்றெல்லாம் சொல்லப்படுகிறதே... இவை என்ன?

– எஸ்.நடராஜன், சென்னை-34.

ஒரு கால, ரெண்டு கால, மூணு கால, நாலு கால, அஞ்சு காலம்-என்று காலத்தை வித்தியாசப்படுத்தி பூஜைகள் உண்டு. அர்த்த ஜாம பூஜைகூட உண்டு. ஆகமம், கோயிலின் தன்மை ஆகியவற்றைக் கொண்டு பூஜைகளை நிர்ணயிப்பார்கள். சிலபோது, நைவேத்தியமே கோயிலில் பண்ணாமல் வீட்டில் பண்ணிக் கொண்டு வருவதும் உண்டு. எந்த தேவதை அங்கு இருக்கிறதோ, அதன் வைபவத்தைப் பொறுத்து பூஜை மாறுபடும். ஒரு கால பூஜை இருக்கிற கோயிலிலும் சாந்நித்தியம் உண்டு. அதற்காக ஆறு கால பூஜை செய்யும் கோயிலில் சாந்நித்தியம் அதிகமாக இருக்கும் என்று சொல்ல முடியுமா என்ன!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அதர்வண வேதம் இறைவனைத் தடுக்குமா?

கயா, காசி சென்று சிராத்தம், தர்ப்பணம் செய்து திரும்பிய பின், அமாவாசை மற்றும் வருஷாப்திய சிராத்தங்கள் செய்வது கட்டாயமில்லை என்று சிலர் கூறுகிறார்களே... ஆனால், நான் தொடர்ந்து செய்து வருகிறேன்.

- ஜி.கிரிதரன், சென்னை-73.

ஒரு நிறுவனத்தில் வேலை பார்க்கிறீர்கள். சம்பளம் கொடுத்தார்கள். இன்க்ரிமென்ட் கொடுத்தார்கள். வருடத்தில் ஒரு தடவை போனஸ் கொடுத்தார்கள். அடுத்த மாதம் உங்களைக் கூப்பிட்டு 'பத்து வருஷமாக உங்களுக்கு போனஸ் கொடுத்தாகி விட்டது. இனிமேல் நீங்கள் சம்பளம் இல்லாமல் வேலை பார்க்க வேண்டும்!' என்று சொன்னால், ஒப்புக் கொள்வீர்களா?

'போனஸ் வேறு, சம்பளம் வேறு. போனஸ் கொடுக்க வருமானம் இல்லை என்றால், போனஸை வேண்டுமானால் நிறுத்திக் கொள்ளுங்கள். கடன் வாங்கியாவது எனது சம்பளத்தைக் கொடுங்கள்!' என்று கேட்பீர்கள் இல்லையா? ஏனெனில், அது 'மஸ்ட்!'

நாம் வைத்திருக்கும் விதிகளிலேயே அவசியம், அவசியம் இல்லாதது என்று பாகுபாடு வைத்திருக்கிறோமே... அதே போலத்தான் சிராத்தம் என்பது மஸ்ட். நீங்கள் ஆயிரம் தடவை கயைக்குப் போனாலும், வருஷா வருஷம் போனாலும் உங்கள் வீட்டுக்கு வந்து சிராத்தம் செய்ய வேண்டியது அவசியம். தர்ப்பணம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பண்ண வேண்டியது அவசியம். கயையில் செய்தது விசேஷம். இங்கே செய்ய வேண்டியது கடமை. கடமையையும் கயையையும் முடிச்சுப் போடாதீர்கள். ஒருவேளை ஒருவரால் கயைக்குப் போக முடியாமலேகூடப் போகலாம். அவர் வருடா வருடம் திதி செய்து வருவது அவசியம்.

மரணத்துக்குப் பிறகு, செய்த நல்வினை- தீவினைக்கு ஏற்ப ஆத்மா, வேறு பிறவி எடுக்கிறது. அப்படியானால், நம் முன்னோருக்குத் திதி கொடுப்பதன் அர்த்தம் என்ன? எவ்வளவு காலத்துக்குத் திதி கொடுக்க வேண்டும்? ஆத்மா வேறு பிறவி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

எடுத்த பிறகு செய்யும் திதியில் அர்த்தம் உண்டா?

– ஆர்.வெங்கடேஷ்வரன், செம்பூர் (மும்பை).

இறந்தவர்களுக்கு, இறந்த நாளில் அவர்களின் பெயரில் தானம் பண்ண வேண்டும். தர்மம் செய்ய வேண்டும். இதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை தர்ம சாஸ்திரம் நமக்கு உபதேசிக்கிறது. இறந்தவர்களுக்கு நீங்கள் இடும் அன்னம் போகிறதா, அவர் அதைச் சாப்பிடுகிறாரா என்பதெல்லாம் உங்கள் பிரச்னையே அல்ல. அவர் வேறு பிறவி எடுப்பது இருக்கட்டும்... பிறவிகளையே கடந்து மோட்சம் அடைந்து, பகவானோடு இரண்டறக் கலந்து விட்டவராகவே இருக்கட்டுமே... திதி செய்வது உங்கள் கடமை!

'எனக்குப் பசிக்கிறது. சாதம் போடு. அதைச் சாப்பிட்டுப் பசியாறுகிறேன்!' என்று பித்ருக்கள் சொல்லவில்லை. 'நீ நன்றாக இருக்க வேண்டும், உன் குடும்பம் நன்றாக இருக்க வேண்டும். அதனால் சிராத்தம் செய்!' என்றுதான் சொல்கிறார்கள். 'தர்மத்தை வளர்க்க எனது நினைவு நாளில் தர்மம் செய். அது எனக்குப் பிரியம், திருப்தி!' என்கிறார்கள். இது சாதம் சாப்பிட்டால் ஏப்பம் வருவது மாதிரியான திருப்தி அல்ல.

உயிரோடு இருக்கும்போது தாய்- தகப்பனின் வார்த்தைகளைக் கேள். இறந்த பிறகு ஒவ்வொரு வருடமும் தர்மம் செய். வாழ்நாளில் எப்போதாவது ஒரு முறை கயைக்குப் போய் மற்ற பிதுர்க்களுக்கெல்லாம் பிண்டம் வை. இதை எல்லாம் செய்பவனுக்குப் பெயர்தான் புதல்வன். இந்த மூன்று காரியங்களையும் செய்வதற்குத்தான் புத்திரனைப் பெற்றிருக்கிறார் அவர். பாமரர்களுக்குப் புரிவதற்காக, 'சாப்பாடு போட்டால் அப்பாவுக்குப் பிரியம்' என்று சொல்வார்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கொஞ்சம் தெளிவு ஏற்பட்டால், தர்மம்தான் உண்மையான காரணம் என்பது புரியும்.

'எங்கெல்லாம் பிதுர்க்களை வணங்குகிறாயோ, எங்கெல்லாம் தேவர்களை வழிபடுகிறாயோ, எங்கெல்லாம் மனிதர்களை ஆராதனம் செய்கிறாயோ, அங்கெல்லாம் என்னை வணங்கிய பலன் உனக்குக் கிடைக்கும்!' என்று சாட்சாத் விஷ்ணுவே சொல்கிறார். அப்பா சொன்ன வார்த்தையைக் கடைப்பிடிக்க வேண்டாமா? 'உயிரோடு இருக்கும்போது என் வார்த்தைகளைக் கேள்' என்று அவர் சொன்னாரே... அதைச் செய்ய வேண்டாமா?

யே யஜந்தி பித்ருனே தேவான்... விஷ்ணு மேவ யஜந்திதே: உன் குடும்பமும் நீயும் நன்றாக இருக்க வேண்டுமானால், தர்மம் செய். பிதுர்க்கள் இல்லை என்று கருதி தர்மம் செய்வதை நிறுத்துவது தவறு. வேறோர் உருவத்தில் அம்மாவும் அப்பாவும் சாப்பிடுகிறார்கள் என்கிற விளக்கம் எல்லாம், அறியாதவர்களுக்குத்தான். உங்களைப் போன்ற விஷயம் தெரிந்தவர்கள், இதைக் கடமையாகக் கொண்டு கடைசிவரைக்கும் செய்யத்தான் வேண்டும். அப்பா நம்மைப் போல சாதாரண மனிதன்தானே, எங்கேயோ வேறு பிறவி எடுத்து விட்டார் என்று நினைக்கக் கூடாது. அப்பா என்பவர் தெய்வம். அவருக்கான கடமையைச் செய்வதை நிறுத்த வேண்டாம்.

உயிருடன் பெற்றோரை முதியோர் இல்லங்களில் வாட விடும் பிள்ளைகள், இறந்த பின் அவர்களுக்கு திவசம் கொடுப்பது தர்மம் ஆகுமா?

– ராதா நாயகம், சென்னை-87.

'முதியோர் இல்லம்' என்கிற நடைமுறை சமீப காலத்தில் உருவானது. பெற்றோரைக் காப்பாற்றும் எண்ணம் பிள்ளைகளுக்கு ஏற்படாமல் வளர்த்தது பெற்றோரின் தவறு. நம் குழந்தைகளுக்கு நமது கலாசாரத்தைக் கற்றுக் கொடுக்காததே பெற்றோர், முதியோர் இல்லத்துக்குப் போகக் காரணம். முதியோர் இல்லத்துக்குப் போனதாலேயே கர்மா பண்ணக் கூடாது என்பதில்லை. அப்பா ஜெயிலில் இருந்து செத்துப் போனாலும் கர்மா பண்ணத்தான் வேண்டும். முதியோர் இல்லத்தில் இருந்து இறந்தாலும் அப்பாவின் சொத்தை பிள்ளைதானே எடுத்துக் கொள்கிறான்? கர்மா செய்யத்தானே வேண்டும்?

'இரணிய வேளை' என்று குறிப்பிடுகிறார்களே, அதைப் பற்றி விளக்கமாகக் கூறவும்!

- வி.கோபிநாதன், குடவாசல்.

மரணம் வரக் கூடாது என்பதற்காக இரணியன் பகவானிடம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சில வரங்கள் கேட்டான். 'என்னை யாரும் ஆயுதத்தால் கொல்லக் கூடாது. மனிதனோ, மிருகமோ கொல்லக் கூடாது. வீட்டுக்கு உள்ளேயோ வெளியேயோ மரணம் வரக் கூடாது. பகலிலோ இரவிலோ நான் சாகக் கூடாது!' என்றெல்லாம் கேட்டான். பகலும் இல்லாமல் இரவும் வராமல் இருக்கும் நேரம் மாலை. வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இல்லாமல் இருப்பது நிலைப்படி. மனிதனாகவும் இல்லாமல் மிருகமாகவும் இல்லாமல் இருப்பது நரசிம்மம். இப்படி இரணியனை வதம் செய்தார் பகவான். மாலை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

வேளையான அந்த சந்தியா காலத்தை இரணிய வேளை என்று சொல்லத் தொடங்கினார்கள். மற்றபடி அதில் எந்த விசேஷமும் இல்லை.

சொந்த வீட்டில் வில்வ மரம் வளர்க்கலாமா? ஆண்கள் இல்லாத வீட்டில், பெண்கள் வில்வ இலை பறிக்கலாமா?

- கல்பகம் ராமன், பெங்களூர்.

வில்வ மரத்தை வீட்டில் வளர்க்கலாம். ஒரு வீட்டில் ஆண்களே இல்லாவிட்டால், அது அந்த வீட்டுப் பெண்களின் தவறல்ல. வீட்டில் வில்வ மரம் இருக்கிறது. ஆனால், அங்கு ஆண்களே இல்லை. பூஜை செய்தாக வேண்டும். இந்தச் சூழலில் பெண் வில்வ இலையைப் பறிக்கலாம். ஆண்கள் எங்கேயோ வெளியில் போய் இருக்கிறார்கள் என்கிற நிலையில், பெண் பறிக்கக் கூடாது. யார் இந்த வேலையைச் செய்ய வேண்டுமோ, அவர் இல்லை. ஆனால், இந்தக் காரியம் நடக்கத்தான் வேண்டும் என்றால், யார் இருக்கிறாரோ அவர் அந்த வேலையைச் செய்யலாம்.

சுமங்கலிப் பெண்கள் ஸ்படிக மாலை அணியலாமா?

- ஸோனா, சென்னை-20.

எல்லாருக்கும் ஒரு சுபாவம் உண்டு. வேறு யாராவது ஒன்றைச் செய்தால், நாமும் அதைச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிற சுபாவம். நமக்குத் தேவையானது என்ன? அதுவே நமக்கு எல்லாவற்றையும் தருமே என்று யோசிப்பதில்லை. சுமங்கலிப் பெண்ணா, முத்து மாலை, ஆபரணங்கள் அணிந்து, பொட்டு வைத்து,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பூ சூடிக் கொண்டாலே உங்களுக்கு எல்லா செளபாக்கியங்களும் கிடைக்குமே... அதற்கு மேலே எதுவும் அவசியம் இல்லையே! அவ்வளவு ஏன், நெற்றியில் பொட்டு இட்டுக் கொண்டு கொஞ்சம் புஷ்பம் மட்டும் சூடிக் கொண்டாலே போதுமே! அதற்கு அப்படி ஒரு லட்சுமி கடாட்சம் உண்டு. யாரோ தனக்கு மோட்சம் வேண்டும் என்று நினைத்தவர் ஸ்படிகத்தைப் போட்டார். உங்களுக்கு பொட்டும் பூவுமே மோட்சத்தைக் கொடுக்குமே... அது போதாதா?

60- வயது முடிந்த பிறகு சஷ்டியப்த பூர்த்தி செய்ய வேண்டுமா அல்லது 60-ன் ஆரம்பத்தில் செய்ய வேண்டுமா? அதே மாதிரி சதாபிஷேகம் செய்வது 80 வயது ஆரம்பிக்கும்போதா, நிறைவடையும்போதா?

- ஏ.என்.எஸ். மணியன், சென்னை-5.

'**ச**ஷ்டியப்த பூர்த்தி'. இது ஒரு சம்ஸ்கிருதத் தொடர். அறுபது வருடங்களின் நிறைவு. ஒரு மனிதன் பிறந்தான். அறுபது வருடங்கள் கொண்ட ஒரு சுற்று பூர்த்தியானால், அது சஷ்டி அப்த பூர்த்தி. வானசாஸ்திரம் எழுதிய வராஹமிஹிரர் இந்த அறுபது வருடங்களுக்கும் பிரபவ, விபவ என்று தொடங்கிப் பெயர் கொடுத்திருக்கிறார். இப்படி, வருடங்கள் ஒரு சுற்று முழுமை அடைவது சஷ்டி அப்த பூர்த்தி. இது மனிதனின் விசேஷம் அல்ல. இவருக்கு சஷ்டி அப்த பூர்த்தி என்பது அல்ல. இவர் காலத்தை ஆராதனை பண்ணுகிறவர். தனக்கு ஆராதனை பண்ணிக் கொள்ளவில்லை. அறுபது வருடங்கள் முழுமை அடையும்போது இவருக்கும் சந்தர்ப்ப வசமாக 60 வயது ஆகிவிட்டது.

காலத்தை ஏன் ஆராதிக்க வேண்டும்? வருடம் ஒவ்வொன்றுக்கும்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

12 மாதங்கள். ஒவ்வொரு மாதத்துக்கும் 2 பட்சங்கள். வாரம், திதி, கரணம், யோகம் என்றெல்லாம் காலத்தின் அலகுகள் அமைந்திருக்கின்றன. இப்படி அறுபது வருடங்களுக்கான கால அளவில் ஒவ்வொரு சின்னச் சின்னக் கால அலகுகளையும் இவர் தாண்டி வந்து, குழந்தையாக, சிறுவனாக, இளைஞனாக, நடுத்தர வயதினனாக வளர்ச்சி பெற்று இப்போது இப்படி இருக்கிறார். இந்தக் காலத்தின் அனுக்கிரகம் இவருக்கு இருந்திருக்கிறது. இவர் வேலை செய்வதில் காலத்தின் பங்குதான் இவரைச் சரியாக வைத்திருக்கிறது. அதனால் காலத்தை ஆராதிக்க வேண்டும்.

சின்ன வயதில் பொறுப்பு இல்லாமல் இருப்பான். சிரமம் இருக்காது. நடு வயதில் சரீரத்தில் சக்தி இருக்கிறது. சமாளித்தார். அறுபது வயதில் மனம், உடல் ஆகியவற்றின் ஒத்துழைப்பு போய்விடுகிறது. காலம் மட்டுமே உதவ வேண்டும். எனவே, இதுவரை நன்றாக வாழ்ந்ததற்கும், அடுத்த 60 வருஷம் நன்றாக வாழ்வதற்கும் காலத்தை வணங்குகிறார். ஜோதிடத்தில் ஒருவரின் வயது 120 வருடங்கள்; 100 அல்ல. இந்த ஆராதனைக்கு சஷ்டி அப்த பூர்த்தி என்று பெயர். மனிதரைக் கொண்டாடுவது என்று பொருள் அல்ல.

சதாபிஷேகம் என்பது ஆயிரம் சந்திரனைப் பார்ப்பது. அதற்கு எண்பது வயதானால் போதாது. எண்ணிப் பார்த்தால் 80 வருடம் 10 மாதம் வரும். அதற்கு முன்னதாக 1000 சந்திரனைப் பார்க்க முடியாது. இங்கேயும் ஆயிரம் சந்திரனைப் பார்த்ததுதான் விசேஷம்.

அதர்வண வேதத்தைச் சொல்வது, மனிதனுக்கு அருள் வழங்கும் இறைவனைத் தடுக்கும் காரியம் என்கிறார்களே!

- ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்.

இப்படி ஒரு விளக்கம் அந்த வேதத்துக்கு இல்லவே இல்லை. இப்போது நீங்கள் சொல்லித்தான் கேள்விப்படுகிறேன். நான்கு வேதங்களில் ஒன்றான அதர்வண வேதத்தில் நிறைய யாகங்கள், பூஜைகள் உண்டு.

இன்னும் சொல்லப் போனால், மற்ற மூன்று வேதங்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு அதர்வண வேதத்துக்கு இருக்கிறது. நமக்கு ஏற்படும் மனப் பிணிகளுக்கான தீர்வையும் அந்த வேதம் சொல்கிறது. மன, உடல் ஆரோக்கியம் நமக்கு வேண்டாமா? ஆன்மிகத்தோடு நின்று விடாமல் நமது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அளவில் மணி, மந்திரம், ஔஷதம் ஆகியவற்றைச் சொல்லி விளக்குகிறது. இப்படிப்பட்ட அதர்வண வேதத்தைப் பற்றி யாரோ சொன்னார்கள் என்று தவறாகச் சொல்லக் கூடாது!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கடவுள் பெயருக்கு அர்ச்சனை செய்யலாமா?

ஒரு கோயிலில் காளி உருவம் கொண்ட அம்மன், தன் காலடியில் சிவபெருமானை ஆக்ரோஷமாக நசுக்குவது போல் காட்சி அளிக்கிறாள். இதன் விளக்கம் என்ன?

– வி.ஆர்.முருகன், சென்னை-23.

ஆர்.வி.மயில்வாகனன், மதுரை-7.

சக்தி வழிபாடு என்று ஒன்று உண்டு. இதில் இரண்டு வகை. ஒன்று மென்மையாக வழிபடுவது. மற்றொன்று உக்கிரமான வழிபாடு. பழைய காலத்தில் படிக்காதவர்களாக இருந்தபடியால், உக்கிரமாக வழிபட்டார்கள். இதற்கு தந்திர சாஸ்திரம் என்று பெயர். இதில் மண்டை ஓட்டு மாலை அணிந்து, நாக்கைத் துருத்திக் கொண்டு ரௌத்ரமாகக் காட்சி அளிப்பாள் அம்பாள். இப்படி வழிபட்டவர்கள் காபாலிகர்கள் எனப்பட்டார்கள். இதை கௌளாசாரம் என்றும் சொல்வது உண்டு.

இதைவிட உசத்தியான வழிபாடு, சமயாசாரம் எனப்படும் மென்மையான வழிபாடுதான். படித்தவர்களாக இருக்கும் நாம் அதைத்தான் பின்பற்ற வேண்டும் என்று சொல்லி அதைப் பரப்பியவர் ஆதிசங்கரர்.

கௌளாசாரத்தில் சக்திதான் முழுமுதற் கடவுள் என்பது தத்துவம். சக்திதான் எல்லாவற்றுக்கும் மேலே. பரமேஸ்வரனோ மற்றவர்களோ இல்லை என்று காட்டுவதற்காக நிறையக் கதைகள் உண்டு. பரமேஸ்வரனுக்கும் மேலே அம்பாள் என்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



சகஸ்ரநாமத்தில் வரும். ஸ்ரீவித்யார்ணவ தந்த்ரம் என்ற நூலிலும் இப்படிப்பட்ட குறிப்பு உண்டு.

எங்கெல்லாம் ஒருத்தரை உசத்தியாகச் சொல்ல வேண்டுமோ, அங்கெல்லாம் இன்னொருத்தரை சிறியதாகத்தான் சொல்ல முடியும். விஷ்ணு படுத்திருப்பார். அவர் நாபியில் ஒரு தாமரை இருக்கும். அதில் பிரம்மா இருப்பார். விஷ்ணுவின் பிள்ளை பிரம்மா என்பார்கள். ஆனால், சிருஷ்டிக்கே கடவுள் பிரம்மாதான். கந்த புராணத்தை எடுத்துக் கொண்டால் எல்லாரையும்விட உயர்ந்தவன் கந்தன் என்று வரும்.

அம்பாள் வழிபாட்டில் அம்பாள்தான் உயர்ந்தவள் என்று காட்டுவதற்காக இப்படிப்பட்ட விக்கிரகங்கள் வந்தன. இதனால் சிவன் ஒன்றுமில்லை என்று நினைத்து விடாதீர்கள். சக்தி இல்லை என்றால் சிவம் இல்லை; சிவம் இல்லையேல் சக்தி இல்லை!

திருக்கோயில்களில் ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்யும்போது, நம் பெயருக்குத்தான் செய்ய வேண்டும். கடவுள் பெயருக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அல்ல. ஏனெனில், அர்ச்சனையின்போது சொல்லும் மந்திரத்தில் 'சகல பாவ பீடா பரிகார்த்தம் (என் எல்லாப் பாவங்களும் போவதற்காக)' என்று வரும். இது மனிதர்களுக்குத்தானே தவிர தெய்வத்துக்கு அல்ல என்று அர்ச்சகர்கள் கூறுகிறார்களே... விளக்கம் தேவை!

– கே. ராஜலட்சுமி, நங்கநல்லூர்.

பகவான் பெயரைச் சொல்லி அர்ச்சனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு ஏதேனும் தேவை என்கிற கோரிக்கை இருந்தால் மட்டுமே, அர்ச்சனை வரும். எனவே, உங்கள் பெயரைச் சொல்லித்தான் செய்ய வேண்டும்.

நீங்கள் ஏதோ காரணத்துக்காக உங்கள் பெயரைச் சொல்லாவிட்டால்கூட, அந்த அர்ச்சகர், 'இதோ, இப்போது வந்தாரே இவர் நன்றாக இருக்க வேண்டும்' என்று சொல்லி அர்ச்சிக்கலாமே... 'ஊரில் இருக்கும் அத்தனை பேரும் நல்லபடியாக இருப்பதற்காகத்தான் நான் தினப்படி அர்ச்சனை செய்து வருகிறேன். உங்களுக்கு விசேஷமாக ஏதோ தேவைப்படுகிறது. அதைச் சொல்லுங்கள். அதைப் பிரார்த்தனையில் சேர்த்துக் கொள்கிறேன்' என்றுதான் அந்த அர்ச்சகர் சொல்ல வேண்டும். பகவானது பெயரில் செய்யச் சொன்னால், அவருக்கு விளக்கிக் கொண்டு இருக்க வேண்டாமே... அர்ச்சகர், தானாகவே பக்தர் பெயருக்குச் செய்துவிட்டுப் போகலாம்.

எனக்கு எந்த கோரிக்கையும் இல்லை என்ற எண்ணத்தோடு அர்ச்சனை செய்வது அலட்சியம். சங்கல்பம் இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது. 'லோகம் எல்லாம் நல்லா

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இருக்கணும்' என்று சொல்லியாவது அர்ச்சனை செய்யலாம்!

பெரும்பாலான கோயில்களிலும் அன்றாடம் பூஜை மற்றும் வழிபாடுகள் நடக்கின்றன. ஆனால், சபரிமலை ஐயப்பனுக்கு மட்டும் சித்திரை விஷுக்கணி, மார்கழி மண்டல பூஜை, மகர விளக்கு காலம் தவிர மற்ற நாட்களில் நடை திறப்பதில்லையே ஏன்? இதற்கு ஏதேனும் சாஸ்திர சம்பிரதாயம் உண்டா?

- பி. சீனிவாசன், குணசீலம்.

நாமாக உருவாக்கும் கோயில்களுக்கு நிறைய விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றின்படி வழிபட வேண்டும். சில கோயில்கள் தானாக வரும். இத்தகைய கோயில்களுக்கு வழிவழியாக என்ன வழிபாடோ அதைத்தான் பின்பற்ற வேண்டும். ஐயப்பன் கோயில் தானாக வந்தது.

இங்கு முதலில் இருந்தே வருடத்துக்கு ஒரு முறைதான் வழிபடுவது என்பது வழக்கத்தில் இருந்தது. எனவே, நிரந்தர பூஜை என்பது அவசியம் இல்லை. இப்போது நீங்கள் குறிப்பிடும் மற்ற சந்தர்ப்பங்களில் நடை திறப்பது என்பதே கால மாற்றத்தால் வந்ததுதான். இன்னும் முப்பது நாற்பது வருடங்களில் தினப்படி பூஜை என்பதும் வந்து விடும். அந்த தெய்வம் அங்கே குடியிருப்பதால், அதை நாம் தினப்படி சென்று தரிசிக்க முடியாததால், நமக்கு குறை வராது. நமது சக்திக்கு உட்பட்ட ஒரு விஷயத்தில் நாம் தப்பு செய்தால்தான் பாவம் சேரும். சக்திக்கு அப்பாற்பட்ட

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



விஷயங்களில் நமக்குக் குறை ஒன்றும் வராது.

சமாதி மீது லிங்கம் வைத்து வழிபடுவது பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனால், ரமணர்கூட தன் தாயாரின் சமாதி மேல் லிங்கப் பிரதிஷ்டை செய்து கோயிலாக்கி வழிபட்டிருக்கிறாரே?! அது தவறா?

– ஆ. சுப்பிரமணியன், சென்னை-23.

சாஸ்திரங்களில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ, அதைச் சொல்வது என் வேலை. நீங்கள் ஒரு பெரியவரைச் சொல்லி, அவர் செய்ததெல்லாம் சரி என்கிற சிந்தனை உடையவராக இருக்கிறீர்கள்.

ஒரு சட்ட திட்டம் இருக்கிறது. சாஸ்திரம் படித்தவர் சட்ட திட்டத்தோடுதான் இருப்பார். சாட்சாத் கிருஷ்ண பரமாத்மாவே சட்ட திட்டத்தோடுதான் செயல்பட்டார். ரமண பகவான் செய்ததால், சாஸ்திர விருத்தமில்லை என்று எடுத்துக் கொள்ளக் கூடாது.

'காரியம் எதுவாக இருந்தாலும் சாஸ்திரம்தான் பிரமாணம்' என்று பகவானே சொல்லியிருக்கிறார். ரமணர் போனபிறகு அங்கே நடந்ததை வைத்து சாஸ்திரத்தை விலக்கலாம் என்று எண்ணக் கூடாது.

தங்கத்தில் கொலுசு செய்து காலில் போடக் கூடாது என்பது ஏன்?

– உமரி. பொ.கணேசன், மும்பை-37.

என்னென்ன ஆபரணங்களை எப்படி எப்படி அணிய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மெட்டியை வெள்ளியில் செய்து அணிய வேண்டும். பெரிய பணக்காரி என்பதற்காகத் தங்கத்தில் போடலாமோ?

வாயில் தங்கப் பல் வைப்பார்கள். வெள்ளிப் பல் வைப்பார்களா? இன்னின்ன பாகங்களில் இன்னின்ன ஆபரணங்களை அணிவது என்பதை விதிமுறையாகக் கடைப்பிடித்து வருகிறோம். 'கையில் கட்டும் வாட்ச்சை கழுத்தில் கட்டிக் கொள்ளலாமா?' என்று

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கேட்பதைப் போல் இருக்கிறது உங்கள் கேள்வி!

சாப்பிடுவதற்கென்று ஒரு வழிமுறை இருக்கிறது. அப்படித்தான் சாப்பிடுகிறோம். உடை உடுத்துவதற்கென்று ஒரு வழிமுறை இருக்கிறது அதன்படி உடுத்துகிறோம். கண்ணாடி போட்டுக் கொள்பவர் ஃப்ரேமை வேண்டுமானால் தங்கத்தில் செய்துகொள்ளலாம். காசு இருக்கிறதே என்று கண்ணாடியையே தங்கத்தில் போட்டுக் கொள்ள முடியுமோ? காலில் தங்கத்தைப் போட வேண்டும் என்று தேவை ஒன்றும் இல்லை.

பளிச் என்று பார்க்கும்போதே தெரிகிற இடத்தில் தங்கம் போடுவதுதான் வழக்கம். 'தங்கக் கொலுசு போட்டிருக்கிறேன்' என்று எதிரில் வருபவருக்குக் காலைத் தூக்கிக் காட்ட முடியுமா?

எனவே, ஏற்கெனவே இருக்கும் வழக்கத்தை மாற்ற வேண்டிய தேவை ஒன்றும் இல்லை!

சகஸ்ர நாமாவளி 108 முறை சொல்கிறோம். காயத்ரி மந்திரத்தை 108 அல்லது 1008 முறை சொல்கிறோம். இந்த எண்களுக்கு தனி சக்தி ஏதும் இருக்கிறதா?

– எஸ்.எல்.வி. மூர்த்தி, சென்னை-40.

எண்ணிக்கைக்கு ஒரு சக்தியும் இல்லை. மந்திரத்துக்குத்தான் சக்தி. ஏதோ ஒரு நடைமுறையை நாம் ஒரு நாளில் கடைப்பிடித்தாக வேண்டும். அதனால் ஒரு நாளைக்கு 108 முறை ஜபிக்க வேண்டும் என்று சொல்லி வைத்திருக்கிறார்கள். எண்ணிக்கைத்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தத்துவத்தை வைத்துக் கொண்டு காயத்ரி வரவில்லை. காயத்ரி தத்துவத்தை வைத்துக் கொண்டுதான் ஜபிக்கச் சொன்னார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் 25 லட்சம் தடவை காயத்ரி ஜெபிக்கச் சொல்கிறார்கள். அங்கே என்ன 25 லட்சம்?

இன்னொருவருக்கு 10 லட்சம் தடவை சொல்லச் சொல்கிறார்கள். மற்றொருவரிடம், 'நீ ஒரு தப்பு பண்ணியிருக்கிறாய். 100 தடவை ஜபி!' என்கிறார்கள். இங்கெல்லாம் எண்ணிக்கைக்கு என்ன அலகு? தினமும் சாப்பிடுகிறோமே, ஒரே அளவில்தானே சாப்பிடுகிறோம்? மாறுவதில்லையே? சொல்லப் போனால் அதிக எண்ணிக்கையில் மனம் போனபடி ஜபிக்கக் கூடாது. ஒரு நாள் அதிகமாகச் சொல்லிவிட்டு அடுத்த நாள் அதே அளவில் சொல்ல முடியாமல் போகலாம் இல்லையா..?

எண்ணிக்கைக்கு எந்த விதமான சாஸ்திர சம்பந்தமும் இல்லை.

என் நண்பரின் தங்கை இறந்துவிட்டார். அதன் பிறகு 11-ஆம் நாளே அவர்களது வீட்டில் சுமங்கலிப் பிரார்த்தனை செய்தார்கள்... அப்படிச் செய்யலாமா?

– வசந்தி கேசவன், ஓசூர்.

உறவு என்பது மிகப் பெரிய விஷயம். அதுவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன்- தம்பி உறவு விசேஷமானது.

அப்படிப்பட்ட உறவினர் வீட்டில் துக்கம் நடந்தால், இறந்தவர் பற்றிய சிந்தனையிலேயே அனைவரும் இருப்பார்கள் என்பதால், ஒரு வருட காலத்துக்குச் சுபகாரியங்களை நிறுத்தி வைக்க வேண்டும். சுமங்கலிப் பிரார்த்தனை போன்ற வழிபாடுகள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

செய்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கிறதே... இறப்பு என்பது திடீரென்று அல்லவா வந்தது? இறந்தவரைச் சிந்தையில் வைக்க வேண்டாமா? அதற்காக விசேஷங்களை ஒரு வருடம் கழித்துப் பண்ணிக் கொள்ளலாம். இறந்தவருக்கு கல்யாணம் ஆகியிருந்தால் அவர் வேறு வீட்டுப் பெண். இவர்கள் வீட்டில் நல்ல காரியம் செய்யலாம்.

'தை முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு!' என்று சொல்லப் படுகிறதே, இது சரியா?

– த. சத்தியநாராயணன், அயன்புரம்.

நமக்குப் பிரியமானதாக இருந்தால், தை முதல் தேதியே புத்தாண்டு என்று கொண்டாடலாம். இதெல்லாம் நாமாக வைத்துக் கொள்வது. ஆனால், நாம் அறுபது வருடங்களுக்குப் பெயர் வைத்து வகுத்திருக்கிறோம். பார்த்திப, விய என்றெல்லாம் சொல்கிறோம். இந்தப் புத்தாண்டுகள் எல்லாம் சித்திரை மாதத்தில்தான் துவங்கும். தை மாதத்தில் அல்ல. பழைய ரீதியில் கடைப்பிடித்து வருவதை நாம் மாற்ற முடியாது. ஒரு குழுவாகச் சேர்ந்து கொண்டு 'இதுதான் புத்தாண்டு' என்று எதை வேண்டுமானாலும் நிர்ணயித்துக் கொள்ளலாம். அது உங்கள் சௌகரியம்.

கேரளாவில் கொல்லம் ஆண்டு, ஆவணி ஒன்றாம் தேதி வருடப் பிறப்பு. மற்றொரு சாராருக்கு கன்னி (புரட்டாசி) மாதம் ஆண்டு ஆரம்பம். ஆண்டு ஆரம்பத்துக்கு அதை வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. தெலுங்கருக்கு பங்குனி மாசம் அமாவாசை முடிந்து ஆண்டு தொடங்கும். அவர்களுக்கும் சித்திரை விஷு ஆரம்பம் அல்ல.

எதை மாற்ற வேண்டும், எதை மாற்றத் தேவை இல்லை என்பதில் நமக்குத் தெளிவு இருக்க வேண்டும். தேவை இல்லாததை மாற்றுவதால் என்ன பயன்?

தேவ கடன், ரிஷி கடன், பித்ரு கடன் என்றால் என்ன?

– ஸோனா, சென்னை-20.

தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள் எல்லாரும் நமக்கு நல்லது செய்திருக்கிறார்கள். அதனால், நாம் அவர்களுக்குக் கடன்பட்டிருக்கிறோம். தேவர்கள்தான் இந்த பூமியைச் செழிப்பாக்குகிறவர்கள். ஆதித்யன் ஒரு தேவன். வருணன் ஒரு தேவன். நம் கலாசாரத்தை நமக்குக் கொடுத்தது ரிஷிகள். நமக்கு போதித்தவர்களுக்கு நாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். நம் பெற்றோர்தான் நம்மை இந்த உலகத்துக்குக் கொடுத்தவர்கள். அதாவது பித்ருக்கள்! அவர்களை வணங்குவதும் நமது கடமை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிரம்மாவுக்கு பிரணவத்தின் பொருள் தெரியுமா?

பல கோடி அற்புதமான பீஜாட்சர சக்திகளைத் தன்னுள் கொண்டுள்ள, குறிப்பாக இல்லத்தில் மிகமிகப் புனிதமாக வைத்து வணங்கப்பட வேண்டிய ஸ்ரீசக்கரத்தை, சிலர் அழகுக்காகவும் கவர்ச்சிக்காகவும் சர்வ சாதாரணமாகத் தங்களது லெட்டர்பேடு மற்றும் விசிட்டிங் கார்டுகளிலும் அச்சிட்டு வைத்துக் கொள்கிறார்களே... இது சரியா?

- டி.எம்.கே. சென்னை-20.

தப்பான விஷயங்களை உலகம் செய்யும் போது அதைத் தப்பு என்று சொல்லித் திருத்த வேண்டிய பொறுப்பில் இருப்பவர்களே பேசாமல் இருக்கும்போது ஒரு சாதாரண பிரஜை இதைத் தப்பு என்று சொன்னால், அது நிற்குமா?

இன்னொரு விஷயம், பீஜாட்சரம் மிகவும் உசத்தியானது. அதை குரு- சிஷ்ய பரம்பரையாகச் சொல்லிக் கொடுத்து வந்தார்கள். வித்தையாக வைத்துக் கொண்டு தனது உயர்வுக்காகப் பயன்படுத்தப்படுவதுதான் அது. இதை முதலில் வியாபாரத்துக்குப் பயன்படுத்தியபோதே தடுத்திருக்க வேண்டும். உயர்வுக்கான வித்தையை வியாபாரத்துக்குப் பயன்படுத்தும்போது, இப்படி எல்லாம் வருவது இயற்கை.

உலகத்தை நாம் திருத்த முடியாது. நாம் சரியாக இருந்து கொள்ள வேண்டியதுதான்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பாவம், புண்ணியம் என்பதெல்லாம் உண்மையா? ஆண்டவனை அனுதினமும் வழிபட்டாலும் நல்லவர்களைச் சோதிப்பது ஏன்? உண்மை வெல்வதில்லை. பொய் உச்சிக் கோபுரத்தில் உயர்ந்து நிற்கிறதே, ஏன்?

– வி. எழில்ராணி வேல்முருகன், திட்டக்குடி.

மூன்று கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள். முதல் கேள்விக்கு வருகிறேன். பிறருக்குத் துன்பம் விளைவிப்பதெல்லாம் பாவம்; நன்மை விளைவிப்பதெல்லாம் புண்ணியம். ஒரு செயல்பாடு மற்றவருக்குத் துன்பத்தைக் கொடுத்தால் அது பாவம். மகிழ்ச்சியைக் கொடுத்தால், அது அறமாக இருக்கும் பட்சத்தில், தர்மத்தின் வழியில் இருந்தால், அதுதான் புண்ணியம்.

ஒருவன் கார் ஓட்டிச் செல்கிறான். ஓர் ஆட்டின்மீது ஏற்றினான். ஆடு செத்துப் போய்விட்டது. போலீஸ் பிடிக்கவில்லை. ஆனால், இன்னும் உயிர் வாழ வேண்டிய ஆண்டவனின் சிருஷ்டியான ஆட்டை அவர் கொன்று விட்டார். அது பாவம். எனவே, இதே மாதிரியான ஒரு துன்பத்தை அவர் அனுபவிக்கும்படியாக இயற்கை செய்யும். அது துயரம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒரு குழந்தை, கவனமில்லாமல் வண்டியில் மோதப் போகிறது. ஒருவர் பாய்ந்து வந்து குழந்தையைப் பிடித்து உருண்டு புரண்டு காப்பாற்றுகிறார். உடனே குழந்தையின் பெற்றோர் அவருக்கு வெகுமானம் கொடுக்கிறார்கள். இது புண்ணியம். அது சந்தோஷம்.

இரண்டாவது கேள்விக்கு வருகிறேன். நல்லவர்களைச் சோதிப்பது ஏன்? நீ எதைக் கொடுக்கிறாயோ, அது உனக்கே திரும்பும். நல்லது கொடுத்தால் நல்லது; கெட்டது கொடுத்தால் கெட்டது. பாவம், புண்ணியம் என்பதன் விளக்கங்களில் இதுவும் அடங்கும். பாவம், புண்ணியத்தில் மனிதர், விலங்கு என்கிற பாகுபாடு கிடையாது. விலங்குகளுக்கும் சுதந்திரம் உண்டு. அந்தச் சுதந்திரத்தை அழித்தால் அதற்குத் தண்டனை உண்டு. நன்மையோ தீமையோ அனுபவித்துத்தான் தீர்க்க வேண்டும். இந்த ஜென்மத்தில் தீரவில்லை என்றால், அது அடுத்த ஜென்மத்துக்கும் தொடரும்.

நல்லது- கெட்டதை அனுபவிக்கத்தான் அடுத்தடுத்த பிறவிகள். ‘நான் நல்லதும் செய்ய மாட்டேன், கெட்டதும் செய்ய மாட்டேன்’ என்று சொல்பவன் நல்லவன் ஆக மாட்டான். இப்படிச் சொல்வது அடம். நல்லது செய்யாமல் இருக்க அவன் போர்த்திக் கொள்ளும் போர்வை அது. நல்லது செய்துதான் வாழ வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இந்த ஜென்மத்தில் ஒருவன் நல்லது செய்வதைப் பார்த்து அவன் நல்லவன் என்று நீங்கள் முடிவெடுத்து விட்டீர்கள். போன ஜென்மாவில் என்னென்ன பாவங்கள் செய்தானோ, அதை அனுபவிக்கத்தானே இந்த ஜென்மா எடுத்திருக்கிறான். இப்போது நல்லது செய்கிறான் என்பதற்காக, அப்போது செய்ததை இல்லை என்று ஆக்க முடியுமா? செய்த வினை தீரணுமே... அதை அனுபவித்துத்தானே ஆக வேண்டும்.

நல்லவன்- கெட்டவன் என்பதைத் தெரிந்து கொள்வதே, இப்போது அவர் எதை அனுபவிக்கிறார் என்பதை வைத்துத்தான். இப்போது நல்லது செய்கிறார் அல்லவா, அதற்கான பலனை அடுத்த ஜென்மாவில் அனுபவிப்பார்.

மூன்றாவது கேள்விக்குப் பதில் இதுதான்: பொய் எப்போதும் ஜெயிக்காது. உண்மைதான் ஜெயிக்கும். ஒருவன் கன்யாகுமரியில் திருடினான். நாலு வருஷம் கழித்து அவனை ஜெய்ப்பூரில் பிடித்தார்கள். நாலு வருஷமும் அவன் சந்தோஷமாக இருந்தான் என்று அர்த்தமா? ஜெயித்ததா பொய்? நாம் நினைக்கும் சிறிய கால இடைவெளிக்குள்ளேயே அவனுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்று நினைக்கக் கூடாது. காலம் தள்ளிப் போகப் போக அவனுக்கான தண்டனை அதிகமாகிறது என்று பொருள்.

பொய் ஜெயிக்கிற மாதிரி தெரியும். கடைசியில் உண்மை ஜெயிக்கும். பொய் உச்சாணிக் கொம்பில் ஏறி நிற்கும். எதற்கு? கீழே விழுவதற்கு. உச்சாணிக் கொம்பில் நிலைத்திருக்காது. வில்லன் சந்தோஷமாக இருப்பான். ஹீரோதான் ஜெயிப்பான்.

செவ்வாய் தோஷம் இருந்தால், செய்யும் தொழிலில் பின்னடைவும் திருமணம் தள்ளிப் போவதும் எவ்வளவு காலத்துக்கு இருக்கும்? வாழைத் திருமணம் எனும் பரிகாரம் செய்வதால் தடை விலகுமா? அல்லது நவக்கிரக சாந்தி யாகம் செய்ய வேண்டுமா?

– சி. ராதாகிருஷ்ணன், முக்கூடல்.

முதலில் செவ்வாய் தோஷம் என்றால் என்னவென்று தெரிய வேண்டும். அடுத்து அது இடையூறு செய்கிறதா என்று தெரிய வேண்டும். அது நிரந்தரமாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்போதுதான் பரிகாரமே வரும். எடுத்த எடுப்பிலேயே பரிகாரம் இல்லை. உங்கள் எதிரி இடைஞ்சல் செய்கிறான் என்றால், பத்து நாட்கள்தான் பண்ணுவான் என்றில்லை. இருக்கிறவரை பண்ணுவான்.

செவ்வாய் தோஷம் இருப்பது உண்மை, அது உங்களுக்கு நிரந்தர இடையூறு செய்யும் என்கிற பட்சத்தில் அதை எந்தப் பரிகாரத்தாலும் மாற்ற முடியாது. இருக்கிற குறைகளுக்கெல்லாம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பரிகாரம் செய்ய முடியுமானால் கெடுதியை யார் அனுபவிப்பது?

ஒரு பணக்காரனுக்கு நல்ல ஜோதிடன் கிடைத்து விட்டான். அவன் மூலம் பரிகாரம் பண்ணியே இருக்கிற செவ்வாய் தோஷத்தை எல்லாம் கரைத்து விட்டால், செவ்வாயால் ஏற்படும் தீங்கை அனுபவிப்பது யார்? உலகத்தில் இருக்கிற ஏழைகளா? அப்படி எந்த சாஸ்திரமும் சொல்லாது. 'பரிகாரம் செய்து விலக்கலாம்' என்று ஜோதிடர் சொல்வது, 'ஒருவேளை அது பலித்தால் பலிக்கட்டுமே!' என்கிற எண்ணத்தில்தான். பரிகாரம் பலிக்கிற விஷயம் எது, பரிகாரம் இல்லாமல் அனுபவித்தே தீர வேண்டியது எது என்பதை ஜோதிடர் விளக்க வேண்டும்.

வாழைக் கல்யாணம் எங்கே வருகிறது என்றால், ஒரு செவ்வாய் தோஷத்துக்கு, இடையூறு செய்யும் சக்தி குறைவாக இருக்கிறது என்பதை பல கோணங்களில் ஆராய்ந்து அறிய முடிந்தால், இதற்கு இந்த அளவு பரிகாரம் பண்ண வேண்டும் என்று நிர்ணயம் செய்ய வேண்டும். சகட்டுமேனிக்கு செவ்வாய் இருந்தாலே வாழை கல்யாணம் என்று எங்கேயும் சொல்லப்படவில்லை.

மனத் திருப்திக்காக, 'பரிகாரம் செய்தால் சரியாகிவிடும்' என்று சொல்வர். நாம்தான் அவரிடம் இதற்குப் பரிகாரம் செய்தால் சரியாகுமா என்று விளக்கச் சொல்லிக் கேட்டுக் கொள்ள வேண்டும். பரிகாரம் என்பது ஜோதிடத்தின் பகுதியே அல்ல. அது தர்ம சாஸ்திரத்தின் அங்கம். அந்த ஜோதிடர் ஜோதிடம், தர்ம சாஸ்திரம் இரண்டிலும் ஞானம் உள்ளவரா என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சபரிகிரீசனைப் பற்றிச் சொல்லும்போது, அவர் பரமேஸ்வரனுக்கும் மகா விஷ்ணுவுக்கும் பிறந்தவர் என்று ஒரு கதை இருந்தாலும் புராணங்களில் அப்படி எதுவும் இல்லை என்று கூறி இருந்தீர்கள். அதே போல் பிரம்மாவுக்குப் பிரணவத்தின் பொருள் தெரியவில்லை என்றும், அதனால் முருகன் அவர் தலையில் குட்டி சிறையில் அடைத்ததாகவும் ஒரு கதை சொல்லப்படுகிறது. இது நம்பும்படியாக உள்ளதா?

- மா.வீ. இராமசேஷன், சென்னை-18.

நமது புராணங்களில் ஒரு தேவதையைப் பற்றிச் சொன்னால், அதை எந்த அளவுக்கு உயர்த்திச் சொல்ல வேண்டுமோ, எப்படி பெருமைப்படுத்தினால், அது படிப்பவர்களின் மனதில் பதியுமோ அந்தக் கோணத்தில்தான் சொல்லும். அந்தந்த க்ஷேத்திரத்துக்கும் இப்படிப் புராணம் உண்டு.

கடவுள்களில் யாரும் குறைந்தவர் இல்லை என்பதுதான் வேதக் கருத்து. எல்லா தேவதையும் உயர்ந்ததுதான். பரம் பொருள் ஒன்று.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



அது பல வடிவங்களில் காட்சி அளிக்கிறது என்னும்போது உசத்தி-தாழ்த்தி எப்படி வரும்?

ஜனங்கள் வெவ்வேறு வடிவங்களில் தெய்வங்களை வணங்கும்போது அவர் வணங்கும் குலதெய்வம்தான் மற்ற எல்லா தெய்வங்களையும்விடப் பெரியது என்று சொன்னால்தான் அவருக்கு ஒரு பிடிப்பு வரும். ஈடுபாட்டோடு வணங்கி தன்னை முன்னேற்றிக் கொள்வார். எல்லா குலதெய்வமும் ஒன்றுதான் என்று சொன்னால் ஏறாது.

பிரம்மாவைப் பற்றிச் சொல்லும்போது எல்லாமே அவர் சிருஷ்டிதான். மும்மூர்த்திகளையும் அவர்தான் சிருஷ்டி செய்தார் என்கிறோம். ஈஸ்வரனைச் சொல்லும்போது 'ஈஸ்வரன்தான் முதலில் இருந்தார். அவரிடம் இருந்துதான் எல்லாம் தோன்றின' என்கிறோம். இன்னோர் இடத்தில் 'அம்பாள்தான் மிகவும் உசத்தி. அந்த சக்திதான் எல்லா இடங்களிலும் சக்தியாக இருக்கிறது' என்கிறோம். உலகம் பூராவும் வியாபித்து இருக்கிற ஒரே பரம்பொருள் விஷ்ணுதான் என்கிறோம். நமது விளக்கங்கள்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இப்படித்தான் இருக்கும். விஷ்ணுவை ஆராதிக்க நினைப்பவர் விஷ்ணுவின் பெருமையை எண்ணி ஈடுபாட்டோடு வழிபட்டு தன்னை முன்னேற்றிக் கொள்வார். எல்லாரும் முன்னேற வேண்டும் என்ற எண்ணம்தான் சாஸ்திரத்துக்கு இருக்கிறது.

அதனால், பிரம்மாவுக்கு பிரணவத்தின் பொருள் புரியவில்லை என்று இந்தக் கதையில் இருந்து நீங்கள் புரிந்து முடிவு எடுக்கக் கூடாது. முருகனின் பெருமையை உணர வேண்டும்.

ஓர் உயிர் (நரகாசுரன்) கொல்லப்பட்ட நாளை, 'தீபாவளி' என்று விழாவாகக் கொண்டாடுவது சரியா?

– துரைமுருகன், திருப்பாச்சேத்தி.

நீங்கள் சொல்வதற்கும் தீபாவளிக்கும் சம்பந்தம் இல்லை. தீபாவளிக்கு தர்ம சாஸ்திரத்தின் விளக்கம் என்ன தெரியுமா? நரக சதுர்த்தசி. ஐப்பசி மாதம் அமாவாசைக்கு முன்னால் இருக்கக் கூடிய சதுர்த்தசி திதி அன்று காலையில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் அத்தனை பேரும் நரகத்துக்குச் செல்வதிலிருந்து விடுபட்டு மோட்சம் போவார்கள்.

'சகிக்க முடியாத துயரம்தான் நரகம். அங்கே போகாமல் இருக்க வேண்டுமா... நரக சதுர்த்தசி அன்று உஷத் காலத்தில் எழுந்து, எண்ணெய் தேய்த்துக் குளி' என்பது தர்ம சாஸ்திரத்தில் இருக்கும் குறிப்பு. அதிகாலை வேளையில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யக் கூடாது என்பது நியதி. இந்த தினத்தில் மட்டும் அதைச் செய் என்கிறார்கள். 'என்ன மாற்றிச் சொல்கிறீர்களே?' என்ற கேள்வி வரும். அப்போதுதான், இந்த நாளில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதன் சிறப்பு தெரியவரும்.

தைலே லக்ஷ்மீ ஜலே கங்கா. எண்ணெயில் லட்சுமி உட்கார்ந்திருக்கிறாள். நீரில் கங்கை இருக்கிறாள். கங்கையில் எல்லா பாவமும் போகும். லட்சுமி இருந்தால் ஐஸ்வரியம் இருக்கும். அங்கே நரக வேதனை மறையுமே... அதனால் எண்ணெய் தேய்த்துக் குளி.' இப்படிப்பட்டதுதான் தர்ம சாஸ்திரத்தின் குறிப்பு. இதில் ஒரு பிடிப்பு ஏற்படுத்துவதற்காக, குறிப்பிட்ட இந்த நரக சதுர்த்தசி நாளிலேயே நரகாசுரன் வதம் செய்யப்பட்டதாக புராணம் பின்னாளில் கூறியது. அவன் செத்துப் போய்விட்டதற்காகக் கொண்டாடுகிறோம் என்று நினைப்பது தவறு. ஒருத்தர் செத்துப் போனதைக் கொண்டாடுவதாக சநாதன தர்மத்தில் எங்கேயுமே வராது.

புனிதத் தலங்களுக்குப் பாத யாத்திரை செல்லும் பக்தர்கள், முடியாமல் போனால் பாதி வழியில் காலணி அணிந்து கொள்ளலாமா? இதனால் ஏதும் தெய்வ குற்றம் ஏற்படுமா?

– மு. மதியழகன், மேட்டுமருதூர்.

உடலுக்கோ மனதுக்கோ உபாதை வந்தால், அந்த உபாதையைக் குணப்படுத்திக் கொண்டால், எந்த தெய்வ குற்றமும் வராது. உடல்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

தகுதி, நடக்கும் சக்தி ஆகியவை இருந்து அகங்காரத்துக்காகக் காலணி அணியக் கூடாது.

இருந்தாலும் ஒரு சின்ன விளக்கம்... 5 வயதில் இருந்து 90 வயது வரைக்கும் உள்ளவர்கள் வைகுண்ட ஏகாதசி அன்று சாப்பிடாமல் உபவாசம் இருக்க வேண்டும். ஆனால், ஒருவரால் உபவாசம் (விரதம்) இருக்க முடியாத நிலை ஏற்பட்டால் அவர் சாப்பிடலாம். சாப்பிட்டால்தான் பகவானை ஆராதனம் பண்ண முடியும் என்றால், அவர் சாப்பிடுவதில் தப்பில்லை. நடந்து வர முடியவில்லை என்றால், நடந்து முயற்சி செய்வதே தப்பு. வீட்டில் இருந்து, 'என்னால் நடக்க முடியவில்லை பகவானே' என்று சொன்னாலே இங்கே வந்து வழிபட்ட பலன் கிடைக்கும் என்றுதான் தர்ம சாஸ்திரம் சொல்கிறது. முடியவில்லை என்பதற்காக இன்னொரு தப்பு செய்கிறேன் என்று சொல்லலாமா?

'எனக்கு தினப்படியாக திருப்பதிக்கு வந்து தரிசனம் செய்ய ஆசை. ஆனால், அது எனக்கு சாத்தியமில்லை. இந்த ஒரு முறைதான் என்னால் நேரடியாக வர முடிந்தது. எனவே, நான் தினமும் திருப்பதி வந்து தரிசனம் செய்ததாக எடுத்துக் கொள்' என்று வேண்டுவதாக ஒரு ஸ்லோகம் உண்டு. நீங்களும் உங்கள் இயலாமையை பகவானிடம் சொல்லுங்கள். அவர் ஏற்றுக் கொள்வார். அதை விட்டு செருப்போடு போகாதீர்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சிவ தாண்டவம் எத்தனை?

திருவெண்காடு அகோரமூர்த்தி கோயில் காசிக்குச் சமம் என்கிறார்கள். இங்கும் நமக்கு விருப்பமானவற்றை விட்டுவிட்டால் மோட்சம் கிடைக்குமா?

-எம்.எல்.ஏ. நாராயணன், மயிலாடுதுறை.

சிராத்தம் செய்யும்போது, 'எனது வீடே கயை. சாப்பிடுபவர் கதாதரன்' என்று சொல்லுவோம். நமது வீடு கயை ஆகுமா? சாப்பிடுபவர் கதாதரன் ஆக முடியுமா? அந்த அளவுக்கு உசத்தி என்பதற்காக அப்படிச் சொல்கிறோம். சமம் என்றால் சமமல்ல. காவியங்களில் நாயகியின் முகம், சந்திரனுக்குச் சமம் என்பார்கள். ஒரு பெண்ணுக்கு நிலா முகம் இருந்தால், எப்படி இருக்கும்? அந்த அளவுக்கு இதில் கௌரவம் இருக்கிறது என்பதற்காக அப்படிச் சொல்வது வழக்கம். அதனால் உங்கள் ஊர் காசி ஆகாது. காசி காசிதான்; மயிலாடுதுறை மயிலாடுதுறைதான். கிரகணம் விடும்போது எங்கோ குளித்தால்கூட கங்கா ஸ்நானம் செய்த பலன் என்பார்கள். நாம் குளிக்கும் இடம் எல்லாம் உண்மையான கங்கை ஆகுமா? நமக்கு ஈடுபாடு வருவதற்காக, உயர்வைக் காட்டுவதற்காகச் சமம் என்று சொல்வது உண்டு.

சங்க இலக்கியத்தில் திருமுருகாற்றுப்படை இருக்கிறது. ஆனால், முருகனின் அண்ணனான கணபதிக்கு திருவிநாயகர் ஆற்றுப்படை இல்லையே... ஏன்?

– கே. சபாபதி, கோவைப்புதூர்-42.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இலக்கியத்தில் விநாயகர் அகவல் இருக்கிறது. முருகன் அகவல் இல்லை.

பெரியாழ்வாரின் கற்பனையில் உதித்த கதாபாத்திரம் ஆண்டாள். உண்மையில் அப்படி யாரும் வாழ்ந்ததில்லை என்று ஒரு மூதறிஞர் கூறியுள்ளது உண்மையா?

- க. முத்தம்மாள், மதுரை-9.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

புராணங்கள், இதிகாசங்களில் சொல்லப்பட்டுள்ளவை எல்லாம் கற்பனை என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். அவை எல்லாம் நடந்திருக்கக் கூடும் என்கிற சாராரும் உண்டு. அது கற்பனையோ, உண்மையோ அதிலிருந்து நமது வாழ்க்கைக்குத் தேவையான நல்லுரைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அது கற்பனை என்பதால், நல்ல ஒரு சிந்தனையை அலட்சியப் படுத்தலாமா? கதையை மட்டும் பார்க்கக் கூடாது. அதில் இருந்து நாம் எதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று யோசிக்க வேண்டும்.

ஆண்டாளைப் பற்றி என்ன சொல்கிறார்கள்? பக்தி அதிகரித்து இறைவனோடு நெருக்கமாகி அவனுக்கு உண்டான மாலையையே அணிந்து பார்த்து அணிவிக்கிறாள். இது உயர்ந்த பக்தியைத்தானே வெளிப்படுத்துகிறது.



ஒரு மூதறிஞர் சொன்னார் என்பதற்காக ஆண்டாள் பொய் என்கிறீர்கள். எத்தனையோ மூதறிஞர்கள் அதெல்லாம் உண்மை என்கிறார்களே! அதை ஏன் எடுத்துக் கொள்ளவில்லை? இந்த சர்ச்சைக்குள் போனால் நமக்குத் தேவையான படிப்பினை எதிலிருந்தும் கிடைக்காது. நல்லவன் ஆகத் தேவையான கருத்துகள் எங்கிருந்தாலும் தேடிப் போய் அதை எடுத்துக் கொள்வோம்.

வட்டிக்குப் பணம் விட்டுச் சம்பாதிப்பவரை கடவுள் தண்டிப்பாரா?

– கீதா முருகானந்தம், திருவைகாவூர்.

பணத்தை வட்டிக்குக் கொடுத்துச் சாப்பிடும் மனிதரை ஆண்டவன் மன்னிப்பதும் உண்டு, தண்டிப்பதும் உண்டு. எவன் ஒருவன் வட்டிக்கு விடாமலேயே தனது வாழ்க்கையை நல்லபடியாக நடத்த முடியுமோ, அவன் வட்டிக்கு விடக் கூடாது. நல்ல படிப்பு, உத்தியோகம், நேர்மையான வழியில் வருமானம் ஆகியவை இருக்கும்போது வட்டிக்கு விட்டால் கடவுள் தண்டிப்பார்.

வேறு வழியே இல்லாமல் திணறுபவன் வட்டிக்கு விட்டுச் சாப்பிட்டால் மன்னித்து விடுவார். உன் வயிற்றைக்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காப்பாற்றுவதற்காக நீ எந்த வேலையையும் செய்யலாம் என்று சொல்வார். ஏனெனில், நீ உயிரோடு இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் அவர். அதே நேரம் நீ வளர்ந்து செழித்து விட்டால் அதைச் செய்யாதே, அதிலிருந்து விடுபட்டு நல்ல முறையில் நடந்துகொள் என்கிறார்.

பழங்காலத்தில் உணவை விலைக்கு விற்கக் கூடாது என்பார்கள். அன்னத்தை தானம்தான் செய்ய வேண்டும். உணவு விற்கிற பொருள் என்பதை சாஸ்திரம் ஒப்புக் கொள்ளாது. வேறு வழியில்லாத அநாதரவான நிலை வந்தால், உணவை விற்கலாம். நிலைமை சரியானதும் அந்தக் காரியத்தை நிறுத்திவிட வேண்டும்.

நெருங்கிய உறவினர் ஒருவர் சமீபத்தில் சிவலோகப் பிராப்தி அடைந்து விட்டார். அங்கு போயிருந்தேன். வடக்கில் தலை இருக்கும்படி படுக்க வைத்திருந்தனர். பொதுவாக, நம் வீடுகளில் வடக்கில் தலை வைத்துப் படுக்கக் கூடாது என்பார்கள். பிரேதத்தை வடக்குப் பக்கம் தலைவைத்து படுக்க வைக்கலாமா? அதே இடத்தில், வேறு சிலர் 'தெற்கு நோக்கித்தான் தலை இருக்க வேண்டும். உடனே மாற்றுங்கள்' என்று வாதிட்டார்கள். எது சரி?

– எம்.யோகம், சென்னை-44.

உயிர் போய்விட்டால் அது வெறும் உடல். அதற்கான சட்ட திட்டங்களே தனி. உயிரோடு இருக்கும்போதுள்ள சட்ட திட்டங்களில் இருந்து மாறுபட்டவை அவை. பிரேதத்தைத் தெற்குப் பார்த்துப் போடுவது வழக்கம். அதையே கடைப்பிடிக்கலாம். அங்கே சண்டை போட்டார்கள் என்பது நமக்குத் தொடர்பு இல்லாத விஷயம். சிலர், நான் கிழக்கே போடுவேன் என்றுகூடச் சொல்லலாம். இன்னும் சிலர் உயிரற்ற பூத உடலை, ஒரு நாற்காலியில் உட்கார வைத்து அலங்காரம் எல்லாம் பண்ணி இருப்பார்கள். அங்கே தெற்கு, வடக்கு ஏது?

இப்படிப் பரம்பரை பரம்பரையாகச் சிலர் வேறு வேறு வழக்கங்களைக் கடைப்பிடிப்பது அவரவர் சௌகரியம். 'தெற்கே தலை வைத்துப் போடு' என்று சொல்கிறது தர்ம சாஸ்திரம்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



காலையில் தினசரி பூஜை செய்து கண்ணாடி பார்க்காமல் திருநீறும் திருநீற்றுக்கு மத்தியில் சந்தனப் பொட்டும் அதன் மத்தியில் குங்குமப் பொட்டும் இடுவது என் வழக்கம். கண்ணாடி பார்த்துக் கொண்டே செய்வதுதான் முறையா?

– சக்தி மணி, கீழப் பந்தல், செய்யார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கண்ணாடி பார்த்து விபூதி இட்டுக் கொள்வதில் முறைகேடு எதுவும் இல்லை. அணிகிற விபூதி, குங்குமம் அழகாக இருக்க வேண்டும் என்று உங்கள் மனம் நினைத்தால் அதில் தப்பே இல்லை. உங்களுக்கும் அழகாக இருக்க வேண்டும்; பார்ப்பவர்களுக்கும் அழகாக இருக்க வேண்டும் என்று நினைப்பது இயல்புதான். கண்ணாடி என்பதே முகத்தைப் பார்த்துக் கொள்ளத்தான். வீட்டில் அங்கங்கே கண்ணாடி வைத்திருப்போம். நிலைக்கண்ணாடி வைத்திருப்போம். பீரோ இருந்தால் அதில் ஒரு கண்ணாடி. பெண்கள் கைப்பைக்குள் ஒரு சின்னக் கண்ணாடி... போகிற இடத்தில் பார்த்துக் கொள்ளத் தோதாக!

கண்ணாடி பார்க்காமல் இட்டுக் கொள்வதுதான் உசத்தி என்று இல்லை. பட்டை சரியாக விழுந்திருக்கிறதா, பளிச் என்று தெரிகிறதா என்றெல்லாம் பார்க்கலாம். ஏனெனில், உங்களைப் பார்த்து இன்னொருத்தரும் விபூதி இட்டுக் கொள்ள ஆரம்பிக்கலாம் அல்லவா!

எனது வீட்டில் சமீபத்தில்தான் கல்யாணம் நடந்தது. ஆகவே மூன்று மாதத்துக்குள் மஹாளய சிராத்தமும், அடுத்த மூன்று மாதம் அமாவாசை தர்ப்பணமும் செய்யக் கூடாது என்று சிலரும், செய்யலாம் என்று சிலரும் சொல்கிறார்கள். எது சரி?

– பி. ராமகிருஷ்ணன், நெய்வேலி.

மஹாளய அமாவாசை என்பது வருடத்துக்கு ஒரு முறை வரக்கூடிய விசேஷமான பகுதி. எல்லாரும் சிராத்தம் செய்ய வேண்டிய பகுதி அது. மகனுக்குக் கல்யாணம் செய்திருந்தாலும் சிராத்தம் செய்வதை நிறுத்தக் கூடாது. அதற்கு அலப்ய யோகம் என்று பெயர். முன்னோர்களை ஆராதனம் பண்ணக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பம் அது. அதை நழுவ விடக்கூடாது. மஹாளய சிராத்தம் பண்ணிய பிறகு தர்ப்பணத்தையும் பண்ணலாம். 'எள்ளை வைத்து தர்ப்பணம் பண்ணாதே' என்றுதான் சொல்வார்கள். தர்ப்பணமே பண்ணாதே என்று யாரும் சொல்ல மாட்டார்கள்!

சிவ தாண்டவம் 108 என்பதாகக் கேள்விப்பட்டேன். இதை விளக்கும் நூல் எது?

– கோட்டை உமேஷ், தோவாளை.

ரிக், யஜுர், சாம வேதங்களில் இருந்து எடுக்கப்பட்டது நாட்டிய சாஸ்திரத்தின் சாராம்சம். பரத மகரிஷியால் செழுமைப்படுத்தப்பட்டது இது. பரதனுக்கும் முன்பாக இதை நடைமுறைப் படுத்தியவர்கள் இரண்டு பேர். பரமேஸ்வரன், பார்வதி. நடனத்தில் இரண்டு வகை உண்டு. ஒன்று, மிக

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மென்மையானது. அதற்கு லாஸ்யம் என்று பெயர். உக்கிரமான நடனத்துக்கு தாண்டவம் என்று பெயர். தாண்டவம் ஆடியவர் பரமேஸ்வரன். லாஸ்யம் ஆடியவள் பார்வதி. இந்த நடனங்களைப் பற்றிய விவரங்கள், தச ரூபகம் என்ற நூலில் கிடைக்கும். பரதனின் நாட்டிய சாஸ்திரம் என்கிற நூல் சம்ஸ்கிருதத்தில் இருக்கிறது. அதில் தாண்டவத்தின் வகைகள் விவரிக்கப்பட்டுள்ளன. அந்த நூலின் ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்புகளும் இருக்கின்றன. நடனம் ஆடிக்கொண்டு இருப்பவர்களிடமும் இதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

சிதம்பரத்தில், ஒருவர் இறந்துவிட்டால் மோட்ச தீபம் ஏற்றுவார்கள் என்று கேள்விப்பட்டேன். எனக்கு வயது எண்பது. நான் இறந்த பிறகு யாராவது ஒருவர் எனக்கும் மோட்ச தீபம் ஏற்ற வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். முடியுமா? சிதம்பரம் தவிர வேறு ஊர்களில் உள்ள சிவன் கோயில்களில் மோட்ச தீபம் ஏற்றலாமா?

– ஜெயலக்ஷ்மி, திருச்சி-8.

பாரதத்தில் பிறந்தவர்கள் அனைவருமே, 'துன்பத்தில் இருந்து விடுபட்டு மோட்சம் அடைய வேண்டும்!' என்று நினைப்பவர்கள். இறந்து போன ஒருவர், துன்பத்தில் இருந்து விடுபட்டு மோட்சம் அடைய வேண்டும் என்று பிரார்த்தித்து வேறு ஒருவர், ஒரு கோயிலில் தீபம் ஏற்றுகிறார். எந்தக் கோயிலில் ஏற்ற வேண்டும் என்பதெல்லாம் கிடையாது. கோயிலுக்கு எத்தனை பேர் வந்து போகிறார்கள், கோயிலின் வருமானம் எவ்வளவு, அது எவ்வளவு பிரசித்தி பெற்றது என்பதெல்லாம் மோட்ச தீபத்தோடு சம்பந்தப்படாதது. ஒரு வேளை பூஜை நடக்கும் சிவன் கோயிலில்கூட ஏற்றலாம்.

ஒருவரைத் துன்பத்தில் இருந்து விடுவிக்க வைப்பதற்காக, வேறு ஒருவரால் கோயிலில் ஏற்றி வைக்கப்படும் தீபம்தான் மோட்ச தீபம்!

ஷண்ணவதி தர்ப்பண பூஜை என்றால் என்ன?

– ஸோனா, சென்னை-20.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஒரு வருஷத்துக்கு 96 சிராத்தங்கள் உண்டு. முன்னோரை நினைத்து தர்மம் செய்ய 96 நல்ல நாள். 12 அமாவாசை, 12 வருஷப் பிறப்பு, அயனம்... இப்படி 96 உண்டு. எந்த நல்ல நாள் வந்தாலும் நாம் நம் முன்னோரை ஆராதனம் செய்ய வேண்டும். ஷண்ணவதி என்ற சம்ஸ்கிருதச் சொல்லுக்கு 96 என்று பொருள்.

சிவ தர்ப்பை, விஷ்ணு தர்ப்பை ஆகியவற்றை எவ்வாறு பிரித்தறிவது?

– டி.கே.எம், அடையாறு.

பகவான் பெயரை வைத்துக் கொண்டு இந்தப் பொருள் இவரைச் சேர்ந்தது, அது அவரைச் சேர்ந்தது என்றெல்லாம் சாஸ்திரம் சொல்லாது. தர்ப்பை என்று ஒன்று உண்டு. குசம் என்று ஒன்று உண்டு. தர்ப்பை என்பது பொதுதான். அதை ஒரு தெய்வத்தோடு சேர்த்துச் சொல்வது நாமாக ஏற்படுத்திக் கொண்டது. பகவானுக்கு எல்லாமே பிரியம். 'எனக்கு ஓர் இலையைக் கொடு; பூவைக் கொடு; ஒரு பழத்தைக் கொடு, போதும்' என்கிறான் கடவுள். 'இந்தப் பழத்தைக் கொடு' என்று எதையும் குறிப்பிட்டுக் கேட்கவில்லையே!

தர்ப்பையில் மட்டும் என்ன பாகுபாடு? தர்ப்பை கிடைக்கவில்லை என்றால் குசத்தை எடுத்துக் கொள்; அதுவும் இல்லை என்றால் அறுகம் புல்லை எடு என்றுதான் சாஸ்திரம் சொல்கிறது. தர்ப்பை என்பது பரிசுத்தமானது. சிவனும் பரிசுத்தம். விஷ்ணுவும் பரிசுத்தம். முருகனும் பரிசுத்தம். ஐயப்பனும் பரிசுத்தம்தானே... எனவே, தர்ப்பையும் பொதுதான். தெய்வத்தின் பெயரைச் சொல்லி பாகுபாடு ஏற்படுத்தாதீர்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மென்மையானது. அதற்கு லாஸ்யம் என்று பெயர். உக்கிரமான நடனத்துக்கு தாண்டவம் என்று பெயர். தாண்டவம் ஆடியவர் பரமேஸ்வரன். லாஸ்யம் ஆடியவள் பார்வதி. இந்த நடனங்களைப் பற்றிய விவரங்கள், தச ரூபகம் என்ற நூலில் கிடைக்கும். பரதனின் நாட்டிய சாஸ்திரம் என்கிற நூல் சம்ஸ்கிருதத்தில் இருக்கிறது. அதில் தாண்டவத்தின் வகைகள் விவரிக்கப்பட்டுள்ளன. அந்த நூலின் ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்புகளும் இருக்கின்றன. நடனம் ஆடிக்கொண்டு இருப்பவர்களிடமும் இதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

சிதம்பரத்தில், ஒருவர் இறந்துவிட்டால் மோட்ச தீபம் ஏற்றுவார்கள் என்று கேள்விப்பட்டேன். எனக்கு வயது எண்பது. நான் இறந்த பிறகு யாராவது ஒருவர் எனக்கும் மோட்ச தீபம் ஏற்ற வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். முடியுமா? சிதம்பரம் தவிர வேறு ஊர்களில் உள்ள சிவன் கோயில்களில் மோட்ச தீபம் ஏற்றலாமா?

– ஜெயலக்ஷ்மி, திருச்சி-8.

பாரதத்தில் பிறந்தவர்கள் அனைவருமே, 'துன்பத்தில் இருந்து விடுபட்டு மோட்சம் அடைய வேண்டும்!' என்று நினைப்பவர்கள். இறந்து போன ஒருவர், துன்பத்தில் இருந்து விடுபட்டு மோட்சம் அடைய வேண்டும் என்று பிரார்த்தித்து வேறு ஒருவர், ஒரு கோயிலில் தீபம் ஏற்றுகிறார். எந்தக் கோயிலில் ஏற்ற வேண்டும் என்பதெல்லாம் கிடையாது. கோயிலுக்கு எத்தனை பேர் வந்து போகிறார்கள், கோயிலின் வருமானம் எவ்வளவு, அது எவ்வளவு பிரசித்தி பெற்றது என்பதெல்லாம் மோட்ச தீபத்தோடு சம்பந்தப்படாதது. ஒரு வேளை பூஜை நடக்கும் சிவன் கோயிலில்கூட ஏற்றலாம்.

ஒருவரைத் துன்பத்தில் இருந்து விடுவிக்க வைப்பதற்காக, வேறு ஒருவரால் கோயிலில் ஏற்றி வைக்கப்படும் தீபம்தான் மோட்ச தீபம்!

ஷண்ணவதி தர்ப்பண பூஜை என்றால் என்ன?

– ஷோனா, சென்னை-20.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஒரு வருஷத்துக்கு 96 சிராத்தங்கள் உண்டு. முன்னோரை நினைத்து தர்மம் செய்ய 96 நல்ல நாள். 12 அமாவாசை, 12 வருஷப் பிறப்பு, அயனம்... இப்படி 96 உண்டு. எந்த நல்ல நாள் வந்தாலும் நாம் நம் முன்னோரை ஆராதனம் செய்ய வேண்டும். ஷண்ணவதி என்ற சம்ஸ்கிருதச் சொல்லுக்கு 96 என்று பொருள்.

சிவ தர்ப்பை, விஷ்ணு தர்ப்பை ஆகியவற்றை எவ்வாறு பிரித்தறிவது?

– டி.கே.எம், அடையாறு.

பகவான் பெயரை வைத்துக் கொண்டு இந்தப் பொருள் இவரைச் சேர்ந்தது, அது அவரைச் சேர்ந்தது என்றெல்லாம் சாஸ்திரம் சொல்லாது. தர்ப்பை என்று ஒன்று உண்டு. குசம் என்று ஒன்று உண்டு. தர்ப்பை என்பது பொதுதான். அதை ஒரு தெய்வத்தோடு சேர்த்துச் சொல்வது நாமாக ஏற்படுத்திக் கொண்டது. பகவானுக்கு எல்லாமே பிரியம். 'எனக்கு ஓர் இலையைக் கொடு; பூவைக் கொடு; ஒரு பழத்தைக் கொடு, போதும்' என்கிறான் கடவுள். 'இந்தப் பழத்தைக் கொடு' என்று எதையும் குறிப்பிட்டுக் கேட்கவில்லையே!

தர்ப்பையில் மட்டும் என்ன பாகுபாடு? தர்ப்பை கிடைக்கவில்லை என்றால் குசத்தை எடுத்துக் கொள்; அதுவும் இல்லை என்றால் அறுகம் புல்லை எடு என்றுதான் சாஸ்திரம் சொல்கிறது. தர்ப்பை என்பது பரிசுத்தமானது. சிவனும் பரிசுத்தம். விஷ்ணுவும் பரிசுத்தம். முருகனும் பரிசுத்தம். ஐயப்பனும் பரிசுத்தம்தானே... எனவே, தர்ப்பையும் பொதுதான். தெய்வத்தின் பெயரைச் சொல்லி பாகுபாடு ஏற்படுத்தாதீர்கள்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கர்ப்பவதியோடு வேறு வீட்டுக்கு குடி போகலாமா?

பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்தபடி ஸ்லோகம் சொல்லலாமா?

- ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்-2.

இரண்டு காரியங்களை ஒரே நேரத்தில் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால், இரண்டுமே சரியான பலனைத் தராது. மனம் முழுவதையும் இறை பக்தியில் செலுத்தி ஐந்தே ஐந்து நிமிடம் மட்டும் பிரார்த்தனை செய்யுங்கள்! அதுவே போதும். பகவான் உங்களிடம் 'இத்தனை மணி நேரம் என்னைத் துதித்துக் கொண்டே இரு!' என்று உத்தரவு போடுவதில்லையே!

ஒரு சிலர், வீட்டுக்கு அருகிலேயே சிறுசிறு விநாயகர் ஆலயங்களைக் கட்டிக் கொள்கிறார்களே... இது பலன் தருமா?

- த. சத்தியநாராயணன், அயன்புரம்.

'**எ**னக்கு பக்தி வந்துவிட்டது... தினப்படி நான் ஆராதனம் செய்யப் போகிறேன்!' என்ற எண்ணம் வந்து விட்டால், எந்த இடத்திலும் எந்த அளவிலும் கோயிலைக் கட்டலாம். நாம் தினப்படி எழுந்ததும், 'சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம் ப்ரஸன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்னோப சாந்தயே' என்று சொல்கிறோமே... எதை எழுதினாலும் முதலில் ஒரு பிள்ளையார் சுழி போட்டுவிட்டு ஆரம்பிக்கிறோமே...

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



மனதில் விநாயகர் இருக்கிறார். சொல்லில் விநாயகர் இருக்கிறார். படத்தில் விநாயகர் இருக்கிறார். ஆத்தங்கரை அருகில் இருக்கிறார். குளக்கரையில் குந்தியிருக்கிறார். வீட்டுக்கு அருகில் இருக்கக் கூடாதா என்ன? தாராளமாக வைத்துக் கொள்ளலாம்.

விநாயகர் சுலபமான தெய்வம். அவர் இல்லாத இடமே இல்லை. வீட்டு வாசலில் மாத்திரம் இல்லாமல், எங்கே வேண்டுமானாலும் வைக்கலாம். இது நமது பக்தியையும் தேவையையும் பொறுத்தது; நமது பண்பாடும்கூட.

இறைவனை 'ஸ்வாமி' என்று ஏன் சொல்கிறோம். வைணவர்கள் கடவுளை 'உடையவர்' என்கிறார்களே... அதற்கு என்ன அர்த்தம்?

- எஸ். ஆறுமுகம், கழுகுமலை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கடவுளை எந்தப் பெயரைச் சொல்லியும் அழைக்கலாம். 'சொம்' என்றால் சொத்து. அதை உடையவன் ஸ்வாமி. சொத்து உடையவனாக இருப்பதால் 'உடையவர்'.

'ஸ்ரீரங்கம் ரங்கநாதர் போன்ற பள்ளிகொண்ட கடவுளரை சுப்ரபாதம் பாடி எழுப்புவது சரி. திருப்பதி வேங்கடாசலபதி போன்ற நின்ற திருக்கோலக் கடவுள்கள் தூங்குவதில்லை. அவர்களுக்கு சுப்ர பாதம் பாடுவது அர்த்தமற்றது!' என்று ஒரு பேச்சாளர் சொன்னார். எல்லாக் கடவுள்களுக்கும் சுப்ரபாதம் சரி தானா?

- கே. நாராயணன், புதுக்கோட்டை-1.

சுப்ரபாதம் எல்லாம் நமக்காகத்தான். கடவுளுக்கு இல்லை. ராமாயணத்தில் விஸ்வாமித்திரர், தனது யாகத்தைக் காப்பாற்றுவதற்காக ராம- லட்சுமணரை அழைத்துப் போகிறார். போய்க் கொண்டிருக்கும்போது, வழியில் ஓர் இடத்தில் படுத்து உறங்குகிறார்கள். ரிஷி விழித்துக் கொள்கிறார். 'இன்றைய பொழுது தொடங்குகிறது. நான் உனக்குப் பணிவிடை செய்ய வேண்டும். எழுந்திரு!' என்று விடிந்ததை வெளிப்படுத்துகிறார். இதுதான் சுப்ரபாதம். நாம் பாடுவதும் அந்த அர்த்தத்தில்தான். நின்ற கோலம், அமர்ந்த கோலம், கிடந்த கோலம் எல்லாம் நம் பாவனை. அவர் நிற்கவுமில்லை, படுக்கவும் இல்லை. உருவமே இல்லாதவர் அவர். நாம்தான் உருவத்தைக் கொடுத்தோம். எங்கும் வியாபித்து இருக்கும் ஒருவரை நாம் எழுப்புகிறோம் என்பதில்லை. அவர்தான் நம்மை எழுப்புகிறார். எனவே நாம் நன்றாக இருக்க வேண்டுமானால், சுப்ரபாதம் பாடத்தான் வேண்டும். அது நமது கடமை!



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தமிழகத்தில் எந்தக் கோயிலிலாவது தல விருட்சமாக சந்தன மரம் உள்ளதா? கோயில் நந்தவனங்களில்கூட சந்தன மரங்கள் வளர்க்கப்படுவது இல்லையே, ஏன்?

- இரா. கல்யாணசுந்தரம், மதுரை-9.

சில வகை மரங்கள், சில இடங்களில்தான் வளரும். சில மண்ணில்தான் வளரும். திண்டிவனம் போனால் நிறைய புளிய மரங்களைப் பார்க்கலாம். சேலத்துக்குப் போனால் நிறைய மாமரங்கள் காணப்படும். ஓர் இடத்துக்குப் போனால் தென்னை ஜாஸ்தி, இன்னோர் இடத்துக்குப் போனால் தேக்கு. மண்ணின் வளத்தை ஒட்டி வளர்பவை இவை. எனவே, இங்கே சந்தன மரம் இல்லை என்பதோ, சந்தன மரம் இருந்தால் அதை ஸ்தல விருட்சமாக வைக்கக் கூடாது என்பதோ சாஸ்திரத்துக்குத் தொடர்பு இல்லாத விஷயங்கள். ஒவ்வொரு க்ஷேத்திரத்துக்கும் இதுதான் ஸ்தல விருட்சம் என்று நிர்ணயித்து வைத்திருக்கிறார்கள். கோயிலைச் சுற்றி விருட்சங்கள் இருக்க வேண்டும். இன்ன மரம்தான் என்பது கிடையாது. ஒரு கோயிலைச் சுற்றி சந்தன மரங்கள் இருந்தால் அப்படியே வைத்துக் கொள்ளலாம். சந்தனம் நமக்கு உபயோகப்படுகிறது, பகவானுக்கும் சார்த்துகிறோம் என்பதால், சந்தனத்தை ஸ்தல விருட்சமாக வைத்தாக வேண்டும் என்பதில்லை. சட்ட திட்டத்தோடு உருவாக்கப்படும் கோயில்களில் ஸ்தல விருட்சத்தை பெரியோர் நிர்ணயிப்பார்கள். தானே

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0 - In Public Domain. Muthulakshmi Research Academy

தோன்றும் கோயில்களில் சந்தன மரம் இருந்து, அதுவே ஸ்தல விருட்சமாகவும் இருந்திருக்கிறது. மற்றபடி சந்தனம் இல்லையே என்பது குறைபாடு ஆகாது.

பெண்கள் கர்ப்பமாக இருக்கும்போது, நாம் வேறு வீட்டுக்குக் குடி போகலாமா?

– ஆர். துரைசாமி, கோவை-47.

கர்ப்பமாக இருக்கும்போது தம்பதி இருவர் அல்ல, மூன்று பேர் என்று பொருள். பழங்காலத்தில் கல்யாணமானவுடன் கிரகப் பிரவேசம் செய்வது வழக்கம். அப்போது இருவராகத்தான் புதுமனைப் புகுவார்கள். வயிற்றில் குழந்தை இருக்கும்போது புது வீட்டுக்குப் போகக் கூடாது. குழந்தை பெரிதானதும் குடிபோகலாம். ஐந்து மாதம் தாண்டினால்தான் கர்ப்பம் நிலைத்திருக்கும். அதற்கு முன்னதாக கர்ப்பம் இருப்பதை ஒப்புக் கொள்ள முடியாது. அதுவரை புது வீட்டுக்குப் போவதில் தவறில்லை.

வாடகை வீட்டுக்குப் போகும்போது இதை எல்லாம் பின்பற்ற வேண்டியதில்லை. வாடகை வீடு நிரந்தரம் அல்ல; அடிக்கடி மாறிக் கொண்டு இருப்போம். அது கிரகப் பிரவேசமே அல்ல. நமது சொந்த வீட்டுக்குத்தான் கர்ப்பவதியாகப் போகக் கூடாது!

இறந்தவர்களின் தகனக் கிரியையில் ஒரு சிறு சந்தனக் கட்டையை வைத்து எரிக்கிற வழக்கம் நிலவுகிறதே, இதன் தாத்பரியம் என்ன?

- ஸோனா, அடையாறு.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இறுதிச் சடங்கு செய்யும்போது ஒரு நல்ல பொருளையும் வைத்து எரிப்போமே என்ற எண்ணத்தில் வந்த வழக்கம் இது. அவரவர் பொருளாதார வசதிப்படி சந்தனத்தின் அளவு மாறலாம். சந்தனத்தை பூமிக்கு இணையாகச் சொல்கிறது சாஸ்திரம். மனிதன் போகும்போது அவன் உடலில் இருக்கும் நீர், நீரோடு சேர்கிறது. அக்னி, ஆதித்யனோடு சேர்கிறது. உடல் பூமியோடு சேர்கிறது. அப்படி பூமியோடு ஐக்கியமாகும்போது பூமிக்கு இணையான சந்தனத்தையும் வைத்து எரிக்கிறார்கள்.

எனக்கு 67 வயது. போலீஸாகப் பணியாற்றியவன். இளமைத் திமிரில் நான் செய்யாத தவறுகள், பாவ காரியங்கள் இல்லை. பிறகு மனமாற்றம் ஏற்பட்டு, அம்பாள் பக்தனாக மாறி விட்டேன். பல கோயில்களில் அம்பாள் தரிசனம் செய்திருக்கிறேன். தினமும் ஸ்லோகங்களை மனப்பாடமாகச் சொல்வேன். ஆன்மிகப் புத்தகங்கள் பெரும்பாலானவற்றைப் படித்திருக்கிறேன். நான் வேற்று மதத்தைச் சேர்ந்தவன். இறை பக்தி ஏற்பட்ட பிறகு புலால் உண்பதையும் நிறுத்தி விட்டேன். குரு தீட்சை பெறவில்லை என்றால், இவை எதுவுமே பலன் தராது என்கிறார்கள். நான் குரு தீட்சை பெறுவது எப்படி?

– ஒரு வாசகர், சென்னை-96.

நம் முன்னோர் எந்த தர்மத்தில் இருந்தார்களோ, எந்த நடைமுறையைக் கடைப்பிடித்தார்களோ, எந்த மதத்தைப் பின்பற்றினார்களோ அதையே நாமும் பின்பற்றினால், நல்ல கதியை அடையலாம் என்பது இந்து சாஸ்திரத்தின் அடிப்படைத் தத்துவம்.

'தனக்குரிய தர்மத்தைக் கடைப்பிடிப்பவன் மோட்சத்தை அடைவான்' என்று சொல்கிறது பகவத் கீதை. தர்மத்தின் மேல் பிடிப்பும் ஈடுபாடும் ஏற்பட்டு அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆனால், சிலருக்கு வேறு ஒரு தர்மத்தின்மேல் அதிகப்படியான பிரியம் ஏற்பட்டு அதைப் பின்பற்ற வேண்டும் என்று தோன்றுவது உண்டு. ஒரு மதத்தைச் சேர்ந்தவராக இருந்துகொண்டு வேற்று மதக் கடவுளை வழிபட்ட பலரைப் பற்றி சரித்திர ஆதாரங்கள் இருக்கின்றன. சபரிமலையில் ஒரு மதத்தைச் சேர்ந்தவர் இன்னொரு மதத்தைச் சேர்ந்தவருக்குப் பிரசாதம் கொடுப்பது என்கிற நடைமுறை இருக்கிறது.

ஷீர்டி சாயிபாபாவை எந்த மதம் என்று சொல்வது? பார்ப்பவர்கள் எந்த மதமோ அந்த மதத்தைச் சேர்ந்தவர் போல் அவர் தோன்றுவார். மிகுந்த பக்தியோடு, பிற மதத்தை அதன் உண்மையான தத்துவத்தைப் புரிந்து கொண்டு அதற்கு மாறுபவர்களும் இருக்கிறார்கள். அந்த வகையில் உங்களுக்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சாக்தத்தின் மேல், அம்பாள் வழிபாட்டின் மேல் ஈடுபாடு வந்திருக்கிறது என்றால், அது ஏதோ பூர்வ ஜென்ம வாசனையாக இருக்கலாம்.

தன் பரம்பரையையும் பழைய நீண்ட கால நம்பிக்கைகளையும் மீறி இன்னொரு மதக் கடவுளின்மீது உங்களுக்கு ஈடுபாடு வந்திருக்கலாம். ஆதிசங்கரர் ஒரு குருவைத் தேடிக் கொண்டு போனார். எங்கேயோ வடக்கில் ஓர் இடத்தில் கோவிந்த பகவத் பாதாள் கிடைத்தார். குருவாக ஏற்றுக் கொண்டார்.

எல்லோருக்கும் ஒரு குரு அவசியம் தேவை. அம்பாளின் தத்துவத்தை குருவின் வாயால் வாங்கிக் கொள்வதன் பெயர்தான் குரு தீட்சை. சட்ட திட்டத்தோடு உள்ள குரு தீட்சை என்பது மிகப் பெரியது. இப்போது குருவின் வாயால் அம்பாளின் ஏதாவது ஒரு தத்துவத்தை சொல்லக் கேட்டாலே போதும்.

நீங்கள் குருவைத் தேடி அலைய வேண்டியதும் இல்லை. சௌந்தர்யலஹரிக்குப் பன்னிரண்டு விரிவுரைகள் எழுதப்பட்டு ஒரே புத்தகமாகக் கிடைக்கிறது. அம்பாளின் தனித்தன்மை, பீஜாட்சரம், மந்திரம் ஆகியவற்றை ஒரு குரு, சிஷ்யனுக்குச் சொல்லி அருள வேண்டும். தனது விரிவுரையில் இவை அனைத்தையும் அப்பட்டமாக விளக்கிச் சொல்லியிருந்தார் ஒரு வியாக்கியான கர்த்தா. இதைப் பார்த்த ஒருவர், 'ஒரு குரு சொல்லி இன்னொருவர் அறிந்து கொள்ள வேண்டியவற்றை இப்படி எழுதலாமா?' என்று கேட்டார். 'நான் எழுதியதைப் படித்தார் அல்லவா..? நான் அவருக்கு குரு ஆகிவிட்டேன்!' என்றார் வியாக்கியான கர்த்தா.

வால்மீகி இருந்தார். ஒரு நாள் அவருக்கு தவம் செய்ய வேண்டும் என்ற ஆசை வந்தது. ஆனால், என்ன மந்திரத்தைச் சொல்வது என்று தெரியவில்லை. அப்போது அங்கே வந்த நாரதர், 'ராமா' என்று சொல் என்றார். அவர் குரு ஆகிவிட்டார். வால்மீகியும் ராமா, ராமா என்று ஜபித்து பெரிய மகரிஷியாக மாறிவிட்டார்.

ஒரு குருவைக் கண்டுபிடித்து அவருக்குப் பணிவிடைகள் செய்து தீட்சை பெறவில்லையே என்று வருத்தப்படாதீர்கள். நான் சொன்ன புத்தகத்தைப் படித்தாலே தெளிவு கிடைக்கும். ஒருமித்த மனதோடு அம்பாளை நினைத்து வழிபடுங்கள், நீங்கள் விரும்பும் மோட்சம் நிச்சயம் கிடைக்கும்!

செவ்வாய், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் முடி வெட்டிக் கொள்ளக் கூடாது என்கிறார்களே... ஏன் ?

- கே.வி. சீனிவாசன், கோவை-2.

முடி, உடலின் பகுதிகளில் ஒன்று. நாம் பிறக்கும்போதே இருப்பது அது. பல்கூட அப்புறமாகத்தான் முளைக்கும். மீசை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பிறகுதான் வரும். கடைசிக் காலம் வரை முடி நம்மோடு இருக்கிறது. அதனால்தான் பழைய காலத்தில் இருந்தவர்கள் முடி வளர்த்தார்கள். நம் உடற்பகுதிகளை எந்தெந்த நாட்களில் இழக்கலாம் என்பதற்கு சாஸ்திரத்தில் விஸ்தாரமான விளக்கங்கள் இருக்கின்றன. நாள், கிழமை, நட்சத்திரம் போன்றவை எல்லாம்கூட அதில் இருக்கும்.

காலப்போக்கில் கிழமையை மட்டும் பார்த்தால் போதும் என்றாகிவிட்டது. எனவே, இன்னின்ன கிழமைகளில் முடி வெட்டக் கூடாது என்பதைப் பின்பற்றுகிறோம். 'குஜதின மதி ஷ்டமிதி' என்று ஜோதிட சாஸ்திரம் இதைக் குறிப்பிடும்.

செவ்வாய், சனி ஆகியவை குஜதினங்கள். நல்ல காரியம் செய்வதைத் தவிர்க்க வேண்டிய தினங்கள். வெள்ளிக் கிழமை அன்று நல்ல நாள். ஆனாலும் ஒரு நல்ல நாளிலா இதைச் செய்வது என்கிற சிந்தனையில் வெள்ளியும் அதில் சேர்ந்து கொண்டது. வெள்ளிக்கிழமை முடி வெட்டக் கூடாது என்பது எல்லோருக்கும் பொருந்தாது. தகப்பனார் இல்லாதவர்கள், வெள்ளிக் கிழமை முடி எடுக்கலாம். அவர்களும் செவ்வாய், சனிக் கிழமைகளில் முடி வெட்டிக் கொள்வது கூடாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அனைத்து ஜீவராசிகளுக்கும் ஆன்மா உண்டா?

எங்கள் ஊரில் ஆஞ்சநேயருக்கு வருடா வருடம் திருமணம் செய்து வைத்துக் கொண்டாடுகிறார்கள். ஆஞ்சநேயர் திருமணம் ஆனவரா? அவர் மனைவி பெயர் என்ன? விவரமாகத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

- எஸ்.பெருமாள், தைலாவரம்.

கடவுளை, கல்யாணம் ஆனவராகக் கொண்டாடுபவர்களும் உண்டு. பிரம்மச்சாரியாகக் கொண்டாடுபவர்களும் உண்டு. கிருஷ்ண பரமாத்மாவைச் சொல்லும்போது 'பதினாறாயிரத்தெட்டு கோபிகைகளுக்கு நீதான் தலைவன்!' என்று சொல்வதுண்டு. 'நீ அநாதியான பிரம்மச்சாரி' என்றும் 'சின்ன வயதிலிருந்தே நீ நிரந்தர பிரம்மச்சாரி' என்றும் கிருஷ்ணனைப் போற்றுவது உண்டு. பகவானை நாம் எந்த வடிவிலும் பார்க்கலாம்.

ஒரு பிரம்மச்சாரியைக் கல்யாண கோலத்தில் ஒரு பக்தர் பார்த்துவிட்டால், நீங்கள் கவலைப்படுவதற்கு அதில் ஒன்றுமில்லை. கதைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவே கூடாது. முருகன், பழநியில் மொட்டை அடித்துக் கொண்டு தலையில் சந்தனத்தைப் பூசிக் கொண்டு ருத்திராட்சம் அணிந்து ஆண்டியாக நிற்கிறார். இன்னொரு கோயிலில் போய்ப் பாருங்கள், வள்ளி- தெய்வானையோடு சுகமாக உட்கார்ந்திருப்பார். அவர் அப்படியும் இருப்பார். இப்படியும் இருப்பார். பகவானை எந்தக் கோலத்தில் பார்த்தால், உங்களுக்குச் சந்தோஷமாக இருக்கிறதோ, அந்தக் கோலத்தில் பாருங்கள். அவனுக்கு எந்தத் தேதியில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



கல்யாணம் நடந்தது, குழந்தை பிறந்ததா, சரிவரக் குடும்பம் நடத்தினானா, குழந்தைக்கு என்ன பெயர் என்கிற மாதிரியான சிறிய விஷயங்களில் மனதைச் செலுத்த வேண்டியதில்லை!

தத்துவத்தை விளக்க எத்தனையோ கதைகள் இருக்கும். அவன் தேவாம்சம் பொருந்தியவன் என்பதற்காக வந்தவை அவை. கல்யாணம் ஆனவன்- ஆகாதவன் என்பது நமது சங்கல்பம். நமது வாழ்க்கையோடு கடவுளை ஒப்பிட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பாக்கெட் பாலால் கோயில்களில் அபிஷேகம் செய்வது சரியா? இதனால் புண்ணியம் கிடைக்குமா? சில கோயில்களில் கறந்த பாலை மட்டுமே அபிஷேகத்துக்கு ஏற்றுக் கொள்கிறார்கள். அபிஷேகத்துக்கென வந்து சேரும் பாக்கெட் பாலைத் தொடுவதே இல்லை. தவிர, எவர்சில்வர் பாத்திரத்தால் ஸ்வாமி விக்கிரகங்களுக்கு அபிஷேகம் செய்யலாமா?

- எம்.ரமணன், சென்னை-83.

ஒரு விஷயம் கவனிக்க வேண்டும். ஆயிரம் வருஷங்களுக்கு முன், ஐந்நூறு வருஷங்களுக்கு முன், நூறு வருஷங்களுக்கு முன், ஐம்பது வருஷங்களுக்கு முன் என்று காலப்போக்கில் நமது வாழ்க்கை முறையில் எத்தனையோ மாறுபாடுகளைச் சந்தித்துக் கொண்டே வந்திருக்கிறோம். அவற்றை எல்லாம் தேவையா, இல்லையா என்று சிந்திக்காமலேயே ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

பொட்டணப் (பாக்கெட்) பால் என்பது கிராமங்களில் வராது. நகரங்களில்தான் வரும். நகரங்களில் பொட்டணப் பாலை அன்றாட வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டு விட்டோம் என்பதால், தப்பு எதுவும் வராது. இதுவே கிராமம் என்றால், வீட்டில் மாட்டையும் வைத்துக் கொண்டு எங்கோ போய் பால் பொட்டணத்தை வாங்கிக் கொண்டு வந்து அபிஷேகம் செய்தால்தான் தப்பு!

முதலில் மண் பாண்டத்தில் சமைத்துக் கொண்டு இருந்தோம். அப்புறம் பித்தளைப் பாத்திரம் ஆயிற்று. வெண்கலப் பாத்திரம் ஆயிற்று. அலுமினியத்தைத் தாண்டி எவர்சில்வருக்கு வந்திருக்கிறோம். நமது வாழ்க்கை முறையையே மாற்றி அமைத்துக் கொண்ட பிறகு, பகவானுக்கு மட்டும் மாறுதல் இருக்கக் கூடாது என்பது உங்களால் முடியாத காரியம். எவர்சில்வரைத் தவிர வேறு பாத்திரமே இல்லை எனும் ஊரில், அதை வைத்துக் கொண்டு பக்திதான் பெரிசு என்று பயன்படுத்த வேண்டுமே தவிர குழம்பத் தேவையில்லை.

'பொட்டணப் பால்தான் இருக்கிறது... அபிஷேகமே பண்ண மாட்டேன். பித்தளைப் பாத்திரம் கிடைக்கவில்லை... கோயிலுக்கே போக மாட்டேன்' என்று சொல்வது சரியாகுமா? அணைந்து அணைந்து எரிவது மாதிரி மின்விளக்குகள் போடுகிறார்கள். ஓ... ஓ... என்று இரைவது மாதிரி ஒலிபெருக்கிகள் வைத்திருக்கிறார்கள். அதை எல்லாம் ஏற்றுக் கொண்ட நீங்கள், பாலில் மட்டும் ஏன் பாகுபாடு பார்க்கிறீர்கள்?

எங்கள் பகுதியில், திருவிளக்கு பூஜையின்போது 'பூமாதேவிக்கு நமஸ்காரம்' என்று தரையைத் தொட்டு வணங்கிய பிறகு பூஜை தொடங்குகிறார்கள். இதற்கு என்ன பலன்?

- ஆர்.ஜி.வனிதா அம்பிகைராமன், திசையன்விளை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பூமியை, தாயாகச் சொல்கிறது வேதம். தாயை வணங்க வேண்டும். பூமித் தாயான மண்ணை எடுத்து நெற்றியில் வைத்துக் கொள்கிறோம். பூமியில் கிடைக்கும் கல்தான் சாளக்கிராமமாக வணங்கப்படுகிறது. நம் தாயும் ஜென்ம பூமியும் சமம். பிறந்த பூமி சொர்க்கத்தைக் காட்டிலும் உயர்ந்தது. யார், என்ன சொன்னாலும் பூமித் தாயை வணங்குவதை நிறுத்த வேண்டாம். பிறரைத் திருப்திப்படுத்த நினைத்தீர்களானால், உங்களால் உருப்படியாக எதையும் செய்ய முடியாது.

ஸ்ரீராமஜெயம் எழுதிய காகிதங்களை எங்கே போடுவது? குளத்திலா, கடலிலா... அல்லது ஏதாவது கோயிலில் அதைக் கொடுக்கலாமா?

- நம்பி ராஜம்மாள், சென்னை-116.

- மு.வெங்கடேசன், சென்னை-23.

சாதாரணமாகக் கோயில் கட்டும்போது அஸ்திவாரத்தில் இந்த ராமஜெயம் எழுதிய காகிதங்களை வைத்துக் கட்டுமானம் செய்வார்கள். இந்த சம்பிரதாயம், கொஞ்ச காலமாக இங்கே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற இடங்களில் கொடுக்கலாம்.

'நான் எழுதி முடித்தபோது எந்தக் கோயிலும் கட்டப்படவில்லையே...' என்கிறீர்களா? நாமம் எழுதிய காகிதம்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கெட்டுப் போக வேண்டாம் என்பதற்காக, காசிக்குச் செல்லும் யாராவது ஒருவரிடம் கொடுத்து கங்கையில் போடச் சொல்லலாம். கிழித்துப் போடுவது, எரிப்பது போன்ற அபசாரத்தைச் செய்யக் கூடாது!

முன்பு சுடுகாடு, ஊரைவிட்டுப் பல மைல் தூரம் தள்ளி இருக்கும். அப்போது சுடுகாட்டுக்கு ஆண்கள் மட்டும் போவார்கள். ஆனால், இப்போது சுடுகாட்டைச் சுற்றி வீடு கட்டிக் குடி இருக்கிறார்கள். பிணம் எரிவதைப் பார்த்துக் கொண்டே மக்கள் நடமாடுகிறார்கள். மக்களிடம் பயம் போய் விட்டதா?

- மீனா ரெங்கநாதன், மதுரை-3.

பாரதத்தில் பிறந்த எவருக்கும் பயம் என்ற ஒன்று கிடையாது. பிறந்தவன் ஒரு நாள் இறந்தே தீருவான் என்பது அனைவருக்கும் தெரியும். அதனால் மரணம் என்பது பயமுறுத்தும் விஷயம் அல்ல. கொள்ளி வைப்பது ஆண்களின் வேலை என்பதால், பெண்கள் அங்கே செல்வதில்லை. பெண்களுக்கு அங்கே வேலை இல்லை. திருவிழா போன்ற ஒரு விசேஷம் அல்ல, இறுதிச் சடங்கு. கடமையைச் செய்ய வேண்டிய இடம் அது.

இட நெருக்கடியால் நாமாகச் சுடுகாட்டுக்கு அருகில் வீடு கட்டிக் கொண்டு இருக்கிறோம். சுடுகாட்டுப் பக்கமாக இருந்தாலும் பிணம் எரிவதைப் பார்த்தாலும் ஒன்றும் தவறில்லை.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0 - In Public Domain. Muthulakshmi Research Academy



திருதியை அன்று யானையை தரிசித்தால் விசேஷம், சுபசகுனம் என்கிறார்களே, திருதியைக்கும் யானைக்கும் என்ன சம்பந்தம்?

– டி.கே.எம், சென்னை-20.

ஒரு சம்பந்தமும் இல்லை!

ஆலயம் சென்று, இறைவனை தரிசிப்பது போல் கனவு வந்தால் என்ன பலன்? கனவில் நாகத்தைக் காணலாமா?

– த. சத்தியநாராயணன், அயன்புரம்.

கனவில் கோயிலையும் பார்க்கலாம், நாகத்தையும் காணலாம். இரண்டுக்கும் காரணம் மனசு. பக்தியால் இது வந்தது என்று சொல்வது இருக்கிறதே, அது உண்மை. நாகம் வரக் காரணம் பயம். ஏற்கெனவே பார்த்தது கனவில் வரும். இதில் கெடுதல்- நல்லது என்று எதுவும் இல்லை.

சொப்பன சாஸ்திரத்தில் ஒன்று சொல்வார்கள். கனவில்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கெட்டது நடந்தால் நல்லதே நடக்கும் என்பார்கள். கனவு வந்தால் உடல் ஆரோக்கியம் இல்லை என்று பொருள். நீங்கள் நினைத்து கனவை வரவழைக்க முடியாது. கனவு வராமல் பார்த்துக் கொள்வதே நல்லது.

உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் ஆன்மா உண்டா? விலங்கினங்களுக்கு பாவ- புண்ணியம் உண்டா? அப்படியானால், மனிதன் விலங்காகவும் விலங்கு மனிதனாகவும் பிறக்க வாய்ப்பு உண்டா?

- கிஷோர் குப்புஸ்வாமி, சென்னை-40.

உலகில் இருக்கும் அத்தனை ஜீவராசிகளும் செயல்பட வேண்டுமானால், பகவானின் அம்சம் இருக்க வேண்டும். இதை சைதன்யம் என்பார்கள். இது எல்லா உயிர்களுக்கும் பொது.

விலங்குகளுக்கும் நமக்கும் இருக்கும் வேறுபாடு என்ன என்றால், நமக்கு புத்தி இருக்கிறது; விலங்குகளுக்கு இல்லை. விலங்குகள் தனியே செயல்படுவதில்லை. இயற்கையை ஒட்டி வாழ்கின்றன. இது பரதந்திரம். நாமோ சுதந்திரமானவர்கள். நாம்தான் பாவ-புண்ணியங்களைச் செய்கிறோம். விலங்குகள் செய்வதில்லை.

விலங்குகள் பாவம் செய்யாததால், அடுத்தடுத்து உயர்ந்த ஜென்மங்களுக்குத்தான் வரும். நாம் மிகவும் தவறு செய்தால் விலங்காகப் பிறப்போம். புத்தியோடு கூடிய ஆத்மாவுக்குத்தான் ஆத்மா என்று பெயர் வைத்திருக்கிறோம். ஆறாவது அறிவோடு சேர்ந்த சைதன்யத்துக்கு ஆத்மா என்று பெயர். ஆறாவது அறிவு இல்லை என்றால், அது வெறும் சைதன்யம்தான். அதற்குக் கர்ம வினை கிடையாது.

எல்லா இடத்திலும் வியாபித்து இருக்கும் கடவுள் ஒரு குடத்திலும்தான் இருக்கிறார். அதற்காக குடத்தை ஒரு ஜீவன் என்று சொல்ல முடியுமா? விலங்கினங்களுக்குக் கடவுள் சாட்சியாகவோ கண்காணிப்பாளராகவோ இருக்க வேண்டியதில்லை. ஏனெனில், அவை தவறு செய்வதில்லை. தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள பிற உயிர்களைக் கொல்பவை விலங்குகள். நம்மைப் போல சிந்தித்துப் பாவம் செய்யும் அறிவு அவற்றுக்கு இல்லை. எனவே, கர்ம வினை கிடையாது.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

மனிதரின் கெட்ட குணங்களுக்கு கடவுளும் ஒரு காரணமா?

திருப்பதி ஏழுமலையானை வழிபட்ட பிறகு, கீழ்த் திருப்பதியில் உள்ள அலர்மேல்மங்கைத் தாயாரை வணங்காமல் வந்துவிட்டேன். இதனால் எனக்கு தோஷம் ஏதும் ஏற்படாது அல்லவா?

- ஈ .ஹரிஹரன், நல்லான்பட்டி.

வழிபாடு என்பதற்குச் சில சட்ட திட்டங்கள் வைத்திருப்பார்கள். ஏழுமலையானைப் பார்த்து, கீழே இருக்கும் அலர்மேலுத் தாயாரை தரிசிப்பது என்பது சம்பிரதாயம். அவள் ஏழுமலையானின் பத்தினி. அவரைப் பார்த்தாச்சு, அவளையும் பார்க்க வேண்டும் என்று ஒரு தொடர்பு. ஒரு க்ஷேத்திரம் போய்விட்டு இன்னொரு க்ஷேத்திரம் போகாமல் வரக் கூடாது!

கங்கை நதி அருகில் போகிறீர்கள். ‘வண்டிக்கு நேரமாச்சு’ என்று குளிக்காமல் வந்தால் தப்பு. கங்கையைப் பார்த்தால் குளிக்க வேண்டும். அப்போதுதான் அதற்கு கௌரவம். இல்லை என்றால் அலட்சியப்படுத்தியதாக அர்த்தம். நித்தியமாக கங்கை நதி தீரத்திலேயே இருப்பவரானால், கங்கையைப் பார்க்கும்போதெல்லாம் குளிக்க வேண்டும் என்று அவசியமில்லை. வேறொரு காரியமாக கங்கை வழியாகப் போனாலும் குளித்தாக வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. கங்கையைப் பார்க்கப் போய்விட்டு குளிக்காமல் வருவது சரியாகாதே!

நீங்கள் திருப்பதிக்குப் போக வேண்டும் என்று எப்போது புறப்பட்டுப் போனீர்களோ, அங்குள்ள சட்ட திட்டத்தின்படி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நடக்கவும் வேண்டும். அவற்றை நிறைவேற்ற வேண்டிய நேரத்தை வைத்துக் கொண்டுதானே நீங்கள் செல்ல வேண்டும்? அப்போதுதானே நீங்கள் திருப்பதி போவதில் ஈடுபாடு இருக்கிறது என்று சொல்ல முடியும்? உங்கள் சிந்தையைக் கொஞ்சம் மாற்றுங்கள். தவறு செய்துவிட்டு வந்து, 'அது தவறாகாதே..?' என்று கேட்கிறீர்கள். நியதிப்படியே நடக்க முயலுங்கள்.

எருமேலிக்கு (சபரிமலை) போனால், வாவரைப் பார்த்துவிட்டுத்தான் போக வேண்டும். 'நான் வாவரைப் பார்க்காமல் நேரே போகிறேன்' என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு நடைமுறை உண்டு. அதைப் பின்பற்றுவது அவசியம்.

நீங்கள் கேட்ட கேள்விக்கு 'தப்பில்லை' என்று இப்போது பதில் சொன்னால், நாளை திருப்பதி போனால் ஏழுமலையானையும் எட்டிப் பார்த்துவிட்டுத்தான் வருவீர்கள். நாளாக நாளாக அதையும் நிறுத்தி விடுவீர்கள். போகப் போக அலட்சியம் அதிகமாகும். எப்போது உங்களுக்கு இரண்டு இடத்துக்கும் போக வாய்ப்பு இருக்கிறதோ அப்போது போனால் போதும். அப்படி முடியவில்லையா, போகவே போகாதீர்கள்!

'என் நிலை இப்படி. எனவே, நான் இருந்த இடத்தில் இருந்தே உன்னை வணங்குகிறேன். எனக்கு அனுக்கிரகம் செய்!' என்று சொன்னாலும் பண்ணுவார். அலட்சியப்படுத்தினால் எப்படி அனுக்கிரகம் செய்வார்?

கோயில்களுக்கும் நல்ல நேரம்- கெட்ட நேரம், வாஸ்து குறைபாடுகள் போன்றவை உண்டா? ஏனெனில், வெளியில் தெரியாத சில சிறு கோயில்கள்கூட திடீரென்று பிரபலமாகி

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



விடுகின்றன. பக்தர் கூட்டம், அபிஷேகம், அர்ச்சனை, காலம் தவறாத பூஜை என்று ஓகோவென வந்துவிடுகின்றன. ஆனால், சில கோயில்களில் பூஜை - புனஸ்காரங்கள் குறைந்து நாளடைவில் பராமரிப்பு இன்றிப் போய்விடுகின்றன. இது எதனால்? எனக்குத் தெரிந்த நண்பர், 'முழுமையாக வாஸ்து கோட்பாடுகளைப் பின்பற்றிக் கட்டப்பட்டதால், திருப்பதி கோயில் ஓகோ என்றிருக்கிறது. அருகில் இருக்கும் காளஹஸ்தி வாஸ்துப்படி அமையவில்லை' என்று ஏகப்பட்ட விளக்கம் கொடுக்கிறார். இது நிஜமா?

- பொன்னி, சென்னை-88.

பகவானுக்கு கோயில் என்றோ வாஸ்து என்றோ எதுவும் கிடையாது. அவையெல்லாம் மனிதர்களுக்குத்தான். எப்போதுமே, நடந்த விளைவைப் பார்த்துவிட்டு காரணத்தைக் கண்டுபிடிக்கக் கூடாது. விளைவுக்கு முன்னாடியே காரணம் சொன்னால், அதன்படி நடந்தால் அதை ஏற்றுக் கொள்ளலாம்.

ஜனங்கள் வருவது, போவது, அங்கே வரும் பணம் ஆகியவற்றை வைத்துக் கொண்டு அந்த பகவானின் கீர்த்தியை அளக்காதீர்கள். ஜனங்கள் வருவதும் வராமல் இருப்பதும் அவர்களின் மனதில் ஏற்பட்ட மாற்றமே தவிர, பகவானிடமோ கோயிலிலோ ஏற்படும் மாற்றம் அல்ல. ஒரு கால பூஜை உள்ள கோயிலாக இருந்தாலும் ஐந்து கால பூஜை நடந்தாலும் அதை வைத்து பகவானின் தரம் கூடுவதோ குறைவதோ இல்லை!

கோயில் அமைப்புக்கு என்று ஒரு சாஸ்திரம் இருக்கிறது. அது, மனிதர்கள் சம்பந்தப்படாத சாஸ்திரம். கோயிலை எப்படி அமைக்க வேண்டும்? கோயிலுக்கு வருபவர்கள் சௌகரியமாக சுவாமியைப் பார்க்க, தூய்மை கெடாமல் இருக்க, அமைதி குறையாமல் இருக்க

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கோயிலானது எந்த விதத்தில் அமைக்கப்பட வேண்டும் என்பதை சிற்ப சாஸ்திரம் சொல்கிறது. நீங்கள் நினைக்கிற வாஸ்துவுக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

எங்கேயோ மலை உச்சியில் ஒரு பழங்கால ராஜா கட்டி வைத்த கோயில் இருக்கிறதா, அதற்கு அதுவும் கிடையாது. மலைக்கு மேலே ஒரு வாஸ்து, கீழே ஒரு வாஸ்து என்பதெல்லம் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் வேலை.

அரச மரத்தடியில் ஒரு பிள்ளையாரைக் கொண்டு வைக்கிறான். என்ன வாஸ்து? பல பேர் ஆராதனை பண்ணிக் காரியத்தை சாதித்துக் கொள்கிறார்கள். அடித்தட்டு மக்களிடையே அந்த பிள்ளையார் ஏக பிரபலம்! ஒரு குழிக்குள்ளே போனால் அங்கே ஒரு பிள்ளையார் உட்கார்ந்திருக்கிறார். ஒரு வாஸ்துவும் கிடையாது. ஜம்புகேஸ்வரன் கோயில் எங்கேயோ ஒரு குகைக்குள் இருக்கிறது. நாம் சொல்லும் வாஸ்து அதற்கு உண்டா? ஒரு கல் இருக்கிறது, இதில் பகவான் இருக்கிறார் என்றால், அது கோயில்தான். ஜகன்னாதர் வெறும் மரம்தானே? வெளிநாட்டில் இருக்கும் கோயில்களைப் பாருங்கள்... ஒருவிதமாக இருக்கும். கேரளாவில் இருக்கும் கோயில்கள் வீடு மாதிரிதான் இருக்கும். நம்மூரில் கோபுரங்களோடு பிரமாண்டமாக நிமிர்ந்து நிற்கிறது. அவர் மனிதர் அல்ல; அவருக்கு வாஸ்து சொல்லி குழப்பிக் கொள்ளாதீர்கள்.

தற்செயலாக ஜோதிடம், கைரேகை பார்க்க நேர்ந்தது. ஜோதிடர்கள், 'உங்கள் வீட்டில் கன்னி இருக்கிறது. அதற்கு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

சேலை வைத்துக் கும்பிடுங்கள்' என்று கூறுகின்றனர். வீடுகளில் கன்னி தெய்வம் குடி இருக்குமா? அது கஷ்ட- நஷ்டங்களைக் கொடுக்குமா?

– மு. சிவகுருநாதன், புளியங்குடி.

ஒருவர் உங்களது வீட்டில் கன்னி இருப்பதாகச் சொல்கிறார் என்றால், எந்த நூலில், எந்த லட்சணத்தில் சொல்லப்பட்டிருப்பதை வைத்து அப்படிக் கூறுகிறார் என்பதை அவர் விளக்க வேண்டும். போகிற போக்கில் கன்னி இருக்கிறாள் என்றால், அதைக் காதில் போட்டுக் கொள்ளக் கூடாது. ஒரு கன்னி உங்களது வீட்டுக்குள் உட்கார்ந்து கொண்டு கஷ்டம் கொடுப்பதெல்லாம் கிடையாது. கன்னி, பேய் எல்லாம் மனப் பிரமை!

உங்களிடம் இருக்கக் கூடிய மன சஞ்சலத்தை அடையாளம் கண்டு, உங்களை மேலும் குழப்புவதற்காக ஒருவர் சொன்னாரென்றால், அதில் எத்தனை தூரம் உண்மை இருக்கும் என்பதை நீங்களே எண்ணிப் பார்த்துத் தெளிவடையுங்கள்.

இளமைக் காலத்தில் பணத்திமிரால் நான் செய்யாத அக்கிரமம் இல்லை. இப்போது அவற்றுக்காக வருத்தப்பட்டு, பரிகாரமாக சில நல்ல நடவடிக்கைகள் செய்து வருகிறேன். ஒரு சந்தேகம்... அந்தக் காலத்தில் எனது கெட்ட நடவடிக்கைகளுக்குக் கடவுளும் ஒரு காரணம்தானே? ஒருவேளை நல்ல நடவடிக்கைகளுக்கு மட்டும்தான் அவர் 'கிரெடிட்' எடுத்துக் கொள்வாரா?

– ஜி. நீலமேகம், பெங்களூர்-11.

நீங்கள் செய்யும் நல்லது- கெட்டதற்குக் கடவுள் எந்த வகையிலும் காரணம் இல்லை. நீங்கள் செய்வதை எல்லாம் அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் செய்த பூர்வ ஜென்ம வினை உங்களை நல்லது- கெட்டதைச் செய்ய வைக்கிறது. அது சரியானபடி நடக்கிறதா என்பதை அவர் கண்காணிக்கிறார்; சாட்சியாக இருக்கிறார். 'நான் செய்த கெடுதிக்கு அவர்தான் காரணம்!' என்று சொல்லாதீர்கள். அவர் தூண்டி விடவில்லை. உங்கள் கர்ம வினைதான் உங்களைப் பாவம் செய்யத் தூண்டுகிறது. நீங்கள் செய்த பாவம் தீர்ந்தவுடன், உங்களுக்கு நல்ல எண்ணம் வர ஆரம்பித்து விட்டது. அதையும் அவர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்.

ஒரு தவளையை, பாம்பு சாப்பிடுகிறது. இதை கடவுள் பார்த்துக் கொண்டு இருக்கிறார். விடுவிக்கவில்லை. தவளை பாவமில்லையா? கடவுளானவர் ஓர் உயிரைக் காப்பாற்ற வேண்டாமா? தவளையைக் கடவுள் காப்பாற்றி இருந்தால், பாம்பின் உணவைக் கடவுள் தட்டிப் பறித்து விட்டார் என்று குற்றம் சொல்வீர்கள். அதனால், நல்லது- கெட்டதை அவர்

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



பண்ணவில்லை. உங்களுக்குத் தேவையானதை எல்லாம் செய்யும் சேவகனாக கடவுளை நினைக்காதீர்கள். அப்படியில்லை கடவுள். அவர் எல்லோருக்கும் பொதுவானவர்.

துரியோதனன் ஒருமுறை ஸ்ரீகண்ணபிரான் இருக்கும்போது சொன்னான்: 'எனக்கு தர்மம் எது என்று தெரியும். அதர்மம் எது என்பதும் தெரியும். ஆனாலும் நான் அதர்மத்தில் இருந்து வெளிவந்து விடாதபடி என் புத்தி தடுக்கிறது. நான் அதர்மத்தையே கடைப்பிடிக்கிறேன்!' இத்தனைக்கும் துரியோதனன் எதிரில் பகவான் இருந்தும் அதைத் தடுக்கவில்லையே!

உங்கள் கர்ம வினை, புத்தியில் ஏறி நல்லது- கெட்டது செய்கிறீர்கள். அதற்கு பகவான் சாட்சி. சூரியன் தனது போக்கில் உதிக்கிறான். தாமரை மலர்கிறது. ஆம்பல் மலர் வாடுகிறது. இரண்டுக்கும் சூரியனா காரணம்? ஒன்றின் சுபாவம் மலர்வது; மற்றொன்றின் சுபாவம் வாடுவது.

ஆலயங்களில் ஆகம சாஸ்திரங்கள், வழிபாட்டு முறைகள் அறிந்தவர் எவரானாலும் ஜாதி வேறுபாடு இன்றி அர்ச்சகர் ஆகலாம் என்பதை ஆகமம் ஏற்றுக் கொள்கிறதா? குறிப்பிட்ட ஜாதியினர்தான் அர்ச்சகராக இருக்க வேண்டுமா?

_ தேதியூர் பாலு, சென்னை-11.

_ கே.எஸ்.எஸ்.மணி, மதுரை-1.

சாஸ்திரம், ஆகமம் போன்றவை வேதத்தில் இருந்து வந்தவை. வேதம், நம் போன்ற சாதாரண மனிதர்களால் உருவாக்கப்பட்டது அல்ல. அநாதி காலம் தொட்டு இருந்து வருவது. வேதம் படித்து,

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

அது கூறும் நல்லுரைகளை மனதில் வாங்கி, நடைமுறைப்படுத்தி வருபவர்கள் ஒரு சாரார். இதே போன்ற வேறு கடமைகளை நிறைவேற்றி வருபவர்கள் இன்னொரு சாரார்.

சாஸ்திரம் படித்தவர், தான் நற்கதி அடைய, தனது கடமைகளைச் செய்வதோடு பூஜை, புனஸ்காரம், வழிபாடு போன்றவற்றையும் தானே செய்ய வேண்டும். 'உண்டான செலவைக் கொடுத்து விடுகிறேன். எனது பூஜையை நீ செய். அதன் மூலம் நான் நற்கதி அடைவேன்!' என்று சொல்ல முடியாது. எனவே, தனது பூஜையைத் தானே தனது வீட்டில் சாஸ்திரப்படி செய்து கொள்கிறார்.

சாதாரண மக்களுக்கு என்ன வழி? தனது முன்னேற்றத்துக்கு, தானே வழிபடும்- அதாவது சாஸ்திரம் படித்தவர் இருக்கிறார் அல்லவா? அவர் செய்யும் பூஜையை சும்மா பார்த்தாலே போதும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பூஜை செய்த பலன் கிடைத்து விடும். அப்படி ஒருவர் செய்யும் பூஜையை பலரும் பார்ப்பதற்கான ஏற்பாடுதான் கோயில்.

கோயிலில் பூஜை செய்பவர், தனக்காக அதைச் செய்யவில்லை. தன்னைப் போல பலனடைய முடியாத மற்றவர்களும் பலன் அடைய வேண்டும் என்பதற்காகவே செய்கிறார்.

இதையும் 'நான் இந்த ஜாதியில் பிறந்தேன்' என்று சொல்லிக் கொண்டு நேராகப் போய் செய்துவிட முடியாது, கூடாது. *லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து:* என்று உலகில் உள்ள அத்தனை பேரின் நன்மையையும் விரும்பக் கூடிய, அதற்கான அறிவுரைகளைக் கூறும் வேதத்தைத் தெளிவாகக் கற்று, அதை தலைமுறைகளுக்குக் கை மாற்றி விடும் கடமையைச் செய்வேன் என்று உறுதி எடுத்துக் கொண்டு, ஆகம சாஸ்திரத்தின் மீது நம்பிக்கையுடன் அதைக் கற்றவர்களே அர்ச்சகர்கள் ஆக முடியும். இவரளவு வேதம் கற்ற இவரது உறவினரே ஆகம சாஸ்திரம் கற்கவில்லை என்றால், அர்ச்சகர் ஆக முடியாது. அதனால் ஒருவர் உயர்த்தி, இன்னொருவர் தாழ்வு என்பதில்லை!

அன்றாட வாழ்க்கையில் ஒருவர் மருத்துவம் படிக்கிறார். ஒருவர் பொறியியல் படிக்கிறார். இன்னொருவரோ சட்டத்தை நடைமுறைப்படுத்தும் கல்வியைத் தேர்ந்தெடுக்கிறார். அவரவர் எதில் வல்லுநரோ அந்தத் தொழிலைச் செய்கிறார். ஒரு தொழில் உயர்ந்தது, மற்றது தாழ்ந்தது என்று சொல்ல முடியாது.

ஒரு சிறிய வேறுபாடு- அர்ச்சகர் என்பவர் ஊழியர் அல்ல. அவருக்கு ரிட்டயர்மெண்ட், பென்ஷன் என்றெல்லாம் கிடையாது. அது ஓர் உத்தியோகம் அல்ல. அவர் ஒரு முதலாளியும் அல்ல. அவர் யாரையும் வேலை ஏவுவது கிடையாது. தானே நேரடியாக பூஜைகளில் ஈடுபட முடியாத அடித்தட்டு மக்களும் பிறவிப் பயனை அனுபவித்து, இறுதியில், தான் அடையும் அதே மோட்சத்தை அவர்களும் அடைய வேண்டும் என்பதற்காகச் செய்யும் காரியம் அது. அவர் செய்தால்தான் பலன், மற்றவர்கள் பார்த்தாலே பலன். அவர் செய்துவிட்டுப் போகட்டுமே!

சிவாலயங்களில் நடக்கும் அஷ்டபந்தன கும்பாபிஷேகத்துக்கும் வைணவ ஆலயங்களில் நடக்கும் சம்ப்ரோக்ஷணத்துக்கும் என்ன வித்தியாசம்?

- எஸ்.முரளி, ஸ்ரீரங்கம்.

இதுதான் அது; அதுதான் இது!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

ஆத்திகவாதி/நாத்திகவாதி -இறைவனின் கருணை யாருக்கு?

புதுத் துணி அணியுமுன் அதில் குங்குமம் இட்டு அணிவது ஏன்?

– பி.வி.சுசீலா, கூட்டப்பள்ளி.

ஒரு வண்டி வாங்கினால், அதற்குச் சந்தனம் வைக்கிறீர்கள். மாலை போடுகிறீர்கள். கார் வாங்கினால் சந்தனம்- குங்குமம், மாலை. பஸ்ஸுக்கும் சந்தனம் ஒட்டியிருப்பார்கள். ஆயுதபூஜை அன்று பார்த்தால், ஊரில் ஓடும் எல்லா ஆட்டோக்களிலும் அங்கே ஒரு சந்தனம்-குங்குமம், இங்கே ஒரு மாலை. பெரிய லைப்ரரிக்குப் போனால் எங்கே பார்த்தாலும் சந்தனம்- குங்குமம். வீட்டில் சுவரில் எல்லாம் சந்தனம்-குங்குமம். அம்பாள் வைக்கும் இடத்தில் சுவரில் கொஞ்சம் சந்தனம்-குங்குமம். இப்படி தூய்மையாக இருக்க வேண்டிய இடத்தில், நேரத்தில் எல்லா இடங்களிலும் சந்தனம்-குங்குமம் காணப்படுகிறதே... அங்கே எல்லாம் இல்லாத சந்தேகம் சட்டையில் மட்டும் எப்படி வந்தது உங்களுக்கு?

எந்த ஒரு புதுப் பொருளை நாம் அணிந்தாலும் அது மங்கலகரமாக, நமக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பு அது. குங்குமமும் சந்தனமும் மங்கல திரவியங்கள். அவற்றால், உங்களுக்கு மங்கலங்கள் கிடைக்கும் என்ற எண்ணமே இதற்குக் காரணம். சரியா? நாம் எதன் மூலம் வாழ்கிறோமோ, அதை வணங்குவது நமக்கு வழக்கம். அறுவடை அன்று நெல்லை மகாலட்சுமி என்று பூஜை செய்வோம். அரிசி இருந்ததால் நாம் வாழ்கிறோம். நாம் வாழ்வதால் பகவானை

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

நினைக்கிறோம். எனவே, அரிசியையும் தெய்வாம்சமாகக் கருதுகிறோம். இந்தக் கலாசாரத்தைக் கடைப்பிடித்தால், உங்களுக்கு நன்மை கிடைக்குமே!

பூஜையில் வைக்கப்பட்ட மஞ்சள் பிள்ளையாரை அதன் பிறகு என்ன செய்வது?

– ரவிச்சந்திரன், ராசிபுரம்.

பகவானுக்கு நிவேதனம் செய்த பழத்தை என்ன செய்வது, சுண்டலை என்ன செய்வது, பகவானுக்கு அணிவித்த வஸ்திரத்தை என்ன செய்வது என்றெல்லாம் நீங்கள் கேட்கவில்லை. அவற்றை எல்லாம் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை உங்கள் சிந்தனையின் மூலமே முடிவெடுத்து விட்டீர்கள். மஞ்சள் பிள்ளையார்தான் உங்களைக் குழப்புகிறார். ஏனென்றால், அதை அப்படியே சாப்பிட மாட்டார்கள். அதனால் கேட்கிறீர்கள்.

மஞ்சள் பிள்ளையாரைக் கரைக்கலாம். சமையலுக்குப் போடலாம். பகவான் கொஞ்ச நேரம் இருந்த மஞ்சள் உசத்தி இல்லையா? சாதாரண விபூதியைவிட, கற்பூரம் ஏற்றிய விபூதியை உசத்தியாக இட்டுக் கொள்வதில்லையா? அதைப் போல்தான் இதுவும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



ஐயப்பன், ஆஞ்சநேயர் ஆகிய கடவுள்களைத் தீட்டுப்படாமல் வணங்க வேண்டும் என்பது ஏன்?

– த. சத்தியநாராயணன், அயன்புரம்.

கடவுள் வழிபாடு என்பதே உடலும் உள்ளமும் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதை உள்ளடக்கியதுதான். உள்ளத்தில் அமைதி இல்லை என்றால், கவனம் ஒருமுகப்படாது. உடலில் உபாதை இருந்தாலும் அப்படித்தான். உடல் சுத்தத்துக்குக் குளிக்கிறோம். உள்ளச் சுத்தத்துக்கு நல்லதே நினைக்கிற பக்குவத்தை வளர்க்கிறோம். இறந்தவர் வீட்டுக்குப் போய்விட்டு வந்தால் தீட்டு என்று நமது வீட்டுக்குள் நுழைவதற்கு முன்பே குளிக்கிறோமே... அந்தத் தீட்டோடு கோயிலுக்குப் போகலாமா... என்ன!

இறைவனுக்குரிய அபிஷேகப் பொருட்களை வரிசையாகத் தெரிவியுங்களேன்.

– பி. ஸ்ரீபாதராஜன், கோவை-22.

நல்லெண்ணெய், பஞ்சகவ்யம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், கரும்புச் சாறு, எலுமிச்சைச் சாறு, இளநீர், சந்தனம், கும்ப ஜலம் என்பது நடைமுறை.

நாத்திகவாதி- ஆத்திகவாதி, இந்த இருவரில் யார் மீது இறைவன் அதிகம் கருணை காட்டுவான்?

– ம. வின்சென்ட் ராஜ், திருப்பூர்-1.

நாத்திகவாதி என்று யாரைச் சொல்கிறீர்கள்? பிழைப்புக்காகவோ, தன்னைப் பெரிய மனிதன் என்று காட்டிக் கொள்ளவோ, வேறு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

காரணங்களுக்காகவோ 'கடவுள் இல்லை!' என்று சொல்கிறவர்கள் எல்லாம் நாத்திகர்கள் இல்லை!

ஆற அமரச் சிந்தித்து, இருக்கிற புத்தகங்களை எல்லாம் படித்து அவற்றின் தத்துவங்களையும் உட்பொருளையும் நன்கு புரிந்து கொண்டு தன் புத்தியையும் சேர்த்துச் செயல்படுத்தி, அந்தப் புத்தகங்களில் சொல்லப்பட்டிருப்பது எல்லாம் தவறு என்று, புத்திசாலித்தனமான வாதங்களை முன் வைத்து, அதை அனைவரையும் ஏற்கச் செய்பவன்தான் உண்மையான நாத்திகன்! சட்ட திட்டத்துக்கு உட்பட்டு வாதத்தில் வெற்றி பெற வேண்டும் ஒரு நாத்திகன். அப்படிப்பட்ட நாத்திகன் யாரும் இங்கு இல்லை. 'ஏதோ மனதில் தோன்றியது!' என்று சொல்பவர்கள், 'நான் தினமும் கோயிலுக்குப் போனேன். கடவுள் எனக்கு எதுவும் செய்யவில்லை. அதனால் கடவுள் இல்லை!' என்று சொல்பவர்கள் எல்லாம் நாத்திகர்களே அல்ல!

நாஸ்திக தரிசனம் என்பதில் ஐந்து பிரிவுகள் உண்டு. அவர்கள் நாத்திகர்கள். அவர்கள் எல்லாம் பக்குவமானவர்கள். அப்படி இருந்தவர்களும் ஆன்மிகவாதிகளிடம் வாதத்தில் தோற்றுப் போய், தங்களது கருத்து தவறு என்று ஒப்புக் கொண்டவர்கள்.

'நான் எதையும் நேரில் பார்த்தால்தான் நம்புவேன். கடவுளைப் பார்க்க முடியவில்லை. எனவே கடவுள் இல்லை!' என்றார் ஒருவர்.

'நீ எல்லாவற்றையும் உன் கண்ணால் பார்க்கிறாய். ஆனால், உன் கண்ணை நீ பார்த்தது உண்டா? அப்படியானால் உனக்குக் கண் இல்லை என்று சொல்லலாமா?' என்று பதில் கேள்வி வந்தது. தனது கட்சியை ஸ்தாபிக்க முடியாத அவர், கடவுளை ஒப்புக் கொண்டார். அப்படி முடிந்த சமாசாரம் அது.

நீங்கள், 'சாதாரணமாக நாத்திகம் பெரிதா? ஆத்திகம் பெரிதா?' என்று கேட்கிறீர்கள். இதில் உசத்தி- தாழ்த்தி இல்லை. கடவுளுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. 'தன்னிடம் இருக்கும் பக்தனுக்கு அனுக்கிரகம்... கடவுள் இல்லை என்று சொல்பவனுக்கு அனுக்கிரகம் கிடையாது!' என்பதெல்லாம் இல்லை. அவனவனுடைய கர்மாவின்படி அவனவன் அனுபவிக்க வேண்டியதைக் கண்காணிப்பவர் கடவுள். போன பிறவியில் நல்லதே செய்து இந்தப் பிறவியில் நாத்திகனாக இருந்தால், அவனுக்கு நல்லதே நடக்கும். அதை வைத்துக் கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வரக் கூடாது.

வேண்டப்பட்டவர்களுக்கு நல்லது செய்வதும், வேண்டாதவர்களுக்குக் கெடுதி செய்வதுமான மனிதர் போல கடவுளை நினைக்காதீர்கள்!

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy



தானம் செய்வதற்கு நாள், நட்சத்திரம் பார்க்க வேண்டுமா? அல்லது எந்த நேரத்திலும் செய்யலாமா?

– என். ராஜி, மேலப்பாதி.

நிறையக் கால அவகாசம் இருந்து, ஆட்கள் வரவும் நாளாகும், இப்போது அவசரமும் இல்லை என்ற நிலையில் நல்ல நாள் பார்க்கலாம். இப்படிச் சொல்வதால், 'எப்போது தானம் செய்தாலும் நல்ல நேரம் பார்ப்பேன். என்ன அவசியமானாலும் வேறு நேரத்தில் செய்ய மாட்டேன்!' என்று பிடிவாதம் பிடிக்கக் கூடாது. எப்போது தோன்றுகிறதோ நாள், நட்சத்திரம் பார்க்காமல் தானத்தைக் கொடுத்துவிட வேண்டும். அப்புறம் கொடுக்கலாம் என்று நினைத்தால், கொடுக்க முடியாமல்கூட போய்விடலாம்.

'பத்து நாளைக்குள் ஆபீசுக்கு வரவும்!' என்று சொன்னால், நல்ல நாள் பார்த்துப் போகலாம். 'நாளைக்கு வரவும்' என்றால் நாளைக்குப் போயே ஆகவேண்டும். அங்கே நல்ல நாள்- பொல்லாத நாள் எதுவும் செய்யாது.

ரிக் வேதத்தில் ஒரு சம்பவம். தானம் பண்ணுகிறேன் என்று ஒருவன் புறப்பட்டான். கையில் கொஞ்சம் தங்கம் வைத்திருந்தான். 'உன்னிடம் தானம் வாங்கிக் கொள்ளப் போகிறவர் ரொம்ப உயர்ந்த ஆசாமி. அவருக்கு இப்போது தேவையும் இருக்கிறது. தானத்துக்கு மிகவும் பாத்திரமானவர்' என்றார்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

இதைக் கேட்டதும், 'அப்படியா? அப்படியானால், நாளைக்கு எனக்கு இன்னும் அதிகமான தங்கம் வரும். சேர்த்துத் தந்து புண்ணியத்தைக் கூட்டிக் கொள்கிறேன்.'

'நாளைக்கு நிச்சயம் தங்கம் வருமா?'

'நிச்சயம் வரும்!'

'நாளைக்கு இவர் இருப்பாரா?'

'இவரை என்னுடனேயே வைத்துக் கொள்வேன்.'

'நாளைக்குக் கொடுக்க வேண்டாம் என்று தோன்றி விட்டால்..'

'தோன்றாது. என் மனம் மாறாது!'

'நாளைக்கு நீ செத்துப் போய்விட்டால் என்ன செய்வாய்?'

பதிலில்லை. அந்த நிமிடமே தானத்தைக் கொடுத்தான். கொடுக்கணும். அதனால் திருப்தி ஏற்படும் என்று தோன்றினால், தோன்றியதும் கொடுங்கள்.

மரண தேவதை, இடக் கையால் உன் தலைமுடியைப் பற்றி விட்டாள். வலக் கையில் உள்ள கத்தியை ஓங்கிவிட்டாள். அப்போது கொடுப்பதுபோல் நினைத்துக்கொண்டு அந்தக் கணமே தானம் கொடுப்பதுதான் தானம். எனவே, பஞ்சாங்கத்தைப் புரட்டி நேரத்தை வீணாக்காதீர்கள்!

வீட்டில் நவக்கிரகங்களை வைத்து பூஜை செய்யலாமா? பலன் உண்டா?

– மு.சந்திரசேகரன், இட்டாநகர், அருணாசலப் பிரதேசம்.



Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

கோயில் என்பது இடையில் வந்தது. அதற்கு முன்பெல்லாம் வீட்டிலேயேதான் பூஜித்தனர். நமது பக்தியை எடுத்துக் காட்டுவதற்குக் கோயில் என்பது இல்லை. ஏழை-எளியவர்கள், பாமரர்கள், வீட்டில் பூஜை செய்ய முடியாதவர்கள் ஆகியோர் வழிபட ஏற்பட்டது கோயில். நன்கு கற்று உயர்ந்தவன் எந்த இடத்திலும் பகவானைப் பார்ப்பான். மேல் தட்டில் இருப்பவர்கள் அடைகிற மோட்சத்தை, அடித்தட்டில் இருப்பவர்களும் அடைய கோயிலுக்குப் போய் பூஜையைப் பார்த்தாலே போதும் என்று வைத்தார்கள். வசதி இருப்பவர்கள் வீட்டிலேயே நவக்கிரகத்தை வைத்து ஆராதனம் பண்ணலாம்.

என் ஒரே மகன் வீட்டை விட்டுப் போய் விட்டான். எனக்கு யார் கொள்ளி வைப்பார்கள்? என் மனைவி வைக்கலாமா?

– வி. வெங்கட்ராமன், திண்டுக்கல்.

இதற்கு ஏற்கெனவே விளக்கம் கொடுத்திருக்கிறேன். உங்கள் குடும்பத்தில் வேறு ஆண் பிள்ளைகளே இல்லையா, என்ன? உங்கள் சகோதரர்களோ, அவர்களின் பிள்ளைகளோ இருப்பார்கள். அப்படி யாருமே இல்லாத பட்சத்தில் நீங்கள் தத்தெடுக்கும் பிள்ளை அதைச் செய்யலாம். அதுவும் இல்லையா, உங்கள் சொத்தை அனுபவிக்கப் போகிறவர் செய்யலாம். கவலையை விடுங்கள்!

ஸ்வாமி படங்கள் உள்ள பூஜையறையில் முன்னோர், நாம் குருவாக நினைப்பவர்கள் போன்றோரின் படங்களை வைக்கலாமா?

– துரை. குருவாயூர் கண்ணன், சிவகங்கை.

சில கேள்விகளிலேயே சில கருத்துகள் தொக்கி நிற்கும். ஸ்வாமி படங்கள் உள்ள பூஜையறையில், வேறு படங்களை வைக்கக் கூடாது என்ற கருத்து உங்கள் கேள்வியிலேயே ஒளிந்திருக்கிறது. இது உங்கள் மனதில் இருந்தும், இப்படிக் கேட்கிறீர்கள். முன்னோர்களது படங்களை வைப்பதைவிட அவர்களை மனதில் வைக்கத் தெரிந்து கொள்ளுங்கள். ஸ்வாமி படத்துக்கும் இது பொருந்தும் என்றாலும் ஸ்வாமி படம் இருக்கும் இடத்தில் முன்னோர் படம் தேவையில்லை. நம் முன்னோர்களெல்லாம் வம்ச பரம்பரையில் வந்தவர்கள். ஸ்வாமி நிரந்தரமானவர். முன்னோர் படத்தைச் சாதாரணமான இடத்தில் வைக்கலாம். என்னதான் இருந்தாலும் கடவுள் கடவுள்தான், மனுஷன் மனுஷன்தான்!

இன்னும் சொல்லப் போனால், ஊரில் இருக்கிற ஸ்வாமி படங்களை எல்லாம் வாங்கி வைப்பதுகூட தேவையற்றது. ஒரு கடவுளின் படம் போதும். படங்களை அடுக்கி வைத்து அழகு

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

பார்த்துக் கொண்டே இருந்தால், எப்போது ஆராதனம் செய்யப் போகிறீர்கள்?

பிள்ளையார், முருகன், சிவன் ஆகிய கடவுள்களை லலிதா சஹஸ்ர நாமம், சோபனம், சௌந்தர்ய லஹரி சொல்லி வெள்ளி தோறும் நான் பூஜை செய்து ஆரத்தி எடுப்பேன். தினசரி மாலை விளக்கேற்றி ஸ்லோகம், பாட்டு சொல்வேன். சமீபத்தில் என் கணவர் காலமாகி விட்டார். ஒரு வருடம் ஆன பின்புதான் நான் பூஜை செய்ய வேண்டுமா? அதன் பிறகும் குங்குமம், பூ எடுத்து பூஜை செய்யலாமா?

- ஒரு வாசகி, கோவை.

ஒரு வருடம் ஆகிறவரையிலும்கூட நீங்கள் தினப்படியாகச் செய்து வந்த பூஜைகளைச் செய்யுங்கள். விசேஷ பூஜைகளைத் தவிர்த்து விடுங்கள். தினப்படி காலையில் விளக்கேற்றி வழிபடலாம். பௌர்ணமியில் விசேஷ பூஜை, கோயிலுக்குச் சென்று பெரிய பூஜை போன்றவை தவிர்க்கப்பட வேண்டும்.

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Sri Vedachalam Sastri Collection, Karaikudi

CC0. In Public Domain. Muthulakshmi Research Academy

Printed Books

சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

சீற்றறிந்த அறிஞர்கள் மத்தியில் தலைசிறந்த ஆன்மிக ஞானம் பெற்றவர்.

சென்னை சமஸ்கிருதக் கல்லூரியில் முதல்வராக இருந்தவர். காஞ்சி சங்கர மடத்தின் பஞ்சாங்க கமிட்டி தலைவராக இருக்கிறார். சமஸ்கிருத மொழியில் ஆழ்ந்த புலமை பெற்ற இவர், இப்போதும் ஏராளமான மாணவர்களுக்கு சமஸ்கிருத உயர்கல்வி போதித்து வருகிறார். ஆயுர்வேத மருத்துவத்திலும் கரைகண்டவர் சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்.

வேதம், புராணம், தர்ம சாஸ்திரம், மன நலம், உடல் நலம், கலாசாரம் போன்ற பல துறைகளிலும் வாசகர்கள் எழுப்பும் ஏராளமான கேள்விகளுக்கு விளக்கமாகவும் ஆணித்தரமாகவும் இவர் கொடுத்து வரும் விளக்கங்கள் சிலிர்க்க வைப்பவை.

மூட நம்பிக்கைக்கு எதிரான விஞ்ஞானமே மெய்ஞானம் என்பது சாஸ்திரிகளின் ஒவ்வொரு விளக்கத்திலும் நமக்குப் புலனாகிறது.

ஐயம் போக்கும் ஆன்மிகம்

(பாகம் 2)

சிவ தர்ப்பை, விஷ்ணு தர்ப்பை ஆகியவற்றை எவ்வாறு பிரித்தறிவது?

பகவான் பெயரை வைத்துக் கொண்டு இந்தப் பொருள் இவரைச் சேர்ந்தது, அது அவரைச் சேர்ந்தது என்றெல்லாம் சாஸ்திரம் சொல்லாது.

'தர்ப்பை' என்று ஒன்று உண்டு. 'குசம்' என்று ஒன்று உண்டு. தர்ப்பை என்பது பொதுதான். அதை ஒரு தெய்வத்தோடு சேர்த்துச் சொல்வது நாமாக ஏற்படுத்திக் கொண்டது.

பகவானுக்கு எல்லாமே பிரியம். 'எனக்கு ஓர் இலையைக் கொடு; பூவைக் கொடு; ஒரு பழத்தைக் கொடு, போதும்' என்கிறான் பகவான். 'இந்தப் பழத்தைக் கொடு' என்று எதையும் குறிப்பிட்டுக் கேட்கவில்லையே!

தர்ப்பையில் மட்டும் என்ன பாகுபாடு? 'தர்ப்பை கிடைக்கவில்லை என்றால் குசத்தை எடுத்துக் கொள்; அதுவும் இல்லை என்றால் அறுகம் புல்லை எடு' என்றுதான் சாஸ்திரம் சொல்கிறது.

தர்ப்பை என்பது பரிசுத்தமானது.

சிவனும் பரிசுத்தம். விஷ்ணுவும் பரிசுத்தம். முருகனும் பரிசுத்தம். ஐயப்பனும் பரிசுத்தம்தானே... எனவே, தர்ப்பையும் பொதுதான். தெய்வத்தின் பெயரைச் சொல்லி பாகுபாடு ஏற்படுத்தாதீர்கள்!

விகடன் பிரசுரம்

IYAM POKKUM ANMIGAM (Volume 2)

Rs. 75

ISBN 978-81-8476-053-8

9788184760538

Sri Vedachalam Sastri Collection, Karaikudi